ஐரோப்பிய மஹா யுத்த

சரித்திரம்

(இரண்டாம் பாகம்)

The Great European

War History

PART II

ஐரோப்பிய மஹாயுத்த சரித்திரம்.

இரண்டாம் பாகம்.

சென்னை

விக்டோரியா வாட்ச் கம்பெனிக்காக

எழுதப்பட்டு

திருவத்திபுரம்

சி. எ. செங்கல்வராய நாயுடு அவர்களால்

தமது

...ன் அச்சுக்கூடத்திற்

...க்கப்பட்டது

1916

காபிரைட் ரிஜிஸ்டர்ட்] [விலை அணா 12

கடவுள் துணை.

3

ஐரோப்பிய

மஹாயுத்த சரித்திரம்.

இரண்டாம் பாகம்.

சென்னை:

விக்டோரியா வாட்ச் கம்பெனிக்காக எழுதப்பட்டு

திருவத்திபுரம்

சி. எ. செங்கல்வராய நாயுடு அவர்களால்

தமது

மதராஸ் கர்ஸன் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

 [விலை அணா 12.

1916.

ஐரோப்பிய
மஹாயுத்த சரித்திரம்
இரண்டாம் பாகம்.

முதல் அத்தியாயம்
செர்வியாவும் அதன்பகைவர்கள் ஆஸ்ட்ரியர்களும்

இறைவன் செயலை எவரே விலக்க வல்லார்?

மிகப்பெரிய உருவத்தோடு நமது கண்களுக்குப் புலப்படு மிவ்வுலகம் கடவுள் ஒருவரால் படைப்பிக்கப்பட்டதென்று ஓர் சார்பார் கூறுகின்றனர். கடவுளின் சாயையே இவ்வுலக மன்றிக்கடவுளால் படைப்பிக்கப்பட்டதல்லவென்று மற்றொரு சார்பார் எடுத்துரைக்கின்றனர். இவ்விருசார்பினரும்தத்தமக் குரிய ஆதரா நியாயங்களைக்கொண்டு தங்கள் கக்ஷியை நிலை நிறுத்துகின்றனர். இவையனைத்தும் கடவுள் ஒருவர் உளரோ என்னும் விசாரணையைச் செய்யத்தொடங்கின மாந்தர்பலருக் கும் ஏற்பட்ட விஷயங்களே. அவ்விஷயங்கள் அனைத்தையும் இவ்விடம் எடுத்துக்கூறுவதுஃஇப்புத்தகத்திற்கு அவசியமில்லை யாதலின், என்று உலகம் உண்டாயிற்றோ அல்லது நாமரூப மாய்க் கடவுளின் சாயையே இவ்வுலகம் நமது கண்களுக்குத் என்று தோன்றிற்றோ,அன்று முதற்கொண்டு இன்றுவரையில் எவ்வளவுகாலம் கழிந்ததென்பதைப்பற்றிச் சற்று ஆலோசிக் குங்கால், அக்காலவளவு நமதுமனதிற்கு எட்டாத தன்மையை அடைகின்றது. இதையே நமதுபரதகண்டத்தில்ஆரியமதசாஸ் திரங்களும் தென்னாட்டுத்தமிழ்நூல்களும் கணக்கிலவாய்க் கற் பங்கள் கழிந்தனவெனக் கூறுகின்றன. அறிவைச்சிதறவிடாது அமைதியாய் ஆழ்ந்துவிசாரணைபுரியுங்கால் ஏற்படுவதொன்றே. அதாவது, காலம் செல்லச்செல்ல சம்பவ அசம்பவங்கள் குறி த்தகாலங்களிலேயே மீண்டும் மீண்டும் நடைபெற்று வருகின்

றன என்பதாம். இதை எளிதில் எவரும் அறிய உதாரணப் படுத்த வேண்டுமாயின், அறுபது நாழிகைகொண்ட ஒருகால அளவில் 30-நாழிகை பகலாகவும் மற்ற 30 நாழிகை இரவாகவும் கழிகின்றது. இவ்விதம் அறுபது நாழிகை கொண்ட கால அளவு இரவுபகலென்று இருபாகுபாடுடையதாய் ஒரு நாளெனப்பெயர்கொண் டிருக்கிறது. இவ்வறுபது நாழிகையில் சம்பவிக்கும் விஷயங்களைச் சற்றே கவனிப்போம். காலையில் சூரியன் உதயமாகிறது. குறித்த கால அளவிற்குப்பிறகு அது மறைத்து விடுகிறது. மறுபடியும் தோன்றுகின்றது. மகா சாஸ்திரவல்லமை பொருந்திய நிபுணர்களாலும் மற்றும் அசகாய சூரர்களாலும் தோன்றித்தோன்றி மறையும் சூரியனைத் தோன்றுதிருக்கவும் மறையாதிருக்கவும் செய்ய முடியுமோ? ஒரு நாட்பொழுதில் நடக்கும் இச்சம்பவத்தை நிகர்த்து 30-நாட்கள் கொண்ட ஒருமாத காலத்தில் 15-நாட்கள் சந்திரன் இரவுகாலத்தில் முன் பிரகாசிப்பதும் பிறகு பின் பிரகாசிப்பதும் யாவரும் அறிந்த விஷயம். சந்திரனை எக்காலத்தும் இராமுழுவதும் பிரகாசித்துக்கொண் டிருக்கும்படி செய்யவல்லார் இதுகாறும் ஒருவரும் ஏற்படவில்லையே. இங்ஙனமே பல ஆண்டுகள் நிறைந்துள்ள யுகங்கள் முடிவிலும் அனேக யுகங்கள் சேர்ந்த கால அளவின் இடையிலும் சில சம்பவங்கள் பிறரால் தடைபடுத்தப்படாமல் நடந்தேறுவனவாகும். அவ்விதச் சம்பவங்களுள் ஒன்றுநமதுபரதகண்டத்துப் பாரதமுமாகும். மனிதப் பிரயத்தனத்தால் பாரதயுத்தத்தை நிறுத்தமுடியுமோவென்று ஸ்ரீகண்ணன் சகாதேவனை வினவுகையில் அவன் யாது பதில் கூறினன்? வண்டியின் சக்கரம் சுழலும்பொழுது அதிலுள்ள ஆரைக்கால்கள் முறைமுறையே பூமியைத் தொட்டுக் கொண்டுபோவதுபோல் இப்பெரிய உலகத்தின் காலமாகிய சக்கரம் சுழன்றுகொண்டிருக்கையில் சம்பவ அசம்பவங்களாகிய ஆரைக்கால்கள் முறைமுறையே இவ்வுலகைத் தொட்டுக் கொண்டிருக்கும். அவற்றை நீங்குவதற்கு தெய்வீகத்திருவுளப் பிரயத்னம் அன்றி, மானிடப் பிரயத்தினம் அணுவளவேனும் பயன்படாதென்னுங் கருத்தை மேற்கொண்டு—

"நீ பாரதமதனில் யாவரையும் நீறுக்கிப்
பூபாரம் தீர்க்கப் பிறந்தாய் புயல்வண்ணா

கோபாலா போரேறே கோவிந்தா நீயன்றி
மாபாரதமகற்ற மற்றார்சொல் வல்லாரே"

எனவிடையளித்தான். ஆகையினால் அனேகந்தடவை கணக்கிலவாய்ப் பாரத யுத்தங்களும் இராவண சம்மாரங்களும் பாபத்தைப்போக்கிப் புண்ணியங்களை மேற்படச்செய்யும் விஷயங்களாக நடந்தேறினபோல, நாம் இதுகாறும் கண்டும், கேட்டும் வாசித்துமிராத கொடும்போர்களுள் மிகக்கொடும்.போராகிய இம்மேனாட்டு ஐரோப்பிய யுத்தம் முந்தின காலத்தில் ஏதோ ஒரு யுகத்தின் ஆதியிலோ இடையிலோ முடிவிலோநடைபெற்றிருக்கத்தான் வேண்டுமென்பது திண்ணம். பாரத யுத்தத்தை நடவாமலே நிறுத்தவேண்டுமென்று யுதிட்டிரர் என்னபாடு பட்டார்? கிருட்டினன் தூதுச் சருக்கத்தில் வில்லிபுத்தூரார்,—

வயிரமெனுங் கடுநெருப்பை மிகமூட்டி வளர்க்கினுயிர்
வரைக்காடென்னச்
செயிரமரில் வெகுளி பொரச் சேரவிரு திறத்தோருஞ்
சென்று மாள்வோம்
கயிரவமும் தாமரையும் கமழ்பழனக்
குருநாட்டிற் கலந்துவாழ
உயிரனையாய் சந்துபட வுரைத்தருளென்
றுனறத்தின் உருவம்போல்வான்

என்னும் திவ்விய விருத்தத்தை அறியாதார் யாரே.

இப்பொழுது அறத்தின் பயனே அவதரித்ததுபோல் நமது ஜார்ஜ் சக்ரவர்த்தி இம்மேனாட்டுக் கொடும் போரை நிறுத்தத் தம்மாலியன்ற அளவு ஓர்பால் முயன்றுகொண்டிருக்கையில்—

"தான் அறியான் பிறர்போ யுரைத்தாற் கேட்பனோ
தரணி வேந்தே"

என நகுலன் கூறியதுபோல், பயிரிடும் குடிகளால் நிறைந்துள்ளதான செர்வியா நாடானது, யுத்தத்திற்குரிய பிரயத்தனங்களையெல்லாம் செய்துகொண்டு பின்வாங்குகிறதில்லை என்னும் தீர்மானத்தை மேற்கொண்டிருந்தது.

சேர்வியாவும் அதன் படைகளும்.

செர்வியாதேசம் மிகச்சிறிய நாடாயினும் இத்தேசத்துக் குடிகளின் விடாமுயற்சியும் ஊக்கமும்அறத்தின்வழியினின்று தவருதிருத்தலும் யாவரும் அறிந்த விஷயங்களே. கலியுக மேனாட்டு யுத்தமாகிய இக்கொடும்போருக்குக் காரணமாய் நின்றதும் இத்தேசமே. ஆஸ்ட்ரிய சிம்மாதனத்துக்குரிய இளவரசராகிய பெர்டிணண்ட் இளவரசர் விதிவசத்தால் மாளவும், அம்மரணம் செர்வியர்களுடைய சதியே என்றஅபிப்பிராயம் ஆஸ்ட்ரியர்களுடைய இருதயத்திற் குடிகொள்ளவும், செர்வியர்கள் அதற்கு என்ன சமாதானம் கூறுகிருர்களென்னும இறுதிக்கடிதம் ஆஸ்ட்ரியர்களால் அனுப்பப்படவும், செர்வியர்கள் தக்கவிடை கொடுக்குமுன்னரே துர்ராசையாகிய பிசாசத்தால் பீடிக்கப்பட்ட ஜெர்மனியர்கள் பெல்ஜிய பிரான்ஸ் தேசங்களில் கொடுமைகள் பலவாறு புரிந்துகொண் டிருக்கையில், செர்வியர்கள் காலத்தை வீணே கழிக்கவில்லை. இத்தேசம் இம்மகாயுத்தத்திற்குச் சில வருடங்களுக்கு முந்தி துருக்கி ராஜ்யத்துடன் யுத்தம்செய்த களைப்பு இன்னும் முற்றும் நீங்கவில்லை. ஆஸ்ட்ரியர்கள் தங்கள்மீது போர் செய்யப் பிரயத்தனங்கொண்டார்கள் என்னும் செய்தி செர்வியர்களுக்கு எட்டின மாத்திரத்தில் அவர்களுக்கு ஒரு வீராவேசம் உண்டாயிற்று என்று நாம் கொள்ளவேண்டும். இதற்கு முன்னரே ருஷியச்சக்கிரவர்த்தியும், ஆஸ்டிரியர்கள் செர்வியாமீது எக்காலத்தேனும் திரணமாகிய காரணத்தைக் கொண்டு போருக்கு வருவார்கள் என்பதைமுன்னுணர்ந்தவராய் செர்வியர்களுக்கு அறிவித்திருந்தார். அவ்வறிக்கையைப் பிரதானமாய்க் கொண்ட செர்வியர்கள் தங்கள் தேசத்துப் படைகளை நான்கு எல்லைகளிலும் பிரதான ஸ்தானங்களில் நிலை நிறுத்திஞர்கள். அச்சேனைகளின் விபரங்களை நாம் அறியவேண்டியது அவசியமாதலின் அவற்றைப் பற்றிச் சிறிது கூறுவோம்.

(1) இத்தேசத்தின்வடபாலுள்ளபெலாங்க்காஎன்னுமிடத்தில் ஒரு பெரிய சேனை நிறுத்தப்பட்டது. இது ஆஸ்டிரியர்கள் டான்யூப் நதியைக் கடந்து செர்வியாவினுள் பிரவேசியாவண்ணம் ஏற்படுத்தப்பட்டது.

(2) இத்தேசத்தின் கீழ்த்திசையிலுள்ள நிஷ் என்னும் நகரத்தில் மற்றொரு பெரியசேனை நிறுத்தப்பட்டது. இதுகீழ்த் திசைப் படையெனப்படும். செர்வியாவுக்குக் கீழ் எல்லையாக வுள்ள பல்கேரியா செர்வியாவுடன் ஜென்மப்பகையைக்கொண்டது. எத்தருணம் வாய்க்கும், செர்வியாவைக் கொசுபோல் மாய்த்துவிடலாம் என்னும் கருத்தைமேற்கொண்டதுபல்கேரியா. இவ்விதத் தீய நோக்கத்தையுடையபல்கேரியர்களைத் தடுக்கும் கருத்துடனே செர்வியா தேசத்தின் கீழ்த்திசைப்படையானது நிஷ் என்னும் நகரத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றது என்பது அறியப்படவேண்டும்.

(3) இத்தேசத்தின் மேற்றிசையிலுள்ள உஷிட்ஜா என்னும் நகரத்தில் மூன்றுவது சேனை நிறுத்தப்பட்டது. இதுமேற்றிசைப் படை என்னும் பெயரைக்கொண்டது. ஆஸ்டிரியர்கள் தங்கள் தேசத்தின் மேற்றிசை வழியாய்ப் பிரவேசியாத வண்ணமே செர்வியர்கள் இம்மேற்றிசைப் படையை உஷிட்ஜா நகரத்தில் நிறுத்தினார்கள் என்பது தானே விளங்குகின்றது.

(4) தென்பாலுள்ள உஸ்குப் நகரத்தில் நான்காவது படை நிறுத்தப்பட்டது.

இவையன்றி தேசத்தின் நாற்புற எல்லைகளில் 20 ஆயிரம் வீரர்களும், ஒவ்வோர் விசேஷ இடங்களில் எதிரிகளைத் தாக்குமாறு 12 ஆயிரம் வீரர்களும் இருக்கின்றார்கள்.

இவ்விதம் சேனைகளை நாற்புறத்திலும் செர்வியர்கள் நிறுத்தினதற்குக் காரணம் என்னையோ வெனின், கீழ்த்திசையிலிருக்கும் ஜென்ம விரோதிகளாகிய பல்கேரியர்கள் ஓர்கால் போருக்கு வருவார்கள் என்பது ஒன்று.

மேற்கிலும் வடமேற்கிலுமுள்ள ஆஸ்டிரியர்கள் திடீரென ருஷியர்கள் அறிவித்தவண்ணமே படையெடுத்து விடுவார்கள் என்பதுமற்றொன்று; இவ்விருகாரணங்களைக்கொண்டே செர்வியா தேசத்து நான்கு எல்லைகளிலும் நான்கு பெருஞ் சேனைகள் நிறுத்தப்பட்டிருந்தனவென்பது அறியத் தக்கது. இதுகாறும் நாற்பெருஞ் சேனைகளைப்பற்றிக் கூறினோம். இனிச்சேனைகளின் தொகுதிகளைப்பற்றிக் கூறுவோம்.

ஒவ்வொரு சேனையிலும் நான்கு உட்பிரிவுகள் உண்டு. ஒவ்வொரு உட்பிரிவின் விபரமாவது:—

இரண்டு காலாட் படைகள் ஒவ்வொன்றும் 6000 ஈட்டி வீரர்களைக் கொண்டது	12000
இரண்டு ஆயுதப்படைகள் ஒவ்வொன்றும் 600 வீரர்களைக் கொண்டது	1200
(இதற்கு 12-பீரங்கிகளுண்டு); ஒரு குதிரைப் பட்டாளம் 600-வீரர்களைக் கொண்டது 600 எஞ்சினீர் முதலாய வீரர்கள்	1300
மொத்த வீரர்கள்	15100

இது ஓர் உட்பிரிவின் தொகுதியென்றால் 4-உட்பிரிவுகளைக் கொண்ட ஒரு சேனையின் மொத்தம் 4—15100—60400 வீரர்களை யுடையதாகின்றது, ஆகவே:—

பலாங்க்காவில் உள்ள சேனையின் மொத்தம்	60400
நிஷ் நகரத்திலுள்ளது	60400
உஷிட்ஜாவிலுள்ளது	60400
உஸ்குப் நகரத்திலுள்ளது	60400
நான்கு சேனைகளின் மொத்தம்	241600

இவர்களுடன், தேசத்தின் எல்லைகளில் காவலாளர்களாக நியமிக்கப்பட்டிருந்த முப்பத்தீராயிரம் வீரர்களையும் மற்றுமுள்ளோர்களையும் சேர்க்க செர்வியா தேசத்தின் நான்கு பெருஞ் சேனைகளின் தொகை இரண்டு லட்சத்து தொண்ணூற்றீராயிரம் வீரர்களாகின்றது.

ஆஸ்ட்ரியர்கள் தங்கள்மீது படையெடுத்து விடுவதாக செர்வியர்கள் அறிந்த வுடனே யுத்தப் பிரயத்தினத்திற்காக சேனைகளெல்லாம் தயாராயின. செர்வியாவின் மேற்புறத்தில் உள்ள பாஸ்னியா என்னும் நாட்டிலுள்ள குடிகள் சிலாவ் ஜாதியார்கள். செர்வியா தேசத்திலுள்ளவர்களும் சிலாவ்ஜாதியார்கள். ஆகையால் ஆஸ்ட்ரியா தேசத்தின் ஒரு பாகமாகிய பாஸ்னியாமீது சென்று, பாஸ்னியாவின் தலைநகராகியும், ஆஸ்ட்ரியாவின் இளவரசாகிய பெர்டினண்டுக்கு குருக்ஷேத்திரமாகியும் ஐரோப்பாக் கண்டத்துப் பெரும் போருக்குக்

காரணஸ்தலமாகியும் நிற்கின்ற ஸராஜீவோ நகரை கைக்கொள்ள வேண்டுமென்பது செர்வியர்களுடைய முதற்கருத்து.

சேர்வியாமீது பல்கேரியா படையெடுக்க முடியாது

செர்வியாவின் கீழ்த்திசையிலுள்ள பல்கேரியா என்னும் தேசமானது செர்வியாவின்மீது கடும்பகைகொண்டது என முன்னமே கூறியுள்ளோம் அவ்விதம் கடும்பகை கொண்ட பல்கேரியர்கள் செர்வியர்கள்மீது படையெடுத்து விடுவார்களோ என்றால் அது முடியாது. ஏனெனில், பல்கேரியாவுக்கு வடக்கேயுள்ள ரொமேனியா, பல்கேரியாவின்மீது மிகப்பகை கொண்டது; பல்கேரியர்கள் செர்வியர்கள்மீது படையெடுத்தால் ரொமேனியர்கள் பல்கேரியர்கள்மீது வந்துவிடுவார்கள்; அன்றியும் சில வருடங்களுக்கு முன்னர் நடந்த பால்கன் யுத்தத்தின் முடிவாக பல்கேரியாதேசத்துராஜாங்கப் பொக்கிஷம் காலியாயிருந்தது. ஆகையால் பல்கேரியா அரசாட்சியார் செர்வியர்கள்மீது படையெடுக்கவேண்டுமாயின், வேண்டியபொருள் அவர்களிடமில்லை, அதற்காகப் பிரத்தியேகவரி யேற்படுத்தினல் குடிகள் தங்கள்மீது அதிர்ப்திகொண்டு எதிர்த்துக் கொள்வார்கள், அதனல் அரசாட்சியின் வன்மை குறைந்துவிடும் எனக்கருதி செர்வியர்கள்மீது படையெடுக்கும் நோக்கத்தை பல்கேரியர்கள் அடியோடு விட்டுவிட்டார்கள்.

இவ்விதம் செர்வியர்கள்மீது பல்கேரியர்கள் படையெடாமல் சும்மாஇருந்ததுசெர்வியர்களுக்கு அனுகூலமாய்முடிந்தது. பல்கேரியர்களீ செர்வியர்கள் மீது படையெடுப்பார்கள் என எதிர்பார்த்த ஆஸ்ட்ரியர்களுடைய எண்ணம் வீணுயிற்று.

செர்விய வீரர்கள் எல்லாம் மிகுந்த பராக்கிரமசாலிகள்; யுத்தத்திறகுப் பின்வாங்காதவர்கள்; முன் நடந்த பால்கன்யுத்தத்தில் இவர்களுடைய வீரத்தன்மை வெகுவாய் விளங்கியது. பகைவர்களும் இவர்களுடைய வல்லமையைப் புகழ்ந்து பேசுவார்கள் என்றால் நாம் அதிகம் சொல்லவேண்டியதில்லை. இஃது இங்ஙனமிருக்க கல்வியிற் செருக்குற்ற கசடர்களைக் காட்டிலும் அசடர்களாகிய ஆஸ்ட்ரியர்கள் ஜெயங்கொள்வோம் என்னும் பெரிய எண்ணத்துடன் சேனைகளை ஒருங்கே கூட்டி செர்வியாமீது படையெடுத்து செர்வியர்களால் சின்னபின்னப் படுத்தப் பட்டதை அடுத்த அத்தியாயத்திற் கூறுவோம்.

இரண்டாவது அத்தியாயம்

ஆஸ்ட்ரியர்கள் செர்வியாவின்மீது படையெடுத்தல்

ஆஸ்ட்ரியர்கள் செர்வியாவின்மீது கொண்டு வந்தது நான்கு பெருஞ்சேனைகள். செர்வியாவின் கீழ்திசையிலுள்ள நிஷ் என்னும் நகரத்தில் நிறுத்தப்பட்டிருக்கும் பெருஞ்சேனையை அடியோடு அழித்து அந்நகரைப்பிடிக்க வேண்டுமென்று இந்நான்கு சேனைகளும் வந்தன.

வேறு இரண்டு சேனைகள் செர்வியாவுக்கு வடக்கேயுள்ள டான்யூப், சேவ், என்னும் இரண்டு நதிகளைக்கடந்து செர்வியாவின் தலைநகராகிய பெல்கிரேடைப் பிடிக்கவேண்டு மென்று வந்துகொண் டிருந்தன. மற்றொரு சேனை சராஜிவோ நகரத்திலிருந்து புறப்பட்டு செர்விய மேற்றிசைப்படை யிருப்பிடமாகிய உஷிட்ஜா என்னும் நகரைக் கைக்கொள்ளவேண்டுமென்று வந்துகொண்டிருந்தது. இவ்விதம் சேனைகளையெல்லாம் திசைக்குத்திசை செலுத்திக்கொண்டிருந்த ஆஸ்ட்ரியர்கள் டான்யூப் நதியை எவ்விதம் கடக்கக்கூடும் என்னும் விஷயத்தைக் கவனியாமல் விட்டுவிட்டார்கள்.

ஆஸ்ட்ரியர்களுடைய சேனைகள் எங்கெங்கு வருகின்றனவென்பதை முன்னரே நன்குணர்ந்த செர்வியர்கள் டான்யூப் நதிக்கும், சேவ் நதிக்கும், ட்ரீனு நதிக்கும், இடையேயுள்ள ஷபட்ஸ் என்னும் நகரில் தங்கள் சேனைகளை நிறுத்திவைத்திருந்தார்கள். ஆஸ்ட்ரியர்கள் டிரீனுநதியைக் கடக்க முயற்சி செய்தபொழுது அவர்களுடைய முயற்சியைவியந்த செர்வியர்கள் தங்களுடையகுண்டுகளாகியவெகுமதிகளை ஆஸ்ட்ரியர்களுக்குஏராளமாகக்கொடுத்தார்கள். வந்தவெகுமதிகளையெல்லாம் ஆஸ்ட்ரியர்கள் பெற்றுக்கொண்டு பின்னும்திருப்தியடையாது நதியைக்கடக்க அதிக முயற்சியைச் செய்துகொண்டிருந்தார்கள். ஆஸ்ட்ரியர்களுடைய சேனைகளோ மிகஅதிகம். லக்ஷத்து முப்பதாயிரம் வீரர்கள் வந்திருந்தார்கள். இவர்களுள் செர்வியர்களுடைய குண்டு வெகுமதிகளைப் பெற்றவர்கள் சிலர் தாம் இருக்கக்கூடும். மற்றவர்களெல்லாம் முயற்சியைக்கைவிடுவார்

களா? இதைக்கண்ட செர்வியர்கள் கொண்டார்கள் ஓர் எண்ணம். புறங்காட்டி ஓடுவதுபோல் ஓடி ஆஸ்ட்ரியர்களை அறவே முறிக்கவேண்டும் என்று எண்ணினார்கள். செர்வியச் சேனைகளெல்லாம் திரும்பின பின்முகமாய்; கண்டார்கள் ஆஸ்ட்ரியர்கள்; ஆனந்தங் கொண்டார்கள்; ஆற்றைக்கடந்தார்கள்; துரத்தினார்கள் செர்வியர்களை.

3400 ஆஸ்டிரியர்கள் மாண்டனர்.

செர்வியர்களுடையஎண்ணம் நிறைவேறிற்று. அகப்பட்டுக்கொண்டார்கள் ஆஸ்ட்ரியர்கள் செர்வியர்களிடம். துரத்தப்பட்டார்கள் ஆற்றின்முகமாய்; ஆகஸ்ட்டுமாதம் 9,10,11இந்தத் தேதிகள் வரையிலும்ஆஸ்டிரியர்கள் செர்வியர்கள்கையில் சிக்கிக்கொண்டு அனுபவித்தகஷ்டத்தை அவர்களே அறிவார்கள். தப்பித்து ஓடலாமென்றாலோ நதியைக் கடக்க முடியவில்லை. என்செய்வார்கள் பாபம்! பக்ஷிகளைப் பிடிக்க வேடுவர்கள் வலையை வீசியிருப்பதுபோல,ஆஸ்டிரியர்களாகிய பக்ஷிகளைப் பிடிக்க செர்வியர்களாகிய வேடுவர்கள் யுத்தகளத்தில் அநேக வலைகளை விரித்திருந்தமையால் 3400 ஆஸ்டிரியர்கள் சிக்கிக்கொண்டார்கள். அவர்களுள் அநேகர் மடிந்தனர். மிகுதி நின்றவர்கள் 25 பேர்களே. அவர்களும் செர்வியரால் கைதிகளாகக் கொண்டுபோகப்பட்டார்கள்.

இம்மகாயுத்தத்தில், இறுமாப்பையே கொண்ட திரியோதனனை நிகர்த்தவர்கள் ஜெர்மனியர். துர்விஷயங்களையே சாதனமாகக் கொண்டு வந்தமையால் துர்ச்சாதனன் எனப்பெயர் பூண்டவனை நிகர்த்தவர்கள் ஆஸ்டிரியர்கள். இவர்கள் அரக்கர்களினும் கொடியவர்கள்; இவர்கள் ஸ்லாவ்ஜாதியாரிடம் காட்டின கொடுமையை முதற்புத்தகத்திலேயே வேண்டிய அளவு வரைந்துள்ளோம். இவர்கள் திரள்திரளாய் மடிவதைக் கண்ணாரக் கண்டுகளிக்கவேண்டு மெனக் காத்துக்கொண்டிருந்த எமன், செர்வியர்களுக்கு மிகவும் நன்றிபூண்டவனாய், ஆஸ்டிரியர்களுடைய உயிர்களைத் தூதுவர்கள் வசம் அனுப்பிக்கொண்டேயிருந்தான். இன்னும் ஆஸ்டிரியர்கள் இவ்விதம் திரள்திரளாய் மாள்வரென முன்னுணர்ந்த மறலியின் சந்தோஷத்திற்கு எதை உவமானமாகக் கூறலாம்? தாடகை சம்மா

ரத்தில் ஸ்ரீராமபிரான் திருவருளால் அரக்கர்களுடைய இரத்தத்தின் மதுரத்தையறிந்த அந்தகன் சந்தோஷத்தைப்பற்றி—

“ வாசநாண்மலரோனன்ன மாமுனிபணிமறுத
காசுலாங் கனகப்பைம்பூண் காகுத்தன்கன்னிப்போரில்
கூசிவா ளரக்கர்தங்கள் குலத்துயிர்குடிக்கவஞ்சி
ஆசையாலுழலுங்கூற்றும் சுவைசிறி தறிந்த தன்றே”

எனுங் கம்பர் வாக்கே போதுமானது.

ஆகஸ்ட்மாதம் 12-ந்தேதி ஆஸ்ட்ரியர்களுடைய சேனை யொன்று ட்றீனு நதியைக்கடந்து செர்வியாதேசத்திற்குள் பிரவேசிக்க ஆரம்பித்துவிட்டது. ஆஸ்ட்ரியர்களுடைய விடா முயற்சியைக் கண்ணுற்ற செர்வியர்கள் அவர்களை நதியைக் கடவாத வண்ணம் தடைசெய்ய வேண்டிய அளவு குண்டுகளைப் பிரயோகித்துக்கொண்டே யிருந்தார்கள். இராக்காலம் சமீபித்தது. ஆஸ்டிரியர்கள் நதியைக்கடந்து செர்வியாதேசத்திலுள்ள ஷ்ஸோர் என்னும் நகரின்மீது சென்றூர்கள். இதற்குள் செர்வியர்களுக்கு உபபலமாக அனேக வீரர்கள் வந்து சேர்ந்தார்கள். ஆகஸ்ட்மாதம் 17-ந்தேதிமுதற்கொண்டு 19-ந் தேதி வரைக்கும் இருதிறத்தாருக்கும் நடந்த பெரிய யுத்தத்தின் முடிவாக ஆஸ்டிரியர்கள் பின்னிடைந்தார்கள். ஸெப்பாட்ஸ் நகரத்திலிருந்து உதவிவருமென்று எதிர்பார்த்திருந்த ஆஸ்டிரியர்கள் எண்ணமெல்லாம் மண்ணுய்ப்போய் விட்டது. 20-ந்தேதி முதல் 22-ந்தேதி வரையிலும் 5000 ஆஸ்டிரியர்கள் ஸெர்வியர்களால் கைதிகளாக்கப்பட்டார்கள். ஆஸ்டிரியர்களுடைய 60 பீரங்கிகள் செர்வியர்கள் கைவசமாயின. இவ்விதம் ஆஸ்டிரியர்கள் செர்வியாமீது திசைக்குத் திசையனுப்பின சேனுவீரர்களெல்லாம் செயலற்றவர்களாய் அயர்ந்துவிட, ஆகஸ்ட்மாதமுங் கழிந்து,செப்டெம்பர் முதல் வாரமும்வந்துவிட்டது. ஆஸ்டிரியச் சேனைகளில் ஒரு தொகுதி மாத்திரம் செர்வியர்களுடைய தாக்குதலுக்கு ஆளாகாமல் பின்பட்டு செர்வியா தேசத்தின் நகரமாகிய விசேகிராட்மீது செல்கையில், செர்வியருக்கு உதவிபுரிபவர்களாகிய மாண்டிநீக்ரோ தேசத்தார் அச்சேனையை முறியடித்தார்கள்.

செர்வியர்களை மிகத்திரணமென நினைத்துக் கணப்பொழுதில் வென்று விடலாமென்று வீண் எண்ணம் கொண்ட ஆஸ்ட்ரியர்களிற் சிலர் தப்பித்துக்கொண்டு தங்கள் தேசம் சென்றார்கள்.

வலியற்றவர்களெனக் கருதப்படுபவர்களை எளிதில் வெல்வது கூடாதகாரியம். வலிமையில்லார் ஒருவருமில்லை என்னும் கருத்தை, விதுரனுக்குச் சமானமாகத் தமது பக்கத்தில் எவருளாரென வினவிய யுதிட்டிரனுக்கு, ஸ்ரீகண்ணன், பலம்பொருந்திய பீமனையும் அர்ச்சுனனையும் எடுத்துக்காட்டாது,—

"நகுலன் பரியேறினா லொன்று மூன்று
புவனங்களேழும் புடைபோய்—இகலும்
அவனுடைய வில்லும் அதிரதரும் எல்லாம்
இவனுடைய முன்னில்லா ரீங்கு"

என்றபடி, நகுலனை எடுத்துக்காட்டினார். அதுபோலும் திரணமாக நினைக்கப்பட்ட செர்வியர்கள் ஆஸ்ட்ரியர்களுக்கு மேற்பட்ட வீரர்கள் என்று ஆகஸ்ட் செப்டம்பர்மாதம் நடந்தயுத்தங்கள் நன்குவிளக்கியதால் செர்வியர்களுக்கு ஜென்மப்பகைஞர்களாகிய பல்கேரியர்கள் ஓர்புறம் உறங்கினார்கள். ஆஸ்ட்ரியாவையும் ஜெர்மனியையும் சேருகிறதில்லையென்று இட்டாலி தீர்மானித்துவிட்டது.

ஆஸ்ட்ரியர் செர்வியர்மீது படை எடுத்துப்பயன் ஒன்றையும் அடையாவிடினும், போகும்பிசாசு புளியமரத்துக்கிளையை முறித்துக்கொண்டு போவதுபோல், செர்வியாதேசத்தின் தலைநகராகிய பெல்கிரேட்மீது ஷெல்குண்டுகளை எறிந்து சிறிது சேதம் விளைவித்துக்கொண்டே சென்றார்கள்.

மூன்றாவது அத்தியாயம்.

கிழக்குப் பிரஷ்யாவில் யுத்தங்கள்

அரசர்கள் ஒருவர்க்கொருவர் யுத்தம் புரிவதென்றால், இருவர் சேனைகள் குறித்த ஓரிடத்தில் போர்செய்வது; இது நாம் அறிந்த விஷயம். இப்பொழுது நடக்கும் இந்த ஐரோப்பிய மஹாயுத்தத்திலோ அங்ஙனமில்லை. படைகள் எட்டுத் திசைகளிலும் சென்று ஆங்காங்கே யுத்தம் புரிந்துகொண்டிருக்கின்றன. ஜெர்மனியப் படைகள் மேற்றிசையை நோக்கி பெல்ஜிய பிரான்சு தேசங்களிற் பிரவேசித்ததையும், அங்கு நடந்த அருஞ்சமர்களையும், மற்றொரு ஜெர்மனியச்சேனை ருஷியாமீதுசென்று வார்சாமுதலிய கோட்டைகளைத்தாக்கிஜெயம் பெறாமல் பின்பட்டதையும், ஆஸ்ட்ரியச் சேனைகள் செர்வியர்கள்மீது சென்று செர்வியர்கள் கோபாவேசத்திற்கு இலக்காகி நாஸ்திபடைந்ததையும்,ருஷியர்களுடையஇரண்டுபெருஞ்சேனைகள் கொசாக் வீரர்களுடன் தென்முகம் சென்று ஆஸ்ட்ரியாவின் பிரதான நகரமாகிய கெலீஷ்யா நாட்டில் சிலயுத்த விளையாட்டுகள் புரிந்து லெம்பர்க் நகரைப்பம்பரம்போல் ஆட்டினதையும்பற்றி இதுவரையிலும் கூறி வந்தோம். இதனால் இந்த ஐரோப்பிய மஹாயுத்தத்தில் பகைவர்களுடைய படைகள்பற்பல திசைகளுக்குச்சென்று யுத்தம் புரிந்துகொண்டிருக்கின்றனவென்பது தானே விளங்குகின்றது.

ருஷியர்களுடைய படைகளின் வன்மையைப்பற்றி முன்னரே வேண்டிய அளவு வரைந்திருக்கிறோம். இவ்வித ஆற்றல் பொருந்திய ருஷியர்கள் கிழக்குப் பிரஷ்யாவில் பிரவேசித்துச் செய்த யுத்தங்களைப்பற்றி நாம் கவனிக்க வேண்டியதவசியம். கிழக்குப் பிரஷ்யா என்பது ஜெர்மனி தேசத்தில் உள்ள ஒரு பெரியபாகம். இதுபெரும்பான்மையும்சதுப்புநிலமாயுள்ளது. நதிகளின் கால்கள்பல இந்நாட்டின்கண் பற்பலஇடங்களிலும் காணப்படும் இந்தக் கிழக்குப் பிரஷ்யாவுக்கும் ருஷியாவுக்கும் இடையே அநேக ருஷியச் சேனைகள் இங்கும் அங்கும் இருந்தன. அவைகளை யெல்லாம் ஒருங்கே கூட்டிக் கிழக்குப்

பிரஷ்யாவில் பிரவேசித்து ஜெர்மனியர்களுடைய அகந்தையை அடக்கவேண்டுமென்றுகருதின ருஷியர்கள், ஜெனரல் ரேனன் **காம்ப்** என்பவரைக் கிழக்குப் பிரஷியாவின்மீது படையெடுக்கும் ருஷியச் சேனைக்கு அதிபராக நியமித்தார்கள். இவர் பல யுத்தங்களுக்குச் சென்று யுத்தப் பயிற்சியில் மிகவும் தேர்ந்தவர். பீரங்கியின் வெடிகளையெல்லாம் இவர் எத்தனையோ தடவை கேட்டுக்கேட்டு, எதற்கும் பின்வாங்காத மனோதிடமுடையவர். இவர்பெயரை அறியாதருஷியவீரர் ஒருவருமில்லை. இவர்நான்கு லக்ஷம் ருஷியவீரர்களோடு ருஷியாவின் கீழ்த்திசையிலுள்ள நீமன்நதி தீரத்தை யடைந்தார். இஃது இங்ஙனமிருக்க, கீழ்ப் பிரஷ்யாவைஜெர்மனியர் யாது நிலைமையில் விட்டிருந்தார்கள் என்பதைப்பற்றிக் கவனிப்போம். திரண்டசேனைகளைபெல்ஜிய பிரான்ஸ்தேசங்களின் திசைகளுக்கு ஜெர்மனியர்கள் அனுப்பியிருந்தமையால்இக்கீழ்ப்பிரஷ்யாவின்பாதுகாப்புக்குப்போதுமான படை வன்மை ஜெர்மனியர்களிடமில்லை. இங்குமங்கும் சிற்சில ஜெர்மனியவீரர்கள், பெல்ஜிய பிரான்ஸ் திசைகளுக்குச் செல்லாமல் தப்பித்துக்கொண்ட உற்சாகத்தினால் உலாவிக் கொண்டிருந்தனர். இவ்விதம் சேர்ந்தயுத்த வீரர்களின்தொகைகளெல்லாம் இரண்டு லக்ஷத்து ஐம்பதினாயிரம் வீரர்களுக்கு மேற்படாவென்றே எண்ணப்படுகின்றது.

அநேக கொசாக்வீரர்கள் அசகாய சூரர்களல்லவோ! அச்சமென்பதுகிஞ்சித்தேனும் இவர்கள்நெஞ்சிற்புகாதே! ஆகஸ்ட்டு மாதம் முதல் வாரத்தில் இத்தகைய ஆற்றல் வாய்ந்த கொசாக் வீரர்கள் ருஷியச் சேனையின் அதிபராகிய ஜெனரல்ரெனன்காம்பின் கீழ் நீமன் நதியைக்கடந்தார்கள். லிக், பயல்லா, முதலிய இடங்களில் தங்கியிருந்த ஜெர்மனியவீரர்கள் கொசாக்வீரர்கள் வருகையைக் கேள்வியுற்றார்கள். மிகுந்த கோபம் கொண்டு கொசாக்வீரர்களை எதிர்க்க ஆரம்பித்தார்கள். இவ்விதம் ஜெர்மனியவீரர்களுக்கும் ருஷியச்சேனைகளைச் சார்ந்த கொசாக் வீரர்களுக்கும்யுத்தம் நடந்துகொண்டிருக்கையில் ருஷியர்களுடைய பெருஞ்சேனையொன்று லிக்நகரத்திற்கு வந்துசேர்ந்தது, லவனுக்குக் குசலன் துணைவந்ததுபோலாயிற்று. ஜெர்மனிய வீரர்கள் கொசாக்வீரர்களின் முன் பஞ்சாய்ப் பறந்தார்கள்.

ருஷிய ஆகாய விமானங்களின் செய்கை.

இவ்விதம் ருஷியர்கள்பெருஞ்சேனைகளைத் துணைகொண்டு வருகையில் ஜெர்மனியர்கள் சும்மாவிருக்கவில்லை. அவர்களுடைய ஆகாயவிமானிகள்அந்தரத்தேசென்றுருஷியப்படைகள் கொசாக்வீரர்களுக்குத் துணைவருவதை ஜெர்மனியச் சேனை அதிகாரிகளுக்கு அறிவித்துக்கொண்டிருந்தார்கள். இதன் காரணமாக ஜெர்மனியப் பெருஞ்சேனை யொன்று, ஒன்று சேர்க்கப்பட்டு வந்துகொண்டிருந்தது. ஆகவே ருஷியச்சேனைக்கும் ஜெர்மனியச்சேனைக்கும் சமயுத்தம் நடக்கும் சமயம்சமீபித்துவிட்டது. நீமன்நதிக்குத்தென்பாலுள்ள கம்பின்னன் என்னும் இடம் போர்க்களமாகவும் குறிக்கப்பட்டது. ருஷியர்களைவராமற்றடுக்க ஆகாய மளாவிய மரங்களை அடியோடு வீழ்த்தி அநேகமைல் நிகளத்திற்குப் பரப்பி, அவைகளின்மீது இருப்பு முட்கம்பிகளை வலைகள்போல விரித்து வைத்திருந்தார்கள் ஜெர்மனியர்கள். அன்றியும்,பதிவிருந்துயுத்தம்செய்யுமாறு அரண்குழிகள் ஆயிரக்கணக்காய் வெட்டப்பட்டிருந்தன.எவ்விதப் பிரயத்தனம்செய்த போதிலும் விருக்ஷங்களாகிய முள்வேலிகளைக் கடப்பது ருஷியர்களுக்கு அரிதினும் அரிதாமென்று ஜெர்மனியர்கள் கருதினார்கள், ஆனால் இம்முள் வேலிகளெல்லாம்ருஷியர்களுடைய விடாமுயற்சியின்முன் எள்ளளவேனும் பயன்படவில்லை. ஆகஸ்ட்டுமாதம் இரண்டுவாரங்களும் சென்றுவிட்டன. கம்பின்னன் என்னும் இடத்தைச்சுற்றி யிருந்தவனங்களை யெல்லாம் ருஷியர்களும் கொசாக் வீரர்களும் அதம்பண்ணிக் கொண்டுயுத்தகளத்திற்குவந்துசேர்ந்தார்கள். மிகப்பயங்கரமான யுத்தம் நடந்தது. ஆகஸ்ட்டுமாதம் 17-ந்தேதி முதற்கொண்டு 20-ந்தேதி வரையிலும் இருதிறத்தாருக்கும் களைப்பு சிறிதேனும் தோன்றவில்லை. குண்டுகளின்சப்தம்அண்டமுகட்டைக்கிட்டிற்று. ஜெயம்என்னும் பூனை ஜெர்மனியர்கள் பக்கம் குதிக்கலாமோ ருஷியர்கள் பக்கம் குதிக்கலாமோ வென்று நெடுநேரம் யோசித்துஒன்றும் செய்யத்தோன்றாததாய் விழித்துக்கொண்டிருந்தது.

ஜெனரல் ரெனன்காம்ப் தம் சேனைகளை மிகவும் உற்சாகப்படுத்தி ஜெர்மனியர்கள்மீது ஏவினார். ஜெர்மனியர்கள் புறங்காட்ட ஆரம்பித்தார்கள்.

டில்சிட் நகரம் ருஷியர்களுக்குள்ளானது. ஜெர்மனியர்களைப் பின்னால் துரத்திச் சென்ற ருஷியர்கள் டில்சிட் நகரத்தை எதிர்ப்பார் ஒருவருமின்றியே கைவசப்படுத்திக்கொண்டார்கள். அங்கிருந்த ஜெர்மனியர்களெல்லாம் ஓட்டம்பிடித்தார்கள். ருஷியர்கள் மேலும் மேலும் சென்று இன்ஸ்ட்டர்பர்க் என்னும் நகரிற்றங்கி அங்கிருந்த ஜெர்மனியர்களையும் துரத்தினார்கள். பிறகு லோட்ஸன் நகரையும் பிடித்தார்கள். அந் நகருக்கு அருகேயுள்ள ஒரு சிறிய குன்றின்மீது இருக்கும் போயன் என்னும் கோட்டையும் ருஷியர்கள் கைவசமாயிற்று. பிறகு பிராங்க்கனோ என்னும் இடத்தில் பெரிய யுத்தம் நடந்தது. இவ்விதம் ருஷியர்கள் மேலும் மேலும் யுத்தம் புரிந்துகொண்டே சென்று அலன்ஸ்டீன் முதலிய அநேக நகர்களைப்பிடித்து ஆகஸ்ட்டு மாதம் முடிவதற்குள் கிழ்ப்பிரஷியா முழுவதையுமே தங்கள் கைவசப்படுத்திக் கொண்டார்கள்.

இவை யனைத்தும் ஜெர்மனியர்கள் கிழ்ப்பிரஷியாவில்போதுமான சேனைகளை வைக்காதிருந்தமையால் விளைந்த தீமையென்று அறிந்த ஜெர்மனியர்களுடைய பெருஞ் சேனை கிழ்ப்பிரஷியா திசைநோக்கிவந்துக்கொண்டிருந்தது. இச்சேனைக்கு அதிபராய் நின்றவர் ஜெனரல் வான்ஹின்டன்பர்க் என்பார். இவர் தமது சேனையை செப்டம்பர் மாதம் முதல் வாரத்தில் ஆஸ்டரோட், டானன்பர்க், ஹோகின்ஸ்டீன் முதலிய கிராமங்களின் வழியாய்க் கொண்டுவந்து இதுகாறும் தோல்வியடைந்திருந்த ஜெர்மனியர்களுக்கு உற்சாகத்தைவிளைவித்து ருஷியர்களை எதிர்க்க ஆரம்பித்தார். இவ்விதம் யுத்தம் நடந்தது டானன்பர்க் என்னுமிடத்தில் இருபுறத்திலும் இரண்டு லட்சத்து 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட சேனை வீரர்களிருந்தனர். மிகக் கொடிய யுத்தம் நடந்தது. இவ்விடம் யுத்தம் நடந்து இரண்டுவாரம் சென்ற பின்னர்தான் யுத்தத்தின் செய்தி வெளியாயிற்று. யுத்தச் செய்திகளை அப்போதைக்கப்போது சமாச்சாரப் பத்திரிகைளுக்கு அறிவிக்கும் நிருபநேயர்களும் இவ்விடம் செல்லவில்லை. டானன்பர்கில் ருஷியர்கள் தோல்வியுற்றார்களென்று கோஷித்த ஜெர்மனியப் பத்திரிகைகளைக் கண்ணுற்ற ஆங்கிலேயர் சிறிதேனும் நம்பவில்லை. ஆயினும் கிழ்ப்பிரஷ்யாவில் ருஷியர்களுக்கு முதலில் ஏற்பட்ட ஜெயம் டான

ன்பர்க் யுத்தத்தில் ருஷியர்களினின்றும் நீங்கி ஜெர்மனியர்களைச் சேர்ந்த தென்றே ஏற்படுகிறது. ஜெர்மனியர்கள் ஏராளமான இருப்புப்பாதை வண்டிகள் மூலமாய் டானன்பர்க் யுத்தத்தில் ஜெர்மனியர்களுக்கு உபபலமாக அனுப்பிக்கொண்டேயிருந்தமையால் ருஷியர்கள் ஜெயத்தை ஜெர்மனியர்களுக்குக் கொடுத்து விட்டார்கள். பாரமான பீரங்கிகளை ஜெர்மனியர்கள் சிறு கைத்துப்பாக்கிகள் போல யுத்தகளத்திற்கு எளிதில் கொண்டுவந்தார்கள் என்றும் சொல்லப்படுகிறது.

ருஷிய ஆகாயவிமானி யொருவர், ககனமார்க்கமாய்ச் சென்று ஜெர்மனிச் சேனை மேலும் மேலும் வருவதை யறிந்து தங்கள் பக்கத்தினருக்கு அறிவிக்க, ருஷியர்கள் ருஷியர் முகமாய்த் திரும்பிப்போக ஆரம்பித்தார்கள். இந்த கானன்பர்க் யுத்தத்தில் மூன்று ருஷியசேனைத் தலைவர்கள். சாம்ஸோனவ்ப், பெஸ்டிஷ், மார்ட்டோஸ், என்னும் பெயரை யுடையவர்கள் வீரசுவர்க்கம் சேர்ந்தார்கள். பதினாயிரக் கணக்கான ருஷ்யர்கள் கைதிக ளாக்கப்பட்டார்களென்றும் ஜெர்மனியர் சொல்லிக்கொள்ளுகிறார்கள், டாண்டனர் என ஜெர்மனியரால் சொல்லப்பட்ட ருஷ்யவீரர்கள் மீண்டும் தங்கள் தேசமேவந்து சேர்ந்தார்கள். இந்த யுத்தத்தில் ஏற்பட்ட தொன்றே கீழ்ப்பிரஷ்யாவை ஜெர்மனியரிடமிருந்து முதலில் ருஷ்யர் பிடித்துக் கொண்டு, பிறகு அதைக் கைவிட்டு விட்டார்கள் என்பதே.

பின்பட்டுப் போன ருஷ்யர்களை ஜெர்மனியர் துரத்த ஆரம்பித்தார்கள். ஆனால் ஜெனரல்ரெனன் காம்ப் என்பவருடைய வீரத்தன்மையினால் ஜெர்மனியர் ருஷ்யர்களைப் பின் துரத்த முடியவில்லை.

நான்காவது அத்தியாயம்

விஸ்டுலா, நீஸ்டர் நதிதீரங்களில் யுத்தம்

ருஷியர்களின் வெற்றி.

ருஷியர்களுடைய இரண்டு பெருஞ் சேனைகள் ஜெனரல் பிரஸ்ஸிலாவ்ப், ஜெனரல் ரஸ்கி இவர்களின் தலைமையின் கீழ் ஆஸ்டிரியா தேசத்திலுள்ள கெலீஷியா நாட்டிற் பிரவேசித்து லெம்பர்க் நகரைக் கைப்பற்றி விட்டார்கள் என்பதை முதற் பாகத்தில் கூறியுள்ளோம். ருஷ்யர்களுக்கு ஜெர்மனியர்மீதுள்ள அருவருப்பினால் ஸார் சக்ரவர்த்தியின் வாஸஸ்தலமும் ருஷியாவின் தலைநகருமான சென்ட் பீட்டர்ஸ் பர்க் என்னும் பெயரை மாற்றி பீட்ரோகிராட் என்று பெயர் கொடுத்தார்கள் என்பதும் முதற்பாகத்தில் கூறப்பட்டுள்ளது.

லெம்பர்க்கின் பெயர் மாற்றப்பட்டது.

ஜெர்மனியர்மீது எவ்வளவு அருவருப்பு ருஷியர்களுக்குள்ளதோ அவ்வளவு அருவருப்பு ஆஸ்டிரியர் மீதும் இருந்தமையால், ருஷியர் கைவசமான கெலீஷியாவின் தலைநகராகிய லெம்பர்க் என்னும் நகருக்கு **ஸ்லாவ்ப்** என்னும் பெயரைக் கொடுத்து, அங்கு ருஷிய கவர்னர் ஒருவரையும் நியமித்து விட்டார்கள். இஃதொருபுறம்நடந்துகொண்டிருக்க, ஆஸ்டிரியர்கள் பெருஞ் சேனைகளைத் திரட்டிக்கொண்டு நீஸ்டர், விஸ்டுலா முதலிய நதிதீரங்களின் வழியாய் ருஷியர்மீது படையெடுக்குமாறு சென்றுகொண்டிருந்தார்கள். ஜெர்மனியச் சேனை யொன்று தங்களுக்கு உபபலமாக வந்து சேருமாயின் ருஷ்யாவை எளிதில் அபஜெயப் படுத்தலாம் என வீண் எண்ணங் கொண்டும், தன்கையே தனக்குதவி என்னும் பழமொழியைக் கவனியாது விட்டவர்களாகிய ஆஸ்டிரியர்கள், அகந்தை என்னும் பாதையின்மீது சென்று அந்தகாரமாகிய இருள் நிறைந்த அழிவு என்னும் நகரத்தைச் சேர்பவர்கள் போல் சென்றுகொண்டிருந்தார்கள். ருஷ்யர்களோ இவர்கள் வருகையை எதிர்பார்த்தவர்களாய்.—

கடவுளே! யுத்தம் எங்களால் விளைவிக்கப்பட்ட தல்ல; துர்ராசையால் எங்கள் தேசத்தைக் கைப்பற்ற வேண்டுமென்று ஆஸ்டிரியர்கள் வருகின்றார்கள்; ஆகையினால் தற்காப்பு நிமித்தம் நாங்கள் யுத்தம் புரியவேண்டியது அவசியமாயிருக்கின்றது; கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்னும் நீதிவாக்கியத் தின் கருத்தை ஸ்திரப்படுத்த வேண்டும்; நாங்கள் அடையும் ஜெயம் அந்த நீதிவாக்கியத்தின் புகழை அதிகப்படுத்தும்.

எனப் பிரார்த்தித்துக்கொண்டிருந்தார்கள்.

வாப்ளின், கோல்ம் யுத்தங்கள்.

இவர்கள் இங்ஙனம் பிரார்த்தித்துக்கொண்டிருக்கையில் ஆஸ்டிரியர்கள் விஸ்டுலாநதியின் இருகரைகளிலும் பெருஞ் சேனைகளுடன்சென்றுகொண்டிருந்தார்கள். இவ்விதம்சென்ற சேனைகளின் மொத்தம் ஐந்து லக்ஷம் என்று சொல்லப்படுகி றது. நதியின் இடதுகரையில் சென்ற சேனைக்குத் தலைவராகச் சென்ற ஆஸ்டிரியரின் பெயர் ஜெனரல் பாங்கில். இவர் தமது சேனையை ரேடம் என்னும் நகர்த்திசையை நோக்கி நடத்திக் கொண்டிருந்தார். நதியின் வலது கரையின்மீது சென்ற ஆஸ் டிரியச் சேனையின் தலைவர் ஜெனரல் ஆபன்பர்க் என்பார். இவ்விருதலைவர்களும் ஜெர்மனியர் தங்களுக்கு உதவியாக வரு வார்களென்று மிகவும் நம்பியிருந்தார்கள். ஜெர்மனியர் ஏன் வரவில்லை என்ற எண்ணத்தினால் இவர்களுக்கு மேலும்மேலும் ருஷியாவினுட் பிரவேசிக்கத் தைரியம் குறைவுபட்டது.

ஆஸ்டிரியச் சேனையின் கதி.

ஜெர்மனியர்களோ கீழ்ப்பிரஷ்யாவில் ருஷியர்களுடன் போர்புரிந்துகொண்டிருந்தமையால் ஆஸ்டிரியர்களுக்கு உதவி புரிவதற்கு அசக்தர்களாய் விட்டார்கள். ருஷியர் கீழ்ப்பிரஷ் யாவில் ஜெர்மனியருடன் யுத்தம் செய்து பெற்ற ஜெயம் சிறி தேயாயினும், அதனால் உண்டாகிய நன்மை அதிகம் கீழ்ப் பிரஷ்யாவில் ருஷியருக்கும் ஜெர்மனியருக்கும் யுத்தம் நடந் திராவிடில் ஜெர்மனியர் ஆஸ்டிரியர்களுக்கு உதவிவந்திருப்

பார்கள் என்பது நிச்சயம். கீழ்ப்பிரஷ்யாவில் ஜெர்மனியர் ருஷியர்களுடன் கைகலந்து யுத்தம் செய்துகொண்டிருந்தமையால் ஆஸ்டிரியர்களுக்கு உதவிவரக் கூடவில்லை. மேற்கூறிய வண்ணம் ஆஸ்டிரியச் சேனைகள் விஸ்டுலா நதியின் இருகரைகளிலும் சென்றுகொண்டேயிருந்தன. இந்நதியானது கிராகோ, தார்ன் என்னும் இரண்டு நகர்களுக்கு மிடையே வில்போல் வளைந்து செல்கிறது. இவ்விதம் விஸ்டுலாநதி வளைவுபடுமிடத்தில் ஆஸ்டிரியர்கள் வந்துகொண்டிருக்கையில், ருஷியர்கள் ஆஸ்டிரியர்களை எதிர்க்க ஆரம்பித்தார்கள் ஆகையினால் ஆஸ்டிரியர்கள் அந்நதி தீரத்திலே மேலும் மேலும் செல்வதற்கு முடியாமற் போயிற்று. இது விஸ்டுலா நதியின் இடதுகரையில் சென்ற ஆஸ்டிரியச் சேனையின் கதி.

வலதுகரையில் சென்ற ஆஸ்டிரியச்சேனை விஸ்டுலாநதியின் உபநதியாகிய பக் நதிக்கும் விஸ்டுலாவுக்கும் இடையேயுள்ள கோல்ம் என்னும் நகரை நோக்கிச் சென்றுகொண்டிருந்தது. இச்சேனை இவ்விதம்சென்றதை ருஷியர்கள் தடுக்கவில்லை. இச்சேனையானது ஆஸ்டிரியா தேசத்திலிருந்தும் புறப்பட்டு ருஷியாவுக்குள் 50-மைல் தூரம் வந்து விட்டிருந்தது. ஆஸ்டிரியர் கோல்ம் நகரைச் சமீபித்துவிட்டார்கள். இந்தக் கோல்ம் நகரானது லூப்ளின் என்னும்மற்றொருநகருடன்இருப்புப்பாதையால் சேர்க்கப்பட்டுள்ளது. இவ்விரு நகர்களையும் பிடித்துஇருப்புப்பாதையையும் கைக்கொண்டு விட்டால் ருஷியா முழுவதையும் வெற்றிகொள்வதற்கு எளிதாகும் என்பதே ஜெனரல் ஆபன்பர்க்என்பவருடைய கருத்து. இவ்விதம் கருத்துக்கொண்ட ஆஸ்டிரியர்களுடைய சேனையின் நடவடிக்கைகளை முன்னரே நன்குணர்ந்திருந்தகிராண்ட் டியூக்நிக்கொலஸ்என்னும்ருஷியப்பிரபு, ருஷியச்சேனைகளுக்கெல்லாம் அதிபர், தமது சேனைகளை ஒருங்கு கூட்டி இருநகர்களுக்குமிடையே வைத்திருந்தார்.

ஆஸ்டிரியர்கள் தங்களாலியன்ற வரையிலும் இவ்விரு நகர்களையும் பிடித்து இருப்புப்பாதையையும் கைக்கொள்ள வேண்டுமென்று முயன்றார்கள். அது சிறிதேனும் பயன்படவில்லை. என்செய்வார்கள் பாபம்! செர்வியர்கள்மீது படையெடுத்த ஒருஆஸ்டிரியச் சேனை முதுகுகாட்டிப் பின்பட்டது.

கெலீஷியாவின் தலைநகராகிய லெம்பர்க்கைக் காவல்பூண்டிருந்த மற்றொரு ஆஸ்டிரியச் சேனை கொஸாக்வீரர்களால் முறியடிக்கப்பட்டது. விஸ்டுலாவின் இடதுகரையில் ஜெனரல் டாங்கிள் என்பவரின் கீழ்ச்சென்ற மற்றொரு சேனை அந்நதி வளைந்து செல்லுமிடத்தில் ருஷியர்களால் எதிர்க்கப்பட்டது. லூப்ளின், கோல்ம் என்னு மிருநகர்களையும் அவற்றைச்சேர்க்கும் இருப்புப்பாதையையும் கைக்கொள்ளுமாறு கருதி வந்த ஜெனரல் ஆபன்பர்ச் என்பவருடைய சேனைக்கு வேறு என்னகதி கிடைக்கும்? இருதிறத்தாருக்கும், மேற்சொன்ன லூப்ளின், கோல்ம் என்னும் இருநகர்களுக்குமிடையேயுள்ள க்ரினிட்ஸ் என்னும் ஸ்தலத்தில் யுத்தம் நடந்து, ருஷியர்களுடைய ஈட்டி முனைகள் அனேக ஆஸ்டிரியர்களுடைய உடல்களின் தசையின் மதுரத்தை யறிந்தன. பீரங்கிக்குண்டுகள் ஆஸ்டிரியச் சேனைகளில் பெரும்பான்மையோரை தும்ஸப்படுத்தின. ஆஸ்டிரியர்கள் நினைத்தவண்ணம் உதவி கிடைக்காமையினால் பின்பட்டோடத் தலைப்பட்டார்கள்.

ஆஸ்ட்ரியர்கள் சேற்றில் சிக்குண்டார்கள்.

ஆஸ்ட்ரியர்கள் ஓடின திசையோ மிகவும் சதுப்பு நிலம். மனிதர்கள் செல்வதற்கும் மற்றும் போக்கு வரவுக்குரிய சாதனங்களுக்கும் தகுதியற்றது. சிறிய கனமுள்ள வஸ்து வேனும் இப்பூமியில் போடப்பட்டால் அமிழ்ந்துவிடும். இவ்வளவு வளம்வாய்ந்த திசையைநோக்கி ஆஸ்டிரியர்கள் ஓடினார்கள். இவ்விதம் ஓடின ஆஸ்டிரியர்கள், முழங்கால்வரையிலும், தொடைவரையிலும் இடுப்புவரையிலுமாகச் சேற்றில் சிக்கிக்கொண்டார்கள். "அங்கே தப்பி இங்கே தப்பி அகப்பட்டுக்கொண்டான் தும்பட்டிக்காய் பட்டன்" எனும் பழமொழிப்படி, ஆஸ்டிரியர்கள் ஆந்தைபோல விழித்தார்கள்; ருஷியர்களுடைய ஈட்டிமுனைகளுக்குஇரையாவதும் உத்தமம் என்று அவர்களுக்குத் தோன்றிற்று. எவ்வளவுஇம்சை நேர்ந்தபோதிலும், அவ்விம்சையானது நெடுநேரமின்றி, க்ஷணப்பொழுதில் ஆவியானது காயத்தைவிட்டு நீங்குமாயின், அது ஊண்உறக்கமின்றிச் சேற்றில் இடுப்பளவும் புதைபட்டு வற்றல் போடுவதுபோல் சிக்கிக்கொள்வதைக் காட்டிலும் மேன்மையன்றோ?

இவர்களுடைய பரிதாபமில்லைமையைக் கண்ணுற்ற ருஷியர்கள் மனம் சகியாதவர்களாய்க் கயிறுகளை ஏராளமாய்க்கொண்டு வந்து, சிறிது தூரத்தில் நின்றுகொண்டு அவற்றின் நுனியைப் பற்றிக்கொண்டு வீசியெறிந்தார்கள். தங்களிடம் சேர்ந்த கயிறுகளின் மற்ற முனைகளை ஆஸ்டிரியர் கைப்பற்றினார்கள்.

அபாயத்திலிருக்கும் ஒருவனுக்கு உதவியானது சத்துருவினிடமிருந்து வந்தாலும் அல்லது மித்துருவினிடமிருந்து வந்தாலும் ஒன்றே; வித்தியாசம் ஒன்றும் தோன்றாது. மித்துருக்களிடமிருந்து வரும் உதவிதான் ஏற்றுக்கொள்ளப்படுமென்றும் சத்துருக்களிடமிருந்துவரு முதவி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாதென்றும் கருதப்படும் வைராக்கிய விதிகள், ஆபத்துக் காலத்திற் செல்லா. இஃதனைத்திற்கும் உயிரின்மீதுள்ள ஆவலே காரணம். இதற்கு ஆஸ்டிரியர்கள் தற்காலத்து நின்ற ஆபத்து நிலைமையும், அவர்களுக்கு ருஷியர்கள் கொடுத்த உதவியுமே நிதர்சனமாகும். ருஷியர்களிடமிருந்து வந்த கயிற்றின் முனைகளை ஆஸ்ட்ரியர்கள் பிடித்துக்கொண்டார்கள். ஆழமான தடாகத்தில் தன்னுடைய அளவின் ஆழத்திற்கு மேல் சென்று திகைக்குமொருவனை ஆபத்தினின்றும் நீக்கும் பொருட்டுக் கரையினின்றும் கயிற்றை வீசி இழுப்பதுபோல ருஷியர்கள் ஆஸ்டிரியர்களை இழுத்தார்கள். இவ்விதம் பிழைப்பிக்கப்பட்ட ஆஸ்டிரியர்கள் 6000பேர், ருஷியர்களால் கைதிகளாக்கப்பட்டுச் செலுத்தப்பட்டார்கள். ஆஸ்டிரியர்களுடைய பீரங்கி முதலிய அனேக யுத்தாயுதங்களும் ருஷியர்கள் கைவசமாயின.

இவ்விதம் போர்புரிந்த ருஷியர்களுக்கு உபபலமாகக் கீழ்ப்பிரஷ்யாவில் சென்றுயுத்தம் செய்த அநேக ருஷியர்களை ஜெனரல் சுக்கோம்லினுப்வ்என்பவர் அனுப்பிவைத்தார். இந்த யுத்தமானது விஸ்டுலாநதி முதற்கொண்டு லூப்ளின், கோல்ம் நகர்கள் வரையிலும் நடைபெற்றமையால் 200-மைலுக்குமேற்பட்ட விஸ்தீரணத்தை யுடையது இந்த யுத்தகளம் என்றே சொல்லவேண்டும்.

ஐவன்குராட் யுத்தம்.

விஸ்டுலாநதியின் இடதுகரையிற் சென்ற ஜெனரல் டாங்க்கிள் என்பவருடைய ஆஸ்டிரியச் சேனை இந்நதி வளைந்து செல்லுமிடத்தில் ருஷியர்களால் எதிர்க்கப்பட்டதென்று முன்னரே கூறியுள்ளோம். ஆயினும் ஆஸ்டிரியர்கள் முன்வைத்த காலைப் பின்வாங்குகிறதில்லை யென்று மேலும் மேலும் சென்றார்கள். ஐவன்குராட் என்னும் நகரத்தை யடைந்தார்கள். இந்நகரானது மிக மேலான வலிமை பொருந்திய கோட்டையைக் கொண்டது எனமுன்னரே கூறப்பட்டுள்ளது. இக்கோட்டையைக் கைப்பற்ற வேண்டுமென்பதே ஜெனரல் டாங்க்கிள் என்பவரின் கீழிருந்த ஆஸ்டிரியச் சேனையின் கருத்து. அவ்வளவு எளிதில் ருஷியர்கள் இக்கோட்டையை விட்டுவிடுவார்களா? இருதிறத்தாருக்கும் பெரிய யுத்தம் நடந்தது. ஆஸ்டிரியர்கள் ருஷியர்களுக்கு முன்னிற்கமாட்டாமல் பின்படுந் தருணத்தில் ஒரு பெரிய சேனை அவர்களுக்கு உதவியாக வந்தது. இச்சேனையாதெனில், லூப்ளின், கோல்ம் என்னும் நகர்களுக்கிடையே ருஷியர்களுடன் யுத்தம் புரிந்து, ருஷியர்கள்! தங்கள் ஓட்டத்தைப் பிடிக்கமாட்டார்களென்று பந்தயம் போட்டவர்கள்போல் ஓடிவந்த ஆஸ்டிரியவீரர்களில், சேற்றில் சிக்குண்டவர்கள் நீங்கலாக, மீதி நின்றவர்களை ஒருங்கு சேர்ந்த சேனையாகும். இதன்றியும் விஸ்டுலாநதியின் ஜலப்பிரவாகத்தின்மீது அனேக யுத்தப்படவுகள் ஐவன்குராடில் போர்புரியும் ஆஸ்ட்ரிய வீரர்களுக்கு உதவியாக வந்தன. இதனால் ஆஸ்டிரியர்களுக்குச் சற்றே தைரியம் பிறந்தது. நடந்த யுத்தத்தின் கொடுமையை விரிவா யெடுத்துரைப்பது முடியாதகாரியமெனக் கண்ணாரக்கண்டோரே கூறுவதால் நாமெப்படி எடுத்துரைக்கக்கூடும்? முடிவில் ஸைவைசோக்கி என்னும் கிராமத்தருகில் ஆஸ்டிரியர்களுடைய சரீரங்களெல்லாம் தரையோடு தரையாய் வீழ்த்தப்பட்டன.

இச்சமயத்தில் கீழ்ப்பிரஷ்யாவில் ஜெனரல்ரெனன் காம்ப் என்னும் ருஷியத் தலைவரின் கீழ்வந்த ருஷியச் சேனைகளுடன் யுத்தம் புரிந்து வெற்றிபெற்றதாய் பாவனைகொண்ட ஜெர்மனி வீரர்கள் லக்ஷத்து 50-ஆயிரம் பேர் ஆஸ்டிரியர்களுக்கு உப

பலமாய் வந்து இந்த வைசோக்கி நகரின் அருகேயுள்ள டுரோபின் குன்றின்மீது ஆரோகணித்தார்கள். ஆஸ்டிரியர்கள் ருஷியவீரர்களின் ஈட்டிப்படைக்கும் பீரங்கிப்படைக்கும் இரையாவதைக்கண்ட இந்தஜெர்மனி வீரர்கள்,—நம்மைஉதவியாய் வேண்டி நாம் வந்துசேர்ந்ததும் இவ்வாஸ்டிரியர்கள் இம் மண்ணுலகை விட்டு விண்ணுலகுக்குச் செல்கின்றனரே, இனி நாம் யாருக்குத் துணை செல்வது? நாம் இங்கிருப்பதை ருஷிய வீரர்கள் கண்ணுற்றால் ஆஸ்டிரிய வீரர்களின் உதிரத்தைக் குடித்தும் பசிதணியாத ஈட்டிப்படைகளுக்கு நம்மை இரையாய்ப் போட்டு விடுவார்களே எனத் திகைத்து, டுரோபின் குன்றின் மீதிருந்து சடீலென இறங்கி ஒரே முகமாய் ஓடத் தலைப்பட்டார்கள். அப்படியும் 5000 ஜெர்மனிவீரர்கள் மாண்டார்கள். நேர்த்தியான 32 பீரங்கிகள் ருஷியர்களின் கைவசமாயின. இப்பீரங்கிகள் மீதெல்லாம் கெய்சர் சக்ரவர்த்தியின் சுருக்கக் கையெழுத்து போடப்பட்டிருக்குமாம்.

யுத்தகளத்திலும் நித்திரையாம்?

ஆஸ்டிரியவீரர்களுள் ஒருவன் மிகவும் சோர்வடைந்து யுத்தகளத்திலேயே படுத்து நித்திரைசெய்ய ஆரம்பித்துவிட்டானும். பேரிடிகள் போல பீரங்கிகள் முழங்குவதும் ஆஸ்டிரியர்கள் அடியற்ற மரங்கள்போல் திடீரென விழுவதும் இவ்வீரனுக்குத் தெரியாதாம். எவ்வளவு நேரம் இவன் நித்திரை செய்தான் என்பது அவனுக்கே ஏற்படவில்லையாம். கடைசியாய்க் கண்விழித்துப் பார்க்கையில் இருபுறங்களிலும் சவங்கள் சுவர்கள்போல் குவிந்து கிடப்பதைக் கண்டானும். திகிற்கொண்டவனுய் எழுந்திருக்க முயல்கையில் தனது கால்களிலிருந்த விரல்களெல்லாம் அறுபட்டுப்போயிருந்தனவாம். பிறரை மூதேவி தரிசனர்கள் எனக் கருதின ஆஸ்டிரியர்கள்மீது, 'என்னுடைய தயவு உங்களிடத்திலு மிருக்கிற' தென்பதைக் காட்டும் வண்ணம் மூதேவியே வந்து விட்டாள் போலும்! இந்த யுத்தத்தில் கொஸாக்வீரர்கள் அசாத்தியமான காரியங்கள் புரிந்து ருஷியர்களுக்கு ஜெயத்தைக் கொடுத்தார்கள். இவ்விதம் செப்டம்பர் மாதம் இரண்டு வாரங்களுக்கு மேற் சென்று விட்டது. யுத்தம் ஆரம்பித்த ஆகஸ்ட் மாதம் முதற்

கொண்டு இந்த செப்டம்பர் மாதம் வரையிலும் ஜெர்மனியர் பெல்ஜிய பிரான்ஸு தேசங்களிற் செய்த கொடுமைகளையும் ஜெய அபஜெயங்களையும், ஆங்கிலச் சேனை பிரான்ஸ் தேசத்திலுள்ள பொலோனில் இறங்கி பிரஞ்சுக்காரருக்குத் துணை வந்தது முதற்கொண்டு ஜெர்மனியர்களுடைய ஜெயமெல்லாம் குறைந்ததையும், ஆஸ்டிரியர்கள் செர்வியர்கள்மீது படையெடுத்துச் சென்று பின்னுபின்னப்பட்டதையும், இதைக்கண்ட இட்டாலியர்கள் நடுநிலைமை வகித்தலே மேற்பட்டதெனக் கருதினதையும், ருஷியர்களுடைய இரண்டு சேனைகள் கெலீஷியாவின் தலைநகராகிய லெம்பர்க்கைக் கைப்பற்றினதையும், ஜெர்மனியிலுள்ள கிழ்ப்பிரஷ்யாவில் ருஷியர்கள் பிரவேசித்து ஜெர்மனியர்களைத் தாக்கினதையும் ஆஸ்டிரியச் சேனைகள் விஸ்டுலாநதியின் இருகரைகளிலும் சென்று லூப்ளின், கோஸம் என்னும் நகர்களிலும் ஐவன்குராட், வைசோக்கி முதலிய இடங்களிலும் போர்புரிந்து இடருற்றதையும் பற்றிக் கூறிவந்தோம். இனி அக்டோபர் மாதம் முதற்கொண்டு இம்மகா யுத்தம் எவ்வெத்திசையில் எவ்வெவ்விதமாய் நடைபெறுகிறதென்று பின்வரும் அத்தியாயங்களிற் பேசுவோம்.

ஐந்தாவது அத்தியாயம்

இந்தியச் சேனைகள் பிரான்ஸுக்கு உபபலமாகச் சென்றது

இதுவரையிலும் பிரான்ஸில் நடந்த யுத்தத்தில் ஆங்கில வீரர்களும் பிரெஞ்ச் வீரர்களும் ஒருங்கு சேர்ந்தே ஜெர்மனியர்களை எதிர்த்து வந்தார்கள் என்னும் விஷயத்தை நாம் அறிய வேண்டும். இனி இந்தியாவிலிருந்து ஒரு பெரிய சேனை புறப்பட்டு பிரான்ஸில் யுத்தம் செய்யும் ஆங்கில-பிரெஞ்ச் சேனைகளுக்கு உபபலமாக வருவதை நாம் கவனிப்போம்.

யுத்த ஆரம்பத்திலேயே இந்தியாதேசத்திலுள்ள அநேக ராஜாக்களும் மகாராஜாக்களும் மற்றுமுள்ள சிற்றரசுகளும், தங்களுடைய உதவிகளை யேற்குமாறு ராஜப்பிரதிநிதிக்கு அளவிறந்த வண்ணமாயனுப்பிய தந்திச் செய்திகளையும், அவற்றை ராஜப்பிரதிநிதி நமது சக்ரவர்த்திக்குத் தெரிவித்ததையும், இந்தியர்களுடைய ராஜவிசுவாசத்திற்கு மிகவும் உளமகிழ்ந்த நமது ஜார்ஜ் சக்ரவர்த்தி தக்கவிடையளித்ததையும் நாம் முன்னரே விரிவாய் எடுத்துரைத்திருக்கிறோம். மைசூர் மகாராஜா அவர்கள் 50-லக்ஷம் ரூபாய் கொடுத்தார், ஐதராபாத் நிஜாம் அரசர் 60-லக்ஷம் ரூபாய் கொடுத்தார். எத்தனை லக்ஷம் கொடுத்தபோதிலும் அவைகளெல்லாம் யுத்தகளத்தில் போர்புரியுமோ? போர்வீரர்களன்றோ அவசியம்? என்பதை யுணர்ந்த இந்திய ராஜகுமாரர்கள், பலர் தத்தம் படைகளை அனுப்புவதாய் அறிவித்தார்கள்.

இந்தியர்களே புராதன போர்வீரர்கள்

இந்தியர்களுடைய வீரத்தன்மையொப்பு உவமையில்லாதது. ஆதிநாள் தொடங்கி யுகங்கள் தோறும் நடைபெற்றுவரும் யுத்தங்களிலெல்லாம் இந்திய வீரர்களுடைய போரின் திறமை மற்ற எத்தேசத்தாரும் கண்டு வியக்கத்தக்கதல்லவோ? இராமாயண யுத்தம் நடந்ததும், பிறகு பாரத யுத்தம் நடந்ததும் நமது பரதகண்டத்தில்; அப்பொழுது அந்த யுத்தங்களில்

நமது பரதகண்ட வீரர்கள் காட்டிய சௌரியத்தை வடமொழியில் வால்மீகரும் வியாசரும், தென்மொழியில் கம்பரும் வில்லிபுத்தூரரும், இதிகாசங்களாக எடுத்துரைத்தார்கள். அவற்றின் பிறகும் நமது நாட்டில் அனேக யுத்தங்கள் நடைபெற்றிருக்கின்றன. அவைகளிலெல்லாம் இந்தியர்களே காண்பித்த பராக்கிரமத்தைச் சரித்திரங்கள் மூலமாய் அறியலாம். இவ்விதம் பற்பலயுகங்களில் நடைபெற்ற அனேக யுத்தங்களுக்கு இருப்பிடமாகிய நமது பரதகண்டத்திற் பிறந்த இந்தியர்கள் வீரசூர தீரங்களில் மற்ற நாட்டினர்களுக்குப் பின்வாங்குவார்களோ? இவ்விஷயமானது ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் நன்றாய்த் தெரியும். இந்தியவீரர்கள் எப்போது துணை வருவார்கள் என்ற எண்ணமானது அவர்கள் மனதிற் குடி கொண்டிருந்தது. இவர்கள் எண்ணம் இவ்விதமிருக்க, ஜெர்மனிச் சக்கரவர்த்தியாகிய கெய்ஸர் எண்ணியிருந்தது வேறு விதமானது.

கெய்ஸரின் நிர்தாக்ஷண்யம்

கெய்ஸர் என்ற வார்த்தை மனதிலுதிக்கு முன்னரே, அமைதியுடன் வாழ்ந்திருக்கும் ஐரோப்பாக்கண்டத்து அரசர்களையெல்லாம் யுத்தத்தில் ஈடுபடுத்தி அளவிலா உயிர்ச் சேதங்களுக்கு மூலகாரணராயிருந்தவர் இவரல்லவோ என்னும் பயங்கரமான எண்ணம் மனதைக் கவர்கின்றது. தன்னுயிர்போல மன்னுயிரையும் பாதுகாக்கவேண்டிய தன்மை மன்னர்களுக்குரிய கடமைகளில் ஒன்றாயிருக்க, கெய்ஸர் சக்ரவர்த்தியினிடம் அதற்கெதிர்மை பொருந்தியிருக்கின்றதா வென்பது அடியில் வரும் சில விஷயங்களால் நன்குவிளங்கும்.

இரக்கமற்ற ஆக்ஞை

(1) கெய்ஸர் சக்கரவர்த்தினியினுடைய தோழிகளில் ஒருத்திக்கு ஜுரம் வந்துவிட்டது. அவள் ஜுரத்தினாலுண்டாகிய குளிரின் கொடுமையினால் மிகவும் வருந்தினவளாய் அரண்மனையின் தனியறை யொன்றில் படுத்துக்கொண்டிருந்தாள். அவ்வறைக்கும் கெய்ஸர் சக்ரவர்த்தி பள்ளிகொள்ளும் அறைக்கும் யாதொரு சம்பந்தமுங் கிடையாது. ஆயி

னும், ஜுரத்தினால் பீடிக்கப்பட்ட ஒரு தோழிப்பெண் அரண்மனை யறையொன்றில் ஒரு மூலையில் படுத்திருக்கிறாள் என்ற செய்தி கெய்ஸர் சக்ரவர்த்திக்கு எட்டிய மாத்திரத்தில் மிகச் சினங்கொண்டவராய், "அவள் இனி இவ்விடம் ஒருகணமேனும் தரிக்கலாகாது, இப்பொழுதே ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப்படவேண்டும்," என்று தயை தாக்ஷண்யம் சிறிதேனுமின்றிக் கண்டிப்பான உத்தரவு பிறப்பித்து விட்டார். இவர் இவ்வுத்தரவு பிறப்பித்த பொழுது மணியோ இரவு பதினொன்று. அவ்வேளைக்கு எந்த ஆஸ்பத்திரிதான் திறந்திருக்கும்! ஆயினும் சக்கரவர்த்தியின் ஆக்கினைக்கு எதிர் உரைத்தால் பெருவிநாசத்திற் கேதுவாகும் என்று கருதிய அரண்மனை உத்தியோகஸ்தர்கள், ஜுரத்தினால் பீடிக்கப்பட்டவர்கள் தொந்தரவினின்றும் நீங்கி அமைதியாய் ஓரிடத்தே வைக்கப்படவேண்டுமென்ற விதியையும் கவனியாது, அத்தோழிப் பெண்ணை அக்கணமே ஒரு வண்டியிலேற்றி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போயினார்கள். அங்குவாயிலண்டை காவல் பூண்ட ஒருவன் 'ஆஸ்பத்திரி உத்தியோகஸ்தர்களெல்லாம்வீட்டுக்குப் போய்விட்டார்கள், காலையில் தான் வரவேண்டும்' என்றான். பிறகு, ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டவள், சக்ரவர்த்தினியின் தோழி யென்று அறிவிக்கபட்ட பொழுது, வேறு வார்த்தை சொல்லாதவனாய்க் கதவைத் திறந்தான்; உள்ளே நுழைந்தார்கள். இத்தோழியின் அந்தஸ்திற்கேற்ற படுக்கையொன்றும் அங்கு காலியில்லாவிடினும் வேறு படுக்கையாவது காலியிருந்ததோ வென்றால் அதுவுமில்லை; நன்றாய்த் தேடிப் பார்த்ததில், மிகத்தரித்திரர்களுக்காக (Paupers) ஏற்படுத்தப் பட்டிருக்கும் ஓர் அறையில் ஒரு கட்டில் காலியிருக்கக்கண்டு, அதில் படுக்கவைத்தார்கள். பிறகு சிலநாள் சென்று அத்தோழிக்குச் சௌக்கியமானது ஒருபுறமிருக்க, பொழுது விடிந்த பின்னர் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப் படட்டும், என்னும் பொறுமை கெய்ஸர் சக்ரவர்த்தியினிடமில்லாததினாலல்லவோ, அத்தோழியை, ஜுரத்தினால் வருந்துகையில் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய் தரித்திரர்களுக்காகஏற்பட்டிருக்கும் கேவலமான படுக்கையில் படுக்கவைக்கக் காரணம் ஏற்பட்டது? அத்தோழி ஜுரத்தினால் வருந்துவதை சக்ரவர்த்தி

சற்றேனும் கவனிக்கவில்லையே! அவள் அன்றிரவு வரையிலும் அரண்மனையிலேயே இருந்தால், அந்தஜ—ரம் தன்னையும் பிடிக்கும் என்ற பயமல்லவோ கெய்ஸர் சக்ரவர்த்திக்கு முதன்மையாய் நின்றது !

மற்றொரு விசேஷம்.

(2) அரண்மனையில் ஒரு சமயம் பெரிய விருந்தொன்று நடந்தது ; அதற்குக் கனவான்களும் சீமாட்டிகளும் பலபிரபுக்களும் வந்திருந்தார்கள். அவ்விதம் வந்த சீமாட்டிகளில் ஒருத்தியின் உறவினர்களிலொருவர், தூரமாகிய ஓர் ஊரில் அசௌக்கியமாயிருப்பதாக அவள் கெய்ஸர் சக்ரவர்த்தியிடம் சம்பாஷித்துக்கொண்டிருக்கையில் அறிவித்து விட்டாள் ; அறிவித்த மாத்திரத்திலேயே வந்துவிட்டது கோபம் சக்ரவர்த்திக்கு; கண்கள் சிவந்தன ; நிமிர்ந்து நோக்கினர் அப்பெருமாட்டியின் முகத்தை ; "அவ்வித மிருக்க நீ யிவ்விடம் எப்படி வரக்கூடும்?" என்று கடுகடுத்த முகத்துடன் அவளிடம் ஒன்றும் பேசாது போய்விட்டார். அப்பெருமாட்டியின் மனம் என்ன இம்சையை யடைந்திருக்கு மென்பது மனத்தாலறியப்பட வேண்டியதே யன்றிச் சொல்லா லெடுத்துரைக்கப்படுவதன்று.

நெடுநேரம் அச்சீமாட்டி விம்மி விம்மி யழுது பிறகு தன் மனைக்குச் சென்று விட்டாள். பிறர் மனதைப் புண்படுத்துவதில் சற்றேனும் தாமதியாதவர் கெய்ஸர் சக்ரவர்த்தியென்பது இதனால் ஏற்படுகிறது.

கேய்ஸரின் வீண் எண்ணம்.

இவ்வித குணம் வாய்ந்த கெய்ஸர் சக்ரவர்த்தி, இந்தியர்கள் இப்பெரிய யுத்தத்தில் ஆங்கிலர்களுக்குத் துணைவரமாட்டார்கள் என்றும் அதற்குப் பதிலாய் ஆங்கிலேயருக்கு இந்தியர்களே கலகத்திற்குக் காரணமாய் நிற்பார்களென்றும் அது ஜெர்மனிக்கு அநுகூலமாய் முடியுமென்றும், நினைத்தார். இவ்வெண்ணமானது, வீண் எண்ணமாய் முடிந்தது.

"சார்வேந்தன் கோனேக்கி வாழும்குடி" என்னும் அடைமொழியானது இந்தியர்களுக்குப் பொருத்தப்படுவது போல்

மற்ற எந்த தேசத்தார்களுக்கும் பொருத்தப்படாது. கோயிலில்லாவூரில் குடியிருக்க வேண்டாம், என்று ஔவைப்பிராட்டியார் தெய்வபக்தியைக் குறித்து எடுத்துரைத்தது, அரசபக்தி குடிகளிடம் தானே அமைந்திருந்தமைபற்றியே. அன்றியும், கோ-அரசனுடைய, இல்-அரண்மனை இலாவூரில் குடியிருக்க வேண்டாமென்று பொருள்படுத்தினும், அரசர்களில்லாத நாட்டிலேயே குடியிருக்கவேண்டாம் என்றதனாலேயே, அரசுரிமைக்கு இந்தியர்கள் கடமைப்பட்டவர்கள் என்பது நன்குவிளங்குகின்றது. சுயகாரியப்புலியாகிய கெய்ஸர், இத்தகைய அரசபக்தி முதலிய பெருங்குணங்கள் வாய்ந்த இந்தியர்களுடைய மனநோக்கை யறியாதது அவருடைய தப்பிதமே.

ஜெர்மனியர் ஆங்கிலேயர் ஆவரா?

மேலும் ஜெர்மனியர் என்றால் ஆங்கிலேயர் போலும் ஓர் வெண்மை நிறத்தினர் என்றே யுத்தத்திற்கு முன்வரையிலும் இந்தியர்களிற்பெரும்பான்மையோர்நினைத்திருந்தனர். யுத்தம் ஆரம்பித்தபின்னர் ஜெர்மனியர் பெல்ஜியத்திற் புரிந்த மனஞ்சகியாத கொடுமைகளையும், லொவேன் புத்தகசாலையும், ரீம்ஸ் நகரிலுள்ள ஆலயமும் இன்னும் பிரான்ஸிலுள்ள உன்னதக் கட்டடங்களும் ஜெர்மனியரால் தீக்கிரையாக்கப்பட்டதையும், லீஜ், நாமூர், பிரஸ்ஸல்ஸ் முதலிய அனேகங் கோட்டை நகர்கள் அதோகதியடைந்ததையும் இந்தியர்கள் கேள்வியுற்ற அளவில், ஆங்கிலேயருடைய பெருங்குணங்களுக்கு ஜெர்மனியர் சற்றேனும் நிகராகார்கள்; ஜெர்மனிய ரெல்லாம் கொடியவர்களே என்னும் எண்ணம் அவர்கள் மனதில் ஸ்திரமாய்க் குடிகொண்டு விட்டது.

மார்ஸேல்ஸில் இந்தியச்சேனை.

பம்பாயிலிருந்தும் பஞ்சாபிலிருந்தும் சேனைபுறப்பட்டுக் கப்பல்மீது சென்று பிரான்ஸ்தேசத்தின் தென்கரையிலுள்ள மார்சேல்ஸ் என்னும் துறைமுகநகரில் செப்டம்பர் மாதம் இறங்கிற்று. இந்தியாவானது ஆங்கிலேயரின் அரசாட்சிக்கு உட்பட்ட பின்னர் அநேக யுத்தங்கள் ஐரோப்பாகண்டத்தில் நடைபெற்றிருப்பினும் இதுகாறும் இந்தியச் சேனை இங்லாந்துக்கு உபபலமாகச் சென்றதில்லை யாதலின், மார்சேல்ஸ்

துறைமுகத்தில் இந்தியச்சேனை இவ்விதம் இறங்கியது எக்காலத்தும் மறக்கற்பாலதன்று. யுத்தம் ஆரம்பித்தபின்னர் ஆல்ஜீரியாவி லிருந்தும் மொராக்கோவி லிருந்தும் இன்னும்பற்பலவிடங்களிலிருந்தும் சேனைகள் தினந்தோறும் ஆங்கில பிரெஞ்ச் உபபலச் சேனைகளுக்கு உதவியாய் இத்துறை முகத்திலேயே இறங்கினபோதிலும் அவைகளெல்லாம் செப்டம்பர் மாதம் இறங்கின இந்தியச் சேனையைப்போல அவ்வளவு மார்சேல்ஸ் நகரத்தினுடைய மனதைக் கவரவில்லை. இறங்கின சேனுவீரர்கள் இத்துறைமுக வீதிகள் வழியே செல்கையில், வீடுகள் தோறும் உள்ள குடிகள் இவர்களைக் காணவேண்டி வீடுகளை விட்டுவெளியே வந்து தங்களுடைய சந்தோஷமான முகங்களுடன் இவர்களுக்கு ரோஜாப்பூ முதலிய புஷ்பங்களைக் கொடுத்த காட்சி மிகவும் விநோதமாயிருந்தது. சேனுவீரர்கள் சென்ற பின்னர் பிரான்ஸ் தேசத்துக் குடிகள் அவர்கள் பின்னே திரள்திரளாய்ச் சென்று வேடிக்கை பார்த்தார்கள்.

இந்தியச் சேனையின் மாலைக்காட்சி.

மாலைக்காலம் வந்துவிட்டது; சூரியன் அஸ்தமனமாய் விட்டது; இருள் எங்கும் பரவியது; உடனே சேனுவீரர்களெல்லாம் கூடாரங்களை அடித்துத் தங்கினார்கள். இங்குமங்கும் போஜனகாரியத்துக்காக அடுப்புகள் எரிவதையும் அவைகளின்மீது ராஜபுத்திரர், சீக், பஞ்சாபி, மகம்மதியர்கள் முதலானவர்கள் தத்தமக்குரிய ஆகாரவஸ்துக்களைச் சமைப்பதையும் கண்டுகளித்த மார்சேல்ஸ், ஆர்லீன்ஸ் முதலிய நகரத்தினர்கள் 'வாழ்வு நமக்கு இன்றுவந்து விட்டது; தாழ்வு ஜெர்மனியர்களிடம் சென்று விட்டது; இனி நமக்குக் குறையா தொன்றுமில்லை' என்று பறையடிப்பவர்கள் போல் உற்சாகத்துடன் இங்குமங்கும் உலாவித் திரிந்துகொண்டும் சந்தோஷித்துக்கொண்டும் இருந்தார்கள்.

இவர்கள் இங்ஙனம் ஒருமாதகாலம் இங்கேயே இருக்கையில் அக்டோபர் மாதம் குதிரைப்படையினர்களாகிய சேனுவீரர்கள் இந்தியாவினின்றும் புறப்பட்டு மார்சேல்ஸ் துறைமுகத்திலேயே இறங்கி இவர்களுக்கு துணையாய் வந்தார்கள்.

இவர்களைக் கண்ணுற்ற மார்சேல்ஸ் நகரத்தினர் ஆனந்தக் கடலில் ஆழ்ந்திருந்தனர் என்றே சொல்லவேண்டும்.

சீக்கிய வீரர்களும் ராஜபுத்திரவீரர்களும் மகம்மதிய வீரர்களும் தங்களுடைய தலைப்பாகையில் சுங்கம் விட்டுக் கட்டியிருப்பதையும் பலருக்கு அழகான தாடிகள் வளர்ந்திருப்பதையும் அவர்களுடைய கூரிய கண்களையும் காணக்காண மார்ஸேல்ஸ் நகரத்தினர்களுடைய மனதிலிருந்த ஆநந்தம் பொங்கிவழிந்தது.

இவ்விதம் சென்ற இந்தியச் சேனைகளுக்கு அதிபராய்ச் சென்றவர் ஜேம்ஸ் வில்காக்ஸ் என்பவர். லெப்டினெண்ட் ஜெனரல் என்னும அதிகாரம் வகிந்தவர். இவர் சிறுவயது முதற்கொண்டே சேனை உத்தியோகத்தில் காலங்கழித்தவர். இவருக்கு இந்தியச் சேனுவீரர்களின்மீ துள்ள அன்புக்களவே இல்லை. இவரை யறியாத இந்தியச் சேனாவீரன் ஒருவருமில்லை. இவரால் அறியப்படாதார் ஒருவருமில்லை.

இவர்கள் மார்ஸேல்ஸ் நகரிலிருந்து ஆர்லீன்ஸ் நகர் சென்று கூடாரங்களை யடைத்து சக்ரவர்த்தியின் ஆணையை எதிர்பார்த்திருக்கையில் லெப்டினென்ட் ஜெனரல் ஜேம்ஸ் வில்காக்ஸ் அடியில் வருமாறு இந்தியச் சேனைகளுக்கு விஞ்ஞாபனம் வாசித்தார்.

இந்தியச் சேனைவீரர்களே ! நமது சக்ரவர்த்தி தயவுகூர்ந்து அவருடைய இந்தியச் சேனைக்கு அனுப்புவித்த வியாசம் நம்மால் முன்னரே அறிவிக்கப்பட்டது.

நமது ஆங்கிலத்தோழர்கள் யுத்தத்திற்குச் செல்கையில் யுத்தத்தில் உண்டாகும் வெற்றியின் பெருமையை நாமும் அடையுமாறு, நம்மை வருவித்தது எத்தகைய மகிழ்ச்சியைக் கொடுக்கின்றது.

இந்தியாவிலுள்ள சேனுவீரர்களின் பிரதிநிதிகளாக நாம் இங்குவந்திருக்கிறோம். நம்மை வருவித்த மரியாதைக்கேற்றவாறு யுத்தம் புரியவேண்டுமென்பது நம்முடைய தீர்மானம். இன்னும் சிலநாட்களில் நீண்டகால சரித்திரப் புகழ்ச்சியுள்ள எதிரிகளுடன் யுத்தம் புரிவோம்.

ஆனால் அவர்களுடைய புகழ்ச்சி உங்களுடைய புகழ்ச்சிக்கு எம்மாத்திரம்? பல நூற்றாண்டுகளாக மன்னர்களாகவும் போர்வீரர்களாகவும் இருந்தவர்களுடைய சந்ததியினர்கள் அல்லவோ நீங்கள்! இதை நீங்கள் ஒருக்காலும் மறக்கக்கூடாது. உங்களுடைய முன்னோர்கள் பெருமை மங்கக்கூடாது. ஆங்கிலேயர்களும் மகமதியர்களும், பிரெஞ்சுக்காரர்களும் இந்த யுத்தத்தில் உங்களுக்குச் சகோதரர்களே.

தங்களிடத்து வைக்கப்பட்ட விசுவாசத்திற்கு ஏற்ற தகைமையினர்களென்றும் இந்தியவீரர்கள் ஆதிகாலமுதலிருந்த போரின் திறத்தைச் சற்றேனும் இழந்திலர்கள் என்றும் ஐரோப்பாக்கண்டத்தில் யுத்தத்தினால் ஸ்தாபிக்கும் பெருமை உங்களுக்கு சக்ரவர்த்தியவர்களால் அளிக்கப்பட்டுள்ளது.

யுத்தம் புரிகையில் உயிர் இறப்பது மரணமாகாது. போரில் மாள்வது வீரசொர்க்கத்திற்குக் காரணம். இதுவே உங்கள் மதநூல்கள் எல்லாம் எடுத்துரைப்பதாகும்.

நீங்கள் இவ்விடம் யுத்தம் புரிந்துகொண்டிருக்கையில் உங்களுடைய பந்துமித்திரர்களெல்லாம் இமயமலை முதற்கொண்டு கன்னியாகுமரி வரையிலும் கங்கைமுதலிய புண்ணிய நதிகளில் நீராடி ஆலயங்கள் சென்று பூசனைகள் புரிந்து உங்களுக்கு ஜெயம் வருமாறு பிரார்த்தித்துக்கொண்டிருப்பார்கள்.

ஆகையினால், நீங்கள் உங்கள் சக்ரவர்த்திக்காக உங்களால் இயன்றவரையிலும் யுத்தம் புரியவேண்டியது உங்கள் கடமையாகும். உங்கள் வழியில் வரும் பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் உங்களுடைய வீரப்பிரதாபங்களை மிகப் பெருமையோடு கூறுமாறு நீங்கள் யுத்தம் புரியவேண்டியது அவசியம்.

ஜேம்ஸ் வில்காக்ஸ்

லெப்டினெண்ட் ஜெனரல்.

இவ்விதம் ஜேம்ஸ் வில்காக்ஸ் இந்தியச் சேனைவீரர்களுக்கு உற்சாகம் விளைவித்தமாத்திரத்தில் அவர்களுக்குத் தங்களுடைய நாட்டின்மீ திருந்த ஞாபகமெல்லாம் முற்றிலும் போய், நமது வீரப்பிரதாபத்தை ஆங்கில-பிரெஞ்ச் வீரர்களுக்குக் காட்டும் தருணம் எப்பொழுது வாய்க்கும் என எதிர் பார்த்திருந்தார்கள். இச்சேனைகளுடன் ஜோட்பூர் மகாராஜாவும் பிக்கானீர் மகாராஜாவும் கிஷன்கார் மகாராஜாவும், சர் பிரதாப் சிங்கும் வந்திருந்தார்கள். இவர்களுக்கும் இவர்களுடைய இந்தியச் சேனைகளுக்கும் வேண்டிய ஆகாரத்திற்காக ஆடுகள் மந்தை மந்தையாய் இவர்கள் இருக்கும் இடத்திற்குச் செல்வதைப்பார்க்க வெகு விநோதமாயிருந்தது. இவர்களுக் கிடையே பிரான்ஸ் தேசத்துக் குடிகள் இங்குமங்கும் உலவுவதைக்காண இந்தியாவும் பிரான்ஸும் ஒன்று கலந்ததுபோ லிருந்தது.

இந்தியாவிலிருந்து புறப்பட்ட சேனைகள் அனைத்துமே மார்ஸேல்ஸில் இறங்கவில்லை. அனேகஞ் சேனாவீரர்கள் கீழ் ஆப்ரிக்காவுக்கு அனுப்பப்பட்டார்கள். துருக்கி ஜெர்மனியோடு சேருமெனக் கருதி மற்றொரு சேனை சூயஸ்கெனாலுக் கனுப்பப்பட்டது.

மகம்மதியர்களெல்லாம் தங்கள் பக்கம் வந்துவிடுவார்களென்று எதிர்பார்த்திருந்த ஜெர்மனியர் எண்ணம் சிறிதேனும் நிறைவேறாமற் போயிற்று. இதற்காக, ஜெர்மனிய ஆகாய விமானிகள் பலர் இந்திய வீரர்கள் தங்கியிருக்கும் இடத்திற்கு மேலே உயரப்பறந்து வந்து ராஜவிசுவாசத்தைக் கெடுக்க பல துண்டுப் பத்திரிகைகளைப் போட்டுக்கொண் டிருந்தார்கள். நீதி தவறின வழிகள் பலவற்றையும் கையாள்வதில் சற்றேனும் தாமதியாதவர்களல்லவோ ஜெர்மனியர் !

ஹோட்டலிலுமா போராட்டம் ?

எய்ஸன் நதி முதலிய நதி தீரங்களில் யுத்தங்கள் நடந்து கொண்டிருக்கையில் ஜெர்மனியச் சேனாவீரர்களிற் சிலர் ஒரு ஹோட்டலுக்குச் சென்றனர். தங்களுக்கு வேண்டிய அளவு வுண்டபின்னர் அந்த ஹோட்டல்காரனுடைய சகோதரியைக்

கண்டனர். அவள்மிகவும் அழகுவாய்ந்திருந்தமையால் அவள் மீது தகாத அபிப்பிராயம் கொண்டனர். அவ்வபிப்பிராயத்தை யவளுக்கு அறிவித்தனர். அவள் அதற்குச் சம்மதிக்கவில்லை. உடனே இவர்களுக்குக் கோபம் வந்துவிட்டது. அவளைக் கொன்றுவிட்டார்கள். இது இவ்விதம் ஒட்டலில் நடந்து கொண்டிருக்கையில் அதே ஒட்டலுக்குச் சில பிரெஞ்ச் சேனு வீரர்கள் வந்தார்கள். அவர்கள் இந்த ஹோட்டலுக்குள் நுழைந்தவுடனே இச்செய்தி யனைத்தையும் கேள்வியுற்ருர்கள். பிரெஞ்ச் வீரர்கள் வருகிறுர்கள் என்பதை யறிந்த ஜெர்மனியர்கள் பல இடங்களில் பதுங்கினுர்கள். ஆயினும் விடப்படவில்லை. ஒவ்வொருவராய் வெளியே கொண்டுவரப்பட்டார்கள். மேற்சொன்ன தகாத அபிப்பிராயத்திற்கும் ஹோட்டல்காரனுடைய வடிவம் வாய்ந்த தங்கையின் மரணத்திற்கும் காரணமாயிருந்த ஜெர்மனியத் தலைவன், சுவரோடு சுவராய் நிறுத்தப்பட்டுச் சுடப்பட்டான். அவனுக் குதவியா யிருந்தவர்களும் அவன் போனவழியே அவனுக்கு உதவியா யனுப்பப்பட்டார்கள்.

இதனுல் என்ன ஏற்படுகிறது? கொடிய வழிகளை ஜெர்மனியர்கள் கையாள்வதில் மிகப் பிரீதியுடையவர்கள் என்பது தானே விளங்குகின்றது. ஆகாயவிமானங்கள்மீது வந்து ராஜத்துரோகம் செய்யுமாறு பற்பல துண்டுப் பத்திரிகைகளை இவர்கள் இந்தியர்களுக் கிடையே போட்டதினுல் யாது பயன்?

இந்தியவீரர்கள் கருணனை நிகர்த்தவர்கள்.

பாரதயுத்த ஆரம்பத்தில் ஸ்ரீ கண்ணன் பஞ்சபாண்டவர்கள் சார்பாய் துரியோதனுதிகளிடம் தூதுசென்றிருக்கையில் பாண்டவர் ஐவர்க்கும் முன்பிறந்தோன் கருணன் என்பதை அவனுக்கு அறிவித்து, பிறகு எவ்விதத்திலாவது கருணனைப் பாண்டவர்கள் பக்கம் அழைத்துவரவேண்டும் என்று குந்திதேவிக்கு ஆக்ஞாபிக்க, குந்திதேவியார் ஸ்ரீகண்ணன் உரைப்படியே கருணனிடம் சென்று தான் அவனுக்குத் தாயென்பதை, அவனுல் அச்சமயம் அளிக்கப்பெற்ற ஆடையையுடுத்தி ஷ்தாபித்து, பாண்டவர்களாகிய தம்பிமார் பக்கம் யுத்தத்

திற்குத் துணை வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டாள்.
உடன்பட்டானா கருணன்? இல்லையே. தன்னையின்னான் எனத்
தெரியாதிருந்தும், தேர்ப்பாகன் மகன் எனச் சகலரும் இகழ்
ந்ததைத் தான் கேள்வியுற்றும்“மன்னர்களெல்லாம்வணங்கும்
படியான உன்னத பதவியை இதுகாறும் கொடுத்து வந்த
துரியோதனன் பக்கலில் இருந்து, யுத்தம் சமீபிக்குங்கால்
பாண்டவர் பக்கம் நான் வருவதென்றால் செய்ந்நன்றி கொன்
றவனாவேனே; மேலும் நானும் அவனுடைய மனைவியும் அவ
னில்லாத் தருணம் சொக்கட்டானாடுகையில் கணவன் வரு
வதை யறிந்த அவள் ஆட்டத்தை விட்டெழுந்திருக்க, அவள்
கழுத்திலணிந்த முத்துமாலையை யான்பிடித்துக்கொள்ள, அது
முத்துகளெல்லாம் தனித்தனியே சிதறுமாறு அறுந்து விட்
டது; இதற்குள் துரியோதனனும் சமீபித்தான். என்னகாரி
யம் செய்தாய் கருணா என்று கிஞ்சித்தேனும் சினங்கொள்ளா
மல் உதிர்ந்த முத்துக்களை இப்பொழுதே கோக்கட்டுமா
அல்லது பிறகு கோத்துக்கொள்ளலாமா என்று மிகவாஞ்சை
யுடன் வினவிய துரியோதனனுக்கு என் உயிரைப் போக்கா
மல் பாண்டவர்கள் பக்கம் வருவது எனக்குப் புகழாகாது,
கருமமுமாகாது, தருமமுமாகாது” எனக் கூறினான்.

இவ்வளவு நன்றி பூண்டமையைக் காண்பித்த கருணனு
டைய தேசத்தினரல்லவோ பிரான்ஸ் தேசம் சென்றிருந்த
இந்தியச் சேனாவீரர்கள்! ஜெர்மனியர் துண்டுப்பத்திரிகைகள்
ஆகாயவிமானங்களினின்றும் போடுவதனால் இவர்கள் மதி
மயங்குவார்களா? ஆகவே ஜெர்மனியர்களுடைய துண்டுப்பத்
திரிகை முயற்சிகளெல்லாம் வீணையாயின.

—— .

ஆறுவது அத்தியாயம்

இந்தியச் சேனைகளின் தந்திரங்களும் வீரத்தனமும்

முந்தின அத்தியாயத்திற் கூறியவண்ணம் இந்தியச் சேனைகள் மார்சேல்ஸ் நகரிலிறங்கி ஆல்ஸேஸ் நகரில் தங்கியிருக்கையில் அவ்விடத்திருச் சிறிது தூரத்திலுள்ள நோஷாப்பல் என்னுமிடத்தில் ஜெர்மனியர்கள் அரண்குழிகள் தயார்செய்து கொண்டு இந்தியச் சேனைகளை எதிர்க்குமாறு பிரயத்தனம் செய்துகொண்டிருந்தார்களென்ற செய்தி எட்டியது. உடனே இந்தியச் சேனைகளனைத்தும் அந்நகரைநோக்கிச் சென்றன. இவ்விதம் சென்ற இந்தியச் சேனைகளில், சிங்கம்போல யுத்தம் புரியும் வன்மையினால் சிங் எனப்பட்டப் பெயர் கொடுக்கப்பட்டு, அது பிறகு சீக்ஏன மாறி நிற்கும் ஒருவகை ஜாதியாரும், மகமதியர்களும் பஞ்சாபிகளும் இன்னும் மற்றும் பலரு மிருந்தனர்.

இந்தியச் சேனைகளின் போஜன விஷயங்கள்

மேற்கூறிய ஒவ்வொரு ஜாதியாரும் தத்தம் மதத்திற் குரிய விதிகள் வழியினின்றும் பிசகாது தயாரிக்கப்பட்ட ஆகாரத்தைத் தவிர வேறு எதையும் உண்ணார்கள் என்பது சகலரும் அறிந்த விஷயம். சிக் என்னும் ஜாதியார் மாமிசம் உண்பவர்கள். ஆயினும் அம்மாமிசத்தைக் கொடுக்கும் பிராணிகளைத் தாங்களே கொல்லவேண்டு மென்பது அவர்கள் மதத்தின் கொள்கை. கொல்லும் பொழுது கத்தியை கழுத்துப் புறத்தில் வைத்து அறுக்கவேண்டு மென்பதும் அவர்களுடைய கொள்கையின்படி மிக அவசியமானது. மகம்மதியர்களும் இவ்வித கொள்கையையே மேற்கொண்டவர்கள். உலகத்திலுள்ள சகல பொருள்களும் மனிதன் உபயோகத்திற்காகப் படைப்பிக்கப்பட்டனவென்றும் அவைகளைத் துர்ப்பிரயோசனத்திற்கன்றி, சரீரம் நிலைத்திருக்குமாறு சரியான வழியில் உபயோகப்படுத்துவது பாபகாரிய மாகமாட்டாதென்

றும் கொள்பவர்கள் இச்சாதியினர். இக்கொள்கையைக் கொண்டே வேறுமதத்தார் கைகளினுல் கொல்லப்பட்ட பிராணிகளின் மாமிசத்தை மகம்மதியர்களும் அவர்கள் கொள்கையைக் கொண்ட மற்ற மதத்தினரும் உண்பதில்லை யென்பது சகலரும் அறிந்த விஷயம். ஒரு மகம்மதியன் தான் உண்பதற்காக ஒரு பிராணியைக் கொல்லும் பொழுது, கடவுளே! நீ இப்பிராணியை என் உபயோகத்திற்காகக் கொடுத்திருக்கிருய்; என் பசியினிமித்தம் நானிதைக் கொல்கிறேன்; இதனுலுண்டாகியபாபத்திற்காக என்னைமன்னிக்கவேண்டும்; எனும் ஒரு மந்திரத்தை உச்சரித்துக்கொண்டே அறுக்கிருன்.

இந்துக்களோ இவ்விதமில்லை. பிராமணன்கைப்பட்டால் எப்பொருளும் சுத்தமாய் விடுகிறதென்பது இவர்களுடைய கொள்கை. இவ்விதம் நானுபேதப்பட்ட கொள்கைகளையுடைய மகமதியர், சிக், இந்துக்கள் முதலிய பல ஜாதியினர்க்கும் அவரவர்கள் கொள்கைக் கேற்ற வண்ணம் ஆகாரங்களைத் தயார் செய்யும்படியான ஏற்பாடுகளை யெல்லாம் ஆங்கில ராணுவ அதிகாரிகள் ஏற்படுத்தியிருந்தனர்.

நோஷாப்பல் என்னுமிடத்தில் அக்டோபர் மாதம் 31-ந் தேதி முதற்கொண்டு நவம்பர் மாதம் 2-ந்தேதி வரையிலும் மிகப் பயங்கரமான யுத்தம் நடந்தது. அக்கினியைக் கக்கும் படியான குண்டுகள் ஜெர்மனியர்களுடைய பீரங்கி வாயினின்றும் புறப்பட்டு இந்தியச் சேனைகள்மீது நெருப்பு மழை பொழிவதுபோல் விழுந்து கொண்டேயிருந்தன. அவற்றிற் கெல்லாம் இந்தியச் சேனைகள் சிறிதேனும் பின்வாங்கவில்லை. கூர்க்ஸ் என்னும் ஜாதியார் மேலும் மேலும் சென்று ஜெர்மனியர்களை எதிர்த்தார்கள். பெலுச்சியர்களும் நேப்பாளம், பூத்தான் முதலிய இடங்களிலிருந்து வந்த வீரர்களும் இந்த யுத்தத்திற் காட்டியதீரம் சொல்வதற்கரிது. இந்தியச் சேனுவீரர்களின் பராக்கிரமம் ஜெர்மனியர்களுக்கு இந்த யுத்தத்தில்தான் நன்கு யேற்பட்டது.

இந்தியச் சேனைகளின் தந்திரங்கள்.

அரண்குழிகளிற் பதிவிருந்து யுத்தம் செய்த வீரர்களனேகர். அவர்கள்மீது ஜெர்மனியர்களுடைய குண்டுகள் விழுந்து

கொண்டே யிருந்தன. அக்குண்டுகளுக்குச் சமமாய்ப் பிர யோகிக்கப்படப் போதுமான குண்டுகள் இல்லை யெனக்கண்ட ஒரு மகம்மதிய வீரன், ஜெர்மனியர்களைத் தந்திரத்தினல் வெல்லவேண்டும் எனக்கருதி, பதிவிருந்த அரண்குழியினின்றும் வெளியே வந்து மரணத்திற்குச் சிறிதேனும் அஞ்சாமல் ஜெர்மனியர்களிருந்த திசையை நோக்கிச் சென்றான். குண்டுகள் நாற்புறத்திலும் பரவி விழுந்துகொண்டிருந்தபோதிலும் கடவுளின் செயலால் இவன்மீது விழவில்லை. ஜெர்மனியரிருந்த விடத்தை யணுகினன். ஒரு சலாம் போட்டான். இவனைக் கண்ட ஜெர்மனியர் ஆச்சரியப்பட்டு, குண்டுகளைப் பிரயோகிப்பதினின்றும் சற்றே விலகினவர்களாய் இவனை நோக்கின வண்ணம் நின்றார்கள். இவனும் அவர்கள் கும்பலில் புகுந்து விட்டான். இவன்பேசும் பாஷை இந்துஸ்தானி; அவர்களுடையதோ ஜெர்மனிய பாஷை. ஆகவே இருவரும் சம்பாஷித்துக்கொள்ள கை செய்கை முதலியவைதான் அவசியமாயிருந்தது. ஊமையின் பேச்சும் பிரயோசனப்பட்டு விட்டது. தான் மகம்மதியனென்றும் ஆங்கிலேயர் சார்பாய் வந்திருந்தபோதிலும் தன் அபிப்பிராய மெல்லாம் ஜெர்மனியர் சார்பே என்றும் தன்னைப்போன்ற இன்னும் பல மகம்மதியர்கள் அரண்குழிகளி லிருந்து ஜெர்மனியர் அனுப்புங் குண்டுகளால் அனியாயமாய் மரண மடைகிறார்கள் என்றும், குண்டுகள் ஏவப்படாமல் அம்மகம்மதியர்கள் தப்புவிக்கப்படுவார்களாயின், தான், அவர்களை ஜெர்மனியர் பக்கம் தாமதமின்றிக் கொண்டுவருவதாகவும் சைகைகளினலேயே அறிவித்தான். சந்தோஷித்தார்கள் ஜெர்மனியர்கள். பின்வருவதை முன்னறியார்கள். மகம்மதியவீரன் சொன்னவை யெல்லாம் உண்மை யென்றே நம்பினர்கள். ஆனந்தத்தினல் அவனுக்கு ஆகாரவஸ்துக்கள் முதலியன கொடுத்தார்கள். அன்றிரவு அம்மகம்மதியவீரன், ஜெர்மனியர் கூட்டத்திலேயே யிருந்து நன்றாய் நித்திரை செய்தான். தானும் ஆபத்தில்லாதவனய் அரண்குழிகளி லிருக்கும் தன் சகோதரர்களுக்கும் ஆபத்தை நீக்கினவனய், பொழுது விடிந்தவுடனே, அம்மகம்மதியர்களை யழைத்து வருவதாய் ஜெர்மனியரிடம் விடைபெற்றுக்கொண்டு தன்னிருப்பிடம் வந்து சேர்ந்தான்.

ஜெர்மனியர்கள் யுத்த தந்திரங்களில் கொடியவைகளை யெல்லாம் கையாள்பவர்களென்று சொல்லப்படுகிறார்களே யல்லது, இந்தியர்களைப் போல் சாதுரியங்களைச் சற்றேனும் உபயோகிக்கும் திறமையற்றவர்களென்பது இதனால் நன்கு விளங்குகின்றது. மேலும் போர் திறத்திலும் இந்தியர்களுக்கு ஜெர்மனியர்கள் சிறிதேனும் ஈடாகார்கள்; மகம்மதியர்களைத் தங்கள் பக்கம் இட்டுக்கொண்டு வருவதாய்ச் சென்ற மகம்மதியவீரன் திரும்பிவரவில்லை யெனக் கண்ட ஜெர்மனியர்கள், இந்தியர்களுடைய மனதைக் கலங்கச் செய்யும்படியான பல துண்டுப்பத்திரிகைகளைத் தயார்செய்து அவைகளை ஆகாயவிமானங்களினின்றும் இந்திய சேனைகளுக்கிடையே போட்டுக்கொண் டிருந்தார்கள்.

போய்த்துண்டுப் பத்திரிகைகள்

அம்மாதிரி பத்திரிகைகளையே தயார்செய்து அவைகளில் இந்தியர்கள் தங்கள் பக்கம் வந்து விட்டார்களென்று அபத்தமான வாக்கியங்களை யெல்லாம் பிரசுரித்து ஆங்கிலப்படைகளுக்கிடையில் போட்டுக்கொண் டிருந்தார்கள். அவர்கள் இவ்விதம் செய்த பிரயத்தனங்களெல்லாம் சிறிதும் பயன்படவில்லை. இந்தியர்களுடைய ராஜவிசுவாசத்தைக் கண்ட ஜெர்மனியர்கள் இந்தியர்களுடைய வீரத்தன்மையை ஓர் புறம் வியந்தும், அவர்கள் தங்கள் பக்கம் வரவில்லை யென்ற வெறுப்பை யோர்புறமடைந்தும், யுத்தம் புரிந்துகொண்டே யிருந்தார்கள்.

ஜெர்மனியர்கள் தாங்களிருக்கு மிடத்தை யணுகாமற்படி இந்தியர்கள் இரவெல்லாம் முள்வேலி யிடுவார்கள். அவைகளைப் பிரித்து எடுப்பதே அடுத்த நாளெல்லாம் ஜெர்மனியர்களுக்குப் பெருத்த வேலையாயிருக்கும். ஜெர்மனியர்களுடைய பயங்கரமான குண்டுகள், அக்கினியைக் கக்கும் மேகங்களே ஆகாயத்தினின்றும் விழுவது போலும் விழுவதைக் கண்ட இந்தியவீரன் ஒருவன், அருகில் நின்ற ஆங்கிலவீரனொருவனைக்கண்டு, இத்தகைய யுத்தம் புரியும் விதத்தை ஏனையா எங்களுக்குக் கற்றுக்கொடுக்கவில்லை யென்று கேட்டானாம். இவ்விதம் அவன் கேட்டதனாலேயே குண்டுக்குப் பயந்தவ


னென்று நினைக்கக்கூடாது. தாங்களும் அதாவது இந்திய வீர்களும் ஜெர்மனியர்களைப்போன்ற பெரிய பீரங்கிக் குண்டுகளையுடையவர்களாயிருந்தால் அவர்களை மிக எளிதில் வெல்லலாமே என்னும் ஓர் அவாவைக்கொண்டே இவ்வித கேள்வியைக் கேட்டான். ஆயினும ஈட்டிகளையும் கத்திகளையும் பாலாக்களையும் எடுத்துக் கையாள்வதில் இந்திய வீரர்களுக்கு ஜெர்மனியர் எக்காலத்தும் நிகராகார்களென்பது ஜெர்மனியனொருவன் அடியில்வரும் கடிதத்தினுலேற்படுகிறது.

நாங்கள் இன்றயதினம் இந்தியர்களுடன் போர்புரிய நேரிட்டது. அவர்களுடைய சாமர்த்தியம் குறைவாய் எண்ணப்படக் கூடாது. முதலில் இந்தியர்களென்றல் எங்களுக்கு அருவருப்பாய்த்தா னிருந்தது. இந்தியர்களிவ்விதம் போர்புரிய இங்கிலீஷ்காரர்கள் எவ்விதம் கற்றுக்கொடுத்தார்களோ தெரியவில்லை. ஆயிரக்கணக்கான இந்தியர்கள் குகையினின்றும் விடுபட்ட சிங்கங்கள் புறப்படுவதுபோல் எங்கள்மீது ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்தார்கள். அவர்கள் ஆரவாரத்தினுல் கைகொட்டின சப்தமானது எங்கள் பீரங்கிச் சப்தத்தைக் காட்டிலும் பெரியதாயிருந்தது. ஹுரே, ஹுரே, என்றுநாங்கள் திருப்பிக்கொடுத்த கூச்சலெல்லாம் குழந்தைகளழுவதைப் போலிருந்ததே யல்லது வேறில்லை. நாங்கள் விரைந்து பீரங்கி முகங்களை இந்தியாகள் பக்கம் திருப்பினேம். உடனே நூற்றுக்கணக்கான இந்தியர்கள் குண்டுகளால் மாண்டார்கள். ஆயினும் இறந்தவர்கள் சிறு தொகையினரே. மீதி நின்றவர்களெல்லாம் இதுவரையிலும் ஒருவராலும் காட்டப்படாத சாமர்த்தியத்துடன் எங்கள் மீது புலிகள் போல் பாய்ந்து ஈட்டிகளாலும் கத்திகளாலும் எங்களை எதிர்த்தார்கள். அப்பொழுது நாங்கள் பட்ட கஷ்டம் கொஞ்சமல்ல. உதவியாக வேறு சேனைகள் எங்களுக்கு வந்திராவிடின் அன்றே இந்தியர்களுடைய ஆயுதங்களுக்கு இரையாய்ப் போயிருப்போமென்பதில் ஐயமில்லை.

போர்க்களத்தில் லார்ட் ராபர்ட்ஸ்.

இவ்விதம் இந்தியச் சேனைகளும் ஜெர்மனியர்களும் அக்டோபர் மாதம் முழுவதும், நவம்பர் மாதம் இரண்டு வாரம்

43




பிரிடிஷாரின் பெரிய ஆகாயக்கப்பல்.




பல்கேரிய அரசர்.




இடாலிதேசத்து அரசர்
இம்மானுவேல்.



பிகவு— ஆகாயவிமானி ஆகாயவிமானத்தில் சென்றமாதிரி.



கவுண்ட் வான் ஜெப்பளின்.



இப்பிரிடிஷ்கப்பலிலுள்ள பீரங்கிகள்.

வரையிலும் யுத்தம் புரிந்துகொண்டிருந்தார்கள். சிரமத்தைத் திரண மேனும் மதியாமல் தங்கள் தேசத்தை விட்டு நெடுந்தூரம் கடல்மீது கப்பல் யாத்திரை செய்து, மார்ஸேல்ஸ் நகரத்தில் இறங்கி இந்தியச் சேனைகள் ஜெர்மனியர்களுடன் ஆங்கில பிரெஞ்ச் உபபலச் சேனைகளின் சார்பாய்ப் போர்புரிகின்றது எனக் கேள்வியுற்ற லார்ட் ராபாட்ஸ எனபவா மிகவும ஆனந்தமுற்றவராய் இங்கிலாந்து தேசத்திலிருந்து புறப்பட்டு வந்து பிரான்ஸ் தேசத்தின் வட கரையில் பிரதான துறைநகராகிய பொலோனில் இறங்கினர். இவருக்கு இந்தியச் சேனையின்மீதுள்ள அன்பு மிகவும்அதிகம். இவர் 80-வயதுக்குமேற்பட்டவர். சிறுவயதில் இந்தியாதேசத்திலேஇந்தியச்சேனைகளுக்கு அதிபராய் இருந்தவர். கர்னல் இன்சிப் என்னும்பிரதான உத்தியோகத்தை வகித்தவர். இந்தியச் சேனையிலுள்ள ஒவ்வொரு வீரனுடைய பெயரும் இவருக்கு மனப்பாடம். அவ்விதமே இவரை அறியாத இந்தியவீரன் ஒருவனுமில்லை. இந்தியாவில் ராணுவ உத்தியோகத்தில் நெடுநாள் கழித்து, பிறகு வயது முதிர்ந்தமையின் பொருட்டு உபகாரச் சம்பளம் பெற்றுத் தமது தேசமாகிய இங்கிலாந்துக்குச் சென்று சுகமே வாழ்ந்து வந்தாரேனும் இவருக்கு இந்தியச் சேனையின்மீ திருந்த அன்பானது நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டே வந்தது. இத்தகைய அன்பு பொருந்திய மேன்மக்களுள் ஒருவராகிய லார்ட் ராபர்ட்ஸ் நவம்பர்மாதம் 11-ந்தேதி யன்று இந்தியச் சேனைகளின் இடையே வந்து ஒவ்வொருவரிடமும் சம்பாஷித்துக் கொண்டிருந்தார். இந்தியச் சேனைகள் சக்கரவர்த்தியின் சார்பாய்ப் போர்புரிய வந்த தன்மையை அவர் நினைத்த அளவில் அவருடைய கண்களினின்றும் ஆநந்தக்கண்ணீர் ஆராய்ப் பெருகிற்று. ஒவ்வொரு இந்தியவீரனையும் தட்டிக்கொடுத்து மிகவும் உற்சாகப் படுத்தினர். அன்பின் அவதாரமே இவரென நினைத்த இந்த ஒவ்வொரு இந்திய வீரனும் இவரிடத்திற் காட்டிய நன்றிக்கும் பயபக்திக்கும் உவமை கிடையாது. இவர் இவ்விதம் இந்தியச் சேனைகளின் இடையே சம்பாஷித்துக்கொண் டிருக்கையில் இவருக்கு ஆபத்துவராவண்ணம் நாற்புறமும் சேனைகள் சூழ்ந்துகொண்

டிருந்தன. ஆகாய விமானிகள் அந்தரத்தே வட்டமிட்டுக் கொண்டு காவல்புரிந்து கொண்டிருந்தனர்.

பால்ய சினேகித விளையாட்டுகள்

பிறகு மஹாராஜா சர்பிரதாப்சிங் அவர்களைக் கண்டார். இவர்கள் இருவரும் இளமைப்பருவம் முதற்கொண்டு மிகவும் நட்பு பூண்டவர்கள். இவர்கள் இருவரும் ஒருவரை யொருவர் சந்தித்தபொழுது ஆனந்தக் கடலில் ஆழ்ந்தார்கள். இந்த ஆனந்தம் குசேலர் கிருஷ்ணனைச் சந்தித்தபொழுது உண்டான ஒரு ஆனந்தத்தை நிகர்க்கும். பழையநாளையில் இவர்கள் இருவரும் ராஜபுதனம்முதலிய தேசப்புற வெளிகளில் புரிந்த விளையாட்டுகளைப்பற்றிச் சம்பாஷித்துக்கொண்டிருந்தனர். பத்துப் பன்னிரண்டு வருடங்களுக்குமுன் மஹாராஜா சர் பிரதாப்சிங் விளையாட்டாய்போய்க்கொண்டிருக்கையில் பெரியகரடிஒன்று தென்பட்டது. பயம்என்பதைக் கனவிலேனும் அறியாதஇவர் ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து கரடியை ஒரேஅமுக்காய் அமுக்கினார். கரடியோ கொடியதுஷ்ட மிருகம். மனிதர்களை அறைந்து கொல்லும் தன்மையுடையது. அது இவருடைய கைப்பிடியில் அகப்பட்டுக்கொண்டு அப்புறம் இப்புறம் அசையவும் சத்தியில்லாது கண்கள் தீப்பொறி பறக்க, கோபாவேசத்துடன் உருமிக்கொண்டிருந்தது. இவர்பிடித்த பிடியைச் சிறிதேனும் தளரவிடவில்லை. விட்டாலோ அதுவும் ஒருகை திருப்பிப்பார்த்திருக்கும். இச்சமயத்தில் லார்ட் ராபர்ட்ஸ் அவ்விடம் வந்து சேர்ந்தார். சர் பிரதாப்சிங்கின் வீரத்தன்மையை மிகவும் வியந்தார். இவர்கள் இருவரும் ஒன்று சேர்ந்தவுடன் கரடியின் பராக்கிரமம் பறந்துபோய்விட்டது. இத்தகைய பல பூர்வ விளையாட்டுகளை இருவரும் நினைந்து நினைந்து ஆனந்தத்தில் ஆழ்ந்து நெடுநேரம் சம்பாஷித்துக்கொண்டிருந்தார்கள்.

பிறகு லார்ட் ராபர்ட்ஸ் யுத்தத்தில் காயம் பட்டு ஆஸ்பத்திரியில் இருக்கும் இந்திய வீரர்களைப் பார்க்கப் போனார். அங்குஇருந்த இந்திய வீரர்களெல்லாம் இவரைக் கண்ட மாத்திரத்தில் தத்தம் படுக்கையிலேயே எழுந்து உட்கார்ந்து முகமலர்ச்சியுடன் மிகவும் உபசரித்தார்கள்.

லார்ட் ராபர்ட்ஸ் பரகதி யடைந்தார்.

நவம்பர்மாதம் 11-ந்தேதி முதற்கொண்டு 13-தேதி வரையிலும் இந்தியச் சேனைகளைக் காண்பதிலும் ஆஸ்பத்திரிகளுக்குச் சென்று அங்கிருப்பவர்களுக்கு உற்சாகம் கூறுவதிலும் லார்ட் ராபர்ட்ஸ் காலத்தைக் கழித்தமையால் அவருக்குச் சரீரப்பிரயாசைஉண்டாயிற்று. இந்தியர்கள்மீ திருந்தஅன்பின் மிகுதியால் சரீரப்பிரயாசையை இவர் கவனித்தாரிலரேனும் அது இவருடைய சௌக்கியத்தைக் குறைவுசெய்தது. மேலும் நஞ்சினும் கொடிய குளிர்காற்றும் சேனுவீரர்களுடைய தாடிகளை யெல்லாம் பஞ்சுமூட்டைகளைப் போல் வெண்மை நிறம் செய்யும் பனியும் இவருடைய முதிர்ந்த வயதின் சுகத்திற்குப் பொருந்த வில்லை. உலகில் வாழும்படியாகக் குறிப்பிடப்பட்ட காலமும் சமீபத்துவிட்டது. நவம்பர் 14-ந்தேதி இரவு எட்டு மணிக்கு இவர் இவ்வுலக வாழ்வை விட்டுப் பரவுலகவாழ்வை அடைந்தார். யுத்தகளத்தினிடையே பீரங்கிக் குண்டுகள் மூலிய பேரிடிவாத்தியங்கள் முழங்கிக்கொண்டிருக்கையில், ஆத்மாவானது தன்னுடைய சரீரத்தினின்றும் நீங்கவேண்டுமென இவர் விருப்பம் கொண்ட வண்ணமே கடவுள் இவருக்கு அருள்புரிந்தார்.

ஆஸ்பத்திரிக் கப்பல்கள்

இவர் மரணத்தைக் கேள்வியுற்ற ஆங்கிலவீரர்கள் அனைவரும் துக்கித்தனர். இந்தியவீரர்களின் ஆராத்துயரம் ஆங்கில வீரர்களின் துயரத்தைக் காட்டிலும் குறைந்ததில்லை. இங்ஙனமிருக்க, யுத்தகளத்திற்குச் சென்று போர்புரியும் இந்தியவீரர்களுள் காயப்படுபவர்களை மீண்டும் இந்தியா தேசத்திற்கே கொண்டுவரவேண்டும் என்று அனேகங் கப்பல்கள் பம்பாய்த் துறைமுகத்தினின்றும் புறப்பட்டன. இவைகளில் எல்லாம், வயித்தியசாஸ்திரத்தில் உயர்ந்த பரீக்ஷயில் தேறினவர்களும் ஜனங்களால் மிக நன்குமதிக்கப்பட்டவர்களும் உத்தியோகஸ்தர்களாகச் சென்றனர். இவ்விதம் சென்ற கப்பல்கள் போலோன் துறைமுகத்தில் எப்போதும் நின்றுகொண்டிருந்தன. காயம்பட்ட வீரர்கள் போதுமான அளவு சேர்ந்தவுடன், இவைகள் ஒவ்வொன்ருய்ப் புறப்பட்டு இந்தியாதேசத்திற்கு

வந்துவிடும். இத்தகைய கப்பல்கள் ஆஸ்பத்திரிக் கப்பல்கள் எனப் பெயர் பெறும்.

தவிரவும் ஆங்காங்கேயுத்தகாரணத்தைமுன்னிட்டுப் பல ஆஸ்பத்திரிகளும் ஏற்படுத்தப்பட்டிருந்தன. யுத்தத்தில் அதிகமாகக் காயப்பட்டு நெடுந்தூரத்திலிருக்கும் சுதேசத்திற்குக் கொண்டுபோகப்படச் சக்தியற்றவர்கள் இவ்வாஸ்பத்திரிகளில் சிகிச்சை செய்யப்பட்டார்கள். இவர்களுடைய ஜாதி பேத அபிமானங்களுக் கேற்றவண்ணமே போஜனாதிகாரியங்களும் இவ்வாஸ்பத்திரிகளில் நடத்தப்பட்டு வந்தன. இஃதனைத்தும் ஆங்கில அரசாட்சியார் இந்தியவீரர்களுடைய நன்மைக்கு எடுத்துக்கொள்ளும் சிரமத்தைக் காட்டுகிறது.

ஜார்ஜ் சக்ரவர்த்தி யுத்தகளம் வந்தது

இந்திய வீரர்களுடைய பல வகுப்புகளைப் பற்றிச் சிறிதேனும் கேள்வியுறாத ஆங்கில மக்கள் பலரும் இந்தியர்களுடைய யுத்தவன்மையை மெத்தவும் வியந்தவர்களாய் ஆநந்தித்துக்கொண்டிருந்தார்கள். இஃதிங்ஙனமிருக்க, நவம்பர் மாதமும் சென்று விட்டது; டிசம்பரும் வந்துவிட்டது. யுத்தம் ஆரம்பித்து ஆறுமாதகாலமாய் விட்டது. போர்வீரர்களைக் கண்ணுற்றுகண்டு அவர்களுக்கு மனோதிடம் கூறவேண்டுமெனும் விருப்பம் நமதுஜார்ஜ் சக்கரவர்த்தியின் மனதிலுதித்தது. இவ்விருப்பத்தின் பெருக்கத்தை முழுவதும் எடுத்துரைப்பதென்றால் இச்சிறுபுத்தகம் இடங்கொள்ளாது. தமது தலைநகராகிய லண்டன் மாநகரைவிட்டு மேற்றிசை யுத்தகளமாகிய பிரான்ஸு தேசத்தின் வடகரைத் துறை நகராகிய பொலோனில் டிஸம்பர் மாதம் 2-ந்தேதி நமது சக்கரவர்த்தி வந்திறங்கினார். இந்திய வீரர்கள் தங்கியிருக்கும் ஆஸ்பத்திரிகளுக்குத் தாமே சென்றார். அங்கே காயம் பட்ட வீரர்கள் அனைவரும் கட்டில்களின்மீது சயனித்துக்கொண்டிருந்தவர்கள், சக்ரவர்த்தியின் வருகையைக் கேட்டு,காயத்தினால் உண்டாகிய துன்பத்தை யெல்லாம் மறந்து தத்தம் கட்டிலின்மீது எழுந்து உட்கார்ந்தார்கள். இவ்விடத்தில் ஏற்படும் நீதி ஒன்றுண்டு. அன்பும் ஆர்வமும் பத்தியும் விசுவாசமும் ஒருவனிடத்து மேற்பட்ட காலத்தில் எத்தகைய மனத்துன்பமும் சரீ

ரத்துன்பமும் சிறிதேனும் தோன்றாது. ஆதலின் இந்தியவீரர்கள் மனதிலிருந்த எத்துக்கமும் சக்ரவர்த்தியின் வருகையைக் கண்டு மறந்துபோய் விட்டது. இது அவர்களுக்கு சக்ரவர்த்தியின்மீ துள்ள அளவிறந்த அன்பை நன்றாய் விளக்குகிறது.

இவ்விதம் நமது சக்ரவர்த்தி இந்தியவீரர்களை ஆஸ்பத்திரியிற் காணுமாறு விஜயம் செய்தகாலையில் அவரது அருமைப் புதல்வராகிய வேல்ஸ் இளவரசரும் அவருடன் கூடவந்தார். இவர்கள் ஆஸ்பத்திரிகளுக்குச் செல்கையிலும் ஆங்குள்ளவீரர்களைக் காண்கையிலும் நாற்புறத்திலும் வீரர்கள் பலர் காவல் புரிந்துகொண்டிருந்தார்கள். ஆகாயவிமானங்கள் பல ககன மார்க்கத்தில் பாரா கொடுத்துக்கொண்டிருந்தன. மிகவும் காயப்பட்டு, எமலோகத்து சித்திரபுத்திரன் கணக்கில் பேர்பதிவு செய்தாய் விட்டதென்றும் இனி உலக வாழ்வை விரும்புவது சிறிதும் பயனற்றதென்றும் பற்பலவிதமாய்நினைத்துக்கொண்ட சில இந்தியவீரர்களும் சக்ரவர்த்தியைக் கண்ணாரக்கண்ட அளவில் இனி இறந்தாலும் பெரிதல்ல ; நமது மன்னர் மன்னனைக் கண்ணாரக் கண்டோம் ; நமது குடும்பத்தினரைக் காக்கும் கருணாநிதியாகிய இவர்நிமித்தம்நமது உயிர்போனால்தானென்ன.— என்று மிகவும் பரவசமுற்றார்கள்.

இவ்விதம் பொதுநன்மையின் விஷயமாகப் போர்புரியும் இந்தியவீரர்களை நேரிற்கண்டு அவர்களுக்கு ஆனந்தத்தை விளைவித்து நமது சக்ரவர்த்தி தமது தலைநகராகிய லண்டன் மாநகருக்கு மீண்டும் சென்றார். இதுகாறும் இந்தியர்களின் யுத்தவன்மையைப் பற்றிக் கூறிவந்தோம். இனி இதே நவம்பர், டிசம்பர் மாதங்களில் வடகடலின் மீது ஜெர்மனியர்கள் யாது புரிந்துகொண்டிருந்தார்களென்பதைப் பற்றி அடுத்த அத்தியாயத்திற் கூறுவோம்.

ஏழாவது அத்தியாயம்

ஜெர்மனிக் கப்பல்களின் கள்ளக்கொள்ளை.

நவம்பர் என்னும் மாதமானது, ஆங்கில வருஷத்தில் பதினோராவது மாதமாய் நின்றபோதிலும் இவ்வார்த்தையின் பொருளை நோக்குங்கால் ஒன்பதாவது மாதமென்றே பொருள்படும். நவம் என்பது வடமொழியில் ஒன்பது என்னும் இலக்கத்தைக் குறிக்கும் பகுதியாகும். நவக்கிரகமென்றால் ஒன்பது கிரக மென்பதனாலேயே அதன் பொருள் விளங்குகிறது. அங்ஙனமே டிசம்பர் என்பது பன்னிரண்டாவது மாதமாய் நின்றபோதிலும், தசம் என்பது வடமொழியில் பத்து என்பதைக் குறிக்கும் பகுதியாகும். இந்தநவம், தசம் என்னும் இருபகுதிகளி னுதாரத்தைக் கொண்டே நவம்பர் டிசம்பர் என்னும் மாதங்கள் மேனாட்டுப் பாஷைகளில் உண்டாயின. இதனால் அக்காலத்தில் அதாவது சுமார் ஆயிரவருடங்களுக்கு முன் மேனாட்டாருக்கு ஒருவருடத்திற்குப் பத்துமாதங்களே கணக்காயிருந்தன வென்பது ஏற்படுகிறது. பிறகு ஜூலியஸ் ஸீஜர் என்னும் சக்ரவர்த்தி தன் பேரை நிலை நிறுத்தும் பொருட்டு ஜூலைமாதம் என்று ஒரு மாதத்தைக் கூடச் சேர்த்தார். பிறகு, அகுஸ்டஸ் என்னும் சக்கரவர்த்தி ஆகஸ்ட் என்னும் ஒரு மாதத்தை அதனுடன் சேர்த்தான். ஆகப் பன்னிரண்டு மாதங்க ளாயின. நவம்பருக்கும் டிஸம்பருக்கும் சொல் வேறும் பொருள் வேறும் ஆகி, ஒன்பதும் பத்தும் போய், முறையே பதினொன்றும் பன்னிரண்டுமாகி நின்றன. இவ்விரு மாதங்களுக்கும் எவ்விதம் சொல் வேறும் பொருள் வேறுமாயினவோ, அவ்விதமே, இவ்விருமாதங்களிலும் ஜெர்மனியர்களுடைய கருதது ம..வும் செய்கை வேறு மாயிற்று.

நவம்பர்மாதம் முதல்தேதியிலேயே பிரான்ஸு தேசம் முழுவதையும் கைகொள்ள வேண்டும் என்றிருந்த ஜெர்மனிச் சக்ரவர்த்தியின் கருத்து முற்றிலும் மாறிப்போய்விட்டது. அது தன்னால் முடியாத காரியமென மனதிற்குள் உணர்ந்து

கொண்டார், கள்ளத்தனமாய்க் கொள்ளையடிப்பதே கிரமம் என இவர் எண்ணினார் போலும்!

திருடவந்தவிடத்திலும் தேங்காய்ப் பாலா?

இங்கிலாந்து தேசத்தில் கீழ்க்கடற்கரை யானது 600-மைல் நிகளத்தை யுடையது. இவ்வாறு நூறுமைல் நிகளத்திலும் அனேக நதித் துறைமுகங்களும், பல பிரதான கப்பற் றுறை முகங்களும், ஆங்காங்கே கோட்டைகள் பொருந்திய பல உன்னத கடற்கரை நகரங்களு மிருக்கின்றன. இவ்வளவு நீண்ட விசாலமுள்ள கடற்கரையைப் பாதுகாக்க எத்தனை யுத்த கப்பல்கள் வேண்டும்! அத்தனை யுத்த கப்பல்களையும் கடற்கரை நெடுகே அணிவகுத்ததுபோல் நிறுத்திவிட்டாலும் ஜெர்மனிய யுத்தக் கப்பல்களுடன் போர்புரிவதற்குப் போதுமானவைகள் கடல்மீது இல்லாமற் போய்விடும். ஆகையினால் ஆங்கில யுத்தக்கப்பல்கள் சில இங்கு மங்கும் கடல் வெளிகளிற் சென்று போர்புரிந்து கொண்டிருக்கையில், வேறு சில கப்பல்கள் கரைநாட்டைக் காக்குந் தொழிலை மேற்கொண்டவைகளாய், இங்குமங்கும் சஞ்சரித்துக்கொண் டிருந்தன. ஆயினும், இங்கிலாந்துதேசத்தின் 600-மைல் நீளமுள்ள கடற்கரையின் அருகிருக்கும் நகர்களனைத்தும் காவற்றொழிலைப் பூண்ட இம் மரக்கலங்களின் பாதுகாப்புக்கு இல்லாமற் போயின. ஜெர்மனியக் கப்பற் கள்வர்களுக்கு இது, திருடவந்தவனுக்குத் தேங்காய்பால் கிடைத்ததுபோ லாய்விட்டது.

இதுவா யுத்தநீதி!

எதிரிகளுக்கும் சமபலம்கொடுத்துப் போர்புரிய வேண்டுமென்பது யுத்தநீதிக்கு முற்றும் பொருத்தமான தென்பதைக் கேவலம் சதுரங்கம் என்னும் விளையாட்டே வெளிப்படுத்தும். தனது புதல்வனைக்கொன்ற சயித்திரதனை வெல்லும் பொருட்டு, பார்த்தன் பாரத யுத்தத்தில் 13-ம் நாளிரவில் பசுபதியைப் பார்க்கக் கண்ணனுடன் சென்றவிஷயத்தைத் திரியோதனாதியர்கள் அறியாமல் மோசம்போய் விடுவார்களென்று கருதின தருமபுத்திரன், பீமன் மகனாகிய கடோற்கஜனை யழைத்து, பார்த்தன் சென்ற விஷயத்தை பகைவர்களுக்கு அறிக்கை யிட்டு வரும்படி ஆக்ஞாபித்தார். இதல்ல

வோ யுத்தநீதி! இவ்வித விதிகளைச் சிறிதேனும் உணராத ஜெர்மனியர்கள் என்ன இடுக்கண் விளைத்தார்கள். வில்ஹெ றம்ஸ் ஹாவன் என்பது ஜெர்மனியின் பிரதான துறைநகரம், அங்குதான் எப்பொழுதும் ஜெர்மனியக் கப்பல்கள் பலநின்று கொண்டிருக்கும். நவம்பர்மாதம் 2-ந்தேதி இத்துறை நகரிலி ருந்து 8-ஜெர்மனிய யுத்த கப்பல்கள் புறப்பட்டன. இங்கிலா ந்து தேசத்தில் கீழ்க்கரையிலுள்ள யார்மத் என்னும் நகரம் மேற்கூறப்பட்ட வில்ஹெம்ஸ் ஹாவன் என்னும் துறைமுகத் திலிருந்து ஏறக்குறைய 300-மைல் தூரத்திலுள்ளது. இந்த யார்மத் என்னும் துறை நகருக்கு மேற்கூறப்பட்ட 8-ஜெர் மனிக்கப்பல்களும் வெகு வேகமாய்ச் சென்றன. இக்கப்பல் கள்வந்தது இராப்பொழுதில்; இக்கப்பல்கள் மீது கொடிகளும் கிடையா, வெளிச்சமுமில்லை. சப்தம் யாதொன்றுமில்லை. வெறுக்கப்படக்கூடிய கள்வர்களிடத்துள்ள அங்கங்களெல் லாம் எள்ளளவேனும் பிசகில்லாமல் இவைகளிடத்து அமைந் திருந்தன. நவம்பர் 3-ந்தேதி அதிகாலையில் இக்கப்பல்கள் யார்மத் துறை நகரைச் சமீபித்துக்கொண்டிருக்கையில், சில மீன்பிடிக்கும் படவர்கள் இவைகளைக் கண்டார்கள். இப்பட குகளில் ஒன்றிரண்டு ஜெர்மனிக் கப்பல்களின் குண்டுகளுக் காளாயின வென்றும் சொல்லப்படுகிறது.

இவ்விதம் யார்மத் துறைநகரைச் சமீபித்த ஜெர்மனியக் கப்பல்கள் நவம்பர்மாதம் 3-ந்தேதி அதிகாலையில் குண்டுகளை அந்நகர்மீது பிரயோகிக்க ஆரம்பித்தன. அத்துறை நகருக்கு மிகச் சமீபத்தில் இந்த ஜெர்மனிக்கப்பல்கள் நெருங்கவும் கூட வில்லை. ஏனெனில் ஜெர்மனியர் இவ்விதம் கள்ளத்தனமாய் வருவார்களென்று எதிர்பார்த்திருந்த ஆங்கிலேயர்கள் யார் மத் துறை நகரின் கடலோரத்தில் வெடிச் சுரங்கங்களை ஜலத் தில் ஆழ்த்தியிருந்தார்கள். ஆனதினால் நெடுந்தூரத்திலிருந்து கொண்டே ஜெர்மனிக் கப்பல்கள் யார்மத் துறைநகரின் மீது குண்டுகளைப் பிரயோகித்துக்கொண்டிருந்தன. இவ்வி தம் சுமார் அரைமணி நேரம் வரையிலும் இக்கப்பல்களால் பிரயோகிக்கப்பட்ட குண்டுகளிற் பல கடலிலேயே வீழ்ந்து விட்டன.

அத்துறை நகரிலுள்ள ஜனங்கள் இக்குண்டுகளின் சப்தத்தைக் கேட்டு விழித்துக்கொண்டு பலர் கடற்கரை முகமாய் ஓடினார்கள். குண்டுகளின் சப்த அதிர்ச்சியினால் அந்நகரிலுள்ள பலகணிகளின் கண்ணாடிகளிற் பல உடைந்துபோயின. கடற்கரைக்குச் சென்ற ஜனங்கள், குண்டுகள் கடலில் வீழ்வதையும் அதனால் ஜலமானது அலை அலையாய்க் கிளம்பிக், கரைகளில் மோதுவதையும், நீர்த்திவலைகள் பருவதங்கள் போல் எழுந்தெழுந்து விழுவதையும் கண்டார்களே யல்லது எவ்வித பலம்பொருந்திய கண்ணாடிகளின் உபயோகத்தைக் கொண்டும் கப்பல்களைக் காணக்கூடவில்லை. இதனால் ஜெர்மனிக் கப்பல்கள் எவ்வளவு தூரத்திலிருந்து யார்மத் துறைநகரின்மீது குண்டுகளைப் பிரயோகித்தன வென்பது புலப்படுகிறது.

உடனே இக்கள்ளக் கப்பல்களைத் துரத்தவேண்டுமென்று இரண்டு நீர்மூழ்கிக் கப்பல்களும் வேறு இரண்டு கப்பல்களும் புறப்பட்டன. இவைகளில் D5-என்ற நீர்மூழ்கிக் கப்பலொன்று, புறங்காட்டி யோடும் ஜெர்மனிக் கப்பல்களால் வீழ்த்தப்பட்ட கடல்வெடிச் சுரங்கங்களுள் ஒன்றில் தாக்குண்டு இரண்டு நிமிஷத்திற்கெல்லாம் அதன்மீதிருந்த கப்பற்றலைவர்கள் இருவர் தவிர மற்றெல்லோருடனும் கடலில்ஆழ்ந்து விட்டது. இரண்டு மீன்பிடிக்கும் படகுகளும் இவ்விதமே மேற்கூறிய சுரங்கங்களிலேயே தாக்குண்டு 15-மனிதர்களுடன் பாதாளம் சென்று விட்டன.

யார்க் என்னும் ஜேர்மனிக்கப்பல் 300-ஜனங்களுடன் ஆழ்ந்து விட்டது

'நினைக்கத் தனக்கே' என்னும் பழமொழிக்கு இலக்காக அகஸ்மாத்தாய் ஆங்கிலேயர்மீது குண்டுகளைப் பிரயோகித்து அபாயம் விளைவிக்கக் கருதின மேற்கூறிய 8-ஜெர்மனிக் கப்பல்களுள் "யார்க்" என்னும் பெயர் பூண்ட ஒன்று, அவர்களாலேயே வீழ்த்தப்பட்ட சுரங்கங்களுள் தாக்குண்டு, தான் கடலின் அடிப்புறத்தைக் காணச் சென்றதுமல்லாமல், 300-மனிதர்களையும் துணையாகக் கொண்டு சென்றது. இவ்விதம் ஜெர்மனியர் யார்மத்துறை நகரை அணுகினதினால், ஆங்கிலே

யர்களுக்கு உண்டான நஷ்டம் ஒரு நீர்மூழ்கிக் (D5) கப்பலும் இரண்டு மீன் பிடிக்கும் படகுகளும் 15-உயிர்கள் மாத்திரமே யன்றி வேறில்லை. ஜெர்மனியர்களோ 9350-டன்சுமையேற்றப் படக் கூடிய "யார்க்" எனும் கப்பலை யிழந்தார்கள்; அன்றியும் 300-வீரர்களையு மிழந்தார்கள். இதுபகலெல்லாம் மலையைப் பிளந்து இரவில் எலியைப்பிடித்த கதைபோலாயிற்று.

எட்டாவது அத்தியாயம்

மீண்டும் ஜெர்மனியர்களுக்கு இங்கிலாந்தின் மீதுள்ள முயற்சி

யார்மத் துறை நகரின்மீது சென்ற கப்பல்களின் செய்கைகளெல்லாம் ஆங்கிலர்களுடைய முன் ஜாக்கிரதையினாலே வியர்த்தமாயின என்பதை யறிந்து ஜெர்மனியர்கள் மறுபடியும் முன்போல் சில ஆங்கில துறைநகர்களை எதிர்க்க ஆலோசித்தார்கள். கவுண்ட் ரேவன்ட்லோ என்னும் ஜெர்மனியர் ஒருவர் "நாம் ஜெயத்துடன் யுத்தம் செய்யவேண்டுமானால் பரிதாபத்தை விட்டுவிடவேண்டும்" என்று சொன்னாராம். இவ்வித இரக்கமற்ற பிரபுக்கள் பலருடைய துர் ஆலோசனையின் 'ஆமல் டிசம்பர்மீ 16௳ ஒரு கூட்ட ஜெர்மனிக் கப்பல்கள் புறப்பட்டன. ஹார்ட்டில்பூல், ஸ்கார் பரோ, விட்பி என்னும் துறைநகர்களை எதிர்க்கவேண்டும் என்ற யோசனை இவர்கள் சதியாலோசனையில் முன்னமே ஏற்பட்டு விட்டது

ஹார்ட்டில்பூல்

இது மிகவும் விநோதக்காட்சி பொருந்திய துறைநகர். அனேக கைத்தொழிற் சாலைகளுக் கெல்லாம் இருப்பிடம். இது, கிழக்கு ஹார்ட்டில்பூல் என்றும், மேற்கு ஹார்ட்டில் பூல் என்றும் இருபிரிவுகளையுடையது. சுமார் ஒருலட்சம் ஜனங்களுக்கு மேற்கொண்டது. இந்த இரண்டு ஹார்ட்டில்பூல் களுக்கு மிடையே கப்பல்வேலை செய்யு மிடங்கள் பலவுள. அனேக வியாபாரிகளுக்கு உத்தியோகசாலைகளும் இங்கிருக்கின்றன. உலகின் நாற்புறங்களிலு மிருந்து வரும் உத்தரவுக

ளின்மீது அனேக கப்பல்கள் கட்டப்பட்டுக்கொண்டிருந்தன. இவ்விடங்களில் கைத்தொழிலாளர்களின் வேலையினால் உண்டாகும் சத்தத்திற்கு ஒழிவே கிடையாது.

ஸ்கார்பரோ

இது மிக உன்னதமான நகரம். இந்நகரின் மத்தியிலிருந்து இருபக்கங்களிலும் சிறுகுன்றுகளால் சூழப்பட்டு கடற்கரை வரையிலும் செல்லும் சிங்காரவனத்தின் சிறப்பைப் பார்க்க ஆயிரக்கணக்கான ஜனங்கள் நாள் தோறும் வந்து கொண்டேயிருப்பார்கள். இஃதன்றியும் கண்களைக் கவரும் படியான வளம்பொருந்திய பூங்காவனங்கள் இந்நகர் முழுதும் இங்குமங்கும் நிறைந்துள்ளன. சரீர சவுக்கியத்திற்காக அனேகர் இந்நகரை நாடுவார்கள். உல்லாசமாய் வாழ்நாளைக் கழிக்க விருப்பங்கொண்ட பலதிரவியவான்களும் இந்நகரைத் தங்கள் நகராகவே பாவித்துக்கொண்டிருந்தார்கள். இவ்விதம் பல வளப்பங்களும் நிறைந்து, பார்ப்போர் கண்களையெல்லாம் கவர்ந்து, அவர்களைத் தன்னிடமே குடியேறச் செய்யும் தகைமை வாய்ந்த ஸ்கார்பரோ நகரத்தில் வியாபாரம் எவ்வித மிருக்குமென்பதைப் பற்றி நாம் அதிகம் சொல்ல வேண்டியதில்லை.

விட்பி

இந்நகரம் ஸ்கார்பரோவுக்குச் சமீபத்திலுள்ளது. நீண்ட வீதிகள் பலவுள. எஸ்க் என்னும் நதியானது இந்நகருக் கருகில் கடலிற் கலக்கிறது. இந்த நதியின் முகத்துவாரத்தண்டை பலர் மீன் பிடிப்பது பார்ப்பதற்கு விநோதமாயிருக்கும். நேர்த்தியான தேவாலயம் ஒன்று இங்குண்டு அது மிகப் புராதனமான கட்டடம். இந்நகருக்கருகில் இங்குமங்கும் சில குன்றுகள் பார்ப்பதற்கு அழகாயிருக்கும்.

இம்மூன்று துறை நகர்களும் இங்கிலாந்து தேசத்தின் கீழ்க்கரையில் வடகடலின்மீதுள்ளன. இந்த மூன்றனுள், எதிரிகள் எக்காலத்தேனும் எதிர்த்தால் போதுமான பலம் பொருந்திய கோட்டையையுள்ளது முதல் கூறிய ஹார்டில் பூல் ஒன்றே.

ஹார்ட்டில்பூலில் அசம்பவங்கள்

டிசம்பர் மாதம் 16-ந்தேதி காலை 8-மணிக்கு 7-ஜெர்மனிக் கப்பல்கள் ஹார்ட்டில்பூல் நகரின் துறையைச் சமீபித்தன. மிகுந்த பனி பெய்ததினால் இக்கப்பல்கள் வருவது தெரியாமற் போயிற்று. சற்று நேரத்திற்கெல்லாம் குண்டுகள் அண்டமுக்கு கிழியும்படியான சத்தத்துடன் ஹார்ட்டில்பூலிலுள்ள ஜனங்களின் மனதைக் கலக்கின. கடற்கரையோரத்திலுள்ளவர்கள், இச்சத்தமானது, ஆங்கில கப்பல்கள், தற்செயலாய்ச் சமீபிக்கும் ஜெர்மனிக் கப்பல்களின்மீது எறியும் குண்டுகளினா லுண்டானதென்றே நம்பினார்கள். முதலில் அங்குள்ளோர்களுக்குப் புலப்பட்டதெல்லாம் புகையும் வெளிச்சமுமே. மேற்கூறிய ஜெர்மனிக் கப்பல்களில் மூன்று கடலில் இரண்டு மைல் தூரத்திற் கப்பாலேயே நின்றுகொண்டு குண்டுகளைப் பிரயோகிக்க ஆரம்பித்தன. அங்கு சில ஆங்கிலக் கப்பல்களும் நின்றுகொண்டிருந்த போதிலும், பனியின் பிரவேசத்தால் அவ்வாங்கிலக் கப்பல்களுக்கு ஜெர்மனிக் கப்பல்கள் புலப்படாமற் போயின. குண்டுகள் ஜெர்மனிக் கப்பல்களினின்றும் புறப்பட்டு இவ்வாங்கிலக் கப்பல்களின்மீது சில விழுந்ததினால் இருவர் மரணமடைந்தார்கள். 7-பேர் காயம்பட்டார்கள். 3-பேர் சொற்ப காயம்பட்டார்கள். இவ்வசம்பவம் நடந்தது "டூன்" என்னும் ஆங்கிலக்கப்பலின்மேல். "ஹார்டி" என்னும் ஆங்கிலக் கப்பலின்மேல் உள்ளவர்களில் இருவர் மாண்டார்கள். ஒருவர் காயத்தால் மாண்டார். 14-பேர் காயப்பட்டார்கள். இந்த ஹார்டி என்னும் கப்பலும் டூன் என்னும் கப்பலும் பெரிய யுத்த கப்பல்கள் அல்ல வாகையினால் ஜெர்மனியர்கள் இவ்விதம் செய்ய நேரிட்டது.

சற்றுநேரத்திற் கெல்லாம் ஜெர்மனிக் கப்பலிலிருந்து குண்டுகள் ஹார்ட்டில் பூல் நகர்த்துறைமுகமாய்த் திரும்பின. முதலில்வந்த குண்டானது மருந்து வைக்கப்பட்டிருக்கும்ஒரு கட்டடத்தின் அருகேயிருந்து அங்குள்ள பலரைக் கொன்றது. இரண்டாவது வந்த குண்டானது சற்றே உயரச் சென்று அதற்கருகிலுள்ள ஓர் உயர்ந்த வீட்டின்மேல் விழுந்தது. அவ்வீட்டில் இரண்டுஸ்திரீகள் வசித்திருந்தார்கள். அவர்க ளிருவ

ரும் சகோதரிகள். குண்டின் சத்தத்தைக் கேட்ட ஒருத்தி மிகவுந் திடுக்கிட்டுத் தன் சகோதரியிருக்கும் அறைக்குச் சென்றாள். அவ்வறையை இவள்சேருமுன்னமே உடைந்தகுண்டின் துண்டுகளில் ஒன்று அவள் மார்பிற் பாய்ந்து இவளுக்கு மரணத்தையுண்டுபண்ணியது. உடனே அக்கம்பக்கத்திலுள்ள ஜனங்களெல்லாரும் திரண்டு அவ்வீட்டினுட் பிரவேசித்து ஆராய்ந்து பார்க்கையில், ஒரு சகோதரியினுடைய உடல்மாத்திரம் காயம் பட்டுக் கிடந்ததைக் கண்டார்களே யல்லது மற்றொருத்தியினுடைய சரீரத்தைக் கண்டு பிடிக்கவில்லை. பின்னும் நன்றாய்ச் சோதிக்கையில் அவளுடைய சரீரமானது ஆயிரக்கணக்கான துண்டுகளாய்ச் சிதைக்கப்பட்டு அவ்வீட்டில் எறியப்பட்டிருப்பதைக் கண்டார்கள்.

50-நிமிஷத்திற்குள் 1500-குண்டுகள்.

ஜெர்மனிக் கப்பல்கள் இவ்விதம் குண்டுகள் பிரயோசித்ததைக் கேட்டவுடனே, சில ஆங்கில நீர்மூழ்கிக் கப்பல்கள் அவைகளைத் துரத்திச் சென்றன. உடனே ஜெர்மனிக் கப்பல்கள் குண்டுகளை அபரிமிதமாய் இவைகளின்மீது பிரயோகிக்க, அவைகளெல்லாம் கடலிலேயே வீழ்ந்து விட்டனவே யல்லது ஆங்கிலக் கப்பல்களுக்குச் சேதம் ஒன்றும் செய்யவில்லை. ஐம்பது நிமிஷத்திற்குள் 1500-குண்டுகள் ஜெர்மனியர்களால் பிரயோகிக்கப்பட்டன வென்றால் அந்நகரின்குழப்பம் எத்தகையதாயிருக்குமென்பதை முற்றிலும் எடுத்துரைக்க முடியாது ஆயினும், கூடியவரையில் கண்ணுற் கண்டவர்களுடைய அநுபவத்தை இங்கு எழுதுகின்றோம். அனேக குண்டுகள் வீதிகளில் வீழ்ந்து வீடுகளை யெல்லாம் இடித்தன. இதனால் அழிந்துபோன வீதிகள் பல. குண்டுகள் ஆகாயத்தில் ஒன்றுடன் ஒன்று உராய்ந்து அதனால் உடைபட்டு நாற்புறத்திலும் விழுந்துகொண்டிருந்தன. வருணபகவான் மழைவருஷிப்பதற்குப் பதிலாகத் தனது சகோதரனாகிய இடி பகவானைவிட்டு ஹார்ட்டில்பூல் நகர்முழுதும் சிறுஇடிகள் விழச்செய்வதுபோல, குண்டுகள் எப்புறமும் இடைவிடாது விழுந்துகொண்டே யிருந்தன. ஜனங்களுக்கு இன்னது செய்வதென்று தெரியவில்லை. வீட்டிற்குள்ளிருந்தாலுங் கஷ்டம்; வெளியே வந்தாலும் அபாயம்.

என் செய்வார்கள் பாபம்! அனேகர் அருகிலிருக்கும் ரெயில்வே ஸ்டேஷனுக்கு ஓடினார்கள். எவ்வளவு ஜனங்களைத் தான் ரெயில்வே ஸ்டேஷன் கொள்ளும்! அன்று, அதாவது மேற்கூறிய டிசம்பர் மாதம் 16-ந்தேதி அதிகாலையிலேயே இவ் விபத்தை விளைவித்தமையால் நித்திரையினின்றும் எழுந்த பல மாதர்கள் தாங்கள் உடுத்திக்கொள்வதற்கும் நேரமில்லை. வீதிகளிலே ஓடிக்கொண்டிருக்கையிலேயே வீழ்ந்திறந்தோர் பலர். ஒரு போர்வீரன் மனைவி அவளுடைய ஆறு பிள்ளைகளுடன் ஓடிக்கொண்டிருக்கையில் அவர்களருகே ஒரு குண்டு பாய்ந்து மூன்று பிள்ளைகள் உடனே இறந்தார்கள். அவர்களில் 7-வயதும் 14-வயதுமுள்ள இரண்டு ஆண்பிள்ளைகளும் 8-வயதுள்ள ஒரு பிள்ளையுமாம். மீதி நின்ற மூன்று பிள்ளைகளில் இரண்டு பிள்ளைகள் படுகாயம் பட்டார்கள். தாயின் காலில் குண்டின் துண்டொன்று தாக்க முடமாய் விட்டாள். பிள்ளைகள் இறந்தது கூடஅவளுக்குத் தெரியாது. ஆஸ்பத்திரிக்குச் சென்று சிகிச்சை செய்யப்பட்டுச் சில காலம் சென்ற பிறகுதான், தன் பிள்ளைகளின் மரணத்தைப் பற்றி அவள் அறிந்தாள்.

19-வயதுடைய வேறு ஒரு பெண் குண்டின் சத்தத்தைக் கேட்ட மாத்திரத்திலேயே வீதிக்கு ஓடிவந்தாள். பிறகு எங்கு சென்றாளென்று தெரியவில்லை. ஜெர்மனியர்களுடைய குண்டுகளின் ஆரவாரமெல்லாம் அடங்கிய பின்னர், அவளுடைய மாற்றாந் தகப்பன், அதாவது அவள் தாயைமறு மணம் புரிந்துகொண்டவன், தேடிப் பார்க்கையில்அவளுடைய சரீரம் பிணங்களைப் புதைக்கும் சவச்சாலையில் அகப்பட்டது. கைகளில் ஒன்றும் சிரசில் பாதியும் காணப்படவில்லை.

மற்றொரு ஸ்திரீ கடற்கரையோரத்தில் நிலக்கரி பொறுக்கிக்கொண்டிருக்கையில் குண்டொன்று பாய்ந்து அவளை மணலினுள்ளே சொருகிவிட்டது.

16-வயதுள்ள வாலிபன் ஒருவன் தன்னுடைய தாயையும் சகோதரி சகோதரனையும் பாதுகாக்கு நிமித்தம் வெளியே வருகையில், எமன் அவனுடைய அன்பிற்கு வியந்து மகிழ்ந்து அவனைத் தன்னுலகம் கொண்டு சென்றான்.

மற்றொரு வீட்டில் அதிகாலையில் போஜனம் செய்ய உட்காருகையில் ஒருவாலிப ஸ்திரீ 25-வயதுடையவள் சின்னாபின்னப்படுத்தப்பட்டாள். இம்மாதிரியாய்மரணமடைந்தவர்களின் விபரங்களை எடுத்துரைப்பதென்றால் அதிகம் பெருகிவிடுமாகையால் இன்னும் ஒன்றிரண்டோடு முடிப்போம்.

ஆறுவயதும் எட்டுவயதுமுடைய இரண்டு சகோதரர்கள் பாடசாலைக்குச் சென்றுகொண் டிருக்கையில் இருவர் மேலும் இரண்டு குண்டுகள் பாய ஒருவன் உடனே யிறந்தான். மற்றவன் சற்றுப் பின்னே அவனுக்குத் துணை சென்றான்.

மூன்று வயதுடைய பெண் குழந்தை யொன்று குண்டின் சத்தத்தினாலேயே மாண்டது.

ஒரு ஸ்திரீ தன் குழந்தையை மார்புறத் தழுவி வீதிவழியே சென்றுகொண் டிருக்கையில் குண்டுபட்டுத் தாயிறக்கக், குழந்தை தப்பித்துக் கொண்டது.

குண்டுகள் பல தேவாலயங்கள்மீது விழுந்து அவைகளையும் நாசப்படுத்தின.

இந்நகரத்தில்அனேகம் கப்பல் கட்டுமிடங்கள் உளவென்று முன்னரே கூறியுள்ளோம். அவைகளை யெல்லாம் அக்கினி பகவான் தனக்குச் சொந்தமாக்கிக் கொண்டார். அந்நகர் முழுவதும் விளக்கெரிவிப்பதற்காக உபயோகிக்கப்படும் யந்திரசாலை அடங்கிய கட்டடத்தின்மீது. குண்டொன்று விழுந்து அதுவும் உடைந்தது.

பிரசவித்து இரண்டு நாளான ஒருஸ்திரீ தன்குழந்தையைப் பெரிய துப்பட்டியில் சுருட்டி எடுத்துக்கொண்டு ஒரே ஓட்டம் பிடித்தாள். அவள் தப்பிக்கொண்டாள். இதுவும் தெய்வச் செயல்.

தன்னுயிர் போல் பிற உயிரையும் பார்க்கவேண்டுமென்னும் நீதியும் இவ்விடத்தில் விளங்கிற்று. சிறுவர்களெல்லாம் தப்பித்துக்கொண்டு ஓடுமுன்னரே கையில் அண்டை அயலிலுள்ள தங்கள் சினேகிதர்களுக்கும் அபாயத்தை யறிவித்துக் கூட அழைத்துச் சென்றார்களாம்.

ஆபத்து நேர்ந்தகாலத்தும் அதிசயிக்கத்தக்க பொறுமை

ஒரு தாயும் தகப்பனும் தங்கள் குழந்தைகளுடன் ஓடிக் கொண்டிருக்கையில் ஒரு பிள்ளை மற்றொரு பிள்ளையைப் பார்த்து, என்மீது குண்டுபட்டிருக்கிறப் போலிருக்கிற தென்ன, மற்றவன் அதைப்பற்றி யிப்பொழுதொன்றும் சொல்லாதே தாயோ கேட்ட அளவில் உடனே விழுந்து இறந்து விடுவாள். என்றான். அவ்வாலிபனும் அவ்விதமே ஒன்றும் சொல்லாது மௌனமாயிருந்துவிட்டான். ஆயினும் அப்பிள்ளையின்முகக் குறிப்பை யுணர்ந்த தந்தை, அவனை டாக்டர்பின் டாக்டர்களாகப் பரிசோதித்தும் பயன்படாமல் பரகதியடைந்தான். தாயிக்கு மனக்கவலை வரக்கூடாதென்றும் தான் எவ்வளவு துன்பப்பட்ட போதிலும் பொறுத்துக்கொள்ளவேண்டியது தாயின் நலத்தைக் கருதியே யென்றும் இச்சிறுவன் கொண்டிருந்த பெருங் குணமாகிய கடலினும் பெரிய பொறுமை என்பதே அவனைத் தனக்கு ஆகாரமாக்கிக் கொண்டது. கடைசியாய் இவன் இறந்த பிறகு இவன் தேகத்தைப் பரிசோதித்துப் பார்க்கையில் உடைந்த குண்டின் மிகச் சிறிய குண்டொன்று இவனுடைய குடலின் வழியாய்ப் பாய்ந்து முதுகெலும்பில் தங்கியிருந்தது.

இவ்விதம் குண்டின் துண்டொன்று சரீரத்தில் பாயும் பொழுது எவ்விதம் இச்சிறுவனுக்குத் தெரியாதிருக்கும் என்றும் ஒரு சந்தேக முண்டாகலாம். பெரிய ஊசிகள் போல் உடைந்த குண்டுகளின் துண்டுகள் நாற்புறத்திலும் பரவி, ஜனங்களுடைய சரீரங்கள் மீது வாழைப்பழத்தினுள் ஊசிகள் போலும் சென்றனவையாம்.

இதன்றியும் ஒரு மனிதனுடைய இடது கை குண்டொன்றால் அறுப்புண்டு கீழேவிழுந்து விட்டது. அப்பொழுது அது அவனுக்குத் தெரியாதாம். சற்று நேரம் பொறுத்துக் கீழே பார்க்கிறபொழுது தெரிந்ததாம். இதனால் சரீரத்தில் உண்டாகும் துன்பம், அவன் கொண்ட ஒருமனப் பிரமையினால் உடனே புலப்படாது என்பது வெளிப்படுகிறது.

அனேக வீடுகளெல்லாம் ஆஸ்பத்திரிகளாக மாற்றப்பட்டன. இவ்விதம் 50-நிமிஷம் வரையினும் ஹார்டில்பூல் நகரில்

கோலாகலத்தை யுண்டுபண்ணிவிட்டு ஜெர்மனிக் கப்பல்கள் பறந்துபோய் விட்டன. உடனே அவ்வூரிலுள்ள அதிகாரிகள் அடியில் வருமாறு விளம்பரமொன்று பிரசுரித்தார்கள்.

> தற்காலத்தின் நிலைமை அமைதியாயிருக்கிறது. குடிகளெல்லோரும் தங்கள் தங்கள் வீட்டிலேயே யிருக்கும்படி வேண்டிக்கொள்ளப் படுகிறார்கள். சேதம் உண்டாகும் பட்சத்தில் இனி அறிவிக்கப்படுவார்கள். வெடிக்காமல் கீழே விழுந்து கிடக்கும் குண்டுகளைத் தொடக்கூடாது. அச்செய்தியானது உடனே போலீசாருக்கு அறிவிக்கப்படவேண்டும்.

இறந்தவர்கள் 22-பேர் என்றும் காயம் பட்டவர்கள் 50-பேர் என்றும் முதலில் கணக்கெடுக்கப்பட்டபோதிலும் ஆழ்ந்த விசாரணையின் முடிபாக இறந்தவர்கள் 113-பேர் என்றும் காயம் பட்டவர்கள் 300-பேர் என்றும் ஏற்பட்டது.

தந்தி யறிக்கையும் விபரீத அர்த்தமும்

ஏற்கனவே ஏற்பட்ட விபத்துக்களால் ஹார்டில்பூல் நகரிலுள்ள குடிகள் பலர் அந்நகரை விட்டு ஓடிப்போனதுடன் அந்நகரின் தோற்றத்தை இன்னும் அலங்கோலப்படுத்த இரு பொருள் படும் தந்தி அறிக்கை யொன்று அந்நகரத்தின் தபாலாபீஸில் ஒட்டப்பட்டிருந்தது. அது பின்வருமாறு.

டிசம்பர்மீ 18-ந்தேதி காலை மணி 6-30

ஹார்டில்பூல் தலைமை ஸ்தானம் லயான்ஸிலிருந்து வந்த தந்தி யறிக்கை.

"பகைவர்களுடைய ஆகாயக் கப்பல்களைக் கவனிக்குமாறு தந்தியறிக்கை பெறப்பட்டது. ஆகாயக் கப்பல்கள் நெருங்கினவுடன் ஜனங்கள் வீதிகளுக்கு வராமல்படி போலீஸ் வீரர்கள் சென்று அறிக்கையிட வேண்டியது. அபாயம் இல்லையென்று ஏற்படும் வரையிலும் ஒருவரும்வெளியேவரக்கூடாது. வதந்திகள் அபத்தமாயிருக்கினும் இருக்கலாம்; ஆயினும் ஒவ்வொருவரும் முன் ஜாக்கிரதையா யிருக்கவேண்டியது"

டிசம்பர்மாதம் 16-ந்தேதி ஜெர்மனிக் கப்பல்கள் ஹார்டில்பூல் நகரின்மீது குண்டுகளை யெறிந்து செய்த விபத்து போதாமற்படி, ஆகாயக் கப்பல்கள்மீதும் வந்து அந்தரத்தினின்றும் குண்டுகளை வீழ்த்திச் சேதம் ஒருக்கால் விளைவித்தாலும் விளைவிக்கக்கூடும், அதைப் பற்றிய முன்ஜாக்கிரதையை ஜனங்களுக்கு அறிவிக்கவேண்டும்,—என்னும் உண்மையான கருத்து இத்தந்திக்கிருக்க, அந்நகர்ப் போலீஸ் வீரர்கள் விபரீத அர்த்தம் செய்துகொண்டு அன்றையதினமே அதாவது டிசம்பர்மீ 18-ந்தேதி முதல் ஜெர்மனிய ஆகாயக் கப்பல்கள் வந்துவிடுமென்றும் விபத்துகள் பல விளையுமென்றும் வீடுகள் தோறும் தொழிற்சாலைகள் தோறும் சென்று ஜனங்களுக்குப் பயமுறுத்தி ஒருவரும் வெளிவரக்கூடாதென்னும் பயங்கரமான கட்டளையுமிட்டார்கள்.

தந்தி நோட்டீஸ் வந்தது காலை 6-50 மணிக்கு; சிறிது நேரத்திற் கெல்லாம் போலீஸார் உத்தரவு ஊர்முழுதும் பரவிவிட்டது. அன்றைய பகற்பொழுதெல்லாம் ஜனங்கள் ஒருவரும் வெளியே வரவில்லை. இராப்பொழுது வந்ததே யொழிய ஜெர்மனியர்களுடைய ஆகாய விமானங்கள் ஒன்றேனும் வரவில்லை. போலீசார் விபரீத அர்த்தம் செய்து கொண்டார்களென்பது நன்றாய் ஏற்பட்டது. ஆயினும் இந்தத் தந்தி நோட்டீஸாலும் அதற்குக் கொடுக்கப்பட்ட விபரீத அர்த்தத்தாலும் என்றைக்கிருந்தாலும் இந்நகரத்தில் அபாயமே யெனக் கருதி ஓட்டம் பிடித்தார்கள்.

ஹார்டில்பூல், ஸ்கார்பரோ, விட்பி என்னும் மூன்று நகரங்களுள் ஹார்ட்டில்பூல்என்னும்நகரத்தில் ஜெர்மனியர்செய்த அநியாயம் இம்மட்டோடு நிற்க, இனி, ஸ்கார்பரோவில் யாது நடந்ததெனச் சற்று விசாரிப்போம்.

ஸ்கார்பரோவில் அசம்பவங்கள்

மேற்கூறிய டிசம்பர்மீ 16-ந்தேதிகாலை 8-மணிக்குச் சில ஜெர்மனிக் கப்பல்கள் ஸ்கார்பரோத் துறையை நாடி மிக வேகமாய் வந்துகொண் டிருந்தன. இந்நகரமானது இங்குமங்கும் சிறு குன்றுகளை யுடையதாயிருந்ததால் கடற்கரையோ

ரத்திலுள்ள சிறு குன்றுகளின்மீதிருந்த காவலர்களும் போலீஸ்வீரர்களும் இக்கப்பல்கள் வருவதைக் கண்டார்கள். உடனே அங்கிருந்த காவலாளன் ஒருவன் நகரின் பின்புறத்திலிருக்கும் கம்பியில்லாத் தந்தி ஸ்டேஷனுக்கு "சில கப்பல்கள் வடபுறத்திலிருந்து வந்துகொண்டிருக்கின்றன; அவைகள் அயல்தேசத்துக் கப்பல்களாகவும் ஏற்படுகின்றன. ஆனால் எந்த தேசத்துக் கப்பல்களென்று என்னால் அறியக்கூடவில்லை. நான் காட்டும் கேள்விக்குறிகளுக்கு அவைகள் பதில் ஒன்றும் சொல்லவில்லை" என்று டெலிபோன் தந்திமூலமாய் அறிவித்தான். சற்றுநேரத்திற்கெல்லாம்—"வந்தவர்கள் ஜெர்மனியர்கள்; அவர்கள் நம்மீது குண்டுகளைக் கொண்டு சுடுகிறார்கள்" என்று மறுபடியும் சொன்னான். பிறகு அவன் பேசினது கம்பியில்லாத் தந்தி ஸ்டேஷனிலிருப்பவர்களுக்கு ஒன்றும் கேட்கவில்லை. குண்டுகள் ஒன்றின்பின் ஒன்றாய் நகரிலும் கடற்கரையிலும் விழ ஆரம்பித்தன. கடற்கரையிலுள்ள கட்டடம் ஒன்று சிறு துகள் துகளாக உடைக்கப்பட்டதென்றும் சொல்லப்படுகிறது. இந்தஸ்கார்பரோ நகரின் கடற்கரையோரத்தில் ஆங்கிலேயரின் நீர்மூழ்கிக் கப்பல்கள் பாதுகாப்புக்காக ஒன்றேனுமில்லை யென்று ஜெர்மனியர் அறிந்திருந்தமையால், ஹார்ட்டில்பூலை எதிர்க்கும் பொழுதுகடலில் நெடுந்தூரத்தில் நின்றதுபோ லல்லாமல் மிகவும் சமீபமாய்நெருங்கி குண்டுகள் ஒன்றேனும் அபாயம் விளைவித்துப் போகாமற்படி சுட ஆரம்பித்தார்கள். இதனால் அனேக வீதிகள் சேதத்தை யடைந்தன. சிறு குன்றுகளுக்குப் பின்புறமாய் அமைக்கப்பட்ட சில வீதிகள் தவிர, மற்ற வீதிகளிற் பெரும்பான்மையும் குண்டுகளால் சேதமடையாதது ஒன்றுமில்லை.

ஸ்கார்பரோ விலுள்ள ஜனங்கள் அதிகாலையில் எழுந்திருக்கும் வழக்கமில்லை. மேற்கூறியபடி ஜெர்மனியர்கள்குண்டுகளை எறிந்தபொழுது பெரும்பான்மையோர் படுக்கையிலேயே இருந்தார்கள். ஆரம்பத்தில் ஓரிரண்டு சப்தம் இடியின் முழக்கமாகவே இருக்கவேண்டுமென்றெண்ணினார்கள். பிறகு அரைமணி நேரம்வரையிலும் ஓயாமல் காது செவிடுபடும்படியாக குண்டுகளின் சப்தம் கேட்டுக்கொண்டிருந்தமையால் ஜெர்

மனியர்களுடைய சில கள்ளக்கப்பல்கள் வந்திருக்கின்றனவென த்தெரிந்துகொண்டார்கள். அப்பொழுதுஜனங்களுக்குஉண்டாயிருந்த ஒருமனக் குழப்பத்தைமனதாலேயே அறியவேண்டுமே யல்லது எழுதியறிவிப்பது இயலாத காரியம்.

அவ்வூரிலுள்ள மாஜிஸ்டிரேட் ஒருவர் மிஸ்டர்ஜான்ஹால் என்னும் பெயரை யுடையவர், தமது அறையில் உடுத்திக்கொண்டிருக்கையில் அக்கட்டடத்தின் மேல் விழுந்த குண்டு அவர் இருந்த அறையினுட் சென்று அவரை மிகவும் காயப்படுத்தியது. உடனே அவர் வைத்திய சாலைக்குக் கொண்டுபோகப் பட்டார். இனி தமக்கு உலக அதிகாரம் அவசியமில்லையென் வெறுத்து எமனுலகடைந்தார். அதே வீட்டில் இன்னும் நால்வர் இறந்தார்கள்.

ஒரு வாலிப யுத்தவீரன் குண்டின் அபாயத்தினின்றும் தன் தாயைத் தப்புவிக்க வேண்டுமென்று அவளைப் பாதுகாத்துக்கொண்டிருக்கையில், குண்டொன்று அவ்வீட்டினுட் சென்று அந்த யுத்தவீரனையும் அவன் தாயையும் 9-வயதும் 5-வயது முடைய இரண்டு குழந்தைகளையும் அந்தகனுடைய பாதுகாப்புக்கனுப்பி விட்டது.

ஒரு வியாபாரியினுடைய மனைவி, வீட்டிலிருந்து புறப்பட்டு முன்புறத்தில் கடைவைத்திருக்கும் புருஷனிடம் செல்கையில் குண்டின் துண்டொன்று அவளுடைய சரீரத்தினுட் பாய்ந்து அவளை மாய்த்தது. புருஷன் இருந்த கட்டடமோ அடியோடு விழுந்து விட்டது. அம்மனிதனும் இடிந்து விழுந்த கட்டடக் குவியலின் கீழ்புதையுண்டான்.

ஒரு ஸ்திரீ வீதிவழியே செல்கையில் குழந்தை யொன்று அழுதுகொண்டு பராமரிப்பாரின்றிக் கிடப்பதைக் கண்டு மிகவும் பரிதாபமுற்று, அதைத் தன் வீட்டுக்குக் கொண்டுசென்றாள். ஐயோ பாபம்! சிறிது நேரத்திற் கெல்லாம் இவள் வீட்டினும் குண்டுவந்து விழுந்து இருவரும் மாண்டார்கள்.

க்ஷவரகன் மனைவி யொருத்தி குண்டின் சத்தத்தைக் கேட்டுத் தன் வீட்டிற்கு இப்புறமும் அப்புறமும் ஓடி, அங்

குள்ளவர்களையெல்லாம் கூட்டிவந்து சேர்ந்தாள். அங்குவந்து சேர்ந்தவர்களையும் அவ்வீட்டையும் குண்டுவிட்டுப் போக வில்லை.

பணிப்பெண்ணொருத்தி தன் எஜமானியிடம் சென்று— "அம்மா தாங்கள் ஒன்றும் பயப்படவேண்டாம்; இது ஜெர்மனியரின் குண்டல்ல, நமது ஆங்கில யுத்த கப்பல்களே பயிற்சி செய்துகொண்டிருக்கின்றன—" எனத் தைரியம் கூறி அவ்விடத்தை விட்டு அப்புறம் போகாமுன்னமே, குண்டின் துண்டொன்று, இவள்சொன்னது சிறிதும் நிஜமில்லையென ரூபித்து விட்டது. தைரியம் சொன்ன பணிப்பெண் மாண்டாள்; எஜமானி உயிர்தப்பிக் கொண்டாள்.

ஆர்பிரெட்பீல் என்னும் தபாற் சேவகன் ஒருவன் எஸ்பிளனேட் வீதியில் வீடுகள் தோறும் கடிதங்களைக் கொடுத்துக்கொண்டிருக்கையில் குண்டுகளால் வீடுகள் இடிபட்டு விழுவதைக்கண்டும் தனது அலுவலினின்றும் பின்வாங்காதவனாய்க் கடிதங்களைக் கொடுத்துக்கொண்டே செல்கையில் ஒரு வீட்டிலுள்ள வேலைக்காரி யொருத்தி கடிதங்களை வாங்க வெளியே வந்தாள். உடனே குண்டின் துண்டொன்றால் காயப்பட்டு மாண்டார்கள். அவ்வூர் வைத்திய சாலை உடைபட்டது. பொதுப் பிரயோசனப்படும் அனேக கட்டடங்கள் சேதத்தை யடைந்தன. சிறிது நேரத்திற்கெல்லாம் ஜனங்கள் மோட்டார் வண்டிகளிலும் இன்னும் போக்கு வரவுக்குரிய பல சாதனங்களிலும் திரள்திரளாய்ச் சென்று அவ்வூரைவிட்டுப் போய்விட்டார்கள்.

ஹார்ட்டிபூலில் தபாலாபீஸில் ஒட்டப்பட்ட தந்தியறிக்கைக்கு, விபரீதப்பட்ட அர்த்தம் ஏற்பட்ட வேடிக்கையைப் போல், இந்த ஸ்கார்பரோவிலும் ஒரு வேடிக்கை நடந்தது. குண்டுகளால் மரணமடைந்தவர்கள் பலர்மரணபரிசோதனைக்குக் கொண்டுவரப்பட்டார்கள் அநியாயமாய்க் கொல்லப் பட்டார்களென்று மரணப்பத்திரிகையில் தாக்கல் செய்யப் படவேண்டும் என்பது ஜூரிகளுடைய கொள்கை. பகைவர்களுடைய கப்பல்களினின்றும் வந்த குண்டுகளால் மரணமடைந்தார்களென்று எழுதப்படவேண்டுமென்பது ராஜாங்கத்தா

ரின் சார்பாய்ப் பேசும் உத்தியோகஸ்தரின் கொள்கை. ஜூரிகளோ தங்கள் அபிப்பிராயப்படியே தாக்கல் செய்யப்பட வேண்டுமென்று பிடிவாதம் செய்தார்கள். அதன்மேல் அனியாயமாய்க் கொல்லப்பட்டார்களென்று தாக்கல் செய்யப் படும் பட்சத்தில், போலீஸார் கொன்றவர்களைக் கண்டு பிடித்து நியாய ஸ்தலத்திற்குக் கொண்டுவரவேண்டிய அவசியம் நேரிடும். கொன்றவர்கள் ஜெர்மனியர்களே யெனத் தெரிந்த போதிலும் அவர்களை நியாயஸ்தலத்திற்குக் கொண்டுவருவது போலீஸாரால் முடியாத காரியம்; என அறிவிக்கப்பட்ட பிறகு, ஜூரிகள் தங்கள் பிடிவாதத்தை விட்டுவிட்டார்களாம்.—இதுவும் விந்தையே.

விட்பியில் அசம்பவங்கள்

இவ்விதம் குண்டுகளை யெறிந்து விபரீதத்தை விளைவித்து காலை 8-30 மணிக்குமேல் ஜெர்மனியர்கள் ஸ்கார்பரோ துறை முகத்தினின்றும் ஓட்டம் பிடித்தார்கள். ஓடினவர்கள் சும்மா ஓடாமல், போகும் பிசாசு புளியமரத்தை அசைக்கிச்செல்வது போல் விட்பி என்னும் துறைநகருக்குச் சென்றார்கள். அங்கே சுமார் 9-மணிக்கெல்லாம் அன்றையதினமே அதாவது டிஸம்பர்மாதம் 16-ந்தேதியே இந்த விட்பி துறைநகரில் குண்டு மாரிபெய்தது. மரணமடைந்தவர்கள் சிலர், காயம்பட்டவர்கள் பலர். விழுந்த குண்டுகளின் தொகை 60-முதற்கொண்டு 200-வரையிலும் இருக்கும் என ஜனங்கள் பற்பலவான அபிப்பிராயங்கள்கொண்டபோதிலும், அறுபதுக்குமேற்பட்டிராவென்பதே பெரும்பான்மை யோருடைய கொள்கை.

இத்துறை நகரின்மீது எறியப்பட்ட குண்டுகள் பெரும்பான்மையும் சுற்றுப்புற கிராமங்களில் விழுந்தனவாகையால் ஹார்ட்டில்பூலிலும் ஸ்கார்பரோவிலும் நேரிட்டதுபோல் அவ்வளவு பெருஞ் சேதம் இங்கு நேரிடவில்லை. ஆனால் குண்டுகளால் சிறிதேனும் சேதம் இல்லை யென்று சொல்வதற்கும் இடமில்லை. முதல் குண்டின் சத்தம் கேட்டமாத்திரத்தில் இந்நகரின் ரெயில்வே ஸ்டேஷனிலிருக்கும் இருவர், குதிரையொன்றை லாயத்திற்குக் கொண்டு போகையில், அங்கிருந்த வில்லியம்டன்மோர் என்னும் போர்ட்டர் ஒருவன் குண்டி

ளுல் இறந்ததைக் கண்டார்கள். மிஸ்ஸஸ் மில்லர் என்னும் வயோதிகஸ்திரீ படுக்கையிலிருக்கையில் குண்டொன்று அவள் வீட்டின் முன்புறத்தை யிடித்தது. அக்குண்டினின்றும் வெளிப்பட்ட சிறு ஊசித்துண்டுகள் அவள் தேகமனைத்தையும் காயப்படுத்தின. உடனே அவள் வேறு வீட்டுக்குக் கொண்டு போகப்பட்டாள். ஆயினும் சிறிதுநேரத்திற்கெல்லாம் அவள் ஜன்னிபிறந்து இறந்துவிட்டாள்.

மிஸ்ஸஸ் மார்ஷல் என்பவளுக்குக் குண்டொன்ருல் கால் ஒடிந்து விட்டது.

70-வயதுடைய கிழவன் ஒருவன் இக்குண்டின் சத்தத்தினுலுண்டாகிய திகிலினுலேயே மரணமடைந்தான்.

அநேக வீடுகளின் மீதிருந்த கூரைகளை குண்டுகள் வாரிக்கொண்டுபோய் விட்டமையால் அவை குட்டிச் சுவர்களாய் நின்றன. முன்புற மிடிந்த வீடுகள் சில; பின்புற மிடிந்த வீடுகள் சில. முன்புறமும் பின்புறமு மிருக்க, நடுப்புறமிடிந்தவீடுகள் சில. மனிதர்களே இவ்வளவு கஷ்டப்பட்டிருந்தால் பகுத்தறியும் தன்மையில்லாப் பிராணிகளாகிய மிருகராசிகள் என்ன பாடுபட்டிருக்கும்? பன்றிகளும் நாய்களும் காயம்பட்டனவும், உயிர் விட்டனவுமாய்க் கிடந்தன. முடிவாக இத்துறை நகரின்மீது ஜெர்மனியரால் எறியப்பட்ட குண்டுகளால் இறந்தவர் 3-பேர். காயம் பட்டவர்கள் இருவர்.

ஜியார்ஜ் சக்ரவர்த்தி குடிகளிடத்திற் காட்டிய இரக்கம்

இச்செய்தியனைத்தும் நமது ஜியார்ஜ் சக்கரவர்த்திக்கு எட்டியபொழுது, அவர், சிறிதேனும் இரக்கமில்லாது பாதுகாப்பில்லாத் துறை நகர்களின்மீது பகைமையைக் காட்டும் ஜெர்மனியர்களுடைய கொடுமையை மிகவும் வெறுத்தவராய் குண்டுகளால் கஷ்டப்பட்டவர்களுடைய நிலைமைக்கு மிகவும் பரிதாபப்பட்டு வருந்தினர். எவ்விஷயமும் ஒவ்வொரு நற்பிரயோசன முடிவுக்கு ஆதாரமாயிருக்கிற தென்னும் உண்மை இங்கு விளங்கியது. ஜெர்மனியர்கள் ஹார்ட்டில்பூல், ஸ்கார்பரோ, விட்பி என்னும் மூன்று துறைநகர்களின்மீது குண்டுகளை யெறிந்து சிறிது சேதத்தை விளைவித்ததும் ஆங்கிலேய

ருக்கு நன்மையாகவே முடிந்தது. எங்ஙனமெனில், பழிக்குப் பழி வாங்கவேண்டும் என்னும் வைராக்கியம் குடிகொண்டது. கணக்கற்ற வாலிபர்கள் சேனைகளைச் சேர ஆரம்பித்தார்கள். அவர்களுடைய தாய்மார்களும் அவர்களை உற்சாகப்படுத்தினர்களே யல்லது அதைரியப்படுத்தவில்லை. ஆகவே மிகப் பெரிய யுத்தகப்பல்களைக் கொண்டுவந்து, குண்டுகளைப் பிரயோகத்து அமைதியாய் வாழ்ந்திருக்கும் குடிகளுக்குக் குழப்பத்தை யுண்டுபண்ணினதினால் ஜெர்மனியர்களுக்குச் சிறிதேனும் நலமொன்று மில்லை. உலக நன்மையைக் கருதி சுயநலத்தைப் பாராட்டாது, அகங்காரங்கொண்ட ஜெர்மனியர்களை அடக்கவேண்டுமென்னும் கருத்தையே பிரதானமாய் வகித்த நமதுஜார்ஜ்சக்ரவர்த்திக்குஇதனால் பெருநன்மையுண்டாயிற்று

தவிரவும், ஜெர்மனியர் இவ்விதம் அரணில்லாத் துறை நகர்களின்மீது ஆரவாரத்துடன் செல்வது போர்க்குரியவிதிகளுக்கு மாறானதென்பதைச் சிறிதேனும் லட்சியம் செய்யாது விட்டதினால், உலகெங்கு மிருக்கும் பலதேசத்து அரசர்களுடைய கோபாவேசத்திற்குத் தங்களைத் தாங்களே ஆளாக்கிக் கொண்டார்கள்.

ஒன்பதாவது அத்தியாயம்

ஐரோப்பிய துருக்கி ஜெர்மனியைச் சேர்ந்தமை

ஆஸ்டிரியச் சக்ரவர்த்தியின் இளவரசராகிய பெர்டிணண்ட் ஸராஜிவோ நகரத்தில் மரணமுற்றதையே வெளிக்கு முதற்காரணமாய்க் கொண்டு அரசர்களுக்குள் ஏற்பட்டிருக்கும் சமாதான உடன்படிக்கைகளைச் சிறிதேனும் கவனியாமல், ஆதாரமில்லா இறுமாப்புடன் லக்ஸம்பர்க் நாட்டினுள் ஜெர்மனியர்கள் பிரவேசித்து, சிசுஹத்தியினும் கொடிய பாபத்துக்குத் தங்களைத் தாங்கள் ஆளாக்கிக் கொள்ளும் வண்ணம், பெல்ஜியத்திற் பற்பல கொடுமைகள் புரிந்து, நெடுங்காலமாய் பிரான்ஸ் தேசத்தைத் தங்கள் தேசத்துடன் கைவசப்படுத்தவேண்டுமென்னும் எண்ணத்துடன் அத்தேசத்தில் பிரவேசித்து, எய்ஸன் முதலிய நதி தீரங்களில் யுத்தங்கள் பல புரிந்து, முடிவாய் பாரிஸ்மா நகரத்தைச் சமீபிக்கவும் சக்தியற்றவர்களாய், ஆங்கில—பிரெஞ்ச் முதலிய உபபலச்சேனைகளுக்கும் இந்திய வீரர்களுக்கும் முன்னிற்கமாட்டாதவர்களாய், எடுத்த காரியத்தை இனிது முடிக்குந்திறமையற்றிருப்பதையும்,—ஜெர்மனியர் தங்களுக்கு உபபலம் செய்வார்களென்று எதிர்பார்த்து விஸ்டுலா முதலிய நதிகள் தீரம் ஆஸ்டிரியர்கள் ருஷியாவினுட் பிரவேசித்து ருஷியர்களால் தோல்வியுற்று, சேற்றிற் சிக்குண்டு ஓர் புறம் சின்னபின்னப் பட்டுக்கொண்டிருக்க, தென் கீழ்த்திசை முகமாய் செர்வியா மீது சென்ற ஆஸ்ட்ரியர்கள், செர்வியர்களுடைய வல்லமையின் முன் தங்களுடைய வல்லமை திரணமென அனுபவத்திலறிந்து திரும்பினதையும்,—ருஷியர்கள் தென்முகம் சென்று ஆஸ்டிரியாவின் பிரதான பிரிவாகிய கெலீஷியாவின் தலை நகரான லெம்பர்க் நகரில் கோஸாக் வீரர்கள் செய்த யுத்த விளையாட்டுகளையும்,—சில ஜெர்மனிக் கப்பல்கள் இங்கிலாந்து தேசத்தின் கீழ்க்கரையிலுள்ள சில துறைமுகங்களின்மீது "ஆளில்லாவிடத்தில் அசுவமேத யாகம் செய்வதுபோல் சில குண்டுகளை விட்டுக் குழப்பத்தை யுண்டு பண்ணி வந்ததையும் பற்றி

இது காறும் கூறிவந்தோம். இனி, ஐரோப்பியத் துருக்கி ஜெர்மனிக்கு எவ்விதம் துணை வந்து சேர்ந்ததென்பதைப்பற்றிக் கூறுவோம்.

இரண்டு ஜெர்மனிக் கப்பல்கள் துரத்தப்பட்டன

யுத்த ஆரம்பகாலத்தில் மத்தியதரைக் கடலில் கோபென், பிரஸ்லாவ்ப் என்ற ஜெர்மனி யுத்த கப்பல்கள் இரண்டு வந்து கொண்டிருந்தன. இவ்விரண்டு கப்பல்களும் நூதனமான வைகள். நாலைந்து வருஷங்களுக்கு முன்னர்தான் செய்யப் பட்டவை. கோபென் என்னும் கப்பலில் 11 அங்குலக்குழாய் களையுடைய 10 பீரங்கிக ளிருந்தன. அது மணி ஒன்றுக்கு 27 மைல் வீதம் செல்லக்கூடியது. பிரஸ்லாவ்ப் என்னும் கப்பல் சுமார் 4 அங்குலக் குழாய்களையுடைய 12 பீரங்கிகளை யுடையது. மணி யொன்றுக்குச் சுமார் 28 மைல் வீதம் போகக்கூடியது.

இவ்விரண்டு கப்பல்களும் இந்து மகாசமுத்திரத்திற்குச் சென்று அங்கு ஆங்கிலேயர் முதலிய உபபலச் சேனையா ருடைய கப்பல்கள் வந்தால் அவைகளை எதிர்க்குமாறு ஜெர் மனியர்களால் அனுப்பப்பட்டவை. இவைகளை ஆங்கிலக் கப்பல்கள் துரத்த ஆரம்பித்தன. எதிர் நின்று யுத்தம் செய் வதில் திறமையில்லாவிட்டாலும் ஓட்டம் பிடிப்பதில் ஜெர் மனிக் கப்பல்கள். மிகச் சமார்த்தியமானவை ஆங்கிலக்கப்பல் களுக்கு முன்னிற்க மாட்டாதவைகளாய் ஓட்டம் பிடித்து, ஐரோப்பிய துருக்கியினுடைய அடைக்கலத்தை இவை யிரண் டும் பெற்றன. ஆயினும் கோபென் என்னும் கப்பலானது பின் புறத்தே வந்த "க்ளௌஸெஸ்டர்" என்னும் ஆங்கி லக் கப்பலால் மிகச் சேதத்தை யடைந்திருந்தது. இவ்விர ண்டு கப்பல்களும் ஐரோப்பிய துருக்கியினுடைய அடைக்கலத் தைப் பெற்ற பொழுது, துருக்கியிலுள்ள சேனை உத்தியோகஸ் தர்கள் இக்கப்பல்களிலுள்ளவர்களை நல்வர வேற்றதுடன், கோபென் என்னும் கப்பலிலிருந்த மாலுமி துருக்கியினுடைய அரசராகிய சுல்தானுடைய தரிசனத்திற்கும் கொண்டுபோகப் பட்டார். அக்கப்பலிலுள்ள மற்றவர்களெல்லாம் அவ்வூரில் பற்பல விடங்களில் விருந்தினர்களானார்கள்.

என்ன மதி யீனம்! கிறிஸ்தவ மதத்திற்கும் மகம்மதிய மதத்திற்கு முள்ள சிற்சில பேதங்களினால், இவ்விரு மதத்தினர்களும் தத் தம் மதத்தையே முக்திய தெனக்கூறும் மதப் போரின் காரணமாக, ஜெர்மனியர் மகம்மதியர்களை மிகவும் வெறுப்பவர்கள் என்பதை யறிந்தும் இக்கப்பலிலுள்ளவர்களுக்கு நல்வரவு கொடுத்தது துருக்கியிலுள்ளவர்களுடைய தீட்சண்ய அறிவை விளக்குகிறது.

மூன்று நாள் இவ்விரண்டு கப்பல்களிலு மிருந்திறங்கின ஜெர்மனியர்கள் கீழ்நாட்டுச் சந்தோஷ சாகரத்தில் ஆழ்ந்திருந்தார்கள். ஒவ்வொரு தேசத்திலும் பிறதேசத்துத் தூதுவர்கள் தங்கியிருப்பதுபோல, இந்தத் துருக்கி ராஜ்யத்திலும் தங்கியிருந்தார்கள். அவர்களுள், இங்கிலாந்து தேசத் தூதுவர், பிரான்ஸ் தேசத் தூதுவர், ருஷியா தேசத் தூதுவர் ஆகிய இம்மூவரும், துருக்கி ஜெர்மனியக் கப்பற்காரர்களுக்கு இடங்கொடுத்த விஷயத்தைச் சிறிதேனும் அங்கீகரிக்கவில்லை. ஆங்கிலக் கப்பல்களால் துரத்தப்பட்ட பிரெஸ்லாவ்ப், கோபென் என்னும் இரண்டு ஜெர்மனிக்கப்பல்களும் துருக்கிக் கடற்கரையோரமாய் அடைக்கலமாயிருப்பது முற்றிலும் ஒவ்வாத காரியமென மறுத்தார்கள். இவ்விதம் பிறதேசத் தூதுவர்கள் எடுத்துரைத்த கோட்பாடுகளுக் கெல்லாம் துருக்கித்தேசத்து ராஜாங்க அதிகாரியார் சாக்குப் போக்கு சொல்லிக்கொண்டு வந்தார்கள். எவ்வளவு காலம் இவ்வித சாக்குப்போக்குகள் அங்கீகரிக்கப்படக்கூடியனவாயிருக்கும்? கடைசியில், பிரஸ்லாவ்ப், கோபென் என்ற இரண்டு கப்பல்களையும் தாங்கள் தங்களுடைய தேசத்தின் சொந்த உபயோகத்திற்காக ஜெர்மனியர்களிடமிருந்து விலைக்கு வாங்கிவிட்டதாகக் கூறினார்கள். வெளிப்பகட்டிற்கு இதை ஸ்திரப்படுத்தும் பொருட்டு துருக்கி தேசத்துக் கொடியும் இவ்விரண்டு கப்பல்களின் மேலே நாட்டப்பட்டது. இக்கப்பல்களை நடத்தின ஜெர்மனியர்களெல்லாம் துருக்கி தேசத்து உடுப்புகளை உடுத்திக்கொண்டார்கள்.

இத்தந்திரம் சிறிதேனும் செல்லவில்லை. இதைக் காட்டிலும் மேலான யுத்த தந்திரங்களை சமயத்திற்கேற்றவாறு

உபயோகிக்கும் ஆங்கில, பிரெஞ்ச் தேசத்தவர்களிடம் இவ் வற்பதந்திரத்தை நாம் கூறுவது, மந்த மதியினன் கொல்லத் தெருவில் ஊசி விற்கும் கதையாகு மென்பதைத் துருக்கியர் கள் சிறிதேனும் அறியாமற் போய்விட்டார்கள்.

துருக்கியின்மீது போர்தொடங்கப் பட்டது

இம்மட்டோடு நிற்கவில்லை. இந்த கோபென் என்னும் கப்பலானது சில பிரெஞ்சுக்கப்பல்களையும் மற்றும் சில கப் பல்களையும், தடுத்தமையால் இங்கிலாந்து தேசத்திற்கும் துரு க்கி தேசத்திற்கும் கடிதப் போக்கு வரவு நடந்தது. இக்கடி தப்போக்கு வரவின் முடிவாகிய பிரயோசனம் ஒன்று மில்லை. கடைசியாய் 1914ஞு அக்டோபர்மீ 28ந்-தேதி கோபென், பிரஸ்லாவ்ப் என்ற இரண்டு ஜெர்மனிக்கப்பல்களும் ஹமிடி என்ற துருக்கிக் கப்பல் ஒன்றும், ருஷியாவின் கடற்கரை யோரத்திலுள்ள தியடோஷியா, ஒடெஸ்ஸா, முதலிய இடங் கள்மீது குண்டுகளைப் பிரயோகித்து சேதத்தை விளைவித்தன. இதனால் உண்டாகிய சேதம் பெரிதல்ல. துருக்கி ஆங்கில பிரெஞ்ச் தேசத்தாரிடம் இதுவரையிலும் காட்டிவந்த வெளிப் பகட்டு நிலைமையானது ஒரு முடிவுக்கு வந்து விட்டது. துருக்கி ராஜாங்கத்தார் ஜெர்மனியர்களிடம் நட்பு பூண்டும், ஜெர்மனியர்களுடைய பகைவர்களிடம் பகைமைகொண்டு மிருக்கிறார்கள் என்பது புலப்பட்டது. உடனே ஏககாலத் தில் இங்கிலாந்து பிரான்ஸ் ருஷியா ஆகிய மூன்று, தேசமும், இறுதிக்கடிதங்களைத் துருக்கிக்குஅனுப்ப ஆரம்பித்தன. அக் கடிதங்களிலுள்ள நிபந்தனைகளுக்கு துருக்கியர் சம்மதிக்க வில்லை. ஆனதினால் 1914-ம் வருஷம் நவம்பர்மீ 2-ந்தேதி துருக்கிராஜ்யத்தின்மீது இங்கிலாந்து, பிரான்ஸ், ருஷியா ஆகிய மூன்று தேசங்களும் படையெடுக்கும் கருத்து பகிரங்கப்படுத் தப்பட்டது. அன்றைய தினமே துருக்கிதேசத்திலிருந்தவெளி நாட்டுத்தூதுவர்களெல்லாம் தங்கள் தங்கள் தேசத்திற்கு மீண் டும் சென்றார்கள். பிறகு ஆழ்ந்த விசாரணையின்மேல் ஏற்பட்ட விஷயம்ஒன்றுண்டு. அதாவது இப்பொழுதிருக்கும் சுல்தான் மேமெட் என்பார். இவருக்கு முந்தியிருந்த சுல்தான் பெயர் அப்துல் ஹமேத். இவர் ஆளுகையானது மிகவும்அதிர்ப்திகர

மானது. இவருக்குத் திரவியம் வேண்டியபொழுதெல்லாம்சில நாடுகளைப் பிறதேசத்தாரிடம் கொதுவை வைப்பதும் பிறகு மீட்டுக் கொள்வதும் வழக்கம். தனக்குப் பிறதேசத்தாரிடமிருந்து அபாயம் நேரிடுங்கால் ஆங்கிலேயர் பிரெஞ்சுக்காரர் முதலிய ராஜாங்கத்தாருடைய உதவியைப்பெற்று அபாயத்தினின்றும் தன்னைத் தப்பித்துக் கொள்வார். எவ்வெவ்விதம் சமயத்திற்கு அவசியமோ அவ்வவ்வித சூழ்ச்சிகளையெல்லாம் கையாண்டு துருக்கி தேசத்தை இவர் செய்த ஆட்சியானது சற்றேனும் திருப்திகரமானதாயில்லை யென்று 'யங்டர்க் பார்ட்டி' என்னும் ஒரு கட்சியார் ஏற்பட்டார்கள். அரசனுடைய அதிகாரத்திற்கும் ஓர் அளவிருக்க வேண்டு மென்பதும் இங்கிலாந்து முதலிய மிக மேலான நாகரிகம் பொருந்திய அரசாட்சியைப் போல் துருக்கி அரசாக்ஷியும் மேலான நிலைமையை அடையவேண்டுமென்பதும் இந்த யங்டர்க் பார்ட்டி என்னும் கட்சியாரின் கொள்கை. இவர்கள் முயற்சியினால் அப்துல் ஹமேத் என்னும் சுல்தான் சிம்மாசனத்தினின்றும் இறக்கப்பட்டார். அவருக்குப் பதிலாய் சுல்தான் மேமெட் என்பவர் அரச ராக்கப்பட்டார். இவர் யங்டர்க் பார்ட்டியாருடைய மனோபீஷ்டப்படி நடக்கக் கடமைப்பட்டுள்ளவர் என்பது சொல்லாமலே விளங்குகிறது. இந்த யங்டர்க் பார்ட்டியாருடைய தூண்டுதலின்மேல் யுத்தத்திற்கு வேண்டிய சகலவஸ்துக்களும் ஜெர்மனியர்களிடமிருந்து வாங்கப்பட்டன. அன்றியும், அனேக ஜெர்மனியர்கள் இந்த துருக்கிதேச ராணுவத்தில் உத்தியோகஸ்தர்களாய் அமர்ந்திருந்தார்கள். இவ்விதம்ஏராளமாய் ஜெர்மனி தேசத்துடனே உறவு இருப்பதைக் காரணமாய்க்கொண்டு ஆங்கிலேயர் பிரெஞ்சுக்காரர் முதலானவர்கள் தங்களுக்குப் பகையாளர்களாய் விடுவார்களோ என்னும் பயமும் இந்த யங்டர்க் கட்சியாருக்கும், அவர்களால் நியமிக்கப்பட்ட சுல்தானுக்கும் இருந்தமையால், ஆங்கில பிரெஞ்சுக்காரர்களிடம் சமயம் நேரிட்டபோதெல்லாம் நட்பு பாராட்டிக்கொண்டும் வந்தார்கள். ஆகவே, வன்மை பொருந்திய இருநாயகர்களுக்கிடையேசிக்குண்டு தவிக்கும் பொதுமகளின் கதியைக் காட்டிலும் இந்த துருக்கியர்களுடைய நிலைமையானது மிகவும்பரிதபிக்கக்கூடியதாயிருந்தது. பிரெஸ்லாவ்ப்,

கோபென் என்ற இரண்டு ஜெர்மனிக் கப்பல்களும் மத்திய தரைக்கடலில் ஆங்கிலேயர்களுடைய யுத்தகப்பல்களுக்குஎதிர் நிற்கமாட்டாமல் துருக்கித் துறைமுகங்களில் அடைக்கலம் பெற்றதை ஆங்கிலேயர் சகியாததின் காரணமாய்க் கடிதப் போக்கு வரவு நடந்ததையும், முடிவில் இறுதிக்கடிதம் துருக்கிக்கு அனுப்பப்பட்டதையும் பற்றிக் கேள்வியுற்ற இக்கப்பலிலிருந்த ஜெர்மனியர்கள், மேற்கூறிய இறுதிக் கடிதத்திற்கு யாதொரு பதிலும் அளிக்கவேண்டிய அவசியமில்லை யென்றும், ஆங்கிலேயர் பிரெஞ்சுக்காரர் முதலியவர்களுடைய தலையைத் துருக்கியர்கள் சம்பாதிக்குங் கருத்து கிஞ்சித்தேனும் அவர்களிட மிருக்குமாகில், தாங்களே கான்ஸ்டாண்டி நோபில்மீது குண்டுகளைப் பிரயோகித்து அந்நகரைத் தும்ஸம் பண்ணிவிடுவதாயும் பயமுறுத்தினார்கள். இதன்றியும், ஒடெஸ்ஸா முதலிய ருஷிய ஸ்தானங்கள் இரண்டு ஜெர்மனிக் கப்பலாலும் ஒரு துருக்கிக் கப்பலாலும் சேதத்தை யடைந்தது ஜெர்மனியர்களுடைய வற்புறுத்தலினாலே யென்றும் ஏற்பட்டது.

துருக்கியின் கரைப்படை

யங்டர்க் கட்சியார் அதிகாரத்திற்கு வந்தபிறகு சேனைகளைச் சேகரித்துப் புதிய ஏற்பாடுகளை யெல்லாம் செய்ய ஆரம்பித்தனர். யுத்தம் ஆரம்பித்தபொழுது துருக்கிக்கு இருந்த சேனாபலம் அடியில் வருமாறு:—

அட்ரியா நோபிளிலுள்ள சேனை ...	140000
கான்ஸ்டாண்டி நோபிளிலுள்ளது ...	110000
காகேஸியா மலைகளின்மீதுள்ளது...	210000
அரேபியப் பட்டாளம் ..	40000
ஸ்மர்னப் பட்டாளம் ...	60000
எகிப்தின்மீது படையெடுக்கும் பட்டாளம் ...	80000
ஆகமொத்தம்	6,40,000

இதுவே கரைப்படையாகும்; கடற்படை வன்மையோ சென்ற பால்கன் யுத்தத்தின் முடிவாகத் துருக்கிக்குச் சிறிதேனுமில்லை.

துருக்கியின் கடற்படை

யுத்தஆரம்பகாலத்தில் "5-வது சுல்தான் மேமட் ரெக்கட்" என்ற ஒருகப்பலும் "சுல்தான் உஸ்மான்" என்னும் மற்றொரு கப்பலும் ஆகிய இரண்டு யுத்த கப்பல்கள் துருக்கி ராஜ்யத்திற்காக ஆங்கிலேயர்களால் கட்டப்பட்டுக்கொண்டிருந்தன. யுத்தம் ஆரம்பித்தவுடன் இவ்விரண்டு கப்பல்களையும் ஆங்கிலேயர் தங்களுக்குச் சொந்தமாக்கிக்கொண்டார்கள்.

"பார்பரோஸா," "டார்பிட்ரேஸ்" என்னும் இரண்டு கப்பல்கள் ஜெர்மனியர்களிட மிருந்து துருக்கியர்களால் விலைக்கு வாங்கப்பட் டிருந்தன. இவ்விரண்டு கப்பல்களின் வேகம் மணி ஒன்றுக்குப் பதினேழு மைல் தான்.

"மெசூதையா" என்ற மற்றொரு யுத்தகப்பலும் துருக்கியருக் குண்டு. இது மணி யொன்றுக்குப் பதினாறு மைல் வீதம் செல்லக்கூடியது. இது ஆங்கில நீர் மூழ்கிக்கப்பலொன்றால் கடலின் அடிப்புறத்திற்கு அனுப்பப்பட்டு விட்டது.

"ம்யூரிஸெபீர்" என்னும் யுத்த கப்பலானது மணியொன்றுக்குப் பன்னிரண்டு மைல் வேகமே செல்லக்கூடியது. இவ்வித பலமற்ற கப்பல்களுடன் மணி யொன்றுக்கு 22 மைல் வீதம் செல்லக்கூடிய 'ஹமிடி,' 'மெட்ஜெடி' என்னு மிரண்டு கப்பல்கள் இருந்தன. அன்றியும், 15 பீரங்கிப் படகுகளும் டிஸ்டிராயர் என்னும் 4 நாசகாரிக் கப்பல்களும், டார்ப்பிடோப் படகுகள் பதினைந்தும், துருக்கிக்கு உண்டு.

இவைகளெல்லாம் ஏராளமான கப்பற்படைகளுக்கு அதிகாரிகளாகிய ஆங்கிலேயர்களுக்கு எம்மாத்திரம்?

அன்வர்பாக்ஷா என்பவர் யங்டர்க் கட்சியாருக்குத் தலைமையாயுள்ளவர். மேமெட் சுல்தானிடம்மிகவும் செல்வாக்குடையவர். இந்தியாவில், அளவிறந்த மகம்மதியர்களுக்கு மத விஷயத்தில் யாதொரு கட்டுப்பாடு மின்றி சுயேச்சையைக் கொடுத்து ஆங்கிலேயர் ஆட்சிபுரிவது இந்த அன்வர்பாக்ஷாவின் மனதிற்கு மிகவும் பெருமையைக் கொடுத்தது. தவிரவும், ஆங்கிலேயர் என்றாலே இவருக்கு அரவம் கருடசொப்பனம் கண்டதுபோ லிருக்கும். தற்காலம் ஜெர்மனியர்கள்

துணைவந்து விட்டார்கள் என்றும், அவர்களுடைய உதவியைக்கொண்டு பெரும்படை யெடுக்கலாமென்றும் பேராசை கொண்டவராய், மகம்மதிய மதத்திற்கு மாறுதல் கொண்ட கிறிஸ்தவமதத்தினர்மேல் படை யெடுக்க வேண்டுமென்று இவர்மேமெட் சுல்தானுக்குப்போதித்துவிட்டார். மேமெட்சுல்தானோ இடுக்குவார் கைப்பிள்ளை. தவிரவும் மறுத்துரைத்தாலோ தமக்கு முந்தின சுல்தான் அப்துல் ஹமீதுக்குண்டான கதி நமக்கும் உண்டாகுமென்னும் பயம் ஒரு புறம் உண்டு. ஆனது பற்றி அன்வர்பாக்ஷா கூறியது நன்மையோ தீமையோ ஒப்புக்கொள்ள வேண்டியதா யிருந்தது.

கிறிஸ்தவ மதத்தினர்மீது மதவிசேஷப் போர் செய்வதென்றால் சகலகிறிஸ்தவர்களின்மீதுமல்லவோ படை யெடுக்க வேண்டும்? தங்களுடைய பயத்திற்குக் காரணமாயிருக்கும் ஆங்கிலேயர்மீது மாத்திரம் மதப்பகைமை கொள்வதும், ஆங்கிலேயரைப்போலவே கிறிஸ்துவமதத்தினர்களாகிய ஜெர்மனியர்களுடைய துணையை நாடுவதும் முற்றிலும் பொருத்த மில்லாததினால், துருக்கியிலுள்ள மகம்மதியர்களே அன்வர்பாக்ஷா சொன்ன "மதவிசேஷப்போர்" என்னும் கட்டுக்கதையைச் சிறிதேனும் நம்பவில்லை யென்றால், நெடுந்தூரத்திலுள்ள இந்தியாவிலிருக்கும் மகம்மதியர்கள் நம்புவார்களா? இல்லை! இல்லை!! இல்லை!!!

துருக்கி எகிப்தின்மேற் படையெடுத்தது

முடிவாய் எகிப்து தேசத்தில் தங்கியிருக்கும் ஆங்கிலேயர்மீது படை யெடுக்கவேண்டியது என்னும் அன்வர்பாக்ஷாவின் போதனைப்படியே, சுல்தான் சேனை யொன்றைத் தயாரித்துவிட்டார். இவ்விதம் தயாரிக்கப்பட்ட சேனையில் ஜெர்மனியர்களும் அனேகர் இருந்தார்கள்.

எகிப்து தேசமானது ஆப்ரிக்காகண்டத்தின் வடபாலுள்ளது. துருக்கியினின்றும் மத்திய தரைக்கடலால் பிரிக்கப்பட்டுள்ளது. அனேக மகம்மதியர்களுக்கு வாசஸ்தலமாயுள்ளது. இத்தேசத்தின் கீழ்ப்புறம் அகண்ட கப்பல்கள்போக்குவரவுக்குரிய சூயல்கெனல் என்னும் ஓர் கால்வாயுள்ளது இக்கால்வாயின் பிரதானம் சகலரு மறிந்த விஷயம். இந்தி

யாவிலிருந்து புறப்படும் கப்பல்களானது, இந்து மகாசமுத்திரத்தின் வழியாய்த் தென்னுப்பிரிக்காவின் கரையைச்சுற்றி ஐரோப்பா கண்டத்தின் மேலைத் தீபகற்பங்களாகிய ஸ்பெயின், போர்த்துகல் முதலிய தேசங்களின் கரை வழியாய்ச் செல்வ தென்றால் மூன்று மாத காலத்திற்கு மேற் செல்லும். இது மிகவும் நெடுங்காலப் பிரயாணமாய்த் தோன்றுகிற படியால், இந்தியாவி லிருந்து புறப்படும் கப்பல்கள் இந்தியாவின் மேற்புறத்தி லுள்ள அரபிக்கடல் வழியாய்ச் சென்று, செங்கடலினுட் பிரவேசித்து எளிதில் மத்திய தரைக்கடலைச் சேரும் வண்ணம், மத்திய தரைக் கடலுக்கும் செங்கடலுக்கு மிடையே வெட்டப்பட்ட கால்வாய்க்கே சூயஸ்கெனல் என்று பெயர். இவ்விதம் சூயஸ் கெனல் வழியாய் மத்தியதரைக் கடலைச்சேர்ந்தகப்பல்களின் பிரயாணம் இரண்டு வாரங்களுக்குள்ளேயே முடியும். இதனல் இந்த சூயஸ்கெனலின் பிரதானம் எவ்வளவென்று ஏற்படுகிறது. இந்த சூயஸ் கெனலின் இருகரைகளிலும் ஆங்கிலேயர்கள் சேனைகளை நிறுத்திவைத்திருந்தார்கள்.

எகிப்து தேசவழியாய்ப் படையெடுத்து சூயஸ்கெனலின் இருகரைகளிலுமுள்ள ஆங்கிலச் சேனைகளை எதிர்க்க வேண்டுமென்பதே அன்வர்பாக்ஷாவின் கருத்து. இக்கருத்தைக் கொண்டே சேனை தயாரிக்கப்பட்டது. இவ்விதம் வந்த துருக்கி-ஜெர்மனியசேனையின் முன்னணியி லுள்ளவர்கள் பதினயிரம் பேர். இவர்கள் பெரும்பாலும் ஊர் ஊராய்த் திரியும் மகம்மதியர்கள். யுத்தப்பயிற்சி சிறிதேனுமில்லாதவர்கள். பின்னணியிலும் பிரதான வகுப்பிலு மிருந்தவர்கள் 70,000 பேர். இவர்கள் எகிப்தின் வடபுறமுள்ள பிரதான இடங்களில் நிறுத்தப்பட்டார்கள்.

50-நாள் வரையும் ஒரே அடியாய் வீசுங்காற்றில் அகப்பட்டுக்கொண்டார்கள்

யுத்தம் செல்லச் செல்ல காலமும் சென்றுகொண்டிருக்கிறதுபோல் நவம்பரும் கழிந்து விட்டது. டிசம்பரும் பாதிக்குமே லாய்விட்டது. 1914-வது வருஷமும் இனி நான் வருவதில்லை யெனச் சென்று விட்டது. அவ்வருஷத்து இடத்

தைத் தான் கைப்பற்றவருவதுபோல், 1915-வது வருஷமும் வந்துவிட்டது. இவ்வருஷம் ஜனவரிமாதத்தை, மேற்கூறிய துருக்கி ஜெர்மனிச் சேனைகள் டாமஸ்கஸ், ஸ்மர்ணு என்னும் இடத்திலேயே கழித்து விட்டார்கள். பிறகு மெல்ல மெல்ல நகர ஆரம்பித்தார்கள். இம்மாதங்களில் இவ்வெகிப்து தேசத்தில் மழை யதிகம். மழைக்காலம் சென்றவுடன் காற்றுஒன்று வீசும். அந்தக் காற்றுக்கு "காம்ஸின்" என்று எகிப்து தேசத்தார் பெயர் கொடுத்திருக்கிறார்கள். இப்பெயரின் பொருள் யாதெனிலோ 50-நாள் வீசும் காற்றென்பதாம். அதாவது ஆரம்ப முதற்கொண்டு இடைவிடாது 50-நாள் வரையிலும் இக்காற்று வீசிக்கொண்டே யிருக்கும். காற்றென்றால் நமது இந்தியாதேசத்தில் வீசுங் காற்றைப்போ லல்ல. இக்காற்று வீச ஆரம்பித்தால் ஆகாயமெல்லாம் மணற்காடாய்விடும். சூரியன் மிக உக்கிரமாய்க் காய்ந்த போதிலும் இம்மணல் நொய் ஆகாயமளவிலும் பரவியிருக்கும் நெகிழ்ச்சியால் சூரியவெப்பம் எப்புறமிருந்து வருகிற தென்பதைக் கூடக் காண்பதரிதாய் விடும்.

இவ்விதக் கொடுங்காற்று வீசாது சுகமாயிருந்த காலமெல்லாம் ஸ்மர்ணுவிலும்,டாமஸ்கஸ்ஸிலும் காலத்தைக் கழித்துவிட்டு காற்றுப் புறப்பட்டபொழுது துருக்கி-ஜெர்மனிய வீரர்களும் புறப்பட்டார்கள். இது கடவுளுடைய கோபமே காற்றுவடிவமாய் வந்ததுபோ லிருந்தது.

இவ்விதம் துருக்கி-ஜெர்மனி வீரர்கள் துருக்கியிலிருந்து புறப்பட்டு எகிப்திலிறங்கிப் போர்க்குவருகிறார்கள் என்பதை சூயஸ்கெனல் கரையிலுள்ள ஆங்கிலவீரர்கள் முன்னரே அறிந்திருந்தார்கள்.

பிப்ரவரிமாதம் 2-ந்தேதி வந்தது. துருக்கி - ஜெர்மனிய வீரர்கள் வந்தால் அவர்களைத் துரத்துவதற்குரிய பிரயத்தனங்களை யெல்லாம் ஜேனரல் மாக்ஸ்வெல் என்பவர் செய்துகொண் டிருந்தார். மாலை மணி 6 ஆயிற்று. காம்ஸின் என்ற கொடுங்காற்றும் ஆங்கிலேயர்களுக்கு உதவி புரியுமாறு சற்றே யமர்ந்திருந்தது. இச்சகாயத்தை மிக மேலான உபயோகப்படுத்த விரும்பின ஆங்கிலேயர்களுடைய ஆகாயவிமா

னங்க ளனேகம் அந்தரமார்க்கமாய்ப் புறப்பட்டன. நாற்புறமும்சென்று துருக்கி-ஜெர்மனிய சேனைகளின் வருகையைக் கவனித்து ஆகாய விமானிகள் ஆங்கிலேயர்களுக்கு அப்போதைக் கப்போது அறிவித்துக்கொண்டிருந்தார்கள்.

பிப்ரவரி மாதம் இராப்பொழுது இவ்விதம் கழிந்தது. சூயஸ் கெனலின் மேற்கரையில் அரண்குழிகளில் பதிவிருந்த 50 ஆயிரம் ஆங்கில வீரர்கள்மீதும், அவர்களுக்குச் சமயத்திற்கு உதவி வருமாறு பிரத்தியேகமாய் வைக்கப்பட்டிருந்த 40 ஆயிரம் வீரர்கள்மீதும், ஒரே சமயத்தில் துருக்கி-ஜெர்மனியச் சேனைகள் வந்துவிட்டன. மகம்மதியர்கள் சரீர பல முடையவர்களாயிருக்கலாம். ஆயினும், துருக்கியிலிருந்து சூயல்கெனல் வரையிலும் வருவதற்குரிய நீண்ட பிரயாணம் இவர்களுடைய சரீரபலத்தை மிகவும் குறைத்திருந்தது. இதுவு மல்லாமல் மீதி நின்ற கொஞ்ச பலத்தையும் 'காம்வின்' என்னும் காற்று பங்கிட்டுக்கொண்டது. ஆகவே, ஆங்கிலேயர்களுக்கு விரோதமாக வந்த துருக்கி-ஜெர்மெனிச் சேனை எண்ணிற் சிறந்ததே யொழிய பலத்திற் சிறந்த தல்ல. அன்று பகற்போதெல்லாம் யுத்தம் நடந்தது. "சிமந்த பஞ்சகம்" என்னும் தடாகதீரத்தில் துரியோதனனுக்கும் வீமனுக்கும் நடந்த யுத்தமும் இதற்கு நிகராகாது. முடிவாய், துரியோதனன் பீமன் கையில் பெற்ற அனுபவத்தையே துருக்கியர்கள் ஆங்கிலேயரிடம் பெற்றார்கள். மீதி நின்றவர்கள் பிடித்தார்கள் ஓட்டம்.

சூயஸ் கெனலை நீந்திச் சென்றார்கள்

நான்கு துருக்கிவீரர்கள் ஆங்கிலேயர்களுடைய குண்டுகளின் பிரயோகத்திற்கு எதிர் நிற்கமாட்டாதவர்களாய் சூயஸ் கெனலில் குதித்துவிட்டார்கள். குண்டினால் பாதைப்படுவதை விட ஜலத்தில் வீழ்ந்திறப்பதுமேல் எனக் கருதியா குதித்தார்கள்! இல்லை. இல்லை. சாகும் சமயத்திலும் உயிரின் மீதுள்ள ஆசை எவரை விட்டது. முற்காலத்தில் பேபர் சக்ரவர்த்தி மூன்றுமைல் அகலமுள்ள கங்காநதியை நீந்திச் சென்றதுபோலும், குடும்பசாகரத்தை அறிஞர்கள் கடக்கும் கொள்கை

போதும் இந்த சூயஸ் கெனலைத் துருக்கி வீரர்கள் நால்வரும் நீந்தியே சென்றார்கள்.

இவ்விதம் துருக்கியர்கள் ஆங்கிலேயர்மீது படையெடுத்ததினால் ஆங்கிலேயர்களுக்குச் சிறிதேனும் சேதம் உண்டாகவில்லை யென்பதும நம்பப்படக்கூடாதது. ஸெரேப்பியம் என்னும் இடத்தில் நடந்த யுத்தத்தின் முடிபாக துருக்கியர்கள் புறங்காட்டி யோடுகையில் அவர்களுடைய, ஆறு அங்குலக் குழாயுடைய பெரிய பீரங்கிக் குண்டொன்று புறப்பட்டு திம்ஸா, என்னும் ஏரியில் நின்றுகொண்டிருந்த யுத்தகப்பலொன்றுக்குச் சேதத்தை விளைவித்தது.

காப்டன் க்ரூவின் மரணம்

சூயஸ் கெனல் கரையில் யுத்தம் நடக்கையில் காப்டன் க்ரூ என்பவர் கப்பலின் மேற்றட்டின்மீது நின்றுகொண்டிருந்தார். ஆறு அங்குலக் குழாக்களையுடைய ஷெல் என்னும் குண்டொன்று துருக்கியர் பக்கத்திலிருந்து புறப்பட்டு, காப்டன் க்ரூ என்பவருடைய காலைக் கிழித்து, சரீரத்தில் பத்தொன்பது இடங்களில் காயத்தை யுண்டுபண்ணி விட்டது. உடனே அவர் "நாற்காலியொன்று எனக்குக்கொண்டுவா, இக்கப்பலைத் துறைக்குக் கொண்டுபோய்ச் சேர்க்கிறேன்" என்றார். அங்கமெல்லாம் குண்டுகளால் துளைபட்டும் இவருடைய ஆத்மாவுக்குச் சிறிதும்தைரியம் குறைவுபடவில்லையே; இத்தகைய வீரர் நமது நாட்டிலிருந்தால் எவ்வளவு சிறப்பாயிருக்கும் எனக்கருதி, எமன் அவரைத்தன்னுலகுக்கழைத்துச் சென்றான்.

இவ்விதம் 1915ஞ பிப்ரவரிமீ 3-ந்தேதி மாலை 6-மணியுடன் துருக்கியர்களுடைய எகிப்து தேசப் படையெடுப்பு படுத்துக்கொண்டது.

எகிப்து தேசத்தின்மீது படையெடுத்த துருக்கி-ஜெர்மனியச் சேனைகளின் கதி இவ்வாறாயிற்று. துருக்கிக்கு வடபுறத்திலுள்ள ருஷியாவின்மீது சில துருக்கிச் சேனைகள் சென்று புரிந்த செய்கைகளைப் பற்றிச் சற்று விசாரிப்போம்.

துருக்கிச் சேனைகள் ருஷியாவின்மீது செல்லல்

துருக்கியர்கள் எகிப்துமீது படையெடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்திருந்தது போலவே, ருஷியாவிலும் பிரவேசிக்க

முயற்சிகள் செய்திருந்தார்கள். ஆனால் துருக்கியர்கள் ருஷியாவுக்குச் செல்வது கடவுளுடைய பிரீதிக்கு மாறானகாரியம் என்பதைக் காட்டும்படியாக காகேஸியஸ் மலை ருஷியாவுக்கும் துருக்கிக்கு மிடையே நின்றுகொண்டிருந்தது. துருக்கியர்கள் ருஷியாவுக்குச் செல்வதென்றால் இம்மலையைக்கடந்தே செல்லவேண்டும். ஆயினும், முடியாதகாரியங்களை யெல்லாம் முடிக்கும் திறமையுடையவர்களைப் போல் நடிக்கும் ஜெர்மனியர்கள், துருக்கியர்கள் கூட இருந்தமையாலும், ருஷியாவின் மீது சென்று ருஷியர்களைத் தாக்கவேண்டுமென்னுங் கருத்திற்கு ஜெர்மனியர்களே காரணர்களா யிருந்தமையாலும், இந்த காகஸஸ் பர்வதத்திற்கு அருகேயுள்ள எர்ஸீரம், வான் என்னு மிரண்டிடங்களில் ஏராளமான சேனைகள் சேர்க்கப் பட்டிருந்தன எவ்வளவு சேனைகள் இவ்விரண்டிடங்களிலும் சேர்க்கப்பட்டிருந்தன வென்பது சந்தேகமின்றி இதுவரையிலும் ஒருவராலும் அறியப்படாவிடினும், எர்ஸீரத்தில் 40-ஆயிரம் பேர்களுக்குமேலும் வான் என்னுமிடத்தில் அரைலட்சத்திற்கு மேற்பட்ட வீரர்களுமிருந்ததாக ஏற்படுகிறது.

ருஷியர்களுக்கும் காகஸஸ் பர்வதத்தில் பெருஞ்சேனையிருக்கிறதென்பது அறியப்படவேண்டியது. துருக்கியர்கள் ஒருகால் இப்பர்வதத்தில் இங்குமங்குமுள்ள கணவாய்களின் வழியாய் வருவார்களென்றெதிர்பார்த்து 20 ஆயிரம் ருஷிய வீரர்கள் நிறுத்தப்பட்டிருந்தார்கள். பர்வதத்தின் வழியாய்ச் செல்வதே முதலில் அசாத்திய காரியமாயிருக்க, துருக்கியர் படையெடுத்த நவம்பர் டிஸம்பர் மாதங்களில் பனி ஏராளமாய்ப் பெய்தது. செல்லும் துருக்கியர்கள் முழங்கால் வரையிலும் பனியில் நடந்துசெல்வதையும் கவனியாது காகஸஸ் மலையைக் கடந்து சென்றார்கள். உடனே அங்கிருந்த ருஷியருக்கும் துருக்கியருக்கும் கைகலந்த யுத்தம் நடந்தது. முடிவாய் இருபதினாயிரம் துருக்கிவீரர்கள் அந்த காகஸஸ் மலையிலுள்ள கழுகுகளுக்கும் பருந்துகளுக்கும் தங்கள் சரீரங்களை விருந்தாக அளித்துவிட்டு, மறுஜென்ம மில்லை யென்னும் அவர்கள் கொள்கையின்படியே அல்லாவினிடத்தில் அடைக்கலம் புகுந்தார்கள்.

பத்தாவது அத்தியாயம்

பாரிஸ் மீண்டும் பிரான்ஸுக்குத் தலைநகரானது.

ஸெர்வியாவுக்கும் ஆஸ்டிரியாவுக்கும் யுத்தம் ஆரம்பித்தால் ஜெர்மனி பிரான்ஸின்மீது படையெடுப்பானேன்? இது தென்னைமரத்தில் தேள் கொட்டப் பனைமரத்தில் நெறி கட்டுவதுபோ லல்லவோ இருக்கிறது! இதற்குமொரு சமாதானமுண்டு. அதாவது,—நெடுங்காலத்திற்கு முன், அதாவது, சுமார் இரண்டாயிரம் வருஷங்களுக்குமுன் ஐரோப்பா கண்டமானது, தற்காலத்திலிருப்பதைப்போல அத்தனைதேசப்பாகுபாடுகளை யுடையதா யில்லை. பிரான்ஸ், இடாலி, ஜெர்மனி, ஸ்விட்ஜர்லாண்ட் இவையனைத்தும் ஏகதேசமாகவே யிருந்தது. பிறகு காலம் செல்லச் செல்ல மேற்கூறிய பிரிவுகள் ஏற்பட்டன. இவ்விதப் பிரிவுகள் ஏற்பட்டது, கிறிஸ்தவமதத்திற்கு பிரதம குருவாயிருக்கும் போப் என்பவருடைய போதனை சிலருக்கு அபிப்பிராய பேதத்தை யுண்டுபண்ணினதினாலேயே யென்றும் சொல்லப்படுகிறது. மேற்கூறிய தேசப்பிரிவுகள் ஏற்படாதமுன்னர் பிரான்ஸ் முதற்கொண்டு ஜெர்மனி இடாலி வரையிலுமுள்ள ஜனங்கள் லத்தீன் பாஷை பேசும் ஜெர்மன் ஜாதியாராம். ஆனதுபற்றி பிரான்ஸ் முதற்கொண்டு ஆதி காலத்தைப் போலவே தங்களுக்கு ஐக்கியமாயிருக்கவேண்டுமென்பதே ஜெர்மனியர்களுடைய கருத்து. இக்கருத்தேதான் ஸெர்வியாவுக்கும் ஆஸ்ட்ரியாவுக்கும் யுத்தம் ஆரம்பித்தவுடனே ஜெர்மனியர்கள் மனதில் குடிகொண்டு விட்டது.

நினைத்த வண்ணம் பிரான்ஸை ஜெர்மனியர்கள் தங்கள் கைவசப்படுத்திக்கொண்டார்களா? இல்லை. ஏன், அக்டோபர் மாதம் 31-ந்தேதிக்குள் பிரான்ஸைக் கைவசப் படுத்த வேண்டுமென்பது முதல் ஆக்கினை. இவ்வாக்கினையினால் உண்டான பயன் அணுவளவேனுமில்லை. பிறகு 1914-வது வருஷம் முடிவதற்குள் பிரான்ஸில் ஜெயம் பெற்றுகவேண்டுமென்பது இரண்டாவது ஆக்கினை. முதல் ஆக்கினையின் கதியேதான்

இவ்விரண்டாவது ஆக்கினையும் பெற்றது. சக்திக்கு மீறினகாரியங்களை முடிப்பதாய் நிர்ணயிப்பது மதியீனர்களுடைய செய்கையாகும் என ஆன்றோர் எடுத்துரைத்த பழமொழிகளின் கருத்தை முற்றிலு மறந்தவர்களாகிய ஜெர்மனியர்கள் பிரான்சைப் பிடிக்குமாறு செய்த பிரயத்தனங்க ளனைத்தும் முதற் புத்தகத்தில் வேண்டிய அளவு கூறப்பட்டிருக்கிறது. இப்பிரயத்தனங்களெல்லாம் ஆங்கில-பிரெஞ்ச் உபபலச் சேனைகளின் ஆற்றலுக்கு முன்னே சூரியன்முன் பனிபோலாயின. மார்ன் நதி தீர யுத்தமும், ஸாய்ஸான்ஸ், முதலிய பற்பல விடங்களில் நடந்த யுத்தங்களும், பிராணச் சேதங்களுடன் சென்றனவே யல்லது ஜெர்மனியர்களுடைய இச்சையை நிறைவேற்றுதற் குரியனவா யில்லை. முடிவாய், ஜெர்மனியர்கள் பிரான்ஸின் தலை நகராகிய பாரிஸை நெருங்கிய பொழுது, பிரஸிடெண்ட் பாயின்கேர் ஆழ்ந்த ஆலோசனையின் பிறகு சொற்ப காலத்திற்கு போர்டோ என்னும் நகரத்தை பிரான்ஸுக்குத் தலைநகராகத் தீர்மானித்துத் தனது ஆலோசனைச் சங்கத்தாருடனும் மற்றுமுள்ள பிரபல உத்தியோகஸ்தருடனும், அந்நகரத்திற்குச் சென்றார்கள் என்பதையும் முன் புத்தகத்திற் கூறியுள்ளோம். இனி, பிரான்ஸ் தேசமானது மறுபடியும் பாரிஸைத் தலைநகராக்கிக் கொண்டதைப் பற்றிக் கூறுவோம்.

போர்டோ நகரமானது பாரிஸைப் போல மிகப் பெரியதல்ல. தினசரிவர்த்தமானப்பத்திரிகைகளும் உத்தியோகசாலைகளும்வியாபாரஸ்தலங்களும்கைத்தொழிற் சாலைகளும்மற்றும் விநோத காலப்போக்குக் குரிய வேறிடங்களும் இவ்விடத்திற் கிடையா. ஆயினும் பிரெஸிடெண்ட் பாயின் கேருடைய தீர்மானப்படி பிரான்ஸுதேசத்தின் பொது நன்மைக்காகப் பாரிஸ் நகரத்திலுள்ள ஜனங்க ளனைவரும் போர்டோநகரத்திற்குச் சென்றபொழுது பாரிஸ்மாநகரமே போர்டோ நகரத்திற்குக் குடிவந்ததுபோ லாயிற்று. அனேகஹோட்டல்களும் மற்றும் ஜனங்களுக்குப் பொதுப் பிரயோஜனத்திற் குபயோகப்படும் கட்டடங்களும் நூதனமாய்க் கட்டப்பட்டன. புதிதாய்க் குடியேறின ஜனங்களெல்லாம் பாரிஸ்மா நகரத்திலிருந்து காலங்கழிப்பது போலவே இந்த போர்டோ நகரத்திலும் சுகமாய்க் காலங்கழித்தார்கள். இதற்குமுன் பாரிஸ்மா நகரத்தி

னுள்ளபொழுது தங்களைத் தாங்களே அதிகமாய் மதித்துக் கொண்டு பிறரைக் கீழ்மக்களெனவும் தங்கள் சிநேகத்திற்கு உரியர் அல்லரெனவுங்கருதி; அகங்காரம் என்னும் பிசாசத்தின் ஆளுகைக்குட்பட்ட பலர் இந்த போர்டே நகரத்திற்கு வந்தபொழுது எளியோருடைய உதவியும் ஒரு காலத்தில் அவசியம் என்பதை யுணர்ந்தார்கள். அவ்விடத்தில் முன் பின் நட்பில்லாதவர்களும் நட்பினராயினுர்கள்.

இவ்விதம் போர்டே நகரானது உயர்ந்தோரும் தாழ்ந்தோரும் உயர்வர் என்னும் வாக்கியத்தின் உண்மைப்படி பிரான்ஸுக்கு தேசத்திற்குச் சிறிதுகாலம் தலை நகராயிருந்துகொண்டிருக்கையில பிரஸிடெண்ட் பாயின்கேர் இரண்டொருதடவை பாரிஸ் நகரைவந்து பார்த்து விட்டுப்போனுர். இதற்கிடையேபிரான்ஸ்தேசம் முழுவதையுமேகைவசப்படுத்த வேண்டுமென்ற ஜெர்மனியர்களுடைய எண்ணம் மண்ணுய்ப் போய்விட, ஜெர்மனிச்சேனைகள் பிரான்ஸுக்கு வடபாலுள்ள கலே நகரத்தைப் பிடிக்கும்படியாய்த் திரும்பிவிட்டன. இதனுல் பாரிஸ்மா நகரத்தைச் சுற்றியிருந்த அபாயமானது நெடுந்தூரம் சென்றுவிட்டது. பழமைபோல் பாரிஸைப் பிரான்ஸுக்குத் தலைநகராக்கிக் கொள்வதில் அபாயமில்லை யெனப் பிரஸிடெண்ட் பாயின்கேர் அறிந்துகொண்டார். அங்ஙனமே ராஜாங்கப் பிரபல உத்தியோகஸ்தர்களெல்லாம் மீண்டும் போர்டே நகரத்திலிருந்து பாரிஸ் நகரத்திற்குச் செல்ல வேண்டுமென்னும் ஆக்கினை பிறப்பிக்கப்பட்டது.

போர்டே நகரத்திலிருந்த பிரஜைகள் அனைவரும் தங்கள் சொந்த நகரம் திரும்பினுர்கள். ஒரு குதிரை பூண்ட வண்டிகளும் இரண்டு குதிரை பூண்ட வண்டிகளும் மோட்டார் வண்டிகளும் இருப்புப் பாதை வண்டிகளும் ஏராளமாய்ப் பழையபடியே பாரிஸ் நகரத்திற்கு ஜனங்களைக்கொண்டு வந்து சேர்த்தன. இதையறிந்த ஆங்கிலேயர்களும் மிகவும்களிப்புற்ருர்கள். மிஸ்டர் ஆஸ்க்வித் என்பவர் இங்கிலாந்து தேசத்தில் இதுவிஷயத்தைப்பற்றிக் கூறியது எடுத்துரைக்கத் தக்கது.

“ இழந்த எப்பொருளையும் இன்னு மதிகமாகவும் பெல்ஜியம் மீண்டும்பெறுகிறவரையிலும், பகைவர்களுடைய பயமுறு



கிராண்ட் டியூக் நிக்கலஸ் ருஷிய கமாண்டரின்சீப்.



ஸாரீனு ருஷ்ய ஸார் சக்ரவர்த்தியின் மனைவி மிலிட்டெரி உடுப்பாவனையில் இருக்கிறார்.



பிரஞ்சு ஆகாயவிமானியான பெயர் போன பிகவுட் என்பவர்.



ஜெர்மனியாருக்கும் பிரிடிஷாருக்கும் நடந்த சண்டை.



ஸெர்வியாவிலுள்ள பெல்கிரேட் பட்டணம்.

த்தலினின்று பிரான்ஸ் தேசம் முற்றிலும் பாதுகாக்கப்படும் வரையிலும், ப்ரஷ்யாவினுடைய சேனைபலமானது கடைசியாய் அழிக்கப்படும் வரையிலும், நாம்நம்முடைய வாட்களை உறையிற் போடமாட்டோம்.”

பாரிஸ் பார்லிமெண்டில் ராஜதந்திரியின் உபந்யாசம்

பிறகு பாரிஸில் பார்லிமெண்டும் கூடிற்று. பிரான்ஸ் தேசராஜாங்கப் பிரதம ராஜ தந்திரியாகிய விவியானி பார்லிமெண்டில் அடியில் வருமாறு உபன்யாசித்தார்:—

“நான் இப்பொழுது எடுத்துரைப்பது மற்றைச் சமயத்தைப்போலல்ல. நமக்குத் தற்சமயமுள்ளது ஒரே கொள்கை. அதாவது, முற்றிலும் ஜெயமடைந்ததனாலுண்டாகிய சமாதானத்தை ஐரோப்பாக்கண்ட முழுவதும் அனுபவிக்க வேண்டுமென்பதேயாம். பிரான்ஸ் தேசத்திற் பிறந்த ஒவ்வொருவருடைய விருப்பமும் இதுவேயாகும். யுத்தத்திற்காகச் சென்று அரண்குழிகளில் ஆழ்ந்திருக்கும் ஆண்மக்கள் பலருடைய அபிப்பிராயமும் இதுவே.

நாம் இவ்விதம் ஏகபான்மையாய் அபிப்பிராயங்கொண்டு யுத்தத்திற்கு எழுந்திருப்போமென்பதை ஜெர்மனியர்கள் அறியா முன்னம் தங்களைத் தாங்களே அதிகமாய் மதித்துக்கொள்ளும் கட்குடியர்களைப்போலாடி, ஜெயம் என்னும் கனவைக் கண்டார்கள். பெல்ஜியத்தினுட் பிரவேசித்துச் சுயநயக்கருத்தையே மேற்கொண்டு, நீதி அநீதி என்னும் மார்க்கங்களைக் கடந்து சென்றார்கள். பிறகு உலக அபிப்பிராயத்தையும் கவனிக்கவேண்டுமென்னும் அறிவு இவர்களுக்குச் சற்றே பிறந்தது. ஆங்கில-பிரெஞ்ச் ராஜாங்கத்தாருடைய செய்கையே தாங்கள் யுத்தத்திற்குப் புறப்பட்டதற்குக் காரணமாய் நின்றதென்று இப்பொழுது கூறுகின்றார்கள். எவ்விஷயத்தையும் எளிதில் நம்பும் ஏழை மதியினர்கள் கூட இவ்விதம் ஜெர்மனியர் கூறும் பொய்க்கதையை நம்பார்கள். இவ்விஷயத்தில் ஊக்கத்துடன் ஈடுபட்டிருக்கும் சகல தேசத்தார்க்கும் இது ஏற்பட்ட விஷயமே. இடாலி தேசத்தார் என்ன கூறுகின்றார்கள் பிரான்ஸ், ருஷியா, இங்கிலாந்து ஆகிய மூன்று தேசத்

தார்களும் ஏக கட்டுப்பாடாய் ஜெர்மனியருடன் சமாதானத்திற்குச் செல்கிறதில்லை யென்னும் உடன்படிக்கை எதைக் குறிப்பிக்கின்றது? "யுத்தம் நாமே விளைவித்துக்கொண்டதல்ல. ஜெர்மனியர் அவசரமாய் ஆரம்பித்த காரியங்களே யுத்தத்திற்குக் காரணங்களாகும். சென்ற 40-வருஷ காலங்களாய் யுத்தப் பிரயத்தனங்களையே செய்துகொண்டு பிராஸ் தேசத்தை வெற்றிகொண்டு உலகத்தை அடிமை கொள்ள வேண்டு மென்னும் கருத்தையே கொண்டிருந்தார்கள் ஜெர்மனியர்கள். நமக்கும் ஆங்கிலேயருக்கும் உலகம் அமைதியாய் வாழ வேண்டு மென்பதே எக்காலத்து முள்ள விருப்பமாயினும், யுத்தத்திற்குள் நாம் இப்பொழுது இழுக்கப்பட்டிருக்கின்றமையால் முடியும் வரையிலும் போர்புரியவே வேண்டும். பெல்ஜியம் இழந்த நன்மைகளை யெல்லாம் மீண்டும் பெறுகிற வரையிலும் நாம் நமது வாட்களை உறையிற்போடுகிறதில்லை.

ஜெயம் நமக்கே வரும்; வருமென்னும் ஸ்திரமு மிருக்கிறது; இந்த ஸ்திரமானது வீண் நம்பிக்கையைக் கொண்டதல்ல. கடற்படையில் உவமையில்லாத ஆங்கில அரசாட்சியார் நமக்கு உபபலமாயிருக்கிறார்கள். தவிரவும் நமது தேசத்திலும் ஏராளமான யுத்த வீரர்களு மிருக்கின்றார்கள். இந்த யுத்தத்தினால் பெரும்பாலும் உலகில் ஏழ்மையானது பரவிக்கொண்டிருந்தபோதிலும் முடிவு வரையில் போர்புரிவதற்குரிய சாதனங்களுக்கு வேண்டிய திரவிய சகாயம் நம்மிடமிருக்கிறது. ஆனால் பகைவர்களாகிய ஜெர்மனியர்கள், இங்குமங்கும் சில கிராமங்களை யழித்துக் குடிகளுக்குக் கஷ்டத்தை யுண்டுபண்ணினது பரிதபிக்கத்தக்கதே. இதைப்பற்றி நாம் வருந்துகிறோம். பாழாய்ப்போன கிராமங்களை மீண்டும் புதுப்பிக்கும்படி ஒரு கோடியே 20-லட்சம் பவுன், அதாவது 18-கோடி ரூபாய் நமது ராஜாங்கத்தார் கொடுத்திருக்கிறார்கள். இடிந்த கட்டடங்களெல்லாம் மீண்டும் கட்டப்படும். நாம் கஷ்டத்தை யனுபவிப்பதை நமது சகோதர ராஜாங்கத்தார் பார்க்க மனம் பொறார்கள்.

கடைசியாய் நாம் ஜெயமடையுந்தினம் இன்னும் வரவில்லை. ஆனால் வரும். அன்று வரையிலும் நமது வேலையா

னது மிகவுங் கடினமானதாகத்தா னிருக்கும். அவ்வேலைக்கு நம்முடைய மனதையும் தைரியத்தையும் ஸ்திரப்படுத்திக் கொள்வோமாக. முடிவாய் அடையும் பெருமையின் பெரும் பாகத்திற் குரியவர்களாகும் வண்ணம் தற்காலத்திய சௌகரியங்களைக் கைவிட நாம் தயாரா யிருக்கிறோம்.

முடிவாய் ஜெயமடைய வேண்டுமானால் யுத்தத்திற்குச் சென்றிருப்பவர்களுடைய வீரத்தன்மை யொன்று மாத்திரமே போதாது. உள்நாட்டிலிருக்கும் நாம் ஒரு மனதுடையவர்களா யிருக்கவேண்டும். ஜெயம் என்னும் வார்த்தையே நம்முடைய வாக்கிற் குடிகொள்ளவேண்டும். நீதி நிலை நிறுத்தப்படவேண்டு மென்பதே நாமெல்லொரும் கொள்ளும் கொள்கையாகவேண்டும். நம்முடைய முயற்சிகளெல்லாம் இவற்றின் பொருட்டேயாகும். பெல்ஜியம் உதிரபலி கொடுத்ததும், பிறரால் அசைக்க முடியாத இங்கிலாந்து தேசமும் விசுவாசகாதகமில்லா ருஷியாவும்,அச்சமென்பதே அறியாதஸெர்வியாவும், தைரியம் பொருந்திய ஜெப்பான் தேசத்துக் கடற்படையும் முயற்சி செய்வதெல்லாம் இந்நீதிகளியின் காரணத்தைக்கொண்டேயாகும். மேற்கூறியவாறு நாமும் இங்கிலாந்தும் ருஷியாவும் யுத்தம் புரிவதெல்லாம் புதிது புதிதாய்த் தேசங்களைச் சேர்க்கவேண்டு மென்னுங் கருத்தைக்கொண்டல்ல. உலகத்தினுடைய அமைதியான நிலைமையே இந்த யுத்தத்தின் முடிபின்மேற் சார்ந்திருக்கிறது. சமாதானம் என்னும் பெயரின் கீழ் கோபத்தையே மூட்டிக்கொண்டிருக்கும் பொல்லாக் குணத்தையும் கொலையின் பின் கொலையாய் அனேகரைக் கொலை செய்து ஊர் ஊராய்க் கொள்ளை யடிப்பதையே யுத்தமென்று கூறும் ஜெர்மனியர்களுக்கு விரோதமாய் நாம் புறப்பட் டிருக்கிறோம். நம்முடைய ஜீவன் பெரிதல்ல. இந்த யுத்தத்தின் முடிவு மிகவும் பெரிது. ஏக மனதாய் நாம் யுத்தம் புரிவோமாகில் யுத்தத்திற்குரிய நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டு நடக்கும் நமக்கு ஜெயம் வரும் பொழுது, இந்நாட்களின் செய்கைகளெல்லாம் நமக்குப் பெருமையான ஞாபகத்திற்குக் காரணமாகுமென்பதை யறிய வேண்டும்.''

இவ்விதம் விவியானி யென்பவர் பாரிஸ்மா நகரத்திற் கூடிய பார்லி மெண்டில் செய்த பிரசங்கமானது ஒவ்வொரு வருக்கும் ஊக்கத்தை விளைவித்தது. 1914-வருஷம் டிஸம் பர் மாதம் முடிவுக்கு வந்துகொண் டிருக்கிறது. இந்த யுத் தத்தின் காட்சியை யெல்லாம் தான் காணவேண்டு மென்று 1915-வது வருஷமும் வெகு வேகமாய் வந்துகொண்டிருக் கிறது. 'ஒவ்வொரு மதத்தினர்க்கும் கடவுளை வழி படுவதற்கு அனேக வழிகள் ஏற்பட்டிருப்பது போல, கிறிஸ்தவ மார்கத் திலிருப்பவர்களுக்கும் கிறிஸ்த்துமஸ் பண்டிகை மிகப் பிர தான மென்பது யாவரு மறிந்த விஷயம். இப்பண்டிகை யைக் கொண்டாடுவதற்கு பாரிஸ் நகர வாசிகள் தத்தமக் குரிய பிரயத்தனங்களை யெல்லாம் செய்துகொண் டிருந்தார் கள். அனேக இடுக்கண்களுக் கிடையே கிடைக்கும் இன்பத் தின் பயன், எளிதிற் கிடைக்கும் இன்பத்தைக் காட்டிலும் மேலான தென்பதற் கறிகுறியாக பாரிஸ் நகரம் முழுவதுமே சந்தோஷ சாகரத்தில் ஆழ்ந்திருந்தது. இந்த யுத்தத்தின் மற்ற போக்குகளை யெல்லாம் பின் வரும் அத்தியாயங்களில் எடுத்துரைப்போம்.

பதினோராவது அத்தியாயம்

ஆகாயயுத்தம் அதிகரித்து விட்டது.

இந்த யுத்தத்தின் ஆரம்பத்தில் பகைவர்களாகிய ஜெர் மனியர்களுடைய ஆகாய விமானங்களிற் சிற்சில இங்கு மங் குஞ் சென்று ஒரு குற்றமு மறியாத கிராமங்களின்மீது பாம் என்னுங் குண்டுகளை யெறிந்து துன்பம் விளைவித்தன வென் றும், பாரிஸ் நகரின்மீதும் ஜெர்மனியருடைய ஆகாய விமான மொன்று பாம் குண்டை யெறிந்து விட்டுப் பறந்து போய் விட்டதென்றும், முதற் புத்தகத்திற் கூறியுள்ளோம். இவ்விதம்குடிகள் அஜாக்கிரதையாயிருக்குந் தருணத்தில் அந் தரமார்க்கமாய்வந்து அபாயம்விளைவிப்பதுதானு ஆகாயவிமா னங்கள் ஏற்பட்டமைக்குக்காரணம். இல்லை? ஒவ்வொருகட்சி யாருடைய சேனையும் யுத்தகளத்திற்குச் செல்கையில் பகைவர் கள் எங்கெங்கு தங்கியிருக்கிறார்கள் என்பதை யறிந்துரைப்ப தற்கே ஆகாயவிமானங்கள் ஆரம்பத்தில்உண்டாக்கப்பட்டன.

யுத்தம் ஆரம்பித்த பொழுது ஜெர்மனியர்களிடம் 1300 ஆகாயவிமானங்களிருந்தன. ஆங்கிலேயர்களிடத்தும் பிரெஞ்சுக்காரரிடத்தும் அப்பொழுதிருந்தவைகள் மிகச் சொற்பமே. பிறகு ஆகாயவிமானங்களை நூதனமாய்ச் செய்யும் அனேக வியாபாரிகள் புறப்பட்டார்கள். ஜெர்மனியர்களைக் காட்டிலும் ஆகாய யுத்தம் புரிவதில் தாங்கள் அதிகம் என்பதை ஆங்கிலேயர் ரூபித்துவிட்டார்கள். ஆகாய விமானங்களில் 'பையோக்ஸ்' என்றும் 'பார்க்' என்றும் 'சப்வொப்போ' என்றும் 'ஸெப்பலின்' என்றும் 'மானோப்ளேன்' என்றும் "டாப்" என்றும் பலவிதங்களுண்டு இவையனைத்தும் ஆங்கிலேயர்களால் அவ்வச் சமயத்திற்கேற்றவாறு அமைக்கும் ஏபொருட்டு அனேக வியாபாரிகள் முன் வந்தார்கள். இவ்விதம் ஆங்கிலேயர்கள் ஆகாயவிமானங்களைச் செய்வதற்கு எடுத்துக்கொண்ட முயற்சிகளைக் கண்ட பிரெஞ்சுக்காரர்கள் சும்மா விருக்கவில்லை.

பிரேஞ்சுக்காரருடைய ஆகாய பாணம்

ஆகாயபாணம் என்னும் ஓர்வித நூதன ஆயுதத்தைக் கண்டு பிடித்தார்கள். இது எஃகினாற் செய்யப்பட்டது. ஒரு அங்குலத்தில் மூன்றிலொரு பங்கு பருமனுள்ளது. ஏறக் குறைய ஏழு அங்குலத்திற்குமேல் நீளமுள்ளது. முனையில் ஒரு அங்குலத்திற்குமேல் கூர்மையா யிருக்கும். அடிப்புறமானது சிறு இறகுகளைக்கொண்டதுபோல் காணப்படும். இவ்வித ஆகாயபாணங்கள் ஐம்பது ஒரு பெட்டியில் வைக்கப்பட்டிருக்கும். ஆகாயவிமானம் காற்றில் பறந்து செல்கையில் பெட்டியிலுள்ள இவ்வாகாயபாணங்கள் அம்புறுத்தூணியினின்றும் அம்புகள் புறப்படுவதுபோல நாற்புறமும் பரவி, எதிரிகளைத் தாக்கும். ஆகாய விமானத்தினின்றும் பாம் என்னும் குண்டொன்று கீழே வீழ்த்தப்பட்டால் நேரிடும் அபாயத்தைக்காட்டிலும் இவ்வித ஆகாயபாணங்களால் நேரிடும் அபாயம் மிகவும் அதிகம். எப்படி யெனில், பாம் ஒன்று கீழே வீழ்ந்தவுடன் அது வெடிபட்டு, சிறு துண்டுகள் அருகில் நிற்பவர்கள்மீது பாய்ந்து மரணத்தை விளைவிக்கும். பாம் குண்டு விழுந்தவுடனே, அல்லது விழுமென்று அறிந்தவுடனே,

அனைவரும் ஒருங்கே தரையோடுதரையாய்ப் படுத்துக்கொண்டால் வீழ்ந்துடைபட்ட குண்டுகளினு லுண்டாகும் சேதம் மிகக் கொஞ்சமே. ஆகாயபாணங்களோ அவ்வித மில்லை. நின்றாலும் அல்லது படுத்திருந்தாலும் மனிதர்கள்மீது பாய்ந்து ஊடுருவிச்சென்று மரணத்தை விளைவிக்கும். இவ்வித ஆகாயபாணங்களைப் பிரெஞ்சுக்காரர் கண்டு பிடித்தார்கள். இது யுத்த நீதிக்கு மாறான தென்று ஆங்கிலேயர்கள் பிரெஞ்சுக்காரருக்கு அறிவித்த போதிலும், சமயத்திற்கு உபயோகித்தல் தகுதியே யெனப் பிரெஞ்சுக்காரர் உபயோகித்துக் கொண் டிருக்கிறார்கள். இவ்வண்ணம் நூதன நூதனமாய் ஆகாயவிமானங்களும் அவைகள்மீதிருந்து உபயோகிக்கும் ஆயுதங்களும், நாள் தோறும் கண்டு பிடிக்கப்பட்டுக்கொண்டே வருகின்றன.

இங்கிலாந்தின் கீழ்க்கரையின்மீது ஜெர்மனிய ஆகாய விமானங்கள்

1914-வது வருஷம் ஜனவரி மாதத்தில் ஆகாயவிமானங்களை அதிகப்படுத்தவும், இன்னும் பற்பல ஏற்பாடுகளை அவைகள் விஷயத்தில் செய்யவும் ஹேது இல்லை. யுத்தம் ஆரம்பித்த பின்னர் 'பகைவர்களாலும் நன்மை' என்னும் பழமொழிப்படி, அறிவை யதிகப்படுத்துவதற்கு அனேக காரணங்கள் ஏற்பட்டன.

இங்ஙன மிருக்க, 1915-ம் வருஷம் 19-ந்தேதி ஜெர்மனியர்களுடைய சிலஆகாயக் கப்பல்கள் இங்கிலாந்து தேசத்தின் மீது வந்துகொண் டிருந்தன. மணி இரவு 8-30 ஆயிற்று; வந்த பகைவர்களுடைய ஆகாயக்கப்பல்களுட் பாதிக்குமேல் பயத்தினால் திரும்பி ஜெர்மனிக்கே சென்று விட்டன. மற்றைப் பாதி மான்ஸ்லீ என்னும் நகரத்தின்மேல் சற்று வட்டமிட்டன. ஆனால் இந்நகரத்திற்கு அவைகளால் ஒன்றும் நஷ்டமில்லை. பிறகு அவைகள் அவ்விடமிருந்து ஒவ்வொன்றாய்ப் பிரிந்து போயின. ஒன்று யார்மத் நகரத்திற்குச் சென்றது. மற்றொன்று க்ரோமர் என்னும் நகரத்திற்குச் சென்றது. க்ரோமர் நகரத்திற்குச் சென்ற ஆகாய விமானமானது அந்நகரத்திற்கு நேரே செல்லவில்லை. இடையில் பீஸ்

டன் என்னும் நகரின்மீது சற்றே அந்தர மார்க்கமாய் உலவி, சில குண்டுகளை வீழ்த்தினது. ஆனால் இதனால் நஷ்டம் சிறிதேனும் இல்லை. அங்கிருந்து ஷேர்ரிங்ஹாம் நகரம் சென்று பாம் ஒன்றை யெறிந்தது. அந்த பாம் வெடிக்க வில்லை. இவ்வாகாய விமானமே மீண்டும் அன்றிரவு 10-30 மணிக்கு ஹன்ஸ்டாண்டன் என்னும் நகரைக்கடந்து ஹீச்சாம் நகர்மீது பாய்ந்தது. இவ்விடத்தில் போடப்பட்ட ஷெல் ஒன்று தண்ணீர்ப் பீப்பாயின்மேல் விழுந்தது. பிறகு அந்நக ரத்திலிருந்து ஸ்நாட்டிஷாம் என்னும் நகர்க்குச் சென்றது. அங்கு இவ்வாகாயவிமானத்தால் போடப்பட்ட குண்டானது அந்நகர் தேவாலயத்திற்குச் சுமார் 60 கஜ தூரத்திற்கப்பால் விழுந்தது. இவ்விதம் இவ்வாகாய விமானமானது வீழ்த்தின குண்டுகளெல்லாம் வீணாய்ப்போயின. பிறகு, அன்றிரவு 11 மணிக்கு கிங்ஸ்லின் என்னு மிடத்தை இவ்வாகாயவிமானம் நாடிச் சென்றது

ஒன்றன்பின் ஒன்றாய் அனேக பாம்களை வீழ்த்திற்று. இவ்விடத்தில் சிறிது அபாயம் நேரிட்டது ; அதாவது, போர் வீரன்மனைவி யொருத்தி பாம் ஒன்றுக் கிரையானாள்.

14-வயதுடைய வாலிபன் ஒருவன் படுத்துக்கொண்டிருக்கையில் அவன்மீது ஒரு குண்டு விழுந்துவிட்டது. அவன் உடனே இறந்து விட்டான். அவனுடைய தாயுந் தந்தையும் சிறு குழந்தை யொன்றும் மிகவும் காயப்பட்டார்கள்.

யார்மத்தில் ஜெர்மனிய ஆகாயவிமானங்கள்

யார்மத்மீது சென்ற ஆகாய விமானத்தால் யாது நேரிட்டதென்பதைப் பற்றிக் கவனிப்போம். இவ்வாகாய விமானம் யார்மத்திற்குச் சென்றபொழுது மணி 8-30 ஆயிற்று. அவ்வூர் ஜனங்கள் இராப்போஜனம் செய்து விட்டு வீதிகளில் காற்றுவாங்கிக்கொண் டிருந்தார்கள். இந்நகரமானது கடற் கரையோரத்திலுள்ள தென்றும், 1914-ம் வருஷம் டிசம்பர்மீ 16-ந்தேதி சில ஜெர்மனிக்கப்பல்கள் இத்துறைநகருக்குவந்து சிறிது சேதத்தை விளைவித்துப் பிறகு ஓடிப்போய் விட்டன வென்றும், நாம் முன்னமே கூறியுள்ளோம். அந்நகரைக் காண

இவ்வாகாய விமானத்திலுள்ளவர்கட்கு மிகவும் விருப்பம் போலும்! பகற்பொழுதில் வந்தால் ஆங்கிலேயர்கள் தங்களை அந்தகனுலகத்திற்கு அனுப்பிவிடுவார்களென்று இரவில் வந்ததாக ஏற்படுகிறது. அந்நகர்க்குத் தெற்கும்வடக்குமாகஇவ்வாகாயவிமானமானது சிறிதுநேரம் சஞ்சரித்து, பகற்பொழுதில் பற்பல அலுவல்களினால் நேரிடும் ஆரவாரமெல்லாம் அடங்கி, முடிவுகாலத்தில் கடவுளால் ஆத்மாவுக்குக் கொடுக்கப்படும் அமைதிக்கு ஓர் அறிகுறியாகக் காணப்படும் இந்நகரின் அமைதியைக் கண்டு வியந்து, மூர்க்கர்களுடைய குணம் எத்தகைய காட்சியாலும் போதனையாலும் நல்லிணக்கப்படுவதில்லையென்பதற்கு ஓர் சாட்சியாக, சில குண்டுகளை யெறிய ஆரம்பித்தது.

ஆகாயவிமானக் குண்டுகளினால் அசம்பவங்கள்

இரண்டு குண்டுகள் ஸெண்ட் பீட்டர்ஸ்பர்க் தேவாலயத்தின்மீது விழுந்தன. தனது இராப்போஜனத்தை எடுத்துக்கொண்டு வந்துகொண்டிருந்த ஒரு வயது சென்ற கிழவி குண்டொன்றுக்கு இரையானாள்.

மத்திய வயதுடைய சக்கிலி யொருவன், மேற்சொன்ன கிழவியின் பின்னே துணைபோய் விட்டான்.

யுத்தவீரன் ஒருவன்மீதும் குண்டொன்று விழுந்தது. இவ்வித குண்டுகளுக்கு ஆங்கிலேயர் சகாயார்கள் என்பது உண்மை யெனக் காண்பிப்பதுபோல, இவன் குண்டினால் காயப்பட்டானே யல்லது மரணமடையவில்லை.

இவ்விதம் குண்டுகள் விழுந்துகொண்டிருக்கும்போதெல்லாம் மின்சாரவிளக்கானது அந்நகர் முழுதும் வெளிச்சத்தைக் கொடுத்துக்கொண் டிருந்தது. இவ்வெளிச்சமானது, பகைவனைய் அந்தரத்துலவும் ஜெர்மனிய ஆகாயவிமானிக்கும் உதவி செய்கின்றதென்பதை யறிந்த அந்நகர் எஞ்சினீர், உடனே வெளிச்சத்தை யெல்லாம் நிறுத்திவிட்டார். உடனே அந்நகர் முழுவதும் அந்தகாரத்தி லாழ்ந்துவிட்டது. ஆகாயவிமானி ஒன்றும் தோன்றாது திகைத்தவனாய் வந்த வழியே சென்று விட்டான்.

நமது சக்ரவர்த்தி ஸாட்ரிங்ஹாம் என்னும் நகரில் தங்கியிருந்ததாகவும், அதையறிந்து ஜெர்மனி ஆகாயவிமானி அந்நகரைச் சுற்றிலுமிருக்கும் ஸ்நட்டிஷாம் முதலிய நகர்களின் மீது குண்டுகளை யெறிந்தானென்றும் சொல்லப்படுகிறது.

இவ்விதம் தான் வருவதற்கு முன்னமே நமது சக்ரவர்த்தி ஸாட்ரிங் ஹாம் நகரைவிட்டுப்போய் விட்டதை இவ்வாகாய விமானி யறியவில்லை.

ஜெர்மனிய ஆகாயவிமானங்களின் அழிவு

இங்ஙனம் ஜெர்மனியர்கள் ஆகாயவிமானங்களின்மீது இங்கிலாந்துக்கு வருகையில், ஆங்கிலேயர்கள் பாதுகாப்பிற்குரியபோதுமான எற்பாடுகளைச் செய்யாமல் விட்டார்களென நாம் நினைப்பது தப்பிதம். ஜனவரி, பிப்ரவரி மாதங்களோ மிகுந்த பனிக்காலம். அபரிமிதமாய்ப் பெய்யும் பனியில் ஜெர்மனி ஆகாயவிமானிகள் இராப்பொழுதில் வெளிக்கிளம்பார்களென்பதே ஆங்கிலேயர்களுடைய நம்பிக்கை. இவ்வித நம்பிக்கை போதுமான ஆதாரத்தைக் கொண்டுள்ள தென்பதை ரூபிக்க மேற்கூறியவாறு ஜனவரிமாதம் 19-ந்தேதி புறப்பட்ட ஜெர்மனி ஆகாயக் கப்பல்களிற் சில, வடகடலில் வீழ்ந்து விட்டன. பனி அதிகமாய்ப் பெய்தது. ஒரு ஆகாயவிமானத்தின் மீது ஒரு டன் அதாவது நாலு பாரத்திற்கு மேற்கொண்ட எடையுடைய பனி நின்றுவிட்டது. ஏற்கெனவேயுள்ள பளுவின்மேல் இப்பனியின் சுமையும் சேர்ந்ததினால் இனி அந்தரத்திற் சஞ்சரிக்கிறதில்லை யென்பதை விட்டுக் கடலுக்கு வந்து விட்டது. அதிலிருந்த ஜனங்கள் பனிக்குப் பயந்து வருணபகவானிடம் அடைக்கலம் புகுந்தார்கள். வருணனும் அவர்களைக் காட்டிக்கொடுக்காவண்ணமும், ஆங்கிலேயர் கண்களுக்கு எக்காலத்தும் அகப்படாவண்ணமும் கடலின் அடிப்புறத்தே யொளித்து விட்டான். இவ்வாகாய விமானம் மாத்திரம் கடலின்மீ தடிக்கும் புயற்காற்றொன்றினால் நாளுக்குநாள் தள்ளப்பட்டு பிப்ரவரிமாதம் கடற்கரைக்கு வந்து சேர்ந்தது.

ஜெர்மனியர்கள் இம்மட்டோடு நிற்கவில்லை! பிறகும் சில ஆகாயவிமானங்களை யேவினதின்மேல் அவைகளிலொன்று பிப்ரிவரிமாதம் 17-ந்தேதி பாரோத்திவுகளின்மீது விழுந்தது. அங்கிருந்தவர்கள் அவ்வாகாய விமானத்தைத் நிக்கிரையாக்கி, அதன்மீ திருந்தவர்களைக் கைதிகளாக்கி விட்டார்கள்.

பன்னிரண்டாவது அத்தியாயம்

மற்றைத்தேசங்களின் யுத்தப் பிரயத்தனங்கள்.

இடாலி யுத்தத்தில் ஈடுபட்டது

ஐரோப்பாக் கண்டமானது எத்தனை தேசங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறதென்பதை நாம் முதற் புத்தகத்திலேயே மிக விரிவாய் எடுத்துரைத்திருக்கின்றோம். அவைகளனைத்தும் இம்மகா யுத்தத்தில் ஈடுபடவில்லை யென்றும் மிக வல்லமை பொருந்திய போராசுகளாகிய இங்கிலாந்தும், பிரான்ஸும், ருஷியாவும் ஒரு கக்ஷியாகவும்,—ஜர்மனியும் ஆஸ்ட்ரோ ஹங்கெரியும் மற்றொரு கக்ஷியாகவும் இம்மகா யுத்தம் ஆரம்பித்த பின்னர் ஐரோப்பிய துருக்கி ஜெர்மெனிக் கக்ஷியாரைச் சேர்ந்ததென்றும் இதுவரையிலும் நாம் அறிந்திருக்கிறோம்.

ஐரோப்பாக் கண்டத்தில் யுத்தத்தில் ஈடு படாதிருந்த ரொமேனியா, பல்கேரியா, இடாலி, கிரீஸ் முதலிய தேசங்கள் போர்க்குரிய பிரயத்தனங்களை யெல்லாம் செய்து கொண்டு, தத்தம் நன்மையை நாடிச் செய்த பிரயத்தனங்களை யெல்லாம் இனிக் கவனிப்போம்

பெருஞ் சுழற்காற்றொன்று வீசும் பொழுது அதைச்சுற்றிலும் சிறு காற்றுகள் வீசிக்கொண்டு கடைசியாய் அப்பெருஞ் சுழலுடன் சேர்வது போல் சண்ட மாருதம் போன்ற இம் மகா யுத்தமாகிய மிகப் பெரிய சுழற்காற்றில் சிறு தேசங்களாகிய இட்டாலி முதலியவைகள் சென்று கலந்து விட்டன. இந்த இடாலி தேசமானது ஐரோப்பாக் கண்டத்தின் தென் பாகத்தில் மத்திய தரைக்கடலுக்குட் செல்லும் தீபகற்பமென்பதும், இத்தேசத்திற்குத் தலை நகராகிய ரோமாபுரி யென்பது கிறிஸ்தவ மதத்திற்குத் தலைமை பூண்டிருக்கும் போப் என்பவருடைய வாசஸ்தலமென்பதும் நாம் அறிந்த விஷயங்கள். நமது தென்னாட்டில் பிரஸித்தி பெற்ற மதங்களுள் ஒன்றாகிய வைஷ்ணவ மதத்தில் தென்கலை, வடகலை யென இரண்டு பிரிவுகள் உள்ளதுபோல, கிறிஸ்தவ மதத்தில் ரோமன் கத்தோலிக்

என்றும், பிராடெஸ்டன்ட் என்றும் இரண்டு பெரும் பிரிவுகள் உண்டு. இப்பிரிவுகளுக்குள்ள வித்தியாசத்தைச் சற்று ஆழ்ந்து கவனித்தால் ஏற்படுவது ஒன்றேயாகும். அதாவது,--அகம்பிரம்மம், கடவுள் வேறெங்குமில்லை; ஆலயம் முதலிய புண்ணிய ஸ்தலங்களுக்குச் செல்வதினால் பயனொன்றுமில்லை என்னும் வேதாந்திகளையொப்பார் பிராடஸ்டண்ட் கிறிஸ்தவர்கள். ஆலயந்தொழுவது சாலவும் நன்று எனவும், மற்றும் மதத்திற்குரிய அனுஷ்டானங்களெல்லாம் அவசியம் எனவும் கருதும் சித்தாந்திகளையொப்பார் கத்தோலிக் கிறிஸ்தவர்கள்.

இத்தகைய இரண்டு மார்க்க கிறிஸ்தவர்களும் இடாலி தேசத்தி லுண்டு. கத்தோலிக் கிறிஸ்தவரா யிருப்பினும் அல்லது, பிராடெஸ்டண்ட் கிறிஸ்தவராயிருப்பினும் கிறிஸ்தவர் கிறிஸ்தவரே. அவர்களுடைய முடிவான கொள்கையொன்றே. குறித்த கிறிஸ்தவ மார்கத்தைத்தான் அனுசரிக்க வேண்டுமென்னும் அதிக கடினமான ஆக்கினைகள் அவசியமில்லையென இடாலி ராஜாங்கத்தார் மத விஷயத்தில் பிரவேசிக்கிறதில்லை.

ஜெர்மனியர் அனைவரும் பிராடெஸ்டண்ட் கிறிஸ்தவர்கள். உலகமெங்கும் பிராடெஸ்டண்ட் கிறிஸ்தவ மதமே பரவவேண்டுமென்னும் இச்சையை மேற்கொண்டவர்கள். இதனால் மற்றவர்களுக்கு மத விஷயத்திலுண்டாகும் மனக்கிலேசத்தைச் சிறிதேனும் கவனியார்கள். அரசன் எவ்வழியோ அவ்வழியே குடிகள். ஜெர்மன் சக்ரவர்த்தி கெய்ஸர் தம்முடைய சந்தோஷத்திற்காகப் பிறர் எவ்வளவு கஷ்டத்தையும் நஷ்டத்தையும் அனுபவித்த போதிலும் அதைச் சிறிதேனும் சிந்திப்பவ ரல்ல.

கெய்ஸரின் வேட்டை விநோதம்

"ஜெர்மனிச் சக்ரவர்த்தியின் பெர்லின் மாளிகை ரகஸ்ய சரித்திரம்" என்னும் புத்தகத்தை வாசிக்கும் யாவரும் இச்சக்ரவர்த்தியின் மன நோக்கை எளிதில் அறிந்துகொள்ளலாம். ஜெர்மனிச் சக்ரவர்த்திக்கு வேட்டையாடுவதில் மிகவும் விருப்பமாம். ஆதிகாலத்தில், நமது இந்தியச் சக்ரவர்த்திக

ளூம் இந்திய அரசர்களும் வேட்டையாடச் செல்வ தென்றால், குடிகளுடைய பயிரையும் மற்றும் சிங்காரம் பொருந்திய வனங்களையும் காட்டு மிருகங்கள் அழிக்கும் பிரமேயத்தைக் கொண்டு செல்லுவார்கள். ஜெர்மன் சக்ரவர்திக்கோ அவ்வித முகாந்தரங்கள் அவசியமில்லை. இவர், மிகவும் இனிமையாயிருக்கு மெனக்கருதும் பக்ஷியின் இரைச்சியையோ, அல்லது மிருகத்தின் இரைச்சியையோ நாடிச் செல்பவர். இவர் வேட்டையாடச் செல்வ தென்றால் இவர் செல்லும் பாதையெல்லாம் முந்தியே சீர்திருத்தப்படவேண்டும். ஒருக்கால் இருப்புப்பாதை மார்க்கமாய்ச் செல்வதென்றால் இவர் எந்த ஸ்டேஷனிலிறங்குகிறாரோ அந்த ஸ்டேஷனிலிருந்து இவர் போய்த் தங்குமிடம் வரையிலும் இருக்கும் பாதை சென்னை மவுண்ட்ரோடுக்கு மேற்பட்டதாகச் செய்யப்படவேண்டும். இவ்வித நூதனபாதைகளுக்காகச் செலவாகுந் திரவியம் சக்ரவர்த்தியினுடைய பொக்கிஷத்திலிருந்து செல்வதல்ல. எந்த கிராமத்தில் அல்லது நகரத்தில் தங்குகிறாரோ அவ்விடத்திலுள்ள பிரபு சக்ரவர்த்தியின் தயவைப் பெறுமாறு தனது பணத்தை ஏராளமாய்ச் செலவழிக்கவேண்டுமாம்.

இதுவு மிம்மட்டோ! பெர்லின் மாளிகையையும் பழிக்கத்தக்க மாளிகை யொன்றும் அங்கு கட்டப்படவேண்டும். சக்ரவர்த்தி சயனிக்குமாறு உலோகத்தாற் கட்டில் ஒன்று செய்யப்படவேண்டும். எந்தப் பிரபு ஜெர்மனிச் சக்ரவர்த்தியை வேட்டையாடும் வரையிலும் உபசரிக்கிறாரோ, அந்தப் பிரபுவினிடத்திலிருக்கும் சுயம்பாகி ஜெர்மன் சக்ரவாத்திக்கு உதவாது. பாரிஸ் நகரத்தினின்றும் மற்றும் பிரதான நகரங்களிலிருந்தும் சமையற் றொழிலிற் கைதேர்ந்தவர்கள் வரவழைக்கப்படவேண்டும்.

இறைமாய்க் கிடைத்தால் எவ்வளவேனும் செலவழிக்கலாமென்னும்கருத்துஇவருக்குத்தா னுண்டு. இவருடன்,இவரைக் காட்டிலும் குறைவாய்ப் சாப்பிடாத இருபது முப்பது பிரபுக்கள் கூடவே செல்வார்கள். சக்ரவர்த்திக்கும் அவருடன் செல்லும் மற்றப்பிரபுக்களுக்கும் மிகச்சுவையான ஆகாரப்பொருள்

கள் எங்கிருந்தாயினும் கொண்டுவரப்பட வேண்டும். பிறர் செலவில் இவ்வளவு ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தால் சக்ரவர்த்தி இரண்டொரு நாள் அங்கு தங்கியிருந்து வேட்டைத் தொழில் புரிவார். இவர் நாடிவந்த பக்ஷிகளும் மிருகங்களும் அபரிமிதமாய்க் கிடைக்காவிட்டால், அதற்கும், அவரை உபசரிக்கும் பிரபுவின்மேல் ஒரு வேளை கோபித்துக்கொண்டாலும் கோபித்துக்கொள்வார். பாதை செப்பனிடும் ஏற்பாடுகளிலும் மற்றப் போஜனாதி விஷயங்களிலும் ஏதேனும் சிறிது தவறி யிருந்தால் சக்ரவர்த்தியின் கோபம் எவ்வளவு தூரம் கொழுந்துவிட்டெறியுமென்பதை நாம் கூறவேண்டியதில்லை. தமக்கும் தம்முடன் வந்த மற்ற பிரபுக்களுக்கும் ஏராளமான திரவியச் செலவு செய்து உபசரணை செய்த பிரபுவினிடம் யாதொரு வார்த்தையும் சொல்லாது உடனே புறப்பட்டுப் போய் விடுவார். இதனால் இவர் பிறருடைய மனதிற்குக் கவலையை யுண்டு பண்ணுவதில் சற்றேனும் தாமதியாதவரென் றேற்படுகிறது.

ஆகையினால் ஜனங்கள் பிராடெஸ்டண்டாயிருந்தாலும் கத்தோலிக்காக விருந்தாலும் எல்லாம் ஒன்றே என்பதை யுணராத வான்பியூலோ என்பவர் ஒருவர், இடாலி தேசத்தில் இருக்கின்றார். இவர் இதற்குமுன் சான்ஸலர் என்னும் பெரிய உத்தியோகத்தை வகித்திருந்தவர். ஜெர்மனிய அரசாட்சி இடாலி முழுதும் பரவி, இடாலி ஜனங்களெல்லாம் பிராடெஸ்டண்டுகளாக வேண்டுமென்னும் பேராசைப் பிசாசு இவரைப் பிடித்து ஆட்டிக்கொண்டிருந்தது. யுத்தம் ஆரம்பித்த அரை வருஷகாலத்திற்குமேலும் இவர் இக்கருத்தை மேற்கொண்டு விடா முயற்சி செய்துகொண் டிருந்தார். முடிவாய், இவருக்குச் சார்பாயும் சிலர் சேர்ந்தார்கள். இவர்கள் உதவியைக் கொண்டு இடாலி கவர்ன்மெண்டார், ஜெர்மனி கவர்ன்மெண்டாருக்கு உதவிபுரிய வேண்டுமெனக் கேட்கத் தீர்மானித்தார்.

இடாலி அரசரின் பெயர் விட்டோரியா இமானுவேல். இவருக்குப் பிரதம மந்திரியாயிருப்பவர் ஸலாண்ரா என்பவர் இவருடைய பார்லிமெண்டில் தலைமை பெற்றிருப்

பவர் ஜியோலிடே என்பவர். இவ்விருவர்க்குள்ளும் அவ்வளவு நேசப்பான்மை கிடையாது. ஸெலாண்ரா என்பவர்க்கு உதவியாக, பாரன்ஸோனீநோ என்பவர் நியமிக்கப்பட்டார். பிரதம மந்திரியாகிய ஸலாண்ராவும், பாரன் ஸொனீநோவும் அதிகாரத்தை வகித்திருந்தமையால், பார்லிமெண்டில் ஜியோலிடே செய்யும் முயற்சிகள் அனைத்தும் அவருக்கு அனுகூலமாய் நடைபெறுகிறதில்லை.

இந்த ஜியோலிடே இடாலியிலிருக்கும் வான்பியூலோவுக்கு மிக்க நண்பர். இடாலி அரசாட்சியார் ஜெர்மனிக்கு உதவ வேண்டுமென்னும் அபிப்பிராயத்தை வான்பியூலோ, ஜியோலிடேக்கு மெல்ல மெல்ல அறிவித்தார். ஜியோலிடே என்பவர் பார்லிமெண்டில் இவ்விஷயத்தைப் பற்றிப் பேசி இடாலியரசாக்ஷியார் ஜெர்மனிக்கு உபபலமாகத் திருப்பிவிடுவார் என்பதே வான்பியோலோ என்பவருடைய நம்பிக்கை. இவ்விதம் வான்பியூலோ கருத்துக்கொண்டது இடாலி ஜனங்களனைவர்க்குந் தெரிந்துவிட்டது.

வான்பியூலோ தம்மை அடிக்கடி காண்பதை ஜியோலிடே என்பவர் சிறிதேனும் விரும்பவில்லை. வான்பியோலோ என்பவரிடம் தமக்குச்சினேகம் அதிகமாயிருப்பதாக இடாலி ஜனங்களறிந்தால் தம்மிடமும் பகைகொள்வார்கள் என்று ஜியோலிடே பயந்தார். வான்பியூலோ தம்மை அடிக்கடி காணுதிருக்கும்படியான ஏற்பாடுகளைச் செய்ய ஆலோசித்தார். முடிவாய் ஒருவித யோசனை தோன்றிற்று. 1913-ம் வருஷத்திலேயே இம்மகாயுத்தத்தை ஆரம்பிப்பதற்கு ஜெர்மனியர்கள் ஏற்பாடு செய்திருந்தார்களென்றும் அச்சமயத்தில் இடாலி, ஜெர்மனிக்கு உதவிசெய்ய முன்வராததினுல் யுத்தம் தடைபட்டுப்போயிற்றென்றும், ஆகையினுல் இடாலியர்கள் ஜெர்மனியர்களுடன் யுத்தகாரியங்களில் ஒன்று சேர்வது எளிதான காரியமல்லவென்றும் ஜனங்களுக்கு ஓர் வதந்தியை வெளிப்படுத்தினுர். இவ்வதந்தி வான்பியூலோ காதிற் கெட்டிய மாத்திரத்தில், இனி இடாலியர்களை ஜெர்மனியர்களுடன் சேர்ப்பிக்க முயல்வது அபலமாகும், என்பதை அவர் நன்

குணர்ந்தார். ஆயினும், எவ்விதத்திலேனும் இடாலியை இம்மகா யுத்தத்தில் ஜெர்மனியர்கள் சார்பாக ஈடுபடுத்தவேண்டும் என்னுங் கருத்து இவர் மனதினின்றும் நீங்கவில்லை. ஒரு காலத்தில் இடாலியினுடையதாயிருந்து, பிறகு, ஆஸ்ட்ரோ-ஹங்கெரியால் அபகரிக்கப்பட்டதும், இடாலிக்கு வடபுறத்திலுள்ளதுமான ட்ரேண்டிநோ முதலிய நாடுகளை மறுபடியும் இடாலிக்கே வாங்கிக்கொடுத்து, ஜெர்மனியர்களுக்கு இடாலியின் உதவியைச் சேர்த்து வைக்கவேண்டுமென்னும் யோசனை வான்பியூலோவுக்குத் தோன்றிற்று.

வான்பியோலோவின் வீண்முயற்சிகள்.

ஆஸ்ட்ரோ-ஹங்கேரியார், ட்ரெண்டினோ முதலிய நாடுகளை இடாலியருக்குக் கொடுத்து விட்டால் இம்மகாயுத்தத்தில் ஆங்கில-பிரெஞ்ச் உபபலச் சேனைகளுக்கு விரோதமாக இடாலியருடைய உதவி ஜெர்மனியர்க்கும் ஆஸ்ட்ரோ-ஹங்கெரியார்க்கும் எளிதிற் கிடைக்குமென ஆஸ்ட்ரோ-ஹங்கெரி சக்ரவர்த்தியினிடம் மிகப் பிரதான உத்தியோகம் செய்யும் கவுண்ட் டிஸ்ஜா என்பவருக்கு, வான்பியூலோ, கடிதமெழுதினார். இவ்வித ஏற்பாடு ஆஸ்ட்ரோ-ஹங்கெரியாருக்கு ஓர் கால் சம்மதமாயிருப்பினும் இட்டாலியர்க்குச் சம்மதமில்லை. ட்ரெண்டினோ ஒன்று மாத்திரமே போதாது. அட்ரியாடிக் கடலின் துறைநகராயும், ஆஸ்ட்ரோ-ஹங்கெரியார்க்கு மிகப்பிரதானமாயுமுள்ள ட்ரீஸ்ட் என்னும் துறைநகரைச் சார்ந்த கடற்கரை முழுவதும் கொடுக்கப்படவேண்டுமென்பது இடாலியர்களுடைய கருத்து. இதற்கு ஆஸ்ட்ரியர்கள் சம்மதிக்கவில்லை. இந்த ட்ரீஸ்ட் என்னும் துறைநகரை ஜெர்மனியர்கள் சம்மதமின்றி ஆஸ்ட்ரியர்கள் யாதொன்றும் செய்யக்கூடாது.

இவ்விதம் வான்பியூலோ இடாலியை ஜெர்மனியுடன் சேர்க்கச் செய்த முயற்சிகளெல்லாம் வீணேயாயின. இதற்குள் ஐரோப்பியத் துருக்கியும் ஜெர்மனியைச் சேர்ந்து விட்டதென்னும் செய்தி இடாலிக்கு எட்டியது. 1915-ம் வருஷம் ஜனவரி, பிப்ரவரி இந்த இரண்டு மாதங்களும், வான்பியோலோ செய்த முயற்சி நிறைவேறாமலே சென்றுவிட்டன. ஜெர்மனிச் சக்ரவர்த்தியும் ஆஸ்ட்ரோ-ஹங்கெரி சக்ரவர்த்தியும் வான்பியூலோ

வின் முயற்சியைத் தாங்களே யெடுத்துக்கொண்டார்கள். இடாலியர் தங்களுக்குத் துணைவருமாறு அடியில்வரும் அநுகூல நிபந்தனைகளை யளித்தார்கள்.—

இடாலி ஜெர்மனிக்குத் துணைவருமானால்—(1) ட்ரெண்டினோவும், ஐஸன்ஸோவும் அதைச் சார்ந்த எல்லைநாடுகளும்புது இருப்புப்பாதைத் தொடரும், இடாலியர்க்குக் கொடுக்கப்படும்.

(2) ட்ரீட்டுக்கும் அதைச் சுற்றினு மிருக்கும் ஜில்லாவுக்கும் சுய ஆட்சி கொடுக்கப்படும்.

(3) இடாலியர் அல்பேனியாவில் செலுத்தும் ராஜாங்க அதிகாரத்தில் ஆஸ்ட்ரியர்கள் பிரவேசியார்கள்.

(4) அட்ரியாடிக் கடலில், இடாலியர்களுக்கு ஆஸ்ட்ரியர்களால் நன்மை கிடைக்கும்படியான நிபந்தனை யொன்று ஏற்படும்.

இவ்வேற்பாடுகள் இடாலியர்களுக்குச் சம்மதமுள்ளவைகளாயிருக்குமென ஜெர்மனியரும் ஆஸ்ட்ரோ ஹங்கெரியரும் எதிர்பார்த்தது வீணாயிற்று. இராமாயண யுத்தத்தில் மழைக்காலம் போனதும் புறப்படலாமென்று சுக்ரீவன் எதிர்பாரத்திருந்தது போல, இம்மகா யுத்தத்தில் பனிக்காலம் செல்லட்டுமென இடாலியர்கள் எதிர்பார்த் திருந்தார்கள்.

பீப்பாய்களுள் கைத் துப்பாக்கியாம்

ஒரு தேசத்திலிருந்து மற்றொரு தேசத்திற்குச் செல்லும் ஏற்றுமதிச் சரக்குகள்மேலும், பிறதேசங்களிலிருந்து வரும் இறக்குமதிச் சரக்குகள்மேலும், ராஜாங்கத்தீர்வை வாங்குவதற்காக ஒவ்வொரு பிரதான துறைமுக நகரிலும் ஏற்றுமதி இறக்குமதி நடைபெறு மிடத்திற்குச் சமீபத்தில் கடற்கரையோரமாய் கஸ்டம் ஹவுஸ்என்னும் உத்தியோகசாலை யொன்று கட்டப்பட்டிருக்கும். இதில் அனேக உத்தியோகஸ்தர்கள் ராஜாங்க சம்பளம் பெற்று அலுவல்பார்ப்பார்கள். ஏற்றுமதி இறக்குமதியாகும் சரக்குகளடங்கிய பீப்பய்களோ அல்லது பெட்டிகளோ அல்லது மற்றெவையோ இவ்வுத்தியோக சாலையிலிருப்பவர்கள் ராஜாங்க அதிகாரப்படி

திறந்து பார்த்து, நியாய விரோதமான வஸ்துகள் ஏற்றுமதி யிறக்குமதி யாகாவண்ணம், மிக ஜாக்கிரதையாய்க் கவனித்து வருவார்கள். இவ்விதமான ஆபீஸ் ஒன்று சென்னைமா நகரி லிருப்பதைச் சகலரு மறிவார்கள்.

இடாலி தேசத்தின் மிகப் பிரதான துறைநகர்களுள் வெனிஸ் என்பது ஒன்று. இத்துறைநகரில் கஸ்டம் ஹவுஸ் ஆபீஸ் ஒன்றுண்டு. இடாலி தேசத்திலிருக்கும் ஜெர்மனிய வர்த்தகர் ஒருவர், ஐரோப்பிய-துருக்கிக்குச் சில சரக்குகள் ஏற்றுமதி செய்தார். இவ்விதம் ஏற்றுமதிக்காக வந்த சரக்கு களில் சில பீப்பாய்க ளிருந்தன. கஸ்டம் ஹவுஸ் ஆபீஸரில் ஒருவர் இப்பீப்பாய்களைத் திறந்து பரிசோதித்துக்கொண்டு வந்தார். இப்பீப்பாய் நிறைய சிறு கைத்துப்பாக்கிகள் வைக் கப்பட் டிருந்தன. இவ்விதம் கைத்துப்பாக்கிகளைப் பீப் பாய்களிலடக்கிய ஜெர்மன் வியாபாரியால், வெனிஸ் கஸ்டம் ஹவுஸ் ஆபீஸருக்குக் கொடுக்கப்பட்ட ஏற்றுமதி ஜாப்தாவில், இத்துப்பாக்கிகளைப்பற்றிய விஷயம் ஒன்றும் குறிப்பிடப்பட வில்லை.

இதில் இன்னுமொரு விசேஷம்! இத்துப்பாக்கிகள் இடாலியர்களால் செய்யப்பட்டனவு மல்ல; ஜெர்மனிய ரால் செய்யப்பட்டனவு மல்ல. பிரெஞ்சுக்காரரால் செய் யப்பட்டவைகள். பிரெஞ்ச் துப்பாக்கிகளை ஐரோப்பிய துருக் கிக்கு அனுப்புவதினால் இடாலியிலிருக்கும் ஜெர்மனிய வியா பாரிக்கும் என்ன நன்மை யென ஓர் கேள்வி உண்டாகலாம். பிரெஞ்ச் கைத்துப்பாக்கிகள் ஆங்கில-பிரெஞ்ச் உப பலச் சேனைகளுக்கு விரோதமாக எழுந்திருக்கும் ஐரோப்பிய துரு க்கியரிடம் காணப்பட்டால், பிரெஞ்சுக்காரர் துருக்கியருக் கும் துணையிருக்கிறார்கள் என்னும் பொய் நம்பிக்கைக்குள் அவர்களை ஆட்களாக்கி, துன்பம் விளைவிக்கவேண்டு மென் பதே இடாலியிலிருந்த ஜெர்மன் வியாபாரியின் கருத்து. "எங்குமுளன் ஒருவன் காணுங்கொல் என்றஞ்சி அங்கங் குலைவதறிவு" என்னும் நீதிவாக்கியத்தை இவர்கள் அறியார் களாயினும், கடவுள் இவர்களுடைய சூது மார்க்கங்களை எளி தில் வெளிப்படுத்தி விடுகிறார் என்பதற்கு இதுவே திருஷ் டாந்தம்.

மேற்கூறிய விஷயங்களே இடாலி யுத்தத்தில் ஈடுபட்ட தற்குக் காரணமாகும். இஃதிங்ஙன மிருக்க, செர்வியாவின் வடபுறத்தில் பல்கேரியா என்றொரு தேசம் உண்டென்றும், செர்வியர்களுக்கும் பல்கேரியர்களுக்கும் பகை யென்றும், பல்கேரியாவுக்கு வட்புறத்தில் ரொமேனியா யென்றொரு தேசமுண்டென்றும், பல்கேரியர்களுக்கும் ரொமேனியர்களுக்கும் நெடுங்காலப்பகைமை யுண்டென்றும், பல்கேரியர்கள் செர்வியர்மீது படை யெடுத்தால், ரொமேனியர்கள் பல்கேரியர்கள்மீது வருவார்களென்றும் நாம் முந்தின அத்தியாயங்களிற் கூறியுள்ளோம்.

ரோமேனியா யுத்தத்தில் ஈடுபேவோனேன்?

1914-ம் வருஷம் அக்டோபர்மீ 10-ந்தேதி ரொமேனிய அரசர் கேரோல் என்பவர் வானுலக அரசாட்சிக்குச் சென்று விட்டார். அதுவரையிலும் அத்தேசத்துக் குடிகள் யுத்தத்தில் ஈடுபடச் சம்மதிப்பதற்குத் தாமதித்தே வந்தார்கள்.

ஆஸ்ட்ரோ-ஹங்கெரியில் ட்ரான்ஸில் வேனியா என்பது ஒருபாகம். ஆஸ்ட்ரோ-ஹங்கெரியிலுள்ள பாஸ்னியாவானது எவ்விதம் ஸ்லாவ் ஜாதியாரால் குடியேறப்பட்டதோ அவ்விதமே, ட்ரான்ஸில்வேனியாவானது ரோமெனியர்களால் குடியேறப்பட்டது. ஆகையினால் ட்ரான்ஸில்வேனியாவைரொமேனியாவுடன் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்ற எண்ணம்அவர்களுக்கு உதித்து விட்டது. ஒரு பெண்ணைப் பிடித்திருக்கும் பிசாசைத் துரத்தப் பூசாரி ஆரம்பிக்கையில், வேடிக்கை பார்க்கவரும் மற்றைப் பெண்களின்மீதுள்ள பிசாசங்களெல்லாம் தானே ஆடுவதுபோல, இம்மகாயுத்தம் ஜெர்மனியர்களுடைய பேராசையால் ஆரம்பிக்க, இடாலிக்கு ட்ரெண்டினை வைச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்ற விருப்பமும், ரொமேனியாவுக்கு ட்ராஸில் வேனியாவைச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்ற விருப்பமும் வந்துவிட்டது.

எச்சமயத்தில் ரொமேனியர் ஆஸ்ட்ரோ-ஹங்கெரியின் மீது படையெடுக்கலாமென எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள்? அத்தேசத்தை (ஆஸ்ட்ரோ-ஹங்கெரி) ருஷியர்கள் வட

புறமெதிர்க்கவும், இடாலியர்கள் தென்புறமெதிர்க்கவும் ஏக காலத்தில் நேரிட்டால் தங்களுக்கு ட்ரான்ஸில்வேனியாவைப் பிடிப்பது எளிதாகும் என்பதே ரொமேனியர்களுடைய கருத்து. இதற்காக அவர்கள் நாலுலட்சம் வீரர்களைத் தயார் செய்துகொண் டிருந்தார்கள். இதுவே ரொமேனியா யுத்தத்தில் ஈடுபட்டதற்குக் காரணமாகும்.

ரொமேனியாவுக்குத் தென்புறத்திலுள்ள பல்கேரியாவின் அரசர் ஸார்பேர்டிஞண்ட் என்பார். இவர்க்குப் பிரதான மந்திரியாயுள்ளவர் ராடஸ்லாவ்ப் என்பவர். கிரீஸ் என்பது பல்கேரியா, ரொமேனியாவைப் போன்ற ஒரு சிறு தேசம். இத்தேசமானது ஆதிகாலத்தில் மிகவும் நாகரிகம் பெற்றிருந்ததாகச் சரித்திரங்களெல்லாம் எடுத் துரைக்கின்றன. இந்த கிரீஸ்தேசமும், ஸெர்வியாவும், பல்கேரியாவுக்குச் சொந்தமாகிய மாஸிடோனியா என்னும் நாட்டை, சென்ற பால்கன் யுத்தத்தின் முடிவாகக் கைக்கொண்டு இரண்டும் பகிர்ந்துகொண்டன. மாஸிடோனியாவானது மிகநேர்த்தியான புகையிலை விளையும் நாடு. மிக்கவளம் பொருந்தியது. இத்தகைய நாட்டைப் பிறர் அனுபவிக்கப்பார்த்திருப்பதென்றால் பல்கேரியர்களுக்கு மனம் பொறுக்குமா? எவ்விதமாவது மாஸிடோனியாவை மீண்டுங் கைக்கொள்ளவேண்டுமென்பது பல்கேரியர்களுடைய கருத்து. இக்கருத்தைக்கொண்டு ஸெர்வியாமீது படையெடுத்தாலோ, ரொமேனியா ஒரு பக்கத்திலும் மற்றொரு பக்கத்தில் கிரீஸும் வந்துவிடும் என்ற பயமும் பல்கேரியாவுக்குண்டு. ஆகையினால் பல்கேரியாவின் பிரதான மந்திரியாகிய ராடஸ் லாவ்ப் என்பவர், கிரீஸ் தேசத்தின் பிரதான மந்திரியாகிய வேனிஸலன் என்பவருடன் கலந்துஆலோசித்து, பல்கேரியாவும் கிரீஸும் ஆங்கிலேயர் சார்பாகத் துருக்கியை எதிர்த்தால் ஆங்கில-பிரெஞ்சுக்காரர்களுடைய நல்லபிப்பிராயம் கிடைக்குமென்றும், அதனால் நன்மையைப் பெறலாமென்றும், தத்தம் அரசர்களுக்கு அறிவித்தார்கள். ஆனால் கிரீஸ் தேசத்து அரசராகிய கான்ஸ்டன்டைன் என்பவரும், பல்கேரியா தேசத்து அரசராகிய ஸார்பேர்டிஞண்ட் என்பவரும் இம்மந்திரிகளுடைய அபிப்பிராயங்களுக் கிணங்கவில்லை.

முடிவாய் வெனிஸலஸ் என்பவர் தமது உத்தியோகத்தை ராஜிநாமாச் செய்து போய்விட்டார்.

ஆஸ்டிரியர்கள் சமாதானத்திற்குத் தயாராஞர்கள்.

இடாலி தென்புறத்திலும் ருஷியா வடபுறத்திலும் ரொமேனியா கிழ்ப்புறத்திலும் எதிர்த்தால் ஜெர்மனியர்கள் ஆஸ்ட்ரியர்களுக்குத் துணைவருவது கூடாத காரியமாகும். ஏனெனில்; ஜெர்மனியப் போர்வீரர்களும் சும்மாவிருக்க வில்லையே. கீழ்த்திசை யுத்தகளத்தில் ருஷியர்களுடனும், மேற்றிசை யுத்தகளத்தில் ஆங்கில-பிரெஞ்ச் உபபலச் சேனைகளுடனும் போர்புரிவதே ஜெர்மனியவீரர்களுக்குப் போதுமானதாயிருக்க, ஆஸ்ட்ரியர்களுக்கு எங்ஙனம் உதவிபுரியக்கூடும்? இவ்விஷயத்தை நன்ருய்க் கவனித்த ஆஸ்ட்ரோ-ஹங்கெரியர்கள், ருஷியர்களுடன் ஒரு சமாதான உடன்படிக்கைக்குவரத் தயாராயிருந்த விஷயத்தை கவுண்ட் டிஸ்ஜோ என்பவர் ஜெர்மன் சக்ரவர்த்திக்கு அறிவித்தார்.

இச்சமயத்தில் ரொமேனியா டிரான்ஸில்வேனியாவை மீண்டும் கைக்கொள்ளவேண்டுமென்பது நியாயமே என்பதை ஸ்திரப்படுத்த ஆங்கில ராஜாங்கத்தார் ரொமேனியாவுக்கு 50-லட்சம் பவுன், அதாவது 7-கோடியே 50-லட்சம் ரூபாய் கடன் கொடுத்தார்கள். இதைக்கண்ட ஜேர்மனியர், புலியைக் கண்டு பூனை சூடிக்கொண்டதுபோலவும், மயிலைக் கண்டு வான் கோழி ஆடுவது போலவும் பல்கேரியர்களுக்குத் தாங்கள் உதவிசெய்யவேண்டுமென்னும் கருத்தைக் கொண்டவர்களாய் கடன் கொடுத்தார்கள்.

ஜெர்மனியர்களிடமிருந்து கடன்வாங்கின பணத்தை பல்கேரியர்கள் என்ன செய்தார்கள்? யாசகம் செய்து பெற்ற பணத்தைத் தூண்டிமுள் வாங்க உபயோகப்படுத்துவதுபோல பல்கேரியர்கள், ஜெர்மனியர்கள் சார்பாய் யுத்தத்திற்கு முன் வந்திருக்கும் துருக்கியர்கள்மீது யுத்தப் பிரயத்தனத்திற்கு ஆரம்பித்துவிட்டார்கள். இதைக் கண்ட ஜெர்மனியர் பல்கேரியர்மீது அருவருப்புக் கொண்டார்கள். இவ்விஷயங்களால் கிரீஸ் அரசரும், பல்கேரிய அரசரும் ஜெர்மனியர் சார்பாக

யுத்தம் புரியவேண்டு மெனுங் கருத்தைக் கொண்டிருந்தார்களெனினும், அக்கருத்தை, அவர்களுடைய குடிகள் அங்கீகரியாமையால், ஜெர்மனிய, ஆஸ்ட்ரோ-ஹங்கேரியர்களுக்கு இவ்விரண்டு தேசங்களின் பலம் துர்ப்பலந்தான்.

அமேரிக்காவின் கடல் வியாபாரக்கட்சி

உலகத்தில் அமெரிக்காவானது ஐந்து பெருங்கண்டங்களுள் ஒன்றென்பது யாவருமறிந்த விஷயம். இது தென் அமெரிக்கா, வட அமெரிக்கா வென இரண்டு பிரிவுகளையுடைய தென்றும் முன் புத்தகத்திலேயே கூறப்பட்டிருக்கிறது. வட அமெரிக்காவானது பிரான்ஸ் தேசத்தைப்போல் குடியரசுக் குட்பட்டது. இக்கண்டத்திலுள்ளவர்கள் சில நூற்றுண்டுகளுக்குமுன் இங்கிலாந்து தேசத்திலிருந்து சென்று குடியேறினவர்கள். ஆகையினால் இவர்கள் பெரும்பாலும் ஆங்கிலேயர்களைப்போலவே தோன்றுவார்கள். பிறகு காலம் செல்லச் செல்ல பல தேசத்து ஜனங்கள் குடியேறினதுபோல, ஜெர்மனியர்களும் அமெரிக்காவில் போய்க் குடியேறினார்கள். இவ்விதம் ஜெர்மனியர் முதலிய பல தேசத்து ஜனங்களால் குடியேறப்பெற்ற அமெரிக்காவானது பிரெஸிடெண்ட் உட்ரோ-வில்ஸன் என்பவரின் அதிகாரத்திற் குட்பட்டது. இவ்விதம் அமெரிக்காவில் குடியேறினவர்களுக்கெல்லாம் அமெரிக்கர்களென்று பெயர்.

இம்மகா யுத்தம் ஆரம்பித்தது முதற்கொண்டு இந்த அமெரிக்கா கண்டமானது நடுநிலைமையை வகித்ததாகவே காட்டிக்கொண்டு வருகிறது. இக்கண்டத்திலிருந்து வியாபாரக்கப்பல்கள், ஐரோப்பாகண்டத்திலுள்ள பிரதான வியாபாரத்துறைமுகங்களுக்குச் சென்றுகொண்டிருந்தன.

அமெரிக்காகண்டத்தில் ஜெர்மனியர்கள் குடியேறியிருந்தமையால், அவர்கள், தங்கள் தேசமாகிய ஜெர்மனிக்கு யுத்தகாலத்தில் யுத்த காரியங்களுக்கு மிக அவசியமாகிய துப்பாக்கி மருந்து குண்டு முதலியவைகளை ஏற்றுமதி செய்வார்களென்று ஆங்கிலேயர் எதிர்பார்ப்பது நியாயவிரோதமானதல்லவே. ஆகையினால், அமெரிக்காவிலிருந்து பிறதேசங்களுக்குச் செல்லுங்கப்பல்களை யெல்லாம் நிறுத்திப் பரிசோதி

க்க ஆரம்பித்தார்கள். இது அமெரிக்கர்களுக்கு விரோதமா யேற்பட்டது. பிரெஸிடெண்ட் உட்ரோ வில்ஸன் இங்கிலாந்திலுள்ள ஸர் எட்வர்ட் கிரேக்கு வியாசம் ஒன்று எழுதினார். அதன் முக்கிய கருத்து யாதெனில், அமெரிக்காவுக்குச் சொந்தமாகிய கப்பல்களும் மற்றும் நடு நிலைமையை வகித்த தேசங்களின் கப்பல்களும் பரிசோதனைக்காக ஆங்கிலேயரால் நிறுத்தப்படு முன்னமே, நியாயவிரோதமான பொருள்கள் அக் கப்பல்களி லுளவா யென்பதை ரூபிக்கப் போதுமான சாட்சிய ஆதாரத்தை ஆங்கிலேயர் கவனிக்கவேண்டுமென்றும், அக்கப்பல்களின் மூலமாய் நடுநிலைமையை வகித்த தேசங்களுக்காக அனுப்பப்பட்டிருக்கும் கிரம விரோதமான பொருள்களை, அப்பொருள்கள் முடிவாய்ப் பகைவர் நாடுகளுக்குச் செல்லும் என்று ஏற்பட்டபோதிலும், ஆங்கிலேயர் எடுக்கக்கூடாதென்றும், சொல்லப்பட்டிருந்ததேயாகும்.

இது ஆங்கிலேயருக்குச் சிறிது கோபத்தை விளைவித்தது. நடு நிலைமை வகித்திருக்கும் ஒரு தேசத்திலிருந்து புறப்படும் கப்பல் ஒன்றில் கிரம விரோதமான பொருள்கள் காணப்பட்டால், அப்பொருள்கள் நடு நிலைமை வகித்திருக்கும் மற்றொரு தேசத்திற்குச் செல்வனபோல் தோன்றின போதிலும், கடைசியாய்ப் பகைவர் நாட்டிற்கே செல்கின்றன என்னும் சந்தேகத்திற்கிடமிருப்பின், பகைவர் நாடுகளுக்கே அனுப்பப்படுவைகளாகக் கருதப்படும் என்று அமெரிக்கர்களே சில வருஷங்களுக்கு முன் விதி ஒன்றை ஏற்படுத்தியிருந்தார்கள்.

ஸர் எட்வர்ட்கிரேயின் பதில்

இவ்விதியின் ஆதாரத்தையே ஆங்கிலேயர் அனுசரித்தவர்களாய் இம்மகா யுத்தத்தில் மரக்கலங்களைப்பரிசோதித்தார்கள். அமெரிக்கா கண்டத்திலிருந்து பிரெஸிடெண்ட் உட்ரோ வில்ஸன் அனுப்பியிருந்த வியாசமானது அமெரிக்கர்களாலேயே நியமிக்கப்பட்ட விதிக்கு முற்றிலும் மாறாயிருந்தது. தனக்கொரு விதியும் பிறருக் கொரு விதியுமாய்க் காண்பிப்பதை ஆங்கிலேயர் சிறிதேனும் விரும்பவில்லை. இதற்கு ஸர் எட்வர்ட் கிரே பதிலளித்தார். அதன் முக்கிய கரு

த்து யாதெனில்—ஆங்கிலேயர்கள் வியாபாரக்கப்பல்களைப் பரிசோதிப்பதினால், நடுநிலைமையை வகிக்கும் டென்மார்க், ஸ்வீடன், முதலிய தேசங்கள் அமெரிக்காவிலிருந்து வாங்கின செம்பின் கணக்கைக் கவனித்தால், அது வருஷத்திற்கு வருஷம் அதிகப்படுகிறது. அமெரிக்காவிலிருந்து ஸ்வீடனுக்கு வந்த கப்பல் ஒன்றில் காணப்பட்ட செம்பும், அலுமினமும், ஜெர்மனிக்குச் செல்வதாகக் கருதப்படுவதற்குப் போதுமான ஆதாரமிருந்தது. அமெரிக்காவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் செம்பானது பெல்ஜியர்களையும், பிரெஞ்சுக்காரர்களையும், ஆங்கிலேயர்களையும் இந்தியவீரர்களையும், ருஷியர்களையும் ஸெர்வியர்களையும் மாய்ப்பதற்குக் குண்டுகளாக மாற்றப்பட்டது.

பகைவர்களுடைய தேசங்களுக்கு எல்லைகளாயும் நடுநிலைமையை வகித்தனவாயுமிருக்கும் தேசங்களுக்கு அனுப்பப்படும் பொருள்களை, கடைசியாய்ப் பகைவர்களுடைய நாடுகளுக்கனுப்பும் நடுநிலைமைத் தேசங்களின்மீது நாம் குறைகூறுவதற்கு மில்லை. ஆகையினால் உண்மையிலேயே பகைவர்களுக்காகவே அனுப்பப்படுகின்றன என்று எண்ணப்படும் பொருள்களை நாம் இடையில் தடுப்பது நமது தேசப்பாதுகாப்பொருட்டேயாகும்.

யுத்த ஆரம்பகால முதற்கொண்டு, அமெரிக்கா தேசத்திலிருந்து வெளிதேசங்களுக்குச் செல்லும் சாமான்களின் ஜாபிதா (Shiping Mamifest) கப்பல் புறப்பட்டு, ஒருமாதம் சென்றபின்னர் தான் வெளியிடப்படுகிறபடியால், பகைவர்களுக்குச் சகாயமான பொருள்கள் கப்பல்களில் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கின்றனவா என்பதை அறியவுங்கூட வில்லை. இதனால் பகைவர்களுக்குச் சகாயமான பொருள்கள் எளிதில் செல்லும் மார்க்கமும், அதனால் நமக்குண்டாகும் அபாயமும் அதிகரிக்கிறது. ஆகையினால், நமது தேசப்பாதுகாப்பின் பொருட்டுக் கப்பல்கள்நிறுத்தப்படுவதும், அவைகளிலுள்ள பொருள்கள் பரிசோதிக்கப் படுவதும் அவசியமாகும். ஆகையினால் அதிக விபரங்களடங்கிய மற்றொரு பதில் எங்களால் அளிக்கப்படும்வரையிலும் தேசங்களுக்குள் ஏற்பட்டிருக்கும் நியாயப்பிரமாணத்தைக்கொண்டே கிரம விரோதப் பொருள்களை

மாத்திரம் பகைவர் நாடுகளுக்குச் செல்லாவண்ணம் தடுப்பது நியாய விரோதமானதல்ல வென்றே ஆங்கிலேயர் கருதுகிறார்கள்.

இவ்விதம் ஸர் எட்வர்ட் கிரே எழுதியபதிலானது, வாசிப்பதற்கு சிநேகப்பான்மையுடைய பாஷையாய் எழுதப்பட்டிருந்தபோதிலும், பிரஸிடெண்ட்வில்ஸன் அனுப்பிய நிருபம் முற்றிலும் தவறானது என்பதை ஸ்திரப்படுத்துவதற்குப் போதுமானதா யிருக்கிறது. ஜெர்மனியர் பக்கம் சேர்ந்து ஆங்கிலேயர்க்கு விரோதமாய் யுத்தம் புரிய மனமில்லாப்பலருக்கு ஸர் எட்வர்ட் கிரே எழுதியபதில் என்ன ஆநந்தத்தைக் கொடுத்தது!

இஃதிங்ஙன மிருக்க, ஸேன்ட் லூயி என்பது அமெரிக்காவில் மிகப் பிரதான நகரங்களுள் ஒன்று. இந்நகர் பெரும்பாலும் ஜெர்மனியர்களால் குடியேறப்பெற்றது. இவ்விடத்திலுள்ள ஜெர்மனியர்களுக்குத் தலைவராயுள்ளவர் ஸேனேட்டர் ஸ்டோன் என்பவர். இவர் பிரஸிடெண்ட் வில்ஸனுக்குக் கடிதமொன்றெழுதி தந்நகரத்திலுள்ளவர்கள் ஜெர்மனியர்களிடத்தே அநுதாப அபிப்பிராயமுடையவர்களாகிறார்களென்பதை அறிவித்தார். இதனால் அமெரிக்காகண்டத்திலிருந்து ஜெர்மனிக்கு, யுத்தத்திற்குரிய பொருள்கள் கப்பல் மூலமாய் அனுப்பப்பட வேண்டுமென்பதே இவருடைய கருத்துப் போலும்.

பிரஸிடெண்ட் வில்ஸன் இக்கடிதத்தைக் கண்டார். தம்முடைய அந்நிய தேச மந்திரியாகிய மிஸ்டர் பிரயன் என்பருடன் யோசித்தார். அமெரிக்கா கண்டத்து ராஜாங்கமானது ஜெர்மனியருக்கும், ஆஸ்ட்ரோ-ஹங்கேரியருக்கும் தீங்கு வருமாறு நடந்து கொள்கிறது என்று அபிப்பிராயம் கொள்வார்கள். ஜெர்மனியர்களுக்கும் ஆஸ்ட்ரோ-ஹங்கெரியர்களுக்கும் கடலின்மீ துள்ள அரசு ஆங்கிலேயர்களுக் குள்ளதைக்காட்டிலும் குறைவுபட்டதல்ல என்பதை யறியவேண்டுமென்றும், அமெரிக்கராஜாங்கத்தார் இடையே பிரவேசித்து, ஆங்கிலேயருக்கும் ஜெர்மனியருக்கும் கடலின்மீதுள்ள அதி

கார தாரதம்மியத்தைச் சமப்படுத்த வேண்டுமெனக் கருது வது தவறு என்றும், அவ்விதம் இடையேபிரவேசிக்க அமெரிக்க ராஜாங்கத்தார் கடமைப்பட் டிருக்கவில்லை யென்றும் பிரஸிடென்ட் வில்ஸனால் ஒருபதில் எழுதப்பட்டு, அந்நிய மந்திரி மிஸ்டர் பிரயனால் கையெழுத்திடப்பட்டு, ஸேனேட்டர் ஸ்டோன் என்பவருக்கு அனுப்பப்பட்டது.

இம்மட்டோடு நிற்கவில்லை. அமெரிக்காவிலுள்ள ஜெர்மனியர்கள் இன்னும் சிலர் ஆங்கிலேயர்க்கு விரோதமாய்த் தீமைபுரியவேண்டு மென்னுங் கருத்தையே மேற்கொண்டிருந்தார்கள். இவ்வித எண்ணங் கொண்டவர்களுள் மிகச் சிரேஷ்டமானவர் மிஸ்டர் எட்வர்ட் பிரேடன் என்பார். இவர் திரவியத்திற் குறைவில்லாதவர். "டேனியர்" என்னுங் கப்பலொன்றைத் தமக்குச் சொந்தமாக விலைக்கு வாங்கிக் கொண்டார். அக்கப்பல் நிறையப்பஞ்சு மூட்டைகளை யேற்றி ஜெர்மனிக்காவது அல்லது ஹாலண்டுக்காவது அனுப்ப வேண்டுமென்று பிரயத்தனம் செய்தார். இப்பஞ்சு மூட்டைகளைக் கப்பல் கொண்டு செல்லும் பொழுது அமெரிக்கா தேசத்துக்கொடியொன்று அக்கப்பலின்மீது பறக்கவேண்டும் என்பதும் இவருடைய கருத்து. இக்கப்பல் செல்கையில் அமெரிக்காதேசத்துக்கொடி யிருந்தும் ஆங்கிலேயரால் தடுக்கப்படுமென்றும், அவ்விதம் தடுக்கப்படாவிட்டால் அது ஆங்கிலேயர்க்குள்ள பயத்தைக் காண்பிக்கு மென்றும் இவர் நினைத்தார். முடிவாய்க் கப்பல் பஞ்சுமூட்டைகளுடன் புறப்பட்டது. தடையாதொன்று மின்றி அட்லாண்டிக் மகாசமுத்திரத்தில் நெடுந்தூரம் வந்துவிட்டது. இங்கிலீஷ்ச் சானலை நெருங்கியது. அங்கு பிரெஞ்சுக்காரருடைய கப்பல் ஒன்றின்முன் இது தென்பட்டது. உடனே பிடிபட்டதென்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

மிஸ்டர் பிரேடன் என்பவர் நினைத்த காரியம் சிறிதும் நிறைவேற வில்லை. ஆங்கிலேயரால் இக்கப்பல் பிடிக்கப்படுமென்று நினைத்தார். அங்ஙனமின்றி அது பிரெஞ்சுக்காரரால் பிடிக்கப்பட்டது.

இனி இவர் என்ன பிரயத்தனம் செய்யக்கூடும்? இன்னும் பற்பல நகர்களிலுள்ள ஜெர்மனியர்கள் பலவாறு செய்த பிரயத்தனங்களின் முடிவாக, வாஷிங்டன் என்னும் நகரில் ஆலோசனைக்கூட்டமொன்று நடந்தது. அதில், அமெரிக்கா தேசத்தில் கீர்த்திபெற்றவர்களும் அதிகாரத்தை வகித்தவர்களும் அனேகர் வந்திருந்தார்கள். அதில் ஏற்பட்ட விதிகளாவன :—

(1) தேசங்களின் ஒற்றுமைப்பாட்டுக்காக ஏற்படுத்தப்பட்ட சட்டங்களின்படியே, கிரம விரோதமில்லாத பொருள்களை நாம் நமது தேசத்திலிருந்து கப்பல்கள் மூலமாய்ப் பிற தேசங்களுக்குச் செலுத்தவேண்டும்.

(2) அமெரிக்கா தேசத்திலிருந்து துப்பாக்கிகளும் துப்பாக்கி மருந்துகளும் வெளி தேசங்களுக்குச் செல்லக்கூடாதென்னும் சட்டம் ஏற்படுத்தப்படவேண்டும், என்பதே அமெரிக்கர்களாகிய நம்முடைய கொள்கை.

(3) பிறதேச நன்மைகளைக் கவனியாது, அமெரிக்கா தேசத்து நன்மையையே மேற்கொண்டு உதவி புரிபவர்களே, அமெரிக்கா தேசத்திலுள்ள ராஜாங்க உத்தியோக சாலைகளில் நியமிக்கப்படுவார்கள். இதற்கு நாமெல்லோரும் ஏகமனதுடைவர்களாய்ச் சம்மதித்திருக்கிறோம்.

இவ்விதிகள் மூலைக்கு மூலை பேய்பிடித்தாடும் ஜெர்மனியர்களை அடக்கி விட்டன. மேற்கூறிய விஷயங்களே அமெரிக்கா இம்மகா யுத்தத்தில் ஈடுபட்ட விஷயங்களுட் சிலவாகும்.

பதின்மூன்றாவது அத்தியாயம்

தென்னாப்பிரிக்காவில் மேன்மேலும் யுத்தம்.

யுத்த ஆரம்பகாலத்தில் நமது ஜார்ஜ் சக்ரவர்த்திக்குத் துணை வருமாறு பற்பல தேசங்களிலுள்ள பிரஜைகள் பற்பலவாறு யுத்தாவேசங் கொண்டதுபோல, தென்னாப்பிரிக்காவிலும் போயர்கள் ஜெனரல் போதாவின் தலைமையின்கீழ் ஆங்கிலேயர் சார்பாய் அபிமானங்கொண்டிருந்தார்களென்பதை முன் புத்தகத்திலேயே கூறியிருக்கிறோம்.

தென் ஆப்ரிக்காவானது, சுமார் எட்டு வருஷங்களுக்கு முன் நடந்த போயர் யுத்தத்தின் முடிவாக, ஆங்கிலேயர்களால் சுய அரசாட்சி பெறப்பட்ட தென்பதும், தென்னாப்ரிக்காவுக்கு மேற்புறத்திலுள்ள தென்மேற்கு ஆப்ரிக்கா என்னும் பாகம், ஜெர்மனியர்களுக்குச் சொந்தமான தென்பதும் அறியப்படத்தக்கவைகளே.

தென்னாப்ரிக்காவானது ஜெனரல் போதா என்பவரின் அதிகாரத்திற்குட்பட்டது. இவர்நெட்டாலில் 1863-ம்வருஷத்திற் பிறந்தவர். சென்ற போயர் யுத்தத்தில் இவர் காட்டிய வீரத்தன்மையை ஆங்கிலேயர்கள் மிகவும் வியந்தவர்களாய் யுத்தம் முடிந்த பின்னர், இவரையே தென்னாப்ரிக்காவுக்குத் தலைவராய் நியமித்தார்கள். இவருடைய அறிவின் பெருக்கும் ஆங்கிலேயர்மீதுள்ள அன்பும், விஷயங்களை எளிதில் கிரகிக்கும் சக்தியும், பின்வரும் காரியங்களை முன்னதாகவே உணரும் திறமும், யாவரிடத்திலும் காட்டும் நல்லெண்ணமும் ஆச்சரியப்படத்தக்கவைகளே. இவருக்குப் பிரதான மந்திரியா யுள்ளவர் ஜெனரல் ஸ்மட்ஸ் என்பார். இவர்களே தென்னாப்ரிக்காவிலுள்ள சேனைகளனைத்திற்குந் தலைவர்கள்.

இத் தென்னாப்ரிக்காவில் டிபன்ஸ் போர்ஸ் அல்லது பாதுகாப்புப்படை என்னும் ஒருசேனையுண்டு. இப்படைக்குத் தளகர்த்தராயுள்ளவர் ஜெனரல் பேயர்ஸ் என்பவர். இவர், சென்ற 1913-ம் வருஷம் யுத்தப் பயிற்சிக்கு வேண்டிய பயிற்சிகளை அறிந்துகொள்ள ஜெர்மனிக்குச் சென்றிருந்தார்.

இவர் ஜெர்மன் ஸ்திரீ ஒருத்தியை விவாகம் செய்துகொண்டிருந்தார். அவள் மிகவுந் தேசாபிமானமுடையவள். அவளை விவாகம் செய்து கொண்ட பின்னர் ஜெனரல் **பேயர்ஸ்** என்பவரின் அபிப்பிராயங்கள் பெரும் பான்மையும் ஜெர்மனியர் பாலே சென்றன. இந்த ஜெனரல் பேயர்ஸ், ஜெர்மனிக்கு வந்திருந்தபொழுது கெய்ஸர் இவரைக்கண்டார். ஜெனரல் பேயர்ஸ் மிகவும் உயர்ந்து வளர்ந்து காண்போர் மனதைக் கவரக்கூடிய அழகு வாய்ந்த சரீரத்தையுடையவர்.

கெய்ஸர் சக்ரவர்த்தி அழகுடன் காணப்படும் ஆடவர்களை விரும்பும் சுபாவத்தை யுடையவர். ஆகையினால் ஜெனரல் பேயர்ஸுக்கும் கெய்ஸர் சக்ரவர்த்திக்கும் சிநேகம் உண்டாயிற்று. எவ்விதமாயினும் தென்னாப்ரிக்காவைத் தென்மேற்கு ஆப்ரிக்காவுடன் சேர்த்து ஜெர்மனியருடைய ஆளுகைக்கு உட்படுத்தினால் பிரெஸிடெண்ட் உத்தியோகம், அதாவது ஏறக்குறைய அரசர்களுக்குள்ள அதிகாரத்தை வகித்த உத்தியோகம் கொடுப்பதாய் கெய்ஸர் சக்ரவர்த்தி ஜெனரல் பேயர்ஸுக்கு அறிவித்தார். இவர் ஜெர்மனியிலிருந்து தென்னாப்ரிக்காவுக்குத் திரும்புகையில், மீசைகளை முறுக்கி ஆகாயமளவும் வளர்ப்பிப்பது போல் பாவனை பண்ணி, தாமே கெய்ஸராக ஓர் வித இறுமாப்புங் கொண்டார்.

தென்னாப்ரிக்காவில் லிக்டன்பர்க் என்னு மொரு நகருண்டு. இந்நகரிலுள்ளார் பெரும்பாலும் கால்வினிஸ்ட் என்னுங் கக்ஷியார். அதாவது இந்தியா தேசத்தில் புத்தமதம் பெருகி பிராமணர்கள் க்ஷீணித்தபொழுது, இவ்விரு மதங்களின் கொள்கைகளுள் பிரதானமானவற்றைக் கையாண்டு, சமணர் என்னும் பொது மதத்தினர் ஏற்பட்டதுபோல, சில நூற்றாண்டுகளுக்கு முன் ஐரோப்பாக் கண்டத்தில் உண்டான மத பேதத்தின் முடிவாக, இந்த கால்வினிஸ்ட் என்னும் ஜாதியார் ஏற்பட்டார்கள். இந்த ஜாதியார் மிகவும் மூர்க்க பிடிவாதக்காரர்கள்.

"புல்லாய்ப் பூடாய்ப் புழுவாய் மரமாகி
பல் விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிப்
எல்லாம் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்"

எனஸ்ரீமந் மாணிக்கவாசக சுவாமிகள் எடுத்துரைத்ததையே ஆதாரமாகக்கொண்டு, முதலில்தாவரஜங்கமமாய், பிறகு பக்ஷிகளாய் அதன் பின்னர் மிருகங்களாய், கடைசியாய் மனித ஜன்மமாய் ரூபமெடுப்பதே ஆத்மாவுக்கு இயல்பாகும். அஃதன்றி, தாவர ஜன்மத்திலிருந்தாவது, அல்லது பக்ஷி ஜன்மத்திலிருந்தாவது திடீரென்று மனித ஜன்மங் கிடைக்காதென்றும், ஒவ்வொரு மனிதனும் முன் ஜன்மத்தில் வானர ஜன்மம் எடுத்திருக்கவேண்டுமென்றும், குரங்கானது வாலுள்ள நரன், மனிதன் வாலில்லா நரன் என்றும், இவ்விதம் ஆத்மா படிப்படியாய்ப் பல ஜன்மங்கள் எடுப்பதில் கடவுளுடைய தலைமைத்துவ விருப்பம் சிறிதேனும் பயன்படுகிறதில்லை யென்றும் நெடு நாளைய சாஸ்திர ஆராய்ச்சிகளின் முடிவாக எடுத்துரைத்த தார்வின் என்பவர், இந்தக் கால்வினிஸ்ட் ஜாதியார் முன் வந்தால் இவர்கள் உடனே அவரை பஸ்மீகரம் பண்ணி விடுவார்கள்.

இவ்வித மூர்க்க வைராக்கியம் கொண்ட கால்வினிஸ்ட் ஜாதியாருள் ஜோசியர் ஒருவர் உண்டு. இவர் பெயர் வான்ரன்ஸ்பர்க். இவர் இம்மகாயுத்தத்தில் சொன்ன ஜோசியம் பின் யெடுத்துரைக்கப்படும்.

ஐரோப்பாக் கண்டத்தில் இம்மகா யுத்தம் ஆரம்பித்து விட்டது. தென் மேற்கு ஆப்ரிக்காவிலுள்ள ஜெர்மனியர்கள் தென்னாப்பிரிக்காவின்மீது ஒருகால்யுத்தத்திற்கு வருவார்கள். எனவும் எதிர் பார்க்கப்பட்டது. இதற்காக ஜெனரல் போதா தென்னாப்பிரிக்காவில் வேண்டிய முயற்சிகளைச் செய்வதுமன்றி போயர்களுடைய மனதை ராஜ விசுவாச மார்க்கத்திலேயே செலுத்த வேண்டிய கடமையும் ஏற்பட்டது.

இஃது இங்ஙன மிருக்க, ஜெனரல் போதாவின் மீது பொறாமை கொண்டவர் ஒருவர் உண்டு. அவர் ஜெனரல் ஹெர்ட்ஸாக் என்பவர். அவர் உலாந்து ஜாதியைச் சேர்ந்தவர். அவருடைய விருப்பமெல்லாம் ஜெனரல் போதாவை உத்தியோகத்தினின்றும் தள்ளி விட்டுத் தாம் அவ்வுத்தியோகத்தை வகிக்கவேண்டுமென்பதே. இவர் மேற்கு ட்ரான்ஸ்

வாயில் அநேகம் போயர்களை ஒருங்கு கூட்டிக்கலகம் செய்ய ஆரம்பித்தார். உடனே மேற்கூறிய ஜெனரல் ஸ்மட்ஸின் கீழ் அலுவல் பார்க்கும் ஜெனரல் டிலாரி என்பவர், அவ்விடம் கடிதிற் சென்றார். அங்கிருந்த போயர்களைப் பயமுறுத்தி அவர்களைக் கலகத்தினின்றும் நீக்கினர். ஆயினும், ஜெனரல் ஹெர்ட்ஸாக் என்பவர் சும்மா விருக்கவில்லை. அவருக்குத் துணையாய் ஸ்டேன் என்பவர் ஒருவர் சேர்ந்தார். இவர்களிருவரும் ஒரு கட்சியாகவும், ஜெனரல் போதாவும் ஜெனரல் ஸ்மட்ஸும் மற்றொரு கக்ஷியாகவும் கலகம் நடந்து கொண்டிருக்கையில், ஜெனரல் பேயர்ஸ் என்பவருடன் கிறிஸ்டியன் டிவெட் என்பவர் சேர்ந்து கொண்டு, ஜெனரல் டிலாரி என்பவரைத் தென்மேற்கு ஆப்ரிக்காவிலுள்ள ஜெர்மனியர் பக்கத்தில் சேர்க்கவேண்டுமென்று முயன்றுகொண்டிருந்தார்.

இடையில் தென்னாப்ரிக்காவின் பாது காப்புக்காகச் சக்ரவர்த்தியின் சேனை அவசியமில்லையென்றும், போயர் சேனையே போதுமானதென்றும். அவ்விஷயத்தில் தாமே தலைமை வகித்து தென்மேற்கு ஆப்ரிக்காவிலுள்ள ஜெர்மனியர்களை வெல்வதற்கு உத்தரவாதியென்றும் சக்ரவர்த்திக்கு அறிவித்துவிட்டார்.

யுத்தம் நடக்கும் காலத்தில் ஜனங்கள் ராஜவிசுவாசத்தை மறப்பது நன்றல்லவென்றும், தென்னாப்பிரிக்கர் அத்தகைய மதியீனர்கள் அல்லரென்றும், கிறிஸ்தவ மதக் கோட்பாடுகளுக்கே அத்தகைய விசுவாச காதகம் ஒவ்வாததென்றும், பற்பல விதமாய் போயர்களுக்கு எடுத்துரைத்து அவர்கள் மனதையெல்லாம் ஏகமனதாக்கினர்.

இவற்றையெல்லாம் மேற்கூறிய ஜோசியர் வான் ரன்ஸ்பர்க் அறிந்தார். உடனே தாம் கண்ட இரண்டு கனவுகளின் பலன்களை யெடுத்துரைக்க ஆரம்பித்தார். நமது சாஸ்திர ஆராய்ச்சிகளின்படி மனிதனுக்கு முன் ஜன்மம் ஒன்றுண்டென்றும், இனி ஒரு ஜன்மம் வருமென்றும் ஏற்படுகின்றன. இப்பொழுதிருக்கும் ஜன்மத்தையும் கூட்டிச்சேர்த்தால் மூன்றாகின்றன. கனவுகளிலும் மூன்று வகையுண்டு. அவையாவன:--(1) இரவில் நித்திரை செய்கையில் இவ்வாத்மாவானது,

முன் ஜன்மத்து அநுபவங்களை மீண்டும்உணர்தல்; (2) நடக்கும் ஜன்மத்தில் இறந்த கால நிகழ்கால எதிர்கால அநுபவங்களை யுணர்தல்; (3) இனி எடுக்கும் ஜன்மத்தில் நடைபெறும் விஷயங்களை முன்னரே உணர்தல். இவ்வித கனவுகள் இராப்பொழுதில் எவ்வெக்காலத்தில் எந்த எந்த ஜன்மங்களைப் பற்றிக்குறிக்கின்றன வென்பது இப்புத்தகத்திற்கு அவசியமில்லை யாதலின், இம்மட்டோடு நிறுத்தி, வான்ரன்ஸ் பர்க் கண்ட கனவுகளைப்பற்றிக் கூறுவோம். மேற்கூறிய மூன்று கனவுகளில் இவர் கண்ட கனவுகள் சேர்ந்தவையல்ல வென்றே நாம் நினைக்கவேண்டும். ஒருவேளை அவ்வகுப்புகளைச் சேர்ந்தனவாயிருந்த போதிலும் அவைகளைச் சரியாய் எடுத்துரைக்குந் திறம் இவரிடத்தில்லை யென்பது ஸ்திரம்.

முதற்கனவாவது—அகண்ட சமுத்திரம் ஒன்று தோன்றிற்று. அதன் மீது ஐந்து பெரிய எருதுகள் யுத்தம் செய்துகொண் டிருந்தன. அவைகள் ஐந்தும் வெவ்வேறு நிறங்களையுடையனவாயுந் தோன்றின. ஒன்று நீலநிறமுடையதா யிருந்தது. மற்றொன்று சிகப்புநிற முடையதாயிருந்தது. நீலநிற எருது சிகப்பு நிற எருதைக் கொம்பினால் முட்டித் துளைசெய்து விட்டதாம். இவருடைய வியாக்கியானத்தில் நீலநிற எருது ஜெர்மனியாம்; சிகப்பு நிற எருது இங்கிலாந்தாம். என்னே மதியீன வியாக்கியானம்!

இரண்டாவது சிலகூட்டக்காரர்கள் ஆரஞ்சு நதியைக் கடந்து, ஒரு பெரிய பாலைவனத்தை யடைந்து, அங்கு சில ஜெர்மனியப்போர்வீரர்களைக் கண்டார்களாம். அவர்களிடம்சிறிது நேரம் சம்பாஷித்துப் பிறகு நதியைக் கடந்து திரும்பினார்களாம். சென்றவர்கள் ஆங்கிலேயர்கள் என்றும், ஜெர்மனியர்களுடன் போர்புரியாமல் மீண்டுந் திரும்பிவிட்டார்களென்றும், இவருடைய அறிவிலாத் தன்மையை வியாக்கியான மூலமாய் வெளிப்படுத்தினர். இவ்விரண்டு கனவுகளின் வியாக்யானங்களும், ஏற்கெனவே மனக்கலக்கமுள்ள ஜெனரல்பேயர்ஸ் முதலானவர்களுக் கெட்டியது. இதற்கிடையில் ஜெனரல் போதா தென்மேற்கு ஆப்ரிக்காவில் படையெடுக்குமாறுவிடா முயற்சிகளைச் செய்துகொண் டிருந்தார். தென்னாப்பிரிக்காவில்

பாதுகாப்புச் சேனைக்குத் தளகர்த்தராயிருக்கும் ஜெனரல் பேயர்ஸ், தம்முடைய அபிப்பிராயமெல்லாம் ஜெர்மனியர் சார்பிலிருந்தும், அலுவல் பார்ப்பது ஆங்கிலேயர் சார்பிலுள்ள தென்னாபிரிக்கா பாதுகாப்புச் சேனையிலிருந்ததினால், அலுவலை விட்டுவிட வேண்டிய அவசியம் நேரிட்டது.

இவர் வேறு என்னதான் செய்வார்? மனைவியோ ஜெர்மனிய ஸ்திரீ! ஜெர்மனிச் சக்ரவர்த்தியோ இந்திர பதத்தைத் தந்துவிடுவதாகக் கூறியிருக்கிறார். இவற்றுடன் அசட்டுச் சோசியர் ஒருவருடைய அறிவிலாக் கனவுங்கூடச் சேர்ந்தது. அதன்மேல் தாம் ஜெர்மனியர் பக்கம் சேர்ந்து விடுவதாய்த் தீர்மானித்துவிட்டார். உடனே ராஜிநாமா தயார் செய்தார். அதை ஜெனரல் போதாவுக்கு அறிவிக்கு முன்னரே சமாச்சாரப் பத்திரிகைகளுக்கு அறிவித்தார். ஆனால் சமாச்சாரப் பத்திரிகைகள் இதை வெளியிடவில்லை. இந்தராஜிநாமா வியாசம் அடியில் வருமாறு:—

பிரிடோரியா
15—9—14.

ஜெனரல் ஸ்மட்ஸ் அவர்களுக்கு,

மேன்மை பொருந்திய ஐயா! சேனைகளைத் தென்மேற்கு ஆப்ரிக்காவுக்குச் செலுத்தி அங்குள்ள ஜெர்மனியர்களை வெல்வது என்னுடைய அங்கீகாரத்திற்குட்பட்டதல்லவென்பதை நான் தங்களுக்கும், ஜெனரல் போதாவுக்கும் சென்ற ஆகஸ்ட்டு மாதம் வாய்வார்த்தைகளால் எடுத்துரைத்திருக்கிறேன். இது தாங்களறிந்த விஷயம். நான் அப்பொழுதே என் அலுவலை விட்டுவிடுவதாயிருந்தும், விடாமைக்குக் காரணம் பார்லிமெண்டார் ஒருங்குகூடி நன்று ஆலோசித்து இவ்வித கஷ்டத்தினின்றும் ஓர் வழி யேற்படுத்துவார்கள் என்னும் நம்பிக்கையே. ஜெர்மனியர்களால் யாதொரு கோபத்திற்கும் காரணம் ஏற்படாமலே தென்னாப்பிரிக்கா ராஜாங்கத்தார் தென்மேற்கு ஆப்ரிக்காவின்மீது படையெடுக்கவேண்டுமென விரும்பியதைப்பார்லிமெண்டார் அங்கீகரித்தது எனக்கு ஆச்சரியத்தைத் தருகிறது. தென்னாப்பிரிக்காவில் குடியிருக்கும் உலாந்து ஜாதியார்கள் தென்மேற்கு ஆப்ரிக்காவின்மீது படை

எடுப்பதை அங்கீகரியார்கள் என்பதைச் சென்ற இரண்டு ஆலோசனைச் சங்கங்களி லேற்பட்ட தீர்மானங்களே வெளிப் படுத்தும். இவ்விஷயத்தில் நான் ஜனங்களுடைய அபிப்பிராயத்தை யாதொரு பலாத்காரமின்றியே என் பக்கம் சேர்த்துக்கொள்ள முயல்கிற விஷயத்தை ராஜாங்கத்தார் அறிய வேண்டும்.

நியாயத்தை நிலைநிறுத்தும் பொருட்டும், சிறு தேசங்களைப் பாதுகாக்கும் பொருட்டும் இங்கிலாந்து தேசமானது இம்மகாயுத்தத்தில் ஈடுபட்டதென்று சொல்லப்படுகிறது. ஜெர்மனியோடு யுத்தம் செய்வது நியாயமல்ல வென்பதை இங்கிலாந்து தேசத்திலுள்ள பார்லிமெண்டு மெம்பர் மூவர் ராஜிநாமாக் கொடுத்துச் சென்றுவிட்ட விஷயமே ரூபிக்கிறது. தன் காரிய ஜெயத்தின் பொருட்டு, சமயம் வாய்க்கும் பொழுது சிறுதேசங்களைக் காக்க இங்கிலாந்து முன் வருவதாகவும், சரித்திரம் நமக்கு அறிவிக்கிறது சிறு தேசங்களினுடைய சுய ஆட்சிகளையும், சமாதான உடன்படிக்கைகளின் நிபந்தனைகளையும், அதே ஆங்கில ராஜாங்கமே கெடுத்திருக்கிறதாகவும் சரித்திரவாயிலாய், சந்தோஷமின்றி நாமறிகிறோம்.

மேற்கூறியவற்றின் ஆதாரமாக, தென்னாப்ரிக்காவும் ஆரஞ்சு ரிவர் ப்ரீஸ்டேட்டும் பட்டபாட்டை நான் எடுத்துரைக்க வேண்டியது. ஜெர்மனியர்களுடைய மூர்க்கமாகிய கொடுமைக்கு விரோதமாக இம்மகாயுத்தம் ஆரம்பிக்கப்பட்டதென்றும் சொல்லப்படுகிறது. நமது தேசமாகிய இத்தென்னாப்ரிக்காவில், சென்ற தென்னாப்ரிக்கா யுத்தத்தில் செய்யப்பட்ட கொடுமைகளை யெல்லாம் நான் மன்னித்திருக்கிறேனே யொழிய மறக்கவில்லை. ஜெர்மனியர்கள் பெல்ஜியத்தில் லூவேன் நகரைக் கொளுத்தினதாக நாம் மிகவும் கேள்விப்படுகிறோம்.

சென்ற தென்னாப்ரிக்கா யுத்தத்தில், நகர்களில்லாவிடினும் எத்தனையோ தோட்டங்கள் லூவேன்களாய் விட்டன. இச்சமயத்தில் ஆங்கில ராஜாங்கத்தார் நமது ராஜாங்கத்திற்கு 70-லட்சம் பவுன் கடன் கொடுத்திருக்கிறதாகவும் தெரியவருகிறது. இது மிகவும் பொருளைக்கொண்டதே. ராஜாங்கத்தார் பிறதேசங்களைச் சேர்க்கவேண்டுமென்னுங் கொள்கையர்களா

யிருக்கிறார்களென்பதற்குப் போதுமான ஆதாரமில்லாமலிருக்கையில், சமயம் நேரிட்டால் தென்னாப்பிரிக்காவை ஜெர்மனியர் சேர்த்துக்கொள்ளத் தீர்மானித்திருக்கிறார்களென்று தாங்கள் ஜனங்களைப் பயமுறுத்துகிறீர்கள்.

ஜெர்மனியர்களால் கோபமூட்டப்படாமல் நாமே நமது பக்கத்திலிருந்து தென்மேற்கு ஆப்ரிக்காமீது படையெடுத்தால், அவர்கள் தென்னாப்பிரிக்காவைச் சேர்த்துக்கொள்வது துரிதத்தில் முடிந்துவிடுமென்பது எனது அபிப்பிராயம். நமது எல்லைத் தேசங்களை ஜெர்மனியர் பாழாக்குகிறார்களென்று பார்லிமெண்டில் சொல்லப்பட்டது ஆதாரமற்ற விஷயமாகும். எல்லைத் தேசங்களிலும் அவற்றிற்குச் சமீபத்திலு மிருக்கும் லெப்டினெண்ட் கானல் மாரிட்ஸ் முதலானவர்களுடைய ரிப்போர்ட்டை வாசிக்கவும்.

தென்மேற்கு ஆப்ரிக்காவிலுள்ள ஜெர்மனியர்கள் வரம்பு கடந்து நடப்பார்களென்று நமது ராஜாங்கத்தார் எதிர்பார்த்தது வீணேயாயிற்று. ஏனெனில், இதுகாறும் எல்லை நாட்டைக் கடந்து வந்ததாக ஏற்படவில்லை. தென்னாப்ரிக்காவில் என்ன நேரிட்டபோதிலும் யுத்தமானது ஐரோப்பாக்கண்டத்தில் முடிவு பெறும். ஆகையினால், ஜெர்மனி ஜெயம் பெற்று நம்மை ஒரு வேளை யெதிர்த்தாலும், அப்பொழுது இங்கிலாந்து தேசமானது நமக்கு உதவி செய்யச் சக்தி யற்றிருந்தாலும், நாம் நமது தேசத்தை விட்டு வெளி செல்லாம லிருப்போமாயின், நமது தேசத்தை நாம் பாதுகாத்துக்கொள்வதற்குப் போதுமான காரணம் ஏற்படும். நாம் எதிர்க்கப்பட்டால் நம்முடைய ஜனங்களெல்லாம் ஏகோபித்து யுத்தத்திற்குப் புறப்படுவார்கள்.

தவிரவும், தென்மேற்கு ஆப்ரிக்காவில்தற்கால மிருக்கும் எண்ணாயிரம் ஜெர்மனியர்களும், நம்மை எதிக்கும்படியான அவ்வளவு அறிவிலிகளாயிருக்கமாட்டார்கள். அவ்விதம் அவர்கள் எதிர்த்தால் போயர்களும் ஆங்கிலேயர்களும் ஒன்று சேர்ந்து தேசப் பாதுகாப்புக்காக வரும் பொழுது, நான் சேனையின் தலைவனாயிருந்து நடத்துவதற் குரிய பெருமை

யுடையனு யிருப்பேன். நான் இந்த தளகர்த்தவேலையை ஒப்புக்கொண்டது நமது தேசப்பாதுகாப்புச் சட்டத்தின் கீழாகும். தேசப் பாதுகாப்புப் படையானது தேசத்தின் பாதுகாப்புக்கு மாத்திரந்தான் உபயோகிக்கப்படவேண்டுமென்று அச்சட்டத்தின் ஆரம்பவிதியே கூறுகிறது. நமது படை, ஜெர்மனிய தென்மேற்கு ஆப்ரிக்காவுக்குச் செல்லவேண்டுமென்று பார்லிமெண்டார் தீர்மானிப்பதனுலேயே அவ்வாரம்ப விதி மாற்றப்படக் கூடாது. அவ்விதம் தீர்மானிப்பதும் பார்லிமெண்டு விதிக்கு மாறானது. ஆகையினுல் தேசப்பாதுகாப்புச் சட்டங்கள் நாம் வெளி தேசங்களுக்குச் சென்று அங்கிருக்கும் பகைவர்களை உள் நாட்டிற்குக்கொண்டு வந்து தீமூட்டச் செய்யும்படி கூறவில்லை. ஆனுல், எதிரிகள் நம்முடைய தேசத்திற்கு வருவார்களாகில், நாம் அவர்களைத் துரத்தி அவர்களை அவர்களுடைய நாட்டுக்குச் செலுத்துவது அவசியமாகும்.

சென்ற தென்னுப்ரிக்கா யுத்தம் முடிந்த பின்னர், பெல்ஜியர்களும் பிரெஞ்சுக்காரர்களும் நமக்கு ஏராளமாக உதவி செய்தார்களென்று ஜெனரல் போதா கூறுகின்ருர். அவர்கள் அவ்விதம் செய்த உதவி நம்முடைய ஜனங்களால் இன்னும் பெருமையாய்ப் பேசப்படுகிறது. ஆயினும் நமக்கு உதவி செய்வதில் ஜெர்மனியர்களும் பின் தங்கவில்லையே என்பது நாம் மறக்கக்கூடாது. ஆகையினுல் நாம் ஏன் வேணுமென்றே அவர்களைப் பகைவர்களாக்கிக் கொள்ளவேண்டும்? தற்கால நிலைமையை நோக்கி, எனக்கு நமது தேசத்தின்மீதிருக்கும் அன்பிற்கும் குறைவுவராமல், நம்முடைய சேனை ஜெர்மனிய தென்மேற்கு ஆப்ரிக்காவுக்குச் செல்வதை நான் மறுத்துப் பேசுகிறேன். இந்த யுத்தத்தினுல் பரவும் நெருப்பு எவ்விதம் முடியுமென்பதை யாவரே எடுத்துரைக்கக்கூடும்? மேற்கூறிய காரணங்களை முன்னிட்டு, நான் இப்பொழுது செய்து வரும் தளகர்த்த உத்தியோகத்தை விட்டுவிட வேண்டியது அவசியமாயிருக்கிறது. ஜனங்களிடத்து எனக்குள்ள கடமைக்கும் விசுவாசத்திற்கும் குறைவில்லாமல் ஏற்பட்ட வழி இது ஒன்றேயாகும். இதுவரையிலும் என்னுடைய மேலான அபிப்

பிராயங்களின்படியே என் அலுவலைச் செலுத்தியிருக்கிறேன். என்னுடைய அலுவல் இவ்விதம் முடிவதைப்பற்றிநான் மிகவும் வருந்துகிறேன்.

ஜி. ஜி. எல். பேயர்ஸ்

இக்கடிதத்தை ஜெனரல் ஸ்மட்ஸ் கண்ணுற்றார். அது ஜனங்களுக்கு ராஜாங்கத்துள்ள நல்லபிப்ராயத்தைப் பேதப்படுத்துமென எளிதி லுணர்ந்தார். இந்த ராஜிநாமாக் கடிதத்திற்கு அவர் கொடுத்த தக்க விடை அடியில் வருமாறு:—

பிரிடோரியா,
19-9-14

ஜெனரல் ஜி. ஜி. எல் பேயர்ஸுக்கு

ஐயா,

பாதுகாப்புப்படையின் தளகர்த்த உத்தியோகத்தைத் தாங்கள் ராஜிநாமாக் கொடுத்த, 15-ந் தேதியுள்ள கடிதம், கிடைக்க எனக்கு வருத்தமாயிற்று. இந்த ராஜிநாமா வருங்காலத்தில் ராஜாங்க விவகாரங்களின் நிலைமையும், ராஜிநாமாக் கொடுப்பதை நியாயப் படுத்துவதற்குத் தாங்கள் உபயோகப் படுத்தும் பாஷையும் வருத்தத்தையே தருகின்றன.

தென்மேற்கு ஆப்ரிக்காவின்மீது படையெடுப்பதற்குத் தங்களுக்கிருந்த ஆக்ஷேபங்களை நான் முன்னரே அறிந்துள்ளேன். ஆனால் இவ்வலுவலை விட்டுச்செல்வீர் என நான் அபிப்பிராயப்படவில்லை. ஆனதுபற்றியே, ராஜாங்கத்தாரிட மிருந்து ரகஸ்ய விஷயங்களெல்லாம் உமக்கும் வெளியிடப்பட்டது. விவகாரங்க ளெல்லாம் பெரும்பான்மையும் தங்கள் ஆலோசனையின்படியே நடத்தப்பட்டன. பிரதான உத்தியோகஸ்தர்களெல்லாம் உம்முடைய சிபார்ஸின் பேரிலேயே நியமிக்கப்பட்டார்கள்.

நான் கடைசியாய்ப் பார்லிமெண்டி னிமித்தம் கேப்டவுனுக்குச் சென்றிருந்த பொழுது, தென்மேற்கு ஆப்ரிக்காவுக்கும் நமது நாடாகிய தென்னாப்ரிக்காவுக்கு மிடையே யுள்ள சேனைகளை நீர் சென்று காணவேண்டுமென்பதும், யுத்த ஏற்பாடுகள் ஆரம்பித்த வுடனே வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து

நீபேர சேனைக்குத் தலைவராயிருக்கவேண்டு மென்பதும், தங்களுக்குக் கொடுத்த ஆக்கினைகளாகும்.

பார்லிமெண்டார் யுத்த காரியங்களுக்குச் சம்மதப்பட்டது உமக்குச் சுலபமான மார்க்கமாயிருக்கு மென்றே ஒவ்வொருவரும் எதிர்பார்க்கவேண்டும். இந்த யுத்த காரியத்தில் பார்லிமெண்டார் ராஜாங்கத்தின் அபிப்பிராயத்தை அங்கீகரிப்பார்களென்று நீர் எதிர்பார்த்தீர் போலும்! உம்முடைய எதிர்பார்த்தலுக்கு மாறாகப் பார்லிமெண்டார் அங்கீகரித்த விஷயமே உம்முடைய ராஜிநாமாவுக்கும் காரணம் போலும்!

உம்முடைய ராஜிநாமா விஷயத்தில் ஏற்பட்ட சந்தர்ப்பங்கள், எனக்கும் என்னுடன் கூடவிருக்கும் மற்ற உத்தியோகஸ்தர்களுக்கும் எவ்வளவு அதிர்ப்திகரமான அபிப்பிராயத்தை உண்டுபண்ணி யிருக்கின்றன வென்பதைப்பற்றி நான் சொல்லவேண்டியதில்லை. உம்முடைய ராஜிநாமாக் கடிதத்தில் எழுதப்பட்டிருக்கும் விஷயங்களெல்லாம் இவ்வதிர்ப்திகரத்தை அதிகப்படுத்துகின்றன. ஆங்கில அரசாட்சியாரின் சேனை ஒன்றுக்குத் தளகர்த்தராயிருந்து எழுதும் ராஜிநாமாக் கடிதத்தில் இங்கிலாந்து தேசத்தைத் தாக்கிப்பேசுவது முற்றிலும் நியாயவிரோதமானதே. சென்ற தென்னாப்ரிக்கா யுத்தத்தில் கொடுமையான செய்கைகள் நடந்தன வென்று நீர் சொல்கிறீர். அவைகளெல்லாம் பெல்ஜிய தேசத்தைப் பாழாக்கின குற்றத்திற்குச் சமமாகுமா?

சென்ற தென்னாப்ரிக்கா யுத்தம் முடிந்த பின்னர், ஆங்கிலேயர் தென்னாப்ரிக்காவுக்கு சுய ஆட்சி கொடுத்த விஷயத்தை நீர் மறந்து விட்டீரே. இந்த சுய ஆட்சியின் நன்மையல்லவோ, நீர் இச்சமயத்தில் இவ்வித ராஜிநாமாக் கொடுத்தும் உம்மை மரண தண்டனையினின்றும் நீக்கியது? இவ்வித ராஜிநாமா நீர் ஜெர்மன் ராஜாங்கத்தில் கொடுத்திருக்கும் பக்ஷத்தில் வேறுவிதமா யிருக்கும்.

ஆங்கில ராஜாங்கமாவது அல்லது தென்னாப்ரிக்காவாவது இந்த யுத்தத்தில் கிரம விரோதமாய் நடந்த தில்லை யென்பது

வெளிப்படையான விஷயம். ஆரம்பத்தில் ஆஸ்ட்ரோ-ஹங்கெரியர்க்கும், செர்வியர்க்கும் யுத்த முண்டாக, பிறகு ஜெர்மனியர்களும் போர்க் கோலங்கொண்டார்கள். ஐரோப்பாக் கண்டத்தின் சமாதான அமைதியை நிலைநிறுத்த ஆங்கில ராஜாங்கத்தார் எவ்வளவு முயற்சி செய்தார்கள்.

நம் விஷயத்திலும் நம்முடைய கடற்கரை அபாயத்திற்குள்ளே யிருக்கிறது. நம்முடைய கடிதப்போக்கு வரவுப் படகுகளெல்லாம் தடைசெய்யப்படுகின்றன. நமது எல்லை நாடுகளெல்லாம் பகைவர்களாகிய ஜெர்மனியர்களால் பிரவேசிக்கப்படுகின்றன. அவர்க ளவ்விதம் படை யெடுப்பதற்கு நீர் சொல்லும் வண்ணம் அவர்களிடமிருந்து, யாதொரு மன்னிப்புக் கடிதமும் வரவில்லை.

அந்நிலைமைகளின்கீழ், நமது ராஜாங்கத்தார் கிரமமீறிச் செல்லுகிறார்களென்பது முற்றிலும் தகுதியற்றது. ஆங்கில ராஜாங்கத்தாரும் நாமும் நமது விருப்பத்திற்கு விரோதமாகவே இந்த யுத்தத்திற்கு இழுக்கப்பட் டிருக்கிறோம். ஆங்கில ராஜாங்கத்தார் 70-லட்சம் பவுன் நமது ராஜாங்கத்திற்குக் கடன் கொடுத்த விஷயத்தைப் பார்லிமெண்டாரும் நமது பிரஜைகளும் மிகப்புகழ்ந்து பேசுகிறார்கள். அது விஷயத்தில் நீர் உமது கள்ளக் கருத்துடன் அபிப்பிராயம் கொடுப்பது இந்த யுத்த விஷயத்தில் முற்றிலும் பொருந்தாது.

கவரதையையும் கண்யதையையும் பற்றி நீர் பேசுகிறீர். ஏற்கெனவே தென்னாப்ரிகர்களுக் கிருக்கும் கவரதைக்கும் கண்யதைக்குமேல், உம்முடைய செய்கையினின்றும் ராஜிநாமாக் கடிதத்தினின்றும் கற்றுக்கொள்ள வேண்டியது ஒன்று மில்லை.

சென்ற தென்னாப்ரிக்கா யுத்தத்தின் முடிவாக நாம் இந்த யுத்தத்தில் செய்யவேண்டிய காரியம் ஓர் அளவையுடையதாயிருந்த போதிலும், பார்லிமெண்டாருடைய ஆக்ஞையை மேற்கொண்டு தென்னாப்ரிக்கர்கள் ராஜாங்கத்தாரை ஆதரித்துக் கடமையைச் செலுத்துவார்களென்பதே என்னுடைய நம்பிக்கை. உம்முடைய ராஜிநாமா அங்கீகரிக்கப்படுகிறது."

உடனே ஜெனரல் பேயர்ஸ் அலுவலினின்றும் விடுதலை செய்யப்பட்டார். டிலாரி என்பவரை யெவ்விதமாவது தமது பக்கத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்பது இவருடைய கருத்து. ஏனெனில், பாட்சேவ்ப்ட்ரூம் என்னுமிடத்தில்சுமார் ஆயிரம் பேரிருந்தார்கள். ஜெனரல் டிலாரியைத் தமதுபக்கத்திற் சேர்த்துக்கொண்டால் இந்த ஆயிரம் பேர்களும், ஜெர்மனியர் பக்கம் வருவார்களென்பதே ஜெனரல் பேயர்ஸின் எண்ணம். இதற்காக ஜெனரல் டிலாரியுடன்ஜெனரல் பேயர்ஸ் மோட்டார் வண்டியிலேறிக் கொண்டு,பிரிட்டோரியா நகரத்திலிருந்து, ஜோனஸ்பர்க் நகர்மார்க்கமாய், செப்டம்பர்மீ 15ந்தேதி மாலை 6-மணிக்குமேல் போய்க்கொண்டிருந்தார். இஃதிங்ஙனமிருக்க, ஜோனஸ்பர்குக்குச் சமீபத்திலுள்ள ஒரு பட்டணத்தில் கூட்டக் கொள்ளைக்காரர்கள் சிலர் நாள்தோறும் கஷ்டத்தைக் கொடுத்துக்கொண் டிருந்தார்கள். தென்பட்டவர்களை யெல்லாம் இக்கூட்டத்தார் சுட்டும் வீழ்த்தினார்கள். செப்டம்பர்மீ 15-ந்தேதி மாலை, இவர்கள் ஒரு வீட்டிலிருப்பதாக, டிடெக்டிவ் போலீஸாருக்குச் செய்தி யெட்டியது. உடனே, டிடெக்டிவ் போலீஸார் அதாவது துப்பறியும் போலீஸார் அவ்வீட்டை வளைத்துக்கொண்டார்கள். கொள்ளைக் கூட்டத்தினர் இப்போலீஸாரிற் சிலரை எமபுரத்திற் கனுப்பிவிட்டார்கள். மிகுதி நின்ற போலீஸார் ஓட்டம் பிடிக்க, கூட்டக்கொள்ளைக்காரர்களும் ஒரு மோட்டார் வண்டியிலேறிக் கொண்டு ஓட்டம் பிடித்தார்கள். இச்செய்தி, அதாவது, போலீஸார் கொள்ளைக்காரரால் மாண்ட விஷயம் எங்கும் பரவியது. உடனே ஜோனஸ்பர்குக்குச் செல்லும் பாதை முழுவதும் ஆயுதபாணிகளான யுத்த வீரர்கள் நிறுத்தப்பட்டார்கள். அந்நகரத்தைச் சுற்றிலுமிருக்கும் மற்றப்பாதைகளிலும் அவ்விதமே நிறுத்தப்பட்டார்கள். யார் மோட்டார் வண்டியிற் சென்றபோதிலும் அவர்களை, ஆயுதபாணிகளா யிருக்கும் யுத்த வீரர்கள், "யார் அங்கே" என்று கேட்கவேண்டுமென்றும், செல்பவர்கள் நின்று உத்தரம் சொல்லவேண்டுமென்றும், இவ்விதம் மூன்று முறை கேட்டும் பதில் சொல்லாமல் செல்பவர்கள் சுடப்படலாமென்றும், ஓர் ஆக்கினையும் பிறப்பிக்கப்பட்டது.

ஏற்கனவே இந்த ஜோனஸ்பர்க் மார்க்கமாய், இந்த ஆர்டர் பிறப்பிக்கப்படு முன்னரே, ஜெனரல் டிலாரியும் ஜெனரல் பேயர்ஸூம் புறப்பட்டு பாட்செப்ட்ரூம் என்னுமிடம் போகப் புறப்பட்டார்களெனக் கூறியுள்ளோம். இவர்களுடைய மோட்டார்கார் ஒன்றும் கொள்ளைக் கூட்டத்தினருடைய மோட்டார் ஒன்றுமே இவ்வழி செல்லவேண்டுமென்பதை இதை வாசிப்போர் நன்குணர வேண்டும். ஆயுதபாணிகளாய் யுத்த வீரர்கள் நின்றுகொண்டிருக்கையில், மோட்டார் ஒன்று சரேல் என்று வந்தது. அதில் இருவர் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். யார்? யார்? யார்? என மும்முறை கேட்கப்பட்டும் பதிலில்லாமையால் உடனே ஆயுதவீரர்கள் சுட்டார்கள். உடனே குண்டானது டிலாரியின் மேல் பாய்ந்து அவரை வானுலகம் சேர்ப்பித்தது. ஜெனரல் பேயர்ஸ் தப்பித்துக்கொண்டார்.

கர்னல் கேம்ப் என்பவர் மற்றொருவர். அவரும் ஜெனரல் பேயர்ஸ் கட்சியைச்சேர்ந்தவர். இந்த பேயர்ஸூடன் சென்ற ஜெனரல் டிலாரிக்கு நேரிட்ட கதியை கர்னல் கெம்ப் கேட்ட மாத்திரத்தில், தாம் கொடுத்திருந்த ராஜிநாமாவை மீண்டும் வாங்கிக்கொண்டார்.


ஜெனரல் போதா, ஜெனரல் ஸ்மட்ஸ் முதலானவர்களெல்லாம் போயர்களுக்குப்பற்பலவிதமாகப் போதித்து, அவர்களை ராஜாங்கத்தார் பக்கம் சேர்த்துக்கொண்டிருக்கையில், ஜெனரல் பேயர்ஸ், டிவெட் முதலானவர்கள் ராஜகாரியப் பிரயத்தனங்களுக்குப் பிரதிகூலமாகும் விஷயங்களையே செய்து கொண்டிருந்தார்கள்.

ஸான் போண்டீன்மேல் படை யெடுப்பு

செப்டம்பர் மாதம் 26-ந் தேதி சில தென்னாப்ரிக்கத் துப்பாக்கி வீரர்கள் ட்ரான்ஸ்வால் குதிரை வீரர்களோடு சேர்ந்து கர்னல் கிராண்ட் என்பவரின் தலைமையின் கீழ், தென்னாப்ரிக்காவின் மேற்கேயுள்ள ஸான்போண்டீம் என்னும் ஜெர்மனிய நகர்மீது படையெடுத்துச் சென்றார்கள். செல்கையில் தாகவிடாய்க்காகச் சிறிது தூரத்தில் காணப்பட்ட




பிரிடிஷ் ஸ்கோட்ரன்.



குரூய்ஸர்கப்பல்: டார்பிடோவெடி எறிகிறது. அதன் வேகம் 45-மைல் தூரம் செல்லும் புகைவண்டிக்கு சமமானது.



கடற் சுரங்கங்களை வாரியெடுக்கும் மாதிரி.



ஜெர்மனியரின் ஷெல் என்னும்
வெடிகுண்டின் உட்பாகம்.

129
117

ஜலத்துவாரத்திற்குச் சென்றார்கள். ஜலத்துவார மென்றால் நமது தேசத்திலுள்ள கிணறுகளைப்போ லிருப்பதல்ல. பாலை வனங்களில் ஆழ்ந்து அகண்டு, மனிதர்களும் மிருகங்களு மிறங்கி ஜலம் அருந்தக் கூடியதாய் கோடைக்காலத் தும் பனிக் காலத்தும் ஜலம் வற்றாததாயிருக்கும் ஜலபாகத் திற்கு 'ஜலத்துவார' மென்றுபெயர். இதேஆப்ரிக்கா கண்டத் தின் வட பாகத்தில் எகிப்து தேசத்தில், துருக்கியருக்கும் ஆங்கிலேயருக்கும் நடந்தயுத்தத்தில்,இத்தகைய ஜலத்துவாரங் கள் ஏராளமாயிருந்து போர்வீரர்களுக் குதவின. இவ்வித ஜலத்துவாரத்திற்கு கர்னல் கிராண்ட் தமது சேனையை நடத் திச் சென்றார். அங்கே ஒரு சிறிய பள்ளத்தாக்கு இருந்தது. அப்பள்ளத்தாக்கைச் சுற்றிலும் சிறுகுன்றுகள்தென்பட்டன. அக்குன்றுகளின்மீது ஜெர்மனியர்கள் பீரங்கிகளுடன் ஆரோ கணித் திருந்தார்கள். உடனே இரு திறத்தார்க்கும் யுத்தம் ஆரம்பித்தது. நீரருந்தச் சென்ற விடத்தும் போராய் முடிந் தது. தென்னாப்ரிக்கர்கள் ஜெர்மனியர்களுக்குச் சிறிதேனும் சலியாமல் யுத்தம்செய்தார்கள். பிறகு ஏற்பட்டவிசாரணையின் முடிவாக,லெப்டினெண்ட் கர்னல் மாரிட்ஸ்என்பவர் ஆங்கிலே யர் சார்பில், கர்னல் கிராண்டின் கீழ்ச் சென்ற சேனையிலேயே யிருந்தும், எதிரிகளாகிய ஜெர்மனியர்களுக்கு உளவாளியா யிருந்து கர்னல் கிராண்டை நீரருந்த ஜலத்துவாரத்திற்குக் கூட்டிச்சென்று ஜெர்மனியருடைய குண்டுகளுக்கு எதிர்ப் படுத்தி விட்டதாக அறியப்பட்டது.

இதைக்கண்ட ஜெனரல் போதா மார்ஷியல் லா ஒன்றை ஏற்படுத்தினர். "யுத்தகாலத்தில் எதிரிகளுக் குளவாயிருந்து, எதிரிகள் சார்பாய் வேலை செய்பவர்கள் தண்டனைக்குள்ளா வார்கள்" என்னும் சட்டத்திற்கு 'மார்ஷியல் லா' என்று பெயர்.

விசுவாச காதகர்களின் கலகம்

கர்னல் மாரிட்ஸ் சும்மா இருக்கவில்லை. அக்டோபர் மாதம் 22-ந் தேதி காகமஸ் என்னும் நகர்க்கும் ஒபிங்க்டன் என்னும் நகர்க்கும் இடையேயுள்ள கீமஸ் என்னும் நகரதைத்

தாக்கினார். அங்கே ராஜவிசுவாசிகளாயிருந்தவர்கள் 150-பேர்களே. மாரிட்ஸ் என்பவரிடமோ ஆயிரம் கலகக்காரர்களும் 70-ஜெர்மனியர்களு மிருந்தார்கள். நல்ல காலமாய் அங்கிருந்த ராஜவிசுவாசிகளாயிருந்தவர்களுக்கு உபபலமாய் போயர் சேனையும் வந்து சேர்ந்தது. மாரிட்ஸ் என்பவர் காயம் பட்டு ஓட்டம் பிடித்தார். ஓடினவர் ஜெர்மனிய - தென்மேற்கு ஆப்ரிக்காவுக்குச் சென்றுதான் நின்றார். அக்டோபர், நவம்பர், டிஸம்பர் இம் மாதங்களில், தென் மேற்கு ஆப்ரிக்காவிலிருக்கும் ஜெர்மனியர்கள்மீது படையெடுக்கும் பிரயத்தனங்களைச் செய்வதோடுகூட, உள்நாட்டு ராஜத்துரோகிகளை அடக்குவதும் ஜெனரல் போதாவுக்குப் பெரிய வேலையாயிருந்தது. பதினாயிரம் கலகக்காரர்கள். ஜெனரல் போதாவின் விடா முயற்சியின்முன் பஞ்சாய்ப் பறந்து போனார்கள், ஐரோப்பாக்கண்டத்தில் ஜெர்மனியர்களுடைய கொடுமைகளைக்கண்டு மணந்தாளாத 1914-ம் வருஷமானது, தென்னாப்ரிக்காவில் ராஜத்துரோகிகளினுடைய இருள் நிறைந்த மனதை வெறுத்ததாய், இனி இந்த யுத்தத்திற்குத் திரும்புகிறதில்லை யென்பது போலச் சென்றுவிட்டது. இந்தத் தென்னாப்ரிக்காவில் நடக்கும் மற்ற யுத்த விஷயங்களைப் பின்னாலெடுத்துரைப்போம்.

---

131 119

பதினைன்காவது அத்தியாயம்

ருஷியர்களின் நதி தீர யுத்தம்

க்ஷணச்சித்தம் க்ஷணப்பித்தம், அதாவது, ஒரு வேளை யிருந்த குணம் மற்றொரு வேளை இருக்காதென்பது அரசர்களுக்குரிய குணங்களுளொன்றென்று கூறுவோர் சிலருண்டு. ஆனால், ஒரே மன நிலைமை யுடையவர்களாய், எடுத்த கருமத்தை எக்காலத்துங் கைவிடாதவர்களாய், குடிகளுக்கு நன்மை செய்வதையே மேற்கொண்டவர்களான, அனேக அரசர்களும் சக்ரவர்த்திகளும் நமது இந்தியா தேசத்தில் பூர்வ காலத்திலிருந்து அரசு செலுத்தியதாய் நாம் இதிகாச புராண முதலியவற்று லறிகிறோம். புரூரவன், நளன், அரிச்சந்திரன், யுதிட்டிரன் முதலானவர்களுடைய சரித்திரங்களை யறியாதார் யாரே? இவர்களிடத்து யாதொரு சித்த சபலத்தையும் நாம் காணவில்லையே. மேற்கூறிய சக்ரவர்த்திக ளெல்லாம் ஒருங்கே அவதரித்ததை யொப்ப, இப்பொழுது நம்மை ஆட்சி புரியும் ஜியார்ஜி சக்ரவர்த்தியிடமும் யாதொரு சித்தப் பிரமையையும் காணோம்.

ஆயின், க்ஷணச்சித்தம் க்ஷணப்பித்தம் என்னும் உலக வதந்திக் காதாரமாக யாவரேனும் ஓர் அரசர் இருக்கவேணுமேயென்றால் அவர்தான் கேய்ஸர். இச்சக்ரவத்தியினுடைய சித்தம் நிமிஷங்கள் தோறும் மாறிக்கொண்டேயிருக்கும். உதாரணப்படுத்தவேண்டுமானால், பேர்லின் மாளிகை ரகஸ்ய சரித்திரம் என்னும் புத்தகத்திலிருந்து ஓர் விஷயத்தை யிங்கெடுத்துக்கூறுவோம்.

இச்சக்ரவாத்தி சில தினங்களில் அதிகாலையில் 5-மணிக்கு முன்னரே எழுந்திருப்பார். வேறு சில தினங்களில் சூரியன் கீழ்வானத்தில் நெடுந்தூரம் எழுந்த பிறகும் இவர் எழுந்திரார். எவ்வெத்தினங்களில் இவர் அதிகாயி லெழுந்திருப்பாரென்பதை ஒருவராலும் சொல்ல முடியாது. ஆனால், அதிகாலையி லெழுந்திருப்பதாகவே பாவித்துக்கொண்டு, ஆக்கினைகளைக் குறைவில்லாவண்ண மளித்து விடுவார்.

இவருடைய மாளிகைக்குச் சிறிது தூரத்தில் ஒரு பெரிய பூங்காவனமுண்டு பூங்காவனத்திற்குரியசிங்காரங்களெல்லாம் ஒருங்கே அமையப் பெற்றதாய் இது காணப்படும். பொழுது விடியுமுன்னர் அதாவது மேற்கூறியவாறு, 5-மணிக்கு முன்னரே தம்மை அப்பூங்காவனத்திற் காணுமாறு எப்பொழுதும் தம்முடன் உல்லாசகாலப்போக்குக்காகச் சூழ்ந்திருக்கும் பிரபுக்களுக்கு உத்தரவு கொடுத்துவிடுவார். இவ்விதம் சூழ்ந்திருக்கும் பிரபுக்களில் மிக வயது சென்றவர் ஒருவர்; 80 வயதுக்குமேற்பட்டவர்; இவருக்கு மேற்கூறியவாறு அதிகாலையில் பூங்காவனத்தில் வந்து தம்மை எதிர்பார்க்கும்படி கெய்ஸர் சக்ரவர்த்தி ஓர் உத்தரவு கொடுத்துவிட்டார்.

கெய்ஸர் சக்ரவர்த்தி அதிகாலையிலெழுந்திருப்பது அவருடைய சுவாதீனத்தி லில்லையே. சீதேவியின் தமக்கை விலகின பிறகல்லவோ சக்ரவர்த்தி படுக்கையை விட்டு விலகக்கூடும்? ஒருகால் அப்படி அதிகாலையில் எழுந்திருந்தாலும் தாம் முந்தியே குறித்திருந்த விடத்திற்கு அதாவது, பூங்காவனம் முதலிய இடத்திற்குப் போகமாட்டார். அதற்குப் பதிலாய் ரெயில்வே ஸ்டேஷனுக்குச் சென்று, ரெயிலில் ஏறிக்கொண்டு பாட்ஸ்டாம் என்னு மிடத்திற்குப் போய்விடுவார். இவ்வித சமயங்களில் "சக்ரவர்த்தி வருவார், வருவார்" என்று பிரபுக்கள் பூங்காவனத்தில் காத்துக்கொண் டிருக்கவேண்டியதே தான்.

மேற்சொன்ன வயது சென்றபிரபுவைப் பூங்காவனத்தில் தம்மை எதிர்பார்க்கச்சொல்லிவிட்டு சக்ரவர்த்தியவர்கள்ரெயில்வே ஸ்டேஷனுக்குச் சென்று இம்பீரியல் சலூனில் ஏறிக்கொண்டார். அதிகாலையில் 5-மணிக்கு முன்னரே இப்பெரியவர் பூங்காவனத்தில் வந்திருப்பதென்றால் இவர்வீட்டில் எத்தனை மணிக்கு எழுந்திருக்கவேண்டும்? அது எவ்வளவு கஷ்டத்தைக்கொடுக்கும்? குளிர்காலமா யிருந்தால் சொல்லவேண்டியதே யில்லை. ஆனால் இவ் வயோதிகப் பிரபுவுக்கு கெய்ஸரின் மனப்போக்குகளெல்லாம் நன்றாய்த் தெரியுமாதலினால், தமக்கு அதிகாலையில் எழுந்திருக்க முடியாமைபற்றி மன்னிக்கவேண்டுமென்று, கடிதமொன்றை யெழுதித் தமது

மகளிடம் கொடுத்து ரெயில்வே ஸ்டேஷனுக்கனுப்பினார். அவள் சக்ரவர்த்தியைக் கண்டு கடிதத்தைக்கொடுத்தஅளவில், அவர் கோபத்தை யெல்லாம் உள்ளடக்கிக்கொண்டு—வயது சென்ற பெரியவர் தம்முடைய உத்தரவுக்குக் கீழ்படியாம லிருந்தது தகுதியல்ல வென்று சொன்னார். அதற்கு வந்த பெருமாட்டி, மிகவும் வயது சென்றவர்களிடம் இவ்வித உத்தரவுகள் சரியாய் நடந்தேறுகின்றனவா வெனக் கவனிப்பது தகுதியல்ல வெனக் கூறிப்போய் விட்டாள். அவ்வயோதிகரும் கெய்ஸருக்குச் சொந்தமாகையினால் சும்மா இருந்து விட்டார்.

இவ்வித ஸ்திர குணம் வாய்ந்த ஜெர்மன் சக்ரவர்த்தி, ருஷியா தேசத்துள் மிகப்பிரதான கோட்டை நகர்களுளொன்றாகிய வார்ஸா நகரை எவ்விதத்திலும் 1914-ம் வருஷம் முடிவதற்குள் பிடிக்கவேண்டுமென்று உத்தரவு செய்து விட்டார். பாரிஸ்மா நகரத்தை இதே டிஸம்பருக்குள் பிடிக்கவேண்டுமென்ற உத்தரவு என்ன பயன்பட்டதோ, அதேபயனைத் தான் இவ்விரண்டாவது உத்தரவும் பெற்றது.

இவ்வுத்தரவு இங்ஙன மிருக்க, ஜெர்மனிக்கு யுத்தாயுதங்களைத் தயார் செய்து வரும் வெஸ்ட்பாலியா, ஸிலீஷியா, என்ற இரண்டு நாடுகளையும் கைப்பற்றி விட்டால் ஜெர்மனியர் யுத்தம் செய்ய வியலாது திகைப்பார்கள் எனக்கருதின ருஷியர்கள், முதலில் ஸிலீஷியாவைப் பிடிக்குமாறு பெருஞ் சேனைகளை வார்ஸா, தார்ன் முதலிய கோட்டைகளிலிருந்து கொண்டு வந்தார்கள்.

ருஷியர்கள் இவ்விதம் கொண்ட கருத்தை ஜெர்மனியர்கள் அறிந்துகொண்டார்கள். திரண்ட சேனைகளை இருபுப்பாதைகள் மூலமாய்ச் செலுத்தி ஸிலீஷியா நாட்டை முற்றுகை போட்டதுபோல் சுற்றிலும் நிறுத்தினார்கள். ஜெர்மனியின் கீழ்ப்பிரதேசமெல்லாம் இருப்புப்பாதைகள் சங்கிலித் தொடர்கள் போல் எங்கும் நிறைந்துள்ளன. ஆதலினால் சேனைகளைச் சமயத்திற்கேற்றவாறு யுத்தகளத்தில் முன்னணிகளுக்கனுப்புவது அவர்களுக்கு மிகவும் எளிதாயிருந்தது. ருஷியர்களுக்கோ அவ்விதமில்லை. இருப்புப்பாதை இவ்விஸ்தீரணமாகிய

தேசத்தில் எங்கேயோ ஏக தேசமாய் ஒன்றிரண் டுண்டு. மற்ற இடமெல்லாம் பெரும்பாலும் சதுப்பு நிலமே. ருஷிய யுத்த வீரர்கள் திடீரென யுத்தகளத்திற்கு முன் வருவதென்றால், நாளொன்றுக்கு 30-மைல் வீதத்திற்கு மேல் செல்ல முடியாது. நாள் ஒன்றுக்குக் கால் நடையாய் 30-மைல் நடந்து, போர்க் களத்தைக் குறுகினவுடனே ருஷியவீரர்களுக்கு என்ன களைப் பிருக்கும்? இப்பெருங் களைப்புடன் யுத்தம் செய்வதென்றால் சாமானியமா? ஜெர்மனியர்கள் அங்ஙன மல்லவே, இருப்புப் பாதை மார்க்கமாய் நாள் ஒன்றுக்கு 200-மைல் வீதம் பிரயாணம் செய்து யுத்தகளத்திற்கு வரக்கூடும். அவ்விதம் வந்தால் அவர்களுக்குக் களைப்பு சிறிதேனும் தோன்றாது. அகண்ட ஐசுவரியமான தேசத்திற்கு ஸார். சக்ரவர்த்தி அதிபராயிருந்தும், அமைதியான காலங்களில், வேண்டிய அளவுக்கு இருப்புப்பாதைகளை எங்கெங்கும் பரவச்செய்யாதிருந்த குறைவினுலுண்டாகிய கஷ்டத்தை ருஷியவீரர்கள் இப்பொழுது அனுபவிக்க லாயிற்று.

வார்ஸாவுக்குச் சமீபத்தில் லின்டுலோ என்னும் பெரியநதியோடுகின்றது. இதன்றியும், இப்ஸுரா, ப்ளீக்கா, வார்ட்டா முதலிய சிறு நதிகள் ஸிலீஷியாவுக்கும் ருஷியாவுக்குமிடையே யுண்டு. இந்நதி தீரங்களில் வ்லோகிளாட், வ்லோக்ளவக், குட்னோ, லென்ஸீஸ்கா, லோவிக்ஸ், முதலிய நகர்களில் ருஷியர்களுக்கும்ஜெர்மனியர்களுக்கும்யுத்தங்கள் நடந்தன. இந்த யுத்தங்களில் இருதிறத்தவர்களுக்கும் ஜெயாபஜெயங்கள் நேரிட்டன. குட்னோ என்னுமிடத்தில் நடந்த யுத்தந்தான் மிகப்பெரியது. அங்கே ஜெர்மனியர் முற்றிலும் ஜெயம் பெற்றதாகவுஞ் சொல்லப்படுகிறது. எப்படியாகினும் வார்ஸாவைக் கைப்பற்றவேண்டுமென்ற கெய்ஸர் சக்ரவர்த்தியின் எண்ணமும் நிறைவேறவில்லை. ஸிலீஷியாவைப்பிடிக்க வேண்டுமென்ற ருஷியர்கள் எண்ணமும், இருப்புப்பாதைகள் ஏராளமாயில்லாமையின் பொருட்டுநிறைவேறாமற்போயிற்று.

ருஷியாவில் பெரும்பான்மை சதுப்பு நிலமாயிருந்தபோதிலும், இரண்டோரடி யாழத்தின்கீழ் மிகவும் கடினமான களிப்பு மண்ணுயிருப்பதினால், அரண் குழிகளை வெட்டி அவை

களினின்றும் யுத்தம் செய்வது அசாத்தியமான காரியமென்பதை ஜெர்மனிர்கள் அறிந்துகொண்டார்கள். மேற்கூறப்பட்ட இப்ஸூரா, வார்ட்டா, ப்ளீகா முதலிய நதி தீரங்களில் ஜெர்மனியர்கள் யுத்தம் புரிந்தபொழுது, அரண்குழிகளை வெட்டச் சக்தியில்லாதிருந்தமையால், ருஷியர்களிடம் சிக்குண்டு திகைத்த திகைப்பை அவர்களே அறிவார்கள். ஜெர்மனியர்களுடைய பிரேதங்கள் இந்நதிகளில் அணைகள் போல் குறுக்கே போடப்பட்டு, ருஷியர்களுக்குப் பாலங்கள் போல உதவின வென்றால், எத்தனை ஜெர்மனியர்கள் மாண்டிருக்க வேண்டும்? சுமார் ஒன்றரை லட்சம் ஜெர்மனியர்களுக்குமேல் மாண்டதாகவும் ஏற்படுகிறது.

இஃதிங்ஙன மிருக்க, ருஷியர்கள் சில சேனைகளைத் தென்முகம் திருப்பி ஆஸ்டிரியா, ஹங்கெரி தேசங்களில் பிரவேசித்து யுத்தம் புரிந்து வெற்றிகொண்டார்கள். இதுவே ருஷியர்கள் நதி தீரங்களில் செய்த யுத்தமாகும். 1914-ம் வருஷம் சென்றுவிட்டது. வார்ஸாவும் ஜெர்மனியருக்குச் சொந்தமாகவில்லை. ஸிலீஷியாவும் ருஷியருக்குச்சொந்தமாகவில்லை.

பதினைந்தாவது அத்தியாயம்

ஆங்கில ஆகாய விமானிகளின் அற்புதங்கள்

முன்னேரத்தியாயத்தில் சில ஜெர்மனிய ஆகாயவிமானிகள் கிங்ஸ்லின், ஸாட்ரிங்ஹாம் முதலிய நகர்களின்மேற் பறந்து விளைவித்த சேதத்தைக் கூறினேம். ஆங்கில ஆகாய விமானிகள் யாது செய்தார்களென்பதைப்பற்றி இங்கு கவனிப்போம். 1915-வருஷம் ஜனவரி மாத ஆரம்பத்தில் ஜெர்மனியத் துறை நகர்களுள் மிகப்பிரதானமாகிய கக்ஸ்ஹாவன் என்னுமிடத்தில் ஜெர்மனிக்கப்பல்கள் யாது செய்து கொண்டிருக்கின்றன வென்பதை யறியும் விருப்பமொன்று நமது கப்பலதிகாரிகளுக்குண்டாயிற்று. நமது தேசத்து நீர்மூழ்கிக்கப்பல்களி னுதவியைக்கொண்டு இவ்விருப்பத்தைத் தீர்த்துக்கொள்ளவும் முடியவில்லை. ஆகையினால், ஏழு 'கடல்-ஆகாயவிமானங்கள்' புறப்பட்டன. கடல் - ஆகாயவிமான

மென்றால் ஆகாயத்திற் பறக்கும் விமானத்தைப் போன்றது தான். ஆனால் இது ஜலத்தின்மீது சென்றுகொண்டிருக்கையிலேயே திடீரென ஆகாயத்திலும் பறக்கும் ஆகாயவிமானம் இவ்வித சக்தி பொருந்தியதல்ல. கடலில் விழுந்தால் அமிழ்ந்து விடும். கடல் ஆகாயவிமானமோ அவ்விதமின்றி மிதந்து செல்லும். புறப்பட்ட இந்த ஏழு கடல் ஆகாயவிமானங்களும் ஜெர்மனிக்கு வடபாலுள்ள ஹெலிகோலாண்ட் என்னும் தீவுக்குச் சென்றன. இவைகளைக்கண்ட மாத்திரத்தில் பகைவர்களுடைய இரண்டு ஸெப்பலின் ஆகாயவிமானங்களும் இரண்டு கடல் ஆகாயவிமாங்களும் இவைகளைத்தாக்குமாறு எதிரே வந்தன. யுத்தம் பகற்பொழுதில் நடந்தது. உடனே நமது கடல் ஆகாயவிமானங்கள் ஜலப்பரப்பினின்றும் ஆகாயத்திற் பாய்ந்தன. 2000 அடி உயரத்திற்குமேல் வட்டமிட்டன. அங்கிருந்து ஹெலிகோலாண்ட் தீவினுடைய கரைப்புறத்தை நன்றாய்ப் பரிசோதித்தன. அத்தீவின் கரையிலுள்ள பகைவர்களுடைய பீரங்கிச் சாலைகளெல்லாம், இக்கடலாகாயவிமானங்களின்மீது குண்டுகளைத் தொடுத்தன. ஆனால் நமது கடல் ஆகாயவிமானிகளோ மேகங்களுடன் உறுய்ந்து அவைகளுக் கிடையிடையே சென்று எதிரிகளுடைய குண்டுகளினின்றும் தப்பிக்கொண்டார்கள். கீழே கடலில் தங்கியிருக்கும் கப்பல்களின்மீது சில பாம் குண்டுகளையும் போட்டார்கள். அங்கு ஜெர்மனியர்களுடைய கப்பல்கள் எத்தனையுள்ளதென்றும் இன்னும் மற்ற விஷயங்களையும் நமது கப்பல் அதிகாரிகளுக்கு அறிவித்தார்கள்.

1915-ம் வருஷம் ஜனவரி மாதம் 22-ந் தேதி சில ஜெர்மனிய ஆகாயவிமானங்கள் இங்கிலாந்திலுள்ள டன்கிர்க் நகர் மீது பறந்து பயத்தை விளைவித்ததற்குப் பதிலாய், டேவிஸ் என்னும் ஆகாயப்படை தளகர்த்தர் ஒருவர், லெப்டினெண்ட் பீர்ஸ் என்பவருடன் இரண்டு ஆகாயவிமானங்களிலேறிக் கொண்டு ஜெர்மனி தேசத்தில் புருஜஸ் என்னும் கடற்கரை நாட்டில் பிரதான துறை நகராகிய ஸீப்ரூஜ் என்னுமிடத்திற்குச் சென்றார். இத்துறைநகரிற்றான் ஜெர்மனியர்களுடைய நீர்மூழ்கிப்கப்பல்களெல்லாம் தங்கியிருக்கும். இவர்கள் சென்ற சமயத்தில் இரண்டு நீர்மூழ்கிக் கப்பல்கள் இத்துறை நகரின்

ஹார்பரில் நின்று கொண்டிருந்தன. அவைகளின்மீது இவ்விரண்டு ஆகாய விமானிகளும் பாம் குண்டுகளை யெறிந்து அக்கினிபகவானை அவ்விடத்திற்கு விருந்துக்கழைத்து விட்டார்கள். வந்த அக்கினிதேவன் இவ்விரண்டு கப்பல்களுக்கும் மிகவும் நன்றிபூண்டவராய் இரண்டு கப்பல்களையும் பசியாரவுண்டு, அவைகளிருந்த விடத்தில் புகையை நிரப்பிவிட்டுப் போய்விட்டார்.

பிப்ரவரி மாதம் 12-ந்தேதி 34 கடல் ஆகாயவிமானங்களும் மிஸ்டர் ஸாம்ப்ஸன் தலைமையின் கீழ்ப் புறப்பட்டன. பெல்ஜிய தேசத்துக் கடற்கரையில் ஸீப்ரூஜ் என்னும் துறைநகரில் ஜெர்மனியர்கள் சில நீர் மூழ்கிக்கப்பல்களை வைத்திருந்தார்கள் மிஸ்டர் சாம்ப்ஸன் தம்முடைய படையுடன் அங்கு சென்று ஆகாயவிமானங்களினின்று குண்டுகளை யெறிந்து நீர்மூழ்கிக்கப்பலொன்றை அழித்துவிட்டார். அன்றியும் சமயத்திற்குச் சேனைகளைத் துரிதமாய் யுத்தகளத்திற்குக்கொண்டு வருமாறு ஏற்பட்டிருந்த இருப்புப்பாதைகளும் சிற்சில விடங்களில் மிஸ்டர் ஸாம்ஸனுடைய ஆகாயக்குண்டுகளினால் அழிக்கப்பட்டன. ஆஸ்டெண்ட், பிளாக்கென்ர்பக் என்னு மிரு நகர்களிலுமுள்ள ரெயில்வே ஸ்டேஷன்கள் ஆங்கில ஆகாய விமானிகளுடைய குண்டுகளின் வேகத்தை யறிந்தன. ஸெப்பலின் என்று சொல்லப்படும் பெரிய ஆகாயக்கப்பல்கள் வைக்கப்படுவதற்காகக் கட்டப்பட்டிருந்த கட்டடம் ஒன்று உள்ளிருந்த பொருள்களனைத்துடன் தரையோடு தரையாய் வீழ்த்தப்பட்டது. மிஸ்டர் ஸாம்ப்ஸன் இவ்வித ஆகாயவிமான விளையாட்டுகள் புரிந்துவிட்டு, இங்கிலாந்துக்குத் திரும்பி விட்டார்.

பிப்ரவரி மாதம் 16-ந் தேதி மற்றொரு ஆகாயச்சேனை புறப்பட்டு மேற்கூறிய ஸீப்ரூஜ் நகருக்கே சென்றது. இச்சேனையின் செயல்கள் மேற்கூறிய மிஸ்டர்சாம்ப்ஸன்செய்கைகளைக்காட்டிலும் குறைந்தவைகளல்ல.

மார்ச்சு மாதம் 7-ந் தேதி சில ஆங்கில ஆகாய விமானங்கள் ஆஸ்டெண்ட் நகரை நோக்கிச்சென்றன. அங்கே கடற்கரையோரத்தில் தங்கியிருந்த ஜெர்மனியர்களுடைய நீர் மூழ்கிக்கப்பல்களெல்லாம், இவ்வாகாயவிமானங்களாகிய பட்சிகள் முட்டையிடுவதற்கு ஏற்கனவே நியமிக்கப்பட்டிருந்த கூடுகள் போல, ஷெல் என்னும் முட்டைகளை வாங்கி அவற்றின் வேகத்தைத் தாங்கமாட்டாமல் கடலினுள் ஆழ்ந்துவிட்டன.

ஏப்ரல் மாதம் முதல் தேதி சில ஆங்கில ஆகாயவிமானிகள் தங்கள் விமானங்களின்மீது சென்று ஆண்ட் வெர்ப் நகரைச் சுற்றி உலாவிக்கொண்டிருந்தார்கள். உடனே ஒரு பெரிய பீரங்கிச்சப்தம் அந்நகர்க்குடிகளின் காதிற் கேட்டது. ஆண்ட்வெர்ப் நகருக்கு அருகே ஹோபோகேன் என்னும் மற்றோர் நகருண்டு. அங்கே ஜெர்மனியர்கள் நீர் மூழ்கிக் கப்பல்கள் செய்வதற்காக ஏற்படுத்தியிருந்த பெரிய ஆலையொன்று உண்டு. சென்ற ஆகாய விமானிகளிலொருவராகிய ப்ராங்க் ஆண்ட்ரீ என்பவர், தமது விமானத்தை இவ்வாலைக்கு நேரே அந்தரமார்க்கமாய்க் கொண்டு வந்து அதன்மேல் குண்டுகளைப்போட ஆரம்பித்தார். வெருட்டித் துரத்துவதற்கு வேண்டிய முயற்சிகள் செய்தும் பயன்படாதாயின. மிஸ்டர் ப்ராங்க் ஆண்ட்ரீ தமது விமானத்தை இவ்வாலைக்குச் சுமார் 50 கஜ உயரத்திற்குச் சமீபத்திற் கொண்டுவருவதும், மீண்டும் பார்வைக்கெட்டாத உயரத்திற் செல்வதுமாகப் பற்பலவிதமாய்ப் பாய்ந்து பாய்ந்து இவ்வாலையை யெதிர்த்துத் துவம்ஸம் பண்ணியது மிக அற்புதமான காட்சியாயிருந்ததென்று ஆண்ட்வெர்ப் நகரார் கூறுகின்றார்கள். உடனே இப்பெரிய ஆலையில் நெருப்புப் பிடித்துக்கொண்டது. அக்கினியானது ஜ்வாலை விட்டெரிந்து அங்கிருந்த கப்பல்களை யெல்லாம் ஒன்றன்பின்னொன்றாய் அழித்துக்கொண்டே யிருந்தது. கிரோவினுயில் டாங்க் ஒன்று எரிந்ததே சென்னைமாநகரத்துக் கடற்கரைப் பக்கமெல்லாம் வெளிச்சமாயிருந்ததென்றால் எத்தனையோ நீர்மூழ்கிக் கப்பல்கள் ஒன்றன்பின்னொன்றாய் எரிந்துகொண்டிருந்தால் அந்த ஹோபோகேன் கடற்கரையானது எவ்விதமிருந்திருக்குமென்பதை நாம்சொல்லவும் வேண்டுமோ? அக்கடற்கரை யோரமெல்லாம் அக்கினிபகவான் ஆனந்தக் களிப்புடன் பெருந்தாண்டவம் புரிந்துகொண்டிருந்தாரென்றே சொல்லவேண்டும். அக்கினிபகவான் இவ்விதம் ஒருபுறம் தாண்டவம்புரிய, அவருக்கு உதவியாய் மத்தளங்கொட்டிக்கொண்டுஎமதேவனும்தன் காரியமேகண்ணாய்அங்கு அகப்பட்டவர்களை யெல்லாம் களைதீர உண்டுகொண்டிருந்தான். அந்த ஹோபோகேன் நகரெல்லாம் புகையே பரவியது. இப்புகையினால் சுவாசிப்பதற்குச் சக்தியில்லாமல் எத்தனை பேர் இறந்திருப்பார்கள்? அன்றையதினமே, அதாவது மேற்கூறிய ஆகஸ்ட்மாதம் முதல் தேதியே ப்ளைட் லெப்டினெண்ட் வில்ஸன் என்னும் ஆகாயவிமானி ஜெர்மனியர்களுடைய நீர்மூழ்கிக் கப்பல்களிரண்டைத் தாக்க, அவைகள் வருணபகவானிடம் சென்று அபயமிட்டுக்கொள்ளவும், வருணதேவன்

அவைகளை ஆங்கிலேயர்களிடம் காட்டிக்கொடுக்காமல் தன்னிடமே இருத்திக்கொண்டார்.

இவ்விதம் ஆங்கில விமானிகள் பகைவர்களாகிய ஜெர்மனியர்களை எதிர்த்துக் ககன யுத்த விளையாட்டுகளைச் செய்து கொண்டிருக்கையில், பிரெஞ்ச் ஆகாயவிமானிகளும் தங்களாலியன்ற உதவியை ஆங்கில ஆகாயவிமானிகட்கு அளித்துக் கொண்டிருந்தார்கள்.

பதினாறாவது அத்தியாயம்

ஆஸ்ட்ரியரின் விடாமுயற்சியும் ஸெர்வியர்களின் வீராவேசமும்

இப்புத்தக ஆரம்பத்திலேயே ஸெர்வியரின் படை வன்மையையும் அவர்கள் எவ்வெவ்விடங்களில் தேசப்பாதுகாப் பக்காகச் சேனைகளை நிறுத்திவைத்திருந்தார்களென்பதையும், ஆஸ்ட்ரியர்கள் ட்ரீனு, ஸிஸ்டு, சேவ் முதலிய நதிகளைக்கடந்து ஸெர்வியாமீது படையெடுத்து எவ்விதம் அபஜெயப்பட்டுப் பின்பட்டோடினார்கள் என்பதையும் பற்றிக் கூறிவந்தோம். இது ஆஸ்ட்ரியர் ஸெர்வியரின்மீது செய்த முதற் போராகும். அபஜெயப்பட்டுப் பின்பட்டோடின ஆஸ்ட்ரியர்கள் அம்மட்டோடு நிற்காமல் மீண்டும் ஏராளமான படைகளைக் கூட்டி ஸெர்வியாவின்மீது கொண்டுவந்தார்கள். இவ்விதம் வந்த படைகள் ஸெர்வியாவின் மேற்புறத்திலுள்ள ட்ரீனு நதியின் மேற்குக்கரையில் தங்கின. அங்கே, மாட்ச் கொக்கெனன் என்னுமொரு குன்றுண்டு. இக்குன்றானது பூனையின் கால் வடிவைப்போலிருக்கும். மாட்ச் கொக்கெனன் என்றால் "பூனைக்கால் குன்று" என்றே பொருள். இக்குன்றின்மீது அனேக ஆஸ்ட்ரியர்கள் தங்கினார்கள். இங்கு தங்கிய ஆஸ்ட்ரியர்களை ஸெர்வியர்கள் துரத்துவதற்கு மிகவும் பிரயாசைப்பட்டார்கள். எட்டுத் தடவை ஆஸ்ட்ரியர்களை ஸெர்வியர்கள் துரத்தியும் மீண்டும் அங்கேயே தங்க நேரிட்டதாம். கடைசியில் ஆஸ்ட்ரியர்களை அக்குன்றின்மீதிருந்தும் துரத்துவதற்கு முப்பதினாயிரம் ஸெர்விய வீரர்கள் பிராணனை விடநேரிட்டது. ஸெர்விய வீரர்கள் முப்பதினாயிரமென்றால், ஆஸ்ட்ரிய வீரர்கள், அதற்கிரண்டு மூன்று முப்பதினாயிரம் பேர் எமபுரமடைந்திருக்கவேண்டுமென்பது நிச்சயம். "துள்ளின மாடு பொதி சுமக்கும்," என்னும் பழமொழிக்கிணங்க, ஆணவத்தினால் யுத்தத்தை ஆரம்பித்த இந்த ஆஸ்ட்ரியர்களுக்கு ஜெர்மனியர்

களும் போதுமான உதவி செய்யவில்லை. உரலுக்கு ஒரு புறம் இடி, மத்தளத்திற்கு இருபுறமும் இடி என்பதுபோல், இவர்களை ஒரு புறம் ருஷியர்கள் அடிக்கிறார்கள். மற்றோர் புறம் ஸெர்வியர்கள் இடிக்கிறார்கள். வேறோர்புறம் இடாலியர் உதைக்கிறார்கள், ரொமோனியர்களோ பல்லைக்கடித்துக் கொண்டேயிருக்கிறார்கள். பட்டதெல்லாம் போதும் இனிப் படமுடியாது துயரம் என்பது இவர்களுக்கே பொருந்தும்.

ஆனால் எவ்விபத்து நேரினும் ஸெர்வியாவைப் பிடிக்க வேண்டுமென்னும் விடாமுயற்சி இவர்களிடமிருந்தது. ஸெர்வியாவைப் பிடித்தால், துணைவர்களாக வந்த துருக்கியர்களுக்கும் சகாயமாயிருக்கும் என்பதும் இவர்களுடைய நம்பிக்கை. ஸெர்வியா அழிந்து விட்டால் ருஷியர்களைப் பயப் பேய் பிடித்துக்கொள்ளுமென்றும் இவர்கள் எண்ணினார்கள். ஆகவே எவ்விதப் பிரயத்தனத்திற்கும் பின்வாங்காது ஸெர்வியாவைப் பிடித்துக்கொள்ளவேண்டுமென்று மூன்று லட்சம் ஆஸ்ட்ரியச் சேனை வீரர்கள் ஜெனரல் பொட்யோரெக் என்பவரின் தலைமையின்கீழ் ஸெர்வியாவின்மீது வந்தார்கள். இவ்விதம் ஆஸ்ட்ரியர்கள் முதல் தடவை படையெடுத்து அபஜெயப் பட்டதோடு, இரண்டாந் தடவையும் பூனைக்கால் குன்றில் அடிபட்டு மூன்றாந்தடவை பிரம்மப் பிரயத்துடன் ஸெர்வியாவின் மீது வருகையில், செர்வியர்கள் எந்நிலைமையிலிருந்தார்களென்பதைச் சற்றுக்கவனிப்போம்.

ஏற்கெனவே நடந்த இரண்டு யுத்தங்களினால் செர்வியர்கள் சிறிது களைப்படைந்திருந்தார்கள் இதனுடன் டைபஸ் என்று சொல்லப்படும் ஒரு முறைக்காய்ச்சலும்வந்துவிட்டது. இக்கொடிய சுரத்தினால் வருந்தினோர் பலர். ஆங்காங்கேயுள்ள ஆஸ்பத்திரிகளெல்லாம் இக்கொடிய சுரத்தினால் வருந்துபவர்களால் நிரம்பப்பெற்றிருந்தன. எப்புறம் நோக்கினும் ஸெர்வியா தேசத்தில் கவலையே குடிகொண்டிருந்தது போலிருந்தது. யுத்தத்தில் காயம்பட்டவர்களுக்குச் சிகிச்சை செய்ய ஆஸ்பத்திரிகளில்லை. இதற்காக இங்கிலாந்து தேசத்திலிருந்து அனேக டாக்டர்கள் செர்வியர்களுக்குத் தங்களாலியன்ற உதவியைச் செய்தார்கள்.

ஆங்கிலேயரின் பெருந்தன்மை

இவ்விதம் டைபஸ் என்னும் கொடிய பிணியினாலும் யுத்தகளைப்பினாலும் அயர்வுற்றிருந்த செர்வியர்கள்மீது, ஆஸ்ட்ரியர்கள் சேனைகளை லட்சக்கணக்காய் ஏவினதைக் கண்ணுற்ற ஆங்கிலேயர்கள், மிகப்பரிதாப முற்றவர்களாய் செர்வியாவுக்

கருகே யுள்ள கிரீஸ் தேச அரசருக்கு, செர்வியர்களுக்குதவி புரியுமாறு கடிதமெழுதினார்கள். ஆனால் கிரீஸ் தேச அரசரோ துருக்கிக்கு அஞ்சினவராய் இவ்விஷயத்தில் ஒன்றுஞ் செய்யாமலேயே யிருந்து விட்டார். ஆங்கிலேயர் செர்வியர்கள் விஷயத்தில் காட்டின பெருந்தன்மையானது, ஐரோப்பாக்கண்டத்தில் பொது நன்மையை வகித்த மன்னர்கள் பலராலும் புகழப்பட்டது.

பிரெஞ்சுக்காரருடைய பேருதவி

எவ்விபத்து நேரிடினும் யுத்தம் புரிவதேதிர்மானமெனக் கருதின செர்வியர்களுக்குப் போதுமான துப்பாக்கி முதலிய ஆயுதங்கள் இல்லை. இதை யறிந்த பிரெஞ்சுக்காரர் அனேகம் பீரங்கிகளையும், துப்பாக்கிகளையும் மற்றுமிவைகளுக்கு வேண்டிய மருந்துகளையும், மத்திய தரைக்கடல் வழியாய்ச் செலுத்தி, செர்வியர்களுக்குச் செய்த வுதவியானது மிகவும் பெரிது. செர்வியர்கள், இவ்விதம் பிரெஞ்சுக்காரர் செய்த நன்றியை எக்காலத்தும் மறவார்கள். ஆஸ்ட்ரியர்கள் அளவற்ற சேனைகளைத் தங்கள்மீது கொண்டுவருகிறார்களென்பதை யறிந்த செர்வியர்கள், வீணே காலங்கழிக்கவில்லை. ஆஸ்ட்ரோஹங்கெரிக்கும், ஸெர்வியாவுக்கு மிடையே, ட்ரீனா, சேவ் முதலிய பல நதிகளுண்டு. இந்நதி தீரங்களெல்லாம் பள்ளத்தாக்குகள். அங்கே செர்வியர்கள் தங்கள் சேனைகளை நிறுத்தினார்கள். ஆறுவார காலம் வரையிலும் ஆஸ்ட்ரியர்கள் வருகையை நோக்கி அவர்களைத் தடுக்குமாறு எதிர்பார்த்திருந்த ஸெர்வியர்கள், ஆஸ்ட்ரியர்கள் வராமையினால் சேனைகளைப் பின்முகமாகவே செலுத்த ஆரம்பித்தார்கள்.

இஃது இங்ஙன மிருக்க, மேற்கூறிய வண்ணம் மூன்று லட்சம் ஆஸ்ட்ரிய சேனாவீரர்கள் புறப்பட்டு, செர்வியாவின் மற்றோர் பாகத்தில் பிரதான நகர்களாகிய ஆர்ஸோவா, விசேகிராட் முதலியவற்றைத் தாக்கினார்கள். அங்கிருந்த செர்வியர்கள், தங்களாலியன்ற வரையிலும் ஆஸ்ட்ரியர்களுடன் யுத்தம் செய்தார்கள். ஆஸ்ட்ரியர்கள் அவ்விடங்களிலிருந்து புறப்பட்டு வேலியோ நகர் மூலமாய் செர்வியாவின் தலைநகராகிய பேல்கிரேடுக்குத் திரும்பினார்கள். செர்வியா தேசமானது குன்றுகளால் நிரம்பப் பெற்றது. குன்றுகள் நிறைந்த தேசத்தில் நதிகளும் நிறைந்திருக்குமாதலையால் செர்வியாவில் நதிகளுக்குங் குறைவில்லை. வேலியோ நகர்க்கருகில் சிறு குன்றுகள் பல வுண்டு. மேலும், இந்த வெலியோ நகரமானது, செர்வியா தேசத்தின் மத்திய பாகத்தி லமைந்துள்ளது. இந்த

வெலியோ நகரை ஆஸ்ட்ரியர்கள் பிடித்துக்கொண்டதினால் அருகிலிருக்கும் குன்றுகள் மீதெல்லாம் சேனைகளை நிறுத்துவதற்கு அவர்களுக்கு எளிதாயிருந்தது.

பிறகு, ஆஸ்ட்ரியர்கள் வெலியோவிலிருந்து பெல்கிரேடுக்குச் சென்றார்கள். அதையும் இவர்கள் கைப்பற்றிக்கொண்டார்கள். இவ்விடத்தில் ஆஸ்ட்ரியச் சேனையானது டான்யூப் நதி முதற்கொண்டு அந்நதிக்கு மேற்றிசையிலுள்ள மோராவா என்னும் பள்ளத்தாக்கு வரையிலும் பரவியிருந்ததாகவும், அச்சேனையின் விஸ்தீரணம் 70 மைலுக்கு மேற்பட்டதென்றும் சொல்லப்படுகிறது. பெல்கிரேட் நகர்க்குத் தென்திசையில் ரேட்னிக் என்னும் குன்று ஒன்றுண்டு. இக்குன்றின் மீதுள்ள சிகரங்கள் 3,000 அடி முதற்கொண்டு 4500-அடி வரையிலும் உயர்ந்திருக்கும். இக்குன்றின் அடிப்புறத்தில் சுவாபர் என்னும் சிறுமலைத்தொடர்ச்சியுண்டு. இம்மலைத்தொடர் சுமார் 2000 அடிக்கு மேற்பட்டது. இவ்விடங்களிலெல்லாம் ஆஸ்ட்ரியச் சேனைகள் நிறுத்தப்பட்டன. சுவாபர் என்னுமிடத்தில் செர்வியர்களுக்கும் ஆஸ்ட்ரியர்களுக்கும் மிகப் பெரிய யுத்தம் நடந்தது. இவ்விடத்தில் ஜெயம் ஆஸ்டிரியர்களுடையதென்றே சொல்லப்படுகிறது.

ஜெனரல் பட்னிக்

செர்வியச்சேனைகளுக்குத் தலைவராயிருந்தவர் ஜெனரல் பட்னிக் என்பார். இவர் மிகவும் சமர்த்தர்; இவரை செர்வியா தேசத்து நெப்போலியன் என்றே சொல்லவேண்டும். இவருடன் உதவியாயிருப்பவர் ஜெனரல் பாவ்லோவிக் என்பார். இவர் சாதாரண குடியானவனுடைய புத்திரராயிருந்தபோதிலும், சுய முயற்சியினாலும் அறிவின் திட்சண்யத்தாலும் சேனைத்தலைவரானார். இவர்களிருவரும் ஆழ்ந்து யோசித்து ஆஸ்ட்ரியர்களுடைய நிலைமையானது செர்வியர்களுடைய நிலைமையைக்காட்டிலும் மேற்பட்டதல்லவென்னும் முடிவுக்கு வந்தார்கள். செர்வியாவில் நிறைந்துள்ள குன்றுகளையும் நதிகளையும், ஒன்றன்பின் ஒன்றாய்க் கடந்து நெடுந்தூரம் வந்திருக்கும் ஆஸ்ட்ரியர்களுக்குப் பசி குளிர் முதலியவற்றால் நேரிட்ட துன்பங்கள், செர்வியர்களுக்கு நேரிட்ட துன்பங்களைக்காட்டிலும் அதிகமாகவே இருக்கவேண்டுமென இவர்கள் நினைத்தது மிக உண்மையே. ஆகையினால் அவர்களை எவ்விதத்திலும் எதிர்த்து முதுகு காட்டி யோடச் செய்யவேண்டுமென்று அவ்விருவரும் தீர்மானித்தார்கள்.

ஆஸ்ட்ரியர்களின் மனோராஜ்யம்

பெல்கிரேடைப் பிடித்து விட்டோ மென்றும், ஸெர்வியர்கள் சின்ன பின்னப்பட்டுப் போய்விட்டார்களென்றும், இனி அவர்கள் படை யெடுத்து வரமாட்டார்களென்றும் தங்களுக்குத் தாங்களே ஆதாரமில்லாத அனேக மனோராஜ்யங்களைச் செய்து கொண்டு, ரட்னிக் முதலிய குன்றுகளின் மீது ஆஸ்ட்ரியர்கள் சும்மா வீற்றிருந்தார்கள்.

வேதாளம் முருக்கமரம் ஏறிக்கோண்டது

செர்வியர்கள் மேற்சொன்ன ஜெனரல் பட்னிக் என்பவருடைய ஆக்கினையின்படியே ரட்னிக் குன்றை யணுகினார்கள். அங்கிருந்த ஆஸ்ட்ரியர்கள் செர்வியர்களைக்கண்டு நாம் எண்ணின எண்ணம் வீணாயிற்றே என வருந்தி, தங்களாலியன்ற வரையிலும் முயன்றும் சக்தியற்றவர்களாய் நிற்க, ஜெனரல் போட்யூரேக் என்பவர் அவ்விடமிருந்த சேனைகளைப் பிற்பட்டுப் போகும்படி உத்தரவுகொடுத்தார்.

கிணறுவெட்டப் பூதம் புறப்பட்டது

சம நிலமாயிருந்தால் புறங்காட்டி யோடும் ஆஸ்டிரியச் சேனைகளுக்குப் பாதைகள் எளிதிற் கிடைக்கும். அங்ஙனமின்றி, குன்றுகளும், பள்ளத்தாக்குகளும், மீண்டும் குன்றுகளும் நதிகளும் இடையிடையே எதிர்ப்பட்டால் எங்ஙனம் துரிதமாய் ஓட்டம் பிடிக்கக்கூடும்? இவ்வித கஷ்டங்களுடன் பனியும் ஒன்று; எங்கினும் முழங்கால் வரையிலும் சேற்றில் நடப்பது போல் பனியில் நடப்பதென்றால் எவ்வித கஷ்டம் நேரிட்டிருக்கு மென்பது சொல்லாமலே விளங்கும். ஆஸ்ட்ரியர்கள் இவ்விதம் ஓடுகையில் செர்வியர்கள் ரட்னிக் குன்றின் மீதிருந்து குண்டுமாரி பொழிந்தார்கள். ஓடி வந்த ஆஸ்ட்ரியர்கள் கார்னிடோப்ளிட்ஸா என்னுமிடத்திற்கு வந்து சேர்ந்தார்கள். அங்கே ஆஸ்ட்ரியர்களுடைய துப்பாக்கிகளும் பீரங்கிகளும் வைக்கப்பட் டிருந்தன. துரத்தி வந்த செர்வியர்கள் இவ்விடம் ஆஸ்ட்ரியர்களை எதிர்த்தது, அவர்களுடைய வீராவேசத்தையும் பெருங்கோபத்தையுங் காண்பிக்கிறது. இவ்விடத்தில் ஆஸ்ட்ரியர்களும் அவர்களுடைய குதிரைகளும் அனேகமாய் எமபுறமடைந்தார்கள்.

பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்தது

செர்விய அரசர் பீட்டர் என்பவர் தமது சேனையின் வீரத்தன்மையை மிகவும் வியந்தவராய், காலையிலும் மாலையி

னும், ஆலயத்திற்குச் சென்று கடவுளைத் தோத்திரம் செய்து வந்தார். இன்னும் செர்வியர்கள், இந்த மூன்றாவது ஆஸ்ட்ரியப் படை யெடுப்பில் காட்டின யுத்தப் பிரதாபங்களை யெல்லாம் முற்றிலும் எடுத்துரைப்பதென்றால் அசாத்தியமான காரியமாகும். இது நிற்க, செர்வியாவின்மீது புறப்பட்டு வந்த மூன்று லட்சம் ஆஸ்ட்ரிய வீரர்களும் என்னகதி அடைந்தார்கள்? 41,500-ஆஸ்ட்ரியர்களுக்குமேல் கைதிகளாக்கப் பட்டார்கள். ஆஸ்ட்ரியர்களுடைய பீரங்கிகளுள் 133 பெரிய பீரங்கிகளும் 71 சிறிய பீரங்கிகளும் 386 மருந்து வண்டிகளும் 3350 சாமான் வண்டிகளும் 3250 குதிரைகளும் எருதுகளும் செர்வியர்கள் கைவசமாயின. 60,000 ஆஸ்ட்ரியர்கள் யுத்த களத்திலேயே மாண்டார்கள். இவ்வித ஆரம்ப சூரத்துவமாய்ப்புறப்பட்ட ஆஸ்ட்ரியர்கள் ஜெர்மனியர்களைத் துணை வேண்டினார்கள். ஜெர்மனியர்களும் அவ்வாறே துணை செய்தார்கள். முன் சேர்ந்தது 3 லட்சம் வீரர்கள். இப்பொழுதோ நான்கு லட்சம் சேர்ந்தார்கள். ஆஸ்ட்ரியர்கள் செர்வியர்கள் மீது தொடுத்த முதல் மூன்று யுத்தங்களும் 1914-வது வருஷம் டிசம்பர் மாதம் வரையிலும் நடந்தன. நான்காவது யுத்தப்பிரயத்தனத்திற்கு ஜெர்மனியர்களுடைய உதவியைக் கொண்டு ஆஸ்ட்ரியர்கள் நான்கு லட்சம் சேனை வீரர்களைச் சேகரித்த பொழுது 1915-வது வருஷம் வந்துவிட்டது இவ்வருஷத்திற்கு ஸ்ரீமந்த புத்திரனாகிய ஜனவரியும் பிறந்துவிட்டது. இந்த 4 லட்சம் வீரர்களும் செர்வியாவின்மீது படை யெடுத்தால், செர்வியாவானது எதிர் நிற்பது அரிதாகும் என்பதை யுணர்ந்த ருஷியர்கள், செர்வியர்களுக்கு நேரே உதவி செய்யாவிடினும், ஆஸ்ட்ரியர்களை செர்வியாமீது செல்லாவண்ணம் தடுப்பதற்குரிய முயற்சிகளைச் செய்தார்கள். இக்கருத்துடன் ருஷியர்கள் கெலீஷ்யாவினுட் பிரவேசித்தார்கள். கெலீஷ்யாவானது முன்னரே ஒரு தடவை ருஷியர்களுடைய படை யெடுப்புக்கு ஆளாயிற்றென்றும் இத்தேசத் தலை நகராகிய லெம்பர்க் பிடிபட்டுப் பேரும் மாற்றப்பட்டதென்றும் இப்புத்தகத்தில் முன்னமே சொல்லப்பட்டிருந்த போதிலும் கெலீஷ்யா தேசம் முழுவதுமே ருஷியர்கள் கைக்குள்ளாகவில்லை யென்பதும் அறியப்படவேண்டும்.

நான்கு லட்சம் ஆஸ்ட்ரிய வீரர்கள் ஸெர்வியாவின் மீது மீண்டும் படை யெடுக்க முயல்கையில், ருஷியர்கள் கெலீஷ்யாவின் ஓர் பாகமாகிய புகோவினா என்னும் நாட்டில் வந்து

விட்டார்கள். துக்ளாபாஸ், உஸ்ஜோக்பாஸ் என்னுங் கணவாய்கள் ருஷியர்களுக்குள்ளாயின. ருஷியர்கள் மேன்மேலும் ஆஸ்ட்ரோ-ஹங்கெரிக்குள் வராமல் தடுப்பதே ஆஸ்டிரியர்களுக்குப் போதுமான வேலையாயிருந்ததினால் செர்வியாவின்மீது நான்காம் முறைபடையெடுப்பது இயலாத காரியமாயிற்று. ஆகவே ஆஸ்ட்ரியர்கள் ருஷியர்களை எதிர்க்கவே காலம் செலவாய்விட்டது. ஜெர்மனியர்கள் இன்னும் வேண்டிய உதவி ஆஸ்ட்ரியர்களுக்கு, மீண்டும் செர்வியாவின் மீது படை யெடுக்க முயற்சிசெய்யலாமென்றாலோ அவர்களையும் ருஷியர்கள் விடவில்லை. ஸிலீஷ்யா முதலியநாட்டில் ஜெர்மனியர்களுக்கும் ருஷியர்களுக்கும் நடந்த யுத்தங்களைப்பற்றி நாம் முன்னரே கூறியிருக்கிறோம். இனி, சற்று மேற்றிசை யுத்த களத்திற்குத் திருப்பி அங்கு நடந்த விஷயங்களைப்பற்றிக் கவனிப்போம்.

பதினேழாவது அத்தியாயம்.

பிரான்ஸு தேசத்தில் மும்முறை யுத்தங்கள்.

போர்டே நகருக்குச் சென்றிருந்த பிரான்ஸ் ராஜாங்கமானது மீண்டும் பாரிஸுக்கே வந்துவிட்டதென்றும் பாரிஸ்மா நகரத்தில் பிரெஞ்ச் பார்லிமெண்ட் மறுபடியும் கூடினதென்றும் கிறிஸ்து மத பண்டிகை வருஷா வருஷம் போல் 1914-வது வருஷமும் குறைவின்றியே கொண்டாடப்பட்டதென்றும், நாம் முன்னமே கூறியதுடன், பார்லிமெண்டில் விவியானி எடுத்துரைத்த வியாசத்தையும் வேண்டிய அளவு வரைந்துள்ளோம். பாரிஸ் மீண்டும் பிரான்ஸுக்குத் தலைநகராயிற்றென்றால் ஜெர்மனியர் யுத்தத்தை நிறுத்திவிட்டார்களென்று பொருள்? அவ்விதம் பொருள் கொள்வதும் யுக்தமல்லவே. அவ்விதம் பொருள் கொள்ளினும் ஜெர்மனியர் அதைக் கிரமப்படுத்துவார்களா? அவர்களுடைய கண்ணோக்கமெல்லாம் பிரான்ஸின் பேரிலே யல்லவா? யுத்த வீரர்களை லட்ச லட்சமாய்ப் பலி கொடுத்ததும் இந்த பிரான்ஸு தேசத்திற்காகவன்றோ? யாருமில்லாவிடத்தில் அசுவமேத யாகம் பண்ணலாமென்று ஜெர்மனியர்கள் செய்த முயற்சி யெல்லாம் ஆங்கிலேயருடைய வீரத்தன்மையினா லல்லவோ வீணாய்ப் போயின. ஆகையினால் ஜெர்மனியர்கள் விடாமுயற்சியுடன் மேலும் மேலும் சேனாவீரர்களைப் பெல்ஜிய திசையினின்றும் கொண்டுவந்துகொண் டிருந்தார்கள்.

ஆல்ஸேஸ், லொரேன் என்பது ஆதியில் பிரெஞ்சுக்காரருக்குச் சொந்தமாயிருந்தது. பிறகு சில வருஷங்களுக்கு முன் ஜெர்மனியரால் பிடிக்கப்பட்டதென்றும் இவ்விடத்தில் இம்மகாயுத்த ஆரம்பத்திலேயே மூல்ஹாவுஸ் முதலான நகர்களிடத்தில் பிரெஞ்சுக்காரருக்கும் ஜெர்மனியருக்கும் யுத்தங்கள் நடந்தனவென்றும் முதற் புத்தகத்திலேயே கூறப்பட்டுள்ளது.

1915-ம் ஹு ஜனவரிமீ முதல் தேதி பெரிய பிரெஞ்ச் சேனையொன்று ஆல்ஸேஸுக்குள் பிரவேசித்து அங்கே தெனபுறத்தில் தங்கியிருக்கும் ஜெர்மனியர்களை எதிர்க்க வேண்டுமென்று பிரெஞ்ச் தளகர்த்தர் உத்தரவு செய்தார். இவ்வுத்தரவின்படி வந்த பிரெஞ்ச் சேனை வாஸ்ஜஸ் மலை வழியாய் நீரிலும் சேற்றிலும் பனியிலும் சென்று ஆஸ்ஸேஸைச் சேர்ந்தது. பிறகு ஓரிடத்தில் சேனைகள் ஒருங்கே கூடி பீரங்கி முதலிய ஆயுதங்களையெல்லாம் யுத்தத்திற்குத் தயாராக நிறுத்தினார்கள். பிறகு ஜெர்மனியர்களை எதிர்க்கச் சென்றார்கள். ஜெர்மனியர்கள் தங்கள் சேனைகளை மூல்ஹவுஸ் என்னுமிடத்தில் ஏராளமாய்ச் சேகரித்து வைத்திருந்தார்கள். சுமார் 60,000-ஜெர்மனிய வீரர்கள் பிரெஞ்சுக்காரர்களைத் தாக்க, அவர்கள் பின்பட்டோடுவதுபோல் ஓடினார்கள். ஜெர்மனியர்கள் அவர்களைத் துரத்த ஆரம்பித்தார்கள். ஓடின பிரெஞ்சுக்காரர், தாங்கள் நிறுத்தியிருந்த பீரங்கி முதலிய ஆயுதங்களின் வழியாய் ஜெர்மனியர்களுக்கு வழிகாட்டியோடுகையில் துரத்தி வந்த ஜெர்மனியர்கள், அங்கு பதிவிருந்த பிரெஞ்சுக்காரர்களிடம் அகப்பட்டு அனேகமாய் மாண்டார்கள். இதனால் ஆஸ்ஸேஸில் தங்கியிருந்த சேனையானது, சின்னாபின்னப்பட்டு மீண்டும் ஒருங்கு சேர நான்கு தினங்கள் சென்றன.

பிரான்ஸு தேசத்தில் போதுமான ஜெர்மனியச்சேனையில்லையென்பதையறிந்த கெய்ஸர் சக்ரவர்த்தி மறுபடியும் சேனைகளைக் கீழ்திசையமர்க்களமாகிய ருஷியாவுக்குவான் ஹின்டன் பர்க் என்பவருடைய வேண்டுகோளின்படி அனுப்புவதற்கு முடியாதெனக் கூறிவிட்டார். ஆஸ்ஸேஸில் தங்கியிருந்த ஜெர்மனியச்சேனையின் கதி இவ்வாறாயிற்று.

எய்ஸன் நதி தீரத்தில் நடந்த யுத்தத்தைப்பற்றி முன்னமே கூறியுள்ளோம். இந் நதியோரத்தில் சிறிது சமவெளியும் சிறு குன்றுகள் இங்கு மங்கும் உண்டு. சாய்ஸான் என்பதும் இந்நதியோரத்தில் உள்ளது தான். இவ்விடங்களிலெல்லாம் ஜெர்மனியர் தங்கியிருந்தார்கள். அவர்களை அங்கிரு

ந்து துரத்தவேண்டுமென்று சில பிரெஞ்சுச் சேனைகள் ஜனவரி மாதம் 9-ந்தேதி புறப்பட்டன. இவர்களுக்கு உதவியாய் பிரெஞ்ச் ஆகாயவிமானிகள் அந்தர மார்க்கமாய்ச் சென்று எவ்வெவ்விடத்தில் ஜெர்மனியச் சேனைகள் தங்கியிருக்கின்றன வென்பதை அறிவித்துக்கொண்டே வந்தார்கள். இவ்விதம் ஆகாயவிமானிகளால் அறிவிக்கப்பட்ட திசைகளின் வழியாய்க் குண்டுகளைச் செலுத்திக்கொண்டே பிரெஞ்ச் சேனைகள் வந்துகொண்டேயிருந்தன. பிரெஞ்ச்சேனைகளால் விடப்பட்ட குண்டுகள் அக்கினியைக் கக்கிக்கொண்டு ஜெர்மனியர்மீது குவியல் குவியலாய் விழுந்துகொண்டேயிருந்தன. ஜெர்மனியர்களும் தங்களாலியன்ற வரையில் குண்டுகளை பிரெஞ்சுக்காரர்மேல் ஏவியும், முடிவாய், ஜனவரி மீ 13, 14, 15 தேதிகள் வரையிலும் மிகக் கொடிய யுத்தம் நடந்து ஜெர்மனியர்களுடைய அரண்குழிகள் சிலவற்றை பிரெஞ்சுக்காரர் பிடித்துக்கொண்டார்கள். இவ்விதம் ஸாய்ஸான் குன்றில் நடந்த யுத்தமும் ஜெர்மனியர்களுக்குப் பிரதிகூலமாகவே முடிந்தது.

ஆனால் வீண் பெருமையில் சிறிதேனுங்குறைவில்லாத ஜெர்மனியர்கள் ஆல்ஸேஸ் தேசத்திலுள்ள ஹார்ட்மான் ஸ்வீலர்ஹில் முதலிய சில நகர்களையும், ருஷியாவில் சில இடங்களையும் வெற்றிகொண்டதாகப் பாவித்துக்கொண்டு பெர்லின் நகரைக் கொடி முதலிய வற்றால் சிங்காரித்து ஆநந்தக்கூத்தாடிக் கொண்டிருந்தார். ஹார்ட்மான்ஸ் வீலர்ஹில் என்பது ஜெர்மனியாரால் பிடிபடவில்லை. ஜெர்மனியர்கள் இதைப்பிடித் கொண்டதாகக் கூறுவதெல்லாம் வீண் வதந்தியே. இதன் உண்மையை யறியும் பொருட்டு அமெரிக்காக் கண்டத்து நிருபநேயர்ஒருவர் ஹார்ட்மான்ஸ்வீலர்ஹில் என்னுமிடத்திற்குப் போயிருந்தார். அங்கு அவர் கண்ணுக்கு ஒரு ஜெர்மனியரேனும் தென்படவில்லை. பிரெஞ்ச் வீரர்களுக்கு அஞ்சி, தங்களிடமிருந்த யுத்தாயுதங்களை யெல்லாம் அலங்கோலமாய்ப் போட்டு விட்டு, ஓடிப்போயிருந்ததாக இவருக்கு ஏற்பட்டது. இவ்விஷயத்தை யிவர் வெளிப்படுத்தினதின் மேல், நடுநிலைமையை வகித்த தேசங்களுக் கெல்லாம் ஜெர்மனியர் கொண்டது வீண் டம்பமெனவே ஏற்பட்டது.

இங்ஙனம் ஆல்ஸேஸிலும், ஸாய்ஸான்ஸிலும் ஜெர்மனியர் அபஜெயப்பட்டும் சும்மா விருக்கவில்லை. ஜனவரி மாதம் 28-ந்தேதி மீண்டும் யுத்த முயற்சிகளைச் செய்தார்கள். ஐப்பிரஸ் என்னுமிடத்தில் வொர்ட்டம்பர்க் பிரபுவும், விலே

என்னுமிடத்தில் பெவேரியாவின் ராஜகுமார(கெய்ஸரின் முதற் குமார)னும் ஜெர்மனியச்சேனைகளுக்குத் தலைவராய் நின்றார்கள்.

பிறந்ததினமும் இறந்ததினமும்

கெய்ஸர் பிறந்த தினமாகிய ஜனவரி மாதம் 27-ந்தேதியும் சமீபித்துக்கொண்டிருந்தது. ஒவ்வொரு மனிதனுக்கும், ஆத்மா என்பது ஒன்றுண்டென்றும், இறந்த பிறகு அவ்வாத்மாவானது வினைக்கீடாய் மறுபடியும் உலகத்தில் ஜனிக்கிறதென்றும் அவ்விதமே பிறந்து பிறந்து, இறந்து இறந்து அனேக ஜன்மங்களுக்கு ஆத்மாவானது உட்பட்டு நிற்கிறதென்றும், அவ்வாத்மாவானது நல்வழியிற் சேர உதவிபுரியுமாறு ஒவ்வோராத்மாவின் சந்ததியில் வந்தவர்கள் திதி முதலியவற்றை அனுசரிக்க வேண்டுமென்றும் நமது தென்னாட்டுச் சித்தாந்தங்கள் கூறுகின்றன. இதை இன்னும் உதாரணப்படுத்தவேண்டுமாயின், ஒருவன் தற்கால ஜென்மத்திற்கு முன் அனேக பிறவிகள் எடுத்திருக்கிறான். அப்பிறப்புகளில் இவனால் பெருக்கப்பட்ட சந்ததியார்களெல்லாம் இவனுடைய ஆத்மா நற்கதியடையுமாறு திதி முதலிய விசேஷ தினங்களைக் கொண்டாடிக்கொண் டிருக்கிறார்கள். அவற்றின் பலனெல்லாம் இவன் சரீரத்திலடைபட்டிருக்கும் ஆத்மாவுக்கே சேர்வனவாகும். இவன் இன்னும் பல பிறவி எடுக்கவும் போகிறான். அப்பிறவிகளிலெல்லாம் நற்செய்கைகளையே புரிந்து நல்லொழுக்கத்திலேயே நின்று இவனுடைய ஆத்மாநற்கதியையடையுமாறு இவனால் இச்சென்மத்தில் பெருக்கப்பட்ட சந்ததியாரும் இவன் இறந்த தினத்தை விசேஷமாகக்கொண்டு, வருஷத்திற் கொருமுறை சென்ற ஆத்மாவின் நற்கதியையே தியானமாகக்கொண்டு நிற்கிறார்கள். இவ்விதத் திதிகள் வருஷத்திற்கொருமுறை ஒவ்வோர் இந்து குடும்பத்திலும் நடைபெறுவது யாவருமறிந்த விஷயம்.

மேனாட்டாரோ அவ்விதமில்லை. ஒவ்வொருவரும் பிறந்த தினத்தையே கொண்டாடுவது வழக்கம். ஒருவன் இறந்த தினத்தை பிற் சந்தியார் கொண்டாடுவதினால் இறந்தவனுக்கு யாது நலம் என்பது இவர்கள் கொள்கை. இக்கொள்கையை யனுசரித்தே இந்தியர்களில் சிறுபான்மையர் முன்னோர் இறந்த தினத்தோடு தங்கள் பிறந்த தினத்தையும் கொண்டாடி வருகின்றார்கள். ஆகவே சில இந்துக் குடும்பங்களிலும் இறந்த தினங்களுடன் பிறந்த தினங்களும் வந்து கூடி விட்டன. இது ஆங்கிலமுந் தமிழும் கலந்து பேசுவது வகையே ஒக்கும்.

மேனாட்டுக் குடும்பங்களில் பிறந்ததினக் கொண்டாட்டங்கள் கொண்டாடப்படும்பொழுது, எவருடைய தினம் கொண்டாடப்படுகிறதோ அவருடைய நெருங்கிய உறவினர் பரிசளிப்பது முண்டு. விவாக காலங்களிலும் மற்றும் விசேஷ காலங்களிலும் நமது ஹிந்துக்குடும்பங்களில் வரிசை முதலிய சீர் சிறப்பு, அவ்விசேஷ காலத்திற்குரியவர்களுக்கு நடத்துவது போல, மேனாட்டுக் குடும்பங்களில் பரிசளிக்கும் வழக்கங் கொண்டிருக்கிறார்கள்.

கெய்ஸருடைய பிறந்த தினமாகிய ஜனவரி மாதம் 27-ந் தேதி யன்று வியக்கத்தக்க பரிசை, அவருக்கு அளிக்கவேண்டு மென்பது ஐப்பிரஸ்ஸிலுள்ள வொர்ட்டம்பர்க் பிரபுவுக்கும், லிலேயிலுள்ள பெவேரியாராஜகுமாரனுக்கும் எண்ணம். யுத்தகளத்தில் சேனைகளுக்குத் தலைவராயிருக்குமிவர்கள் கெய்ஸர் சக்ரவர்திக்கு, பிறந்ததின வரிசைகளாக என்ன அனுப்பக்கூடும்? பிரான்ஸ் தேசத்தில் பிரதானமான ஓர் இடத்தைத் தாங்கள் பிடித்து அச்செய்தியை அனுப்புவதே பிறந்த தின வரிசையாகும் என இவர்கள் நினைத்தார்கள். இக்கருத்தைக்கொண்டு, ஐப்பிரெஸ்ஸுக்குச் சமீபத்திலுள்ள ஸோனேபேக் என்னுமிடத்தில் அரண்குழிகளில் தங்கியிருந்த பிரெஞ்சுச் சேனைகளை வொர்ட்டம் பர்க் பிரபு எதிர்க்க ஆரம்பித்தார். இருதிறத்தாருக்கும் இடையே நடந்த யுத்தம் மிகக் கொடிதினும் கொடிது. குண்டுகள் ஒன்றுடன் ஒன்றுராய்ந்து தீப்பொறிகளை எப்புறமுங் கக்கிக்கொண்டு உயிர்ச்சேதத்தை விளைவித்தன. 300 ஜெர்மனியர்கள் மாண்டதாக ஏற்படுகிறது. வொர்ட்டம் பர்க் பிரபு, கெய்ஸர் சக்ரவர்த்திக்கு அனுப்பியவரிசை இம்முன்னூறு பேரையும் எமபுரமனுப்பின பெருஞ்செய்தி யாகும்.

வொர்ட்டம்பர்க் பிரபு அனுப்பிய வரிசை இவ்வாறாக, பெவேரியா ராஜகுமாரன் யாது முயச்சி செய்தார்? என்ன வரிசை யனுப்பினார்? லிஸ் என்னும் நதிக்கு வடபுறத்திலுள்ள பெத்யூன் என்னும் நகரமானது ஆங்கில பிரெஞ்ச் உபபலச் சேனைகளுடைய இருப்புப்பாதை ஏற்பாடுகளுக்கு மிகப் பிரதானமானது. வேண்டிய இடங்களுக்குச் சேனைகளைத் துரிதமாய் அனுப்புவதற்குரிய அனுகூலங்களெல்லாம் இந்த பெத்யூன் நகரத்திலே பொருந்தியிருக்கின்றன. இந்நகரைக்கைப் பற்றினால் ஆங்கில-பிரெஞ்ச் உபபலச் சேனைகளுக்குப் பலம் குறையுமென்றும் இச்செய்தி கெய்ஸருக்கு மெச்சுதற்குரியதாயிருக்கு மென்றும், பெவேரியா ராஜகுமாரன் மனோ ராஜ்யம் செய்துகொண்டார். பெத்யூன் மீது திடீரெனச் சென்

ருல் அங்குள்ள பிரெஞ்சுக்காரர்களுக்கு முன் நிற்பது தங்க ளால் முடியாத காரியம் என்பதையும் இந்த ராஜகுமாரன் உணர்ந்தார். பெத்யூனுக்குச் சிறிது தூரத்திலுள்ளது நோவி சாப்பல் என்னும் நகரம். இந்நகரத்தை எதிர்ப்பதுபோல் முதலில் பாசாங்கு செய்தால் ஆங்கில-பிரெஞ்ச் உபபலச்சேனை கள் அந்நகர்க்குச் சென்று விடுமென்றும் அப்பொழுது பெத் யூனை எதிர்ப்பது எளிதாகுமென்றும் பெவேரியா ராஜகுமா ரன் எண்ணினர். இக்கருத்துடன் நோவிசாப்பலுக்குச் சிறிது தூரத்திலுள்ள வாய்க்காலுக்கு அருகே அரண்குழிக ளில் தங்கியிருந்த பிரெஞ்ச்சுக்காரரை எதிர்த்தார்கள். இவ் வாய்க்கால் ஓரத்திலுள்ள கின்சி, கிவேன்சி முதலிய சிறு கிரா மங்களெல்லாம் இருகட்சிகளுக்குமிடையே போர்க்களமாய் நின்று முடிவாய் கிவென்சி என்னுமிடத்தை ஜெர்மனியர்கள் கைப்பற்றி அதனுட் பிரவேசித்தார்கள். அங்கிருந்த ஆங்கி லேயரும் பிரெஞ்சுக்காரரும் ஜெர்மனியர்களை ஈட்டி முனை களில் ஏந்தினர்கள். இவ்விதம் ஈட்டிக்கு இரையான ஜெர் மனியர்களைச் சிலர் நோவிசாப்பல் வழியாய்ப் போக்குக் காட்டி யுத்தம் புரிந்த ஜெர்மனியர்களுடைய கதி யிவ்வாறிரு க்க, பேத்யூன் நகர்மீது சென்ற ஜெர்மனியர் அங்கிருந்த ஆங் கில பிரெஞ்ச் உபபலச் சேனைகளுடைய மெஷீன் பீரங்கிகளு க்கு இரையானர்கள். ஆகவே கின்ஷி, கிவென்ஷி முதலிய இடங்களிலிருந்து ஸோன்னெபேக் என்னும் இடம் வரையிலு முள்ள 28 மைல் விஸ்தீரணத்தில், ஜெர்மனியர்களுக்கும், ஆங் கில பிரெஞ்ச் உபபலச் சேனைகளுக்கும் நடந்த யுத்தத்தின் முடிவாக, 25 ஆயிரம் ஜெர்மனியர்கள் காயம்பட்டும் மரண மடைந்தும் போனர்கள். இதுதான் கெய்ஸர் சக்ரவர்த்திக்கு பெவேரியா ராஜகுமாரன் அனுப்பிய வரிசையாகும்.

ஜனவரி மாதம் சென்று விட்டது; பிப்ரவரிமாதம் வந்து விட்டது. மாதம் மாதமாய்ச் சென்று கொண்டிருந்தும் ஜெர் மனியர்களுக்கு யாதொரு நன்மையும் கிடைக்கவில்லை. ஏதோ இங்குமங்கும் பிரதான மற்ற கிராமங்களை ஜெர்மனியர் முத லிற் பிடித்து, பின்பு அவற்றினுட் பிரவேசித்து அங்கிருக்கும் ஆங்கில பிரெஞ்ச் படைகளின் ஈட்டிகளுக்கு ஆளாயினதே இவர்களுடைய நன்மை.

பிப்ரவரிமாதம் சென்று மார்ச்சும் பிறந்து விட்டது. பிரெஞ்சுக்காரர் சாம்பேன் என்னும் நகரிற்றங்கியிருக்கும் ஜெர்மனியர்மீது சென்றார்கள். இவ்விடத்தில் 20-நாள் யுத்தம் நடந்தது. இங்கு ஜெர்மனியர்கள் எளிதில் பின்வாங்கவில்லை. அவர்களைச் சிறிது சிறிதாய்ப் பின்வாங்கச் செய்வது பிரெஞ்

சுக்காரருக்கு மிகவும் கஷ்டமாயிருந்தது. பிரெஞ்சுக்காரர் அவ்விடத்தைவிட்டுப் பேர்த்ஸ் என்னுமிடத்திற்குப் போனார்கள். அங்கே சென்ற பிரெஞ்சு சேனையின் தொகை இரண்டு லட்சத்து ஐம்பது ஆயிரமெனறும் அவர்களை எதிர்க்க வந்தவர்களின் தொகை இரண்டு லட்சத்து இருபதினாயிரமென்றும் கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. லட்சக்கணக்கான குண்டுகள் பிரெஞ்சு சேனைகளினின்றும் புறப்பட்டு, ஜெர்மனியச் சேனைகளினிடையே விழுந்து, அனேக உயிர்களைக் கபளீகரம் செய்துகொண்டிருந்தன. சுமார் அறுபதினாயிரம் ஜெர்மனியர்களுக்குமேல் காயம்பட்டும் மாண்டும் போயினர்கள் என்று யுத்தத்தின் முடிவிலேற்பட்டது. பிரெஞ்ச் ஆகாயவிமானிகள், ஆகாயமார்க்கத்தில்சஞ்சரித்துக்கொண்டுகுண்டுகளை எவ்வெவ்விடத்தில் பிரயோகிக்க வேண்டுமென்று பிரெஞ்சுக்காரருக்கு அறிவித்துக்கொண்டு வந்தார்கள்.

ஷெல்குண்டுகள்.

இங்ஙனம் பெருநஷ்டமடைந்த ஜெர்மனியர்கள் நினைப்பதற்கும் மனம் நடுங்கும்படியான ஒரு காரியத்தைச் செய்ய ஆரம்பித்தார்கள். ஷெல் என்னுங் குண்டானது மிகப் பருமனாய் உருண்டை வடிவமானது. இதற்குள் ஊசிகள் போன்றும் உளிகள் போலவும் சிறிதும் பெரிதுமாகப் பல கூரிய இருப்பாணிகள் நிரப்பப்பட்டிருக்கும். இவ்வித ஷெல் குண்டுகள் பகைவர்களினிடையேவிழுந்து படீரென வெடித்தவுடன், உள்ளிருக்கும் சிறுகருவிகளெல்லாம் நாற்புறமும் பாய்ந்து அருகிலுள்ளவர்களுக்கு அபாயத்தை விளைவிக்கும். இவ்விதம் சிறு இருப்பாணிகளை யொத்த கருவிகளை ஷெல் என்னும் குண்டுக்குள் நிரப்பாமல், அவற்றிற்குப்பதிலாய் நிலக்கீல் வாய்வை ஜெர்மனியர்கள் நிரப்ப ஆரம்பித்தார்கள்.

இருப்புச் சாமான்களையும் மரச்சாமான்களையும் துருப்பிடிக்கா வண்ணம் கீல்பூசுவது யாவரும் அறிந்த விஷயம். அங்ஙனமே, அகண்டபாதைகளில் வண்டி, மோட்டார் முதலிய போக்குவரவுக்குரிய சாதனங்கள் ஏராளமாய்ச் செல்வதினால் மண்தூசி கிளம்பிஜனங்களுக்கு அருவருப்பைக் கொடுப்பதல்லாமலும் சுத்தத்தையும் கெடுக்கின்றமையால், ஆஸ்பால்ட் என்று சொல்லப்படும் உருக்கின நிலக்கீல், மூன்று, நான்கு அங்குல கனத்திற்கு பரப்பப்படுகிறது. இவ்வித நிலக்கீல் சென்னைமாநகரில் மவுண்ட் ரோட் முதலிய அகண்ட ரஸ்தாக்களில் பரப்பப்பட்டிருப்பது யாவருமறிந்த விஷயம். இந்த நிலக்கீலினின்றும் தயார் செய்யப்படும் ஓர்வித வாய்வுக்கு

நிலக்கீல்வாய்வு எனப்பெயர். ஷெல்என்பது விஷம் பொருந்திய வஸ்துக்களால் ஏற்கனவே செய்யப்பட்டது. அதில் இக்கொடிய வாய்வு அடைக்கப்பட்டால் எவ்வித துன்பத்தை இந்த ஷெல் விளைவிக்குமென்பது சொல்லாமலே விளங்கும். இவ்வித நிலக்கீல் நிரம்பின ஷெல் என்னும் குண்டானது பீரங்கியினின்றும் விடுபட்டு, எதிரிகளுக்கு இடையே விழுந்து வெடித்த மாத்திரத்தில் புகை இருள்போல் பரவும். அப்புகையின் நெகிழ்ச்சியினால் அருகிலிருப்பவர்களையும் ஒருவரையொருவர் பார்க்க முடியாது போகும். இப்புகை சரீரத்தின் மேற்பட்டமாத்திரத்தில் கண்களிரண்டும் மிகப்பருத்துசிறிதுநேரத்திற்கெல்லாம் வெளியே வந்து விடும். நாவானது வாய்கொண்டவரையிலும் பருத்து சுவாசிப்பதற்கும் பேசுவதற்குமின்றி மரம்போலாகிவிடும். நாசித் துவாரங்கள் அகண்டுவிடும். இந்த நிலக்கீல்வாயுபட்ட சகலரும் சிறிது நேரத்திற்கெல்லாம் அடியற்ற மரம்போல் விழவேண்டியது தான்.

இத்தகைய கொடிய நிலக்கீல் வாயுவைக் கண்டுபிடித்து ஷெல்குண்டுக்களினிடையே பிரயோகித்து, எதிரிகளின்மீது ஜெர்மனியர் உபயோகித்து வந்தார்கள்.

இது மாத்திரமல்ல! நிலக்கீல்வாயுவை எக்காலத்தும் ஷெல்குண்டுகளுக்குள் புகுத்திக்கொண்டிருப்பது யுத்தகாலங்களில் முற்றிலும் முடியாத காரியமாகையால் வெள்ளைப் பவுடர் ஒன்றைக் கண்டுபிடித்தார்கள். பகைவர்கள் முகமாய்க் காற்று வீசும்பொழுது, இந்தப் பவுடரை உபயோகிக்கவேண்டியது. வைக்கோலைக்கொண்டுவந்து தங்களுடைய சேனையின் முதல் அணிவகுப்புக்கு முன்பரப்பி, அதன்மீது சிறிது நீர் தெளித்து நெருப்பு வைத்து விடுவார்கள். நெருப்புப்பற்றி வைக்கோலினின்றும் புகைகிளம்பும் சமயத்தில் இந்த வெள்ளைப்பவுடரை அதன்மேல் தூவி விடுவார்கள். காற்று பகைவர்கள் முகமாய் வீசுகிறதினால் வைக்கோலினின்றும் கிளம்பி, புகையானது பகைவர்கள் முகமாகவே சென்றுகொண்டிருக்கும்; பகைவர்களைக் கப்பிக்கொள்ளும். இந்தப் பவுடரால் உண்டாகும் புகை ஏறக்குறைய நிலக்கில் வாயுவின் செய்கையையே யொக்கும்.

இவ்வித புகையைமுன்னனுப்பிப் பின்னாலேயே ஜெர்மனியர்கள் வருவார்கள். ஆங்கிலேயருடனும் பிரெஞ்சுக்காரருடனும் நேர்நின்று யுத்தம் புரிய வன்மையற்றிருப்பதே இவர்கள் இவ்விதசூழ்ச்சிகளைக் கண்டுபிடிப்பதற்குக்காரணமாகும்.

யுத்தமென்றால் யுத்தகளத்திற் செல்லும் போர்வீரர்களோடு மட்டும்முடியவில்லையே. எவ்விஷயத்திலும் ஈடுபடாமல் தத்தம் தொழிலையே மேற்கொண்டு பொருளைச்சேகரித்துச் சுகமே வாழ்ந்துகொண்டிருக்கும் வியாபாரிகளுக்கும் இந்த யுத்தத்தினாற் க்ஷீணம் நேரிட்டதே. எத்தனை பாங்குகள் இந்த யுத்த ஆரம்ப காலத்திலேயே ஏழைகளாய் விட்டன. எத்தனை பாங்கர்கள் அதாவது பாங்குக்குச் சொந்தக்காரர்கள் தற்கொலை செய்து கொண்டார்கள். இவற்றை யெல்லாம் நினைக்க நினைக்க மனம் திடுக்கிடுகிறது.

ஜெர்மனியும் அடுத்த யுத்தமும் Germanyand the next war என்னும் ஒரு புத்தகத்தை வான்பேன்ஹார்டி என்ற பிரபு ஒருவர் வெளிப்படுத்திவிட்டார். ஒவ்வொரு மனிதனும்தான் நற்றிசை யடைய எவ்விதத்திலும் முயற்சி செய்யவேண்டியது அவசியமென்றும் அங்ஙனமே ஒவ்வொரு தேசமும் உலக அரசாட்சிக்கு முயற்சி செய்யவேண்டியது அவசியமென்றும் போரில்லாக்காலத்தில் அறிவுமழுங்கிமனிதன் அந்தகாரத்தில் மூழ்கிவிடுகிறான் என்றும், பற்பல நவீன சாதுர்ய ஆராய்ச்சிகளுக்குக் காரணமாய் நிற்பது யுத்தமே என்றும் ஜெர்மனியர்களுக்கு இப்புத்தக மூலமாய்ப் போதித்துவிட்டார். இப்புத்தகம் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டால் வாசிப்பதற்கு இனிமையாகத்தா னிருக்கும். வான்பேன்ஹார்டி இவ்விதம் ஜெர்மனியர்களுக்கு யுத்தா வேசத்தை விளைவித்து விட்டது, "சும்மா விருந்த சங்கை ஊதிக்கெடுததான் ஆண்டி" என்பது போலாய் விட்டது.

லக்ஸம் பர்கில் ஜெர்மனியர் பிரவேசித்தபொழுது அடிலெயிட் பெருமாட்டி காண்பித்த உடன்படிக்கைக் கடிதம் என்னவாயிற்று. தேசங்கள் சமாதான காலத்தில் ஒன்றுடன் ஒன்று உடன்பட்டு எழுதின உடன்படிக்கையையே இவர்கள் கவனிக்கவில்லையே. அதனிலும்பெண்ணரசிஇவ்விதஉடன்படிக்கைக் கடிதத்தைக் காட்டினபொழுது அதை மதியாதவர்கள் என்ன கன்னெஞ்சராயிருப்பார்கள்? சுயநயக்கருத்தைமேற்கொள்வ தென்றால் நீதிக்கு விரோதமாகச் செல்வ தென்றுபொருள்?

பெல்ஜியர்கள் தங்கள் தேசவழியாய்ச் செல்வதற்குஇடம் கொடோம் என்று சொன்னார்களே யொழிய எதிர்க்கவில்லையே. அப்படியிருக்க, அவர்களையேன் ஜெர்மனியர்கள் தாக்க வேண்டும்? பெல்ஜியத்தில் எத்தனைக் கோட்டைகள் இடிந்தன! எத்தனை நகர்கள் தீக்கிரையாக்கப்பட்டன! புத்தகங்கள் இவர்களுக்கு என்ன கொடுமையைச் செய்தன? எத்தனை

வயோதிகர்கள் தலைகீழாய்த் தொங்கவிடப் பட்டார்கள்? அவர்கள் அடிப்புறத்திலும் அக்கினி மூட்டப்பட்டது. எத்தனைபேர் போர்க் குதிரைகளின் இருபுறத்திலும் கட்டப் பட்டு குதிரைகள் வேகமாய்ச் செல்கையில் இழுக்கப்பட்டார் கள்.

இவ்வித சூழ்ச்சிகளெல்லாம் தற்காலத்திய நாகரீக யுத்த நீதிகளுக்குப் பொருந்தாதவைகளாகும். மகாபாரதத்தில் துரி யோதனன் பாண்டவர்களைக்கொல்ல கங்கை நதியில் வசிகளை நாட்டினன். பிறகு விஷத்தைக் கொடுத்தான்; அரக்கு மாளிகை யொன்று நியமித்து அதிற்பாண்டவர்களை வருவித் துச் சூதாடித் தோற்பித்தான்; பிறகு திரெளபதியை மான பங்கப்படுத்த முயன்றான்; வனவாச மனுப்பினன். மூகன் முதலிய ராக்ஷதர்களாலேயும் பாண்டவர்களைக்கொல்ல நினைத் தான். இப்படிப்பட்ட அவன் சூதுகளெல்லாம் அவ்வளவு பெரிதாய்த்தோன்றவில்லை. கெய்ஸரோசிறிதேனும் பாதுகாப் பில்லாத துறை நகர்களை யெல்லாம்,இவ்வித சூது மார்க்கங்க ளைக்கொண்டெதிர்க்க ஆக்ஞாபிக்கிறார். வியாபாரவிஷயமாய்க் கடலின் மீது செல்லும் வியாபாரக்கப்பல்களும் இவருடைய ஆக்கினையின்மேல் நீரில் ஆழ்த்தப்படுகின்றன. கப்பல்களில் இரண்டு மூன்று புகைப்போக்கி குழாய்களை வைத்திருந்து சம திற்கேற்றவாறு அவைகளை உயர்த்தி நண்பர்களைப்போல் சமீபித்து, துன்பத்தை விளைவிப்பதும் இவருடைய ஆணையே. கரைப்படை யுத்தத்தில் எகிப்து தேசத்தில் சில ஜெர்மனியர் கள் சமாதானத்தைக்காண்பிக்கும் வெள்ளைக்கொடிகளை உய ர்த்தி ஆங்கில பிரெஞ்ச்சேனைகளைச் சமீபித்து, பிறகு பகைமை யைக் காட்டிய தன் முடிவாக, எமபுறம் அனுப்பப்பட்டார் கள் யுத்த நீதிகளுக்கு மாறுதலான சூழ்ச்சிகள் பலவற்றோ டும், நிலைகில்வாயுவை ஷெல்லினுக்குள் புகுத்தவும், வைக் கோலின் மேல்வெள்ளைப் பவுடரைத் தூவவும் ஆரம்பித்து விட்டார்கள்.

இவ்வித முயற்சிகள் நியாய அநியாய விஷயங்களிற் சிறி தேனுங் சவனமின்றி ஜெர்மனியர்களாற் செய்யப்பட்டபோதி லும் பிரான்ஸைப்பிடிக்கவேண்டுமென்னும் அவர்கள் எண்ண மானது நிறைவேறவே யில்லை. கின்ஸி, கிவென்கி, நோவீசாப் பல், பேர்த், சாம்பேன் முதலிய பற்பல இடங்களில் நடந்த யுத்தங்களெல்லாம் வியர்த்தமாயின. மார்ச்சுமாதம் சென்று விட்டது. ஏப்ரல் அதனிடத்திற்கு வந்துவிட்டது. யுத்தம் இன்னும் முடிவுபெறவில்லை. பிரான்ஸில் நடந்த மற்ற யுத்தங் களைப் பின்னுலெடுத்துரைப்போம்.

பதினெட்டாவது அத்தியாயம்

டார்டனல்ஸ் ஜலசந்தி யுத்தம்

மத்திய தரைக்கடல் என்று ஒன்று உண்டென்பது யாவரும் அறிந்த விஷயம். இக்கடலானது ஐரோப்பாக்கண்டத்திற்குத் தென்புறத்திலும் ஆப்ரிக்காகண்டத்திற்கு வடபுறத்திலும் உள்ளது. இடாலி, ஐரோப்பிய துருக்கி, கிரீஸ் முதலியவைகள் இக்கடல் ஜலத்தினுல் பெரும்பாலும் சூழப்பட்ட தீபகற்பங்களாகும்.

ஐரோப்பிய ருஷியாவின் தென்புறத்திற்கும் ஆசியாக் கண்டத்தின் ஒரு பாகமாகிய ஆசியா மைனர் என்னும் தேசத்திற்கும் இடையே, கருங்கடல் என்னுமோர் சமுத்திரமுண்டு.

மத்திய தரைக்கடலுக்கும் கருங்கடலுக்கு மிடையே மார்மோரா என்னும் ஓர் சிறிய கடலுண்டு. மத்திய தரைக் கடலையும் மார்மோராக்கடலையும் ஒன்று சேர்க்கும் நீண்ட ஜலசந்திக்கு டார்டனல்ஸ் ஜல சந்தி என்று பெயர்.

மார்மோராக் கடலையும் கருங்கடலையும் சேர்ப்பதற்கு பாஸ்பரஸ் என்னும் ஒரு ஜலசந்தி யுண்டு. அனேக மைல் சுற்றளவையுடைய இரண்டு பெரிய ஏரிகளுக்கிடையே ஒரு சிற்றேரி அமைக்கப்பட்டு, அச்சிற்றேரியினின்றும் இரண்டு கால்வாய்கள் பெரிய ஏரிகளை ஒன்று சேர்ப்பதை, டார்டனல்ஸ் ஜலசந்தியும் பாஸ்பரஸ் ஜல சந்தியும் ஒக்கும்.

ஐரோப்பிய ருஷியாவுக்குத் தென்பாலில் கப்பல்கள் இறக்குமதி செய்வதென்ருல் மத்தியதரைக் கடல் வழியாய், டார்டனல்ஸ் ஜலசந்தியினுட் பிரவேசித்து, மார்மோராக் கடலைக் கடந்து, பாஸ்பரஸ் ஜலசந்தி வழியாய்க் கருங்கடலுக்குச் செல்லவேண்டும்.

டார்டனல் ஜலசந்தியின், இருகரைகளும், ஐரோப்பியத் துருக்கிக்கு ஒன்றும் ஆசியாமைனருக்கு ஒன்றுமாயுள்ளவை. ஆசியாமைனர் என்பது ஆசியாகண்டத்திலுள்ள துருக்கிதேசமாகும். இந்த ஜலசந்தியானது சுமார் 6-மைல் நிகளத்திற்கு மேற்பட்டது. இரண்டு மைல் அகலத்திற்குமேற்பட்டது. இருகரைகளிலும் அனேக குன்றுகள் உள்ளன.

ஐரோப்பிய துருக்கி ஜெர்மனியைச் சேர்ந்த பிறகு ஆங்கில பிரெஞ்ச் உபபலச் சேனையாருடைய கப்பல்கள் ஐரோப்

பிய ருஷியாவின் தென்புறத்திலுள்ள கருங்கடலுக்கு டார்டனல்ஸ் ஜலசந்திவழியாய்ச் செல்லாவண்ணம் அது ஏற்பாடு செய்திருந்தது.

இதனால் பீரங்கி மருந்து முதலியவற்றை ருஷியர்களுக்குச் சகாயமாகக் கருங்கடலிலுள்ள ருஷியத்துறைமுக நகர்களில் இறக்குமதி செய்வது அசாத்தியமான காரியமென்பது சொல்லாமலே விளங்குகிறது. ஆகையினால்இங்கிலாந்துதேசத்துக்கடற்படைகளில் பிரதம அதிகாரத்தை வகித்த மிஸ்டர் வின்ஸ்டன் சர்ச்சில் என்பவர், டார்டனல்ஸ் ஜலசந்தி வழியாக ஆங்கிலக்கப்பல்கள், கருங்கடலுக்குச் செல்ல வேண்டுமெனத்தீர்மானித்தார் இவருடைய தீர்மானமானது அனேகருக்குச்சம்மத விரோதமாயிருந்தது. ஏனெனில், டார்டனல்ஸ் ஜல சந்தியின் இருகரைகளிலும் குன்றுகள் செறிந்துள்ளன அக்குன்றுகளின்மீது கோட்டைகளும் பலவுள. எவ்விதத்தினும் ஆங்கில-பிரெஞ்ச் உபபலச் சேனைகள் டார்டனல்ஸ் வழியாய்க் கப்பல்களைச் செலுத்த முயற்சி செய்யுமென்பதை முன்னரே எதிர்பார்த்திருந்த ஐரோப்பிய துருக்கியர்கள், ஜெர்மனியருடைய சகாயத்தைக்கொண்டு அப்போதைப்கப்போது கோட்டைகளைப் புதுப்பித்துக்கொண்டும்சேனைகளைக் கோட்டைகளில் ஆங்காங்கே நிறுத்தியும் வைத்திருந்தார்கள். உபபலச்சேனையாருடைய கப்பல்கள் டார்டனல்ஸ் ஜலசந்தி வழியாய்ச்செல்கையில், இக்கோட்டைகளிலிருக்கும் பகைவர்கள் பலமான பீரங்கிகளைக் கொண்டு எதிர்ப்பார்களென்றெதிர்ப்பார்ப்பது நியாயந்தானே.

தவிரவும் இதற்குமுன் பற்பல தடவைகளில் யுத்தகாலங்களில் பகைவர்களுடைய மரக்கலங்களை டார்டனல்ஸ் ஜலசந்தி வழியாய்ச் செலுத்துவது மிக அபாயத்துக்குட்பட்ட தென்ற விஷயம் சரித்திரத்தாலும் ஏற்படுகிறது. ஒருகால் பகைவர்களுடைய பார்வையினின்றும் நீங்கி,உபபலச் சேனையாருடைய கப்பல்கள் டார்டனல்ஸ் ஜலசந்திவழியாய்ச்சென்று, மார்மோராக்கடலை யடைந்தாலோ, அங்கு வேண்டிய ஆகாரப்பொருள்கள் எவ்விதம் கிடைக்கும்? நாற்புறத்திலும் பகைவர்களால் சூழப்பட்டு நடுவில் திகைக்கும் திக்கற்றவனுடைய கதிதானே உபபலச் சேனையாருடைய மரக்கலங்களுக்கும் கிடைக்கும்.

இவ்விதமின்றி, வேண்டிய அளவு சேனைகளைக்கொண்டு வந்து டார்டனல்ஸ் ஜலசந்தியின் இருகரைகளிலுமிறக்கி, ஆங்குள்ள கோட்டைகளை யெதிர்த்துப் பிறகு எதிர்ப்பாரின்றி மார்மோராக் கடல்வழியே கருங்கடலுக்குச் செல்வதென்

ருலோ, அதுவும், தற்கால நிலைமையை நோக்கின் அசாத்தியமான காரியமாய்த் தோன்றுகிறது. ஏனெனில், பிரான்ஸ தேசத்தில் ஜெர்மனியருடன் யுத்தம் புரிவதற்கே பெருஞ்சேனை வேண்டியிருக்கிறது. பிரான்ஸிலிருந்து பெருஞ்சேனைகளை டார்டனல்ஸ் ஜலசந்திக் கனுப்புவது முடியாத காரியமல்லவோ? அவ்விதமே பெருஞ் சேனையொன்று வந்தாலும் அது நேர்நிற்கும் எதிரியைக் கவனியாது பகைவர்களைத் தேடித்திரிவதுபோலல்லவோ இருக்கும்? இவ்வித பல முகாந்தரங்களைக் கொண்டு டார்டனல்ஸ் ஜலசந்திக்குக் கப்பல்கள் செல்லக்கூடாதென்று லார்ட் பிஷ்ஷர் முதலானோர் மிஸ்டர் வின்ஸ்டன் சர்ச்சிலின் தீர்மானத்தை அங்கீகரிக்கவில்லை.

ஜெர்மனியர்கள் நூதனமாய்க் கண்டுபிடித்திருக்கும் நீர்மூழ்கிக் கப்பல்களும் மற்றுமுள்ள ட்ரெட்நாட் க்ரூஸர் முதலாகிய அனேக யுத்த கப்பல்களும் தற்கால நிலைமைக் கேற்றவைகளாய், பலம் பொருந்தியவைகளாய், மிகுந்த வேகத்துடன் செல்லக் கூடியவைகளாயு மிருந்தன. ஆங்கிலேயருக்கும் இத்தகைய கப்பல்கள் பல உண்டு. இவையன்றி நெடுங்காலமாய் உபயோகப்பட்டு வந்தபோதிலும், ஜெர்மனியருடைய நூதன யுத்தக்கப்பல்களுக்குச் சமமாகாத அனேகங் கப்பல்களும் ஆங்கிலேயரிடமிருந்தன. அவைகளால் ஆங்கிலேயருக்கு ஜெர்மனியருடன் கடற்போர்புரிவதில் கிடைத்த பிரயோசனம் சொற்பமே. இவ்விதபழைய நாளைய கப்பல்கள் வடகடலிலிருந்தும் உபயோகம் சிறிது மில்லாததினால் அவைகளை டார்டனல்ஸ் ஜலசந்திக்கு அனுப்பலாமென்பதே மிஸ்டர் வின்ஸ்டன் சர்ச்சிலின் கொள்கை. ஆகையினால் லார்ட் பிஷர் முதலானோர் எடுத்துரைத்த ஆக்ஷேபத்தை இவர் சிறிதேனும் கவனியாது, தமது தீர்மானத்தையே மேற்கொண்டு விட்டார். உடனே கப்பல் கூட்டமொன்று தயார் செய்யப்பட்டது. டார்டனல்ஸ் ஜலசந்திக்குச் சென்ற ஆங்கிலேயக் கப்பல்களில் பிரதானமானவைகளாவன:—

(1) "க்வீன் எலிஸபெத்" இது எட்டுப் பீரங்கிகளையுடையது. ஒவ்வொரு பீரங்கியும் 15 அங்குலக் குழாய்களையுடையது. ஒவ்வொரு பீரங்கியின் குழாயிலிருந்து வரும் குண்டு 1720 ராத்தல் அல்லது 3½ பாரம் கனமுள்ளது. இவ்வளவு பெரிய குண்டானது 15 மைலுக்கு மேற் செல்லக்கூடியது. இவ்வெட்டு பீரங்கிகளன்றி ஆறு அங்குலக் குழாய்களையுடைய 12 பீரங்கிகளும் இக்கப்பலி லிருந்தன. இக்கப்பலின் நீளம் 650 அடி; 27500 டன் சுமை யேற்றக்கூடியது. ஒவ்

வொரு பீரங்கியினின்றும் புறப்படுங்குண்டு கீழ்வீழ்ந்து உடை பட்டமாத்திரத்தில் 2,000 துப்பாக்கிக் குண்டுகள் புறப்பட்டு நாற்புறமும் பரவி நாசத்தை விளைவிக்கும். இவ்வளவு வன்மை பொருந்திய பீரங்கிகளை ஆச்சரியமாய்க் காணவேண்டி வந்து, குண்டுகளுக்கிரையாகி அநதகனுலகடைந்த துருக்கியர்கள் பலர். "க்வீன் எலிஸபெத்" என்னுங் கப்பலின் தலைமையின் கீழ், மற்றக்கப்பல்கள் டார்டனல்ஸ் ஜலசந்திக்குச் செல்கின்றன என்ற செய்திபடீ வியமாத்திரத்தில் ஜெயம் ஆங்கிலேயருக்கு எளிதிற்கிடைக்கு மென்னும் நம்பிக்கை யாவருக்கும் பிறந்தது.

(2) "இன்ப்ளெக்ஸிபில்" இந்த வார்த்தைக்கு ஆங்கிலத்தில் வளைவுபடாதது என்பது பொருள். எதிரிகளுடைய மரக்கலங்களுக்கு இக்கப்பல் ஒருக்காலும் புறங்காட்டாது என்பது இதன் பெயராலேயே ஏற்படுகிறது. இது 12 அங்குலக்குழாய்களையுடைய 8 பீரங்கிகளை யுடையது. "க்வீன் எலிஸபெத்" தைப்போலவே அவ்வளவு வேகம் செல்லக் கூடியது.

(3) "லார்ட் நெல்ஸன்"

(4) "ஆகமின்னன்" இவை யிரண்டும் மணி யொன்றுக்குப் பதினெட்டு மைல் வீதம் செல்லக்கூடியன. இவை ஒவ்வொன்றின்மீதும் 12 அங்குலக்குழாய்களையுடைய நான்கு பீரங்கிகளும், 9 அங்குலக்குழாய்களையுடைய 10 பீரங்கிகளும், உள்ளன.

(5) "டன்கன்' (6) 'காரன் வாலிஸ்" (7) "வெஞ்சியன்ஸ்" (8) "ஓஷன்" (9) "கோலியத்" (10) "ஆல்பியன்" (11) "கெனபஸ்" இவைகள் பழையநாட்களிற் பிரயோஜனப்பட்டவைகள்.

(12) "மெஜஸ்டிக்" (13) "ப்ரின்ஸ் ஜார்ஜ்"

(14) "ஸ்விப்ட்ஷியூர்" (15) "ட்ரயம்ப்' இவைகள் 1903-வது வருஷத்தில் செய்யப்பட்டவைகளாய் நூதன வர்க்கத்திற்சேர்ந்தவைகளாகும். இவைகள் ஒவ்வொன்றின்மீதும் 10 அங்குலக் குழாய்களையுடைய 4 பீரங்கிகளும் 7½ அங்குலக் குழாய்களையுடைய 14 பீரங்கிகளுமிருந்தன.

ஆதிநாட்களிலேயே இத்தகைய மார்க்கங்களை ஆங்கிலேயர் உடையவர்களாயிருந்தார்க ளென்றால் அவர்களுடைய கடற்படை வன்மையைப்பற்றி அதிகம் எடுத்துரைப்பது அனவசியம்.

(16) "புரைலஸ்" (17) "ஆமீதிஸ்ட்" (18) "டப்ளின்" (19) "ஸப்வைர்" (20) "ஆர்க்ராயல்" இவைகளுடன் சுரங்கமழிக்கும் அனேகம் கப்பல்களும் நாசகாரிக் கப்பல்களும் சென்றன.

டார்டனல்ஸ் ஜலசந்திக்குச் சென்ற ஆங்கில யுத்தக்கப்பல்களின் தொகை யிதுவேயாகும். இவைகளுடன் பிரெஞ்சுக்காரர்களின் யுத்த கப்பல்களும் துணை சேர்ந்தன. அவை யாவன:—

(21) "ஸப்ரன்"-இது 12 அங்குலக்குழாய்களையுடைய நாலு பீரங்கிகளையும் 6½-அங்குலக்குழாய்களையுடைய 10 பீரங்கிகளையும் கொண்டது.

(22) "போவெட்" இது 12 அங்குலக்குழாய்களையுடைய 2 பீரங்கிகளையும் 10½-அங்குலக்குழாய்களையுடைய இரண்டு பீரங்கிகளையும் 5½ அங்குலக்குழாய்களையுடைய 8 பீரங்கிகளையுங் கொண்டது.

(23) "குலாய்ஸ்"—இது 12 அங்குலக்குழாய்களையுடைய 4 பீரங்கிகளையும், 5½ அங்குலக் குழாய்களையுடைய 10 பீரங்கிகளையும் கொண்டது.

(24) "சார்லெமேன்" இது 12 அங்குலக்குழாய்கள் நான்கையும், 5½ அங்குலக்குழாய்கள் பத்தையும் கொண்டது.

இவ்விதம் சேர்ந்த ஆங்கில-பிரெஞ்சுக்காரருடைய கப்பல்களுடன் ருஷியக்கப்பலொன்று துணை வந்தது. அதன் பெயர் "ஆஸ்கோல்ட்" இது 1903-வது வருஷத்தில் கட்டப்பட்டு, 6 அங்குலக் குழாய்களையுடைய 12 பீரங்கிகளைக் கொண்டது. இவ்விருபத்தைந்து கப்பல்களும் ஒருங்குகூடி மத்திய தரைக்கடல் மீது செல்வதைக்கண்டால் என்ன அழகாயிருக்கும்!

"யானையுடைய படைகாண்டல் மிக வினிதே" என்று சொன்ன பூதஞ் சேந்தனர் இக்கப்பற்படைகளைக் கண்டால் என்னென் றியம்புவரோ? பர்வதங்களெல்லாம் ஒருங்குகூடிக் கடல்மீது சஞ்சரிப்பதுபோல், இக்கப்பல்களெல்லாம் டார்டனல்ஸ் ஜலசந்தியை நோக்கிச்சென்று கொண்டிருந்தன. இக்கப்பல்களின் மீதுள்ள கொடிகள் ஜெயத்தைக் கை காட்டியழைப்பது போலும், ஜெர்மனியர்களும் துருக்கியரும் தங்கட்கு எம்மாத்திரம் என்று ஆரவாரிப்பதுபோலும், காற்றில் ஆடிக்கொண்டிருந்தன.

இத்தகைய அழகு பொருந்திய யுத்தக்கப்பல்களுக்குத் தலைமையாய் வைஸ் அட்மிரல் டி,ரேபக் என்பவர் நியமிக்கப்பட்டார். பிரெஞ்சுக்காரருடைய யுத்தக்கப்பல்களுக்குத் தலைமையாய் வந்தவர் ரியர் அட்மிரல் கோபாட் என்பவர். இவர்களுக்கு உதவியாக காப்டன் ஜான்ஸன் என்பவர் ஒருவர் இருந்தார். இவர் டார்டனல்ஸ் ஜலசந்தியுத்தத்தில் காட்டிய சாதுரியங்கள் மிகவும் விந்தையானவை.

டார்டனல்ஸ் ஜலசந்தியை எவ்விதத்திலும் ஆங்கில பிரெஞ்ச் உபபலச் சேனைகள் எதிர்ப்பார்களென் றெதிர்ப்பார்த்த ஜெர்மன் சக்ரவர்த்தி, அத்தேசத்தில் கீர்த்தி பெற்ற கடற்படைத் தலைவராகிய அட்மிரல் யூஸ்டம் என்பவரை வேண்டிய அளவு பீரங்கிகளுடன் டார்டனல்ஸ் ஜலசந்தியைக் காக்குமாறு அனுப்பியிருந்தார். அன்றியும் துருக்கிச் சேனைகள் பல ஜெர்மன் உத்தியோகஸ்தர்களின் தலைமையின் கீழ் இருந்ததாகவும் சொல்லப்படுகிறது. டார்டனல்ஸ் ஜலசந்தியின் இருகரைகளிலும் குன்றுகள் ஏராளமாப் உள்ளன வென்றும் அக்குன்றுகள்மீது கோட்டைகள் பல உள் வென்றும் முன்னரே கூறியுள்ளோம். இக்குன்றுகளுக்கிடையே அனேக பள்ளத்தாக்குகள் உண்டு. இப்பள்ளத்தாக்குகளி லெல்லாம் ஜெர்மனியர்கள் ஏராளமாக பீரங்கிகளை நிறுத்தினர்கள்.

இவ்விதம் பாதுகாக்கப்பட்ட டார்டனல்ஸ் ஜலசந்தியும் முன் பாகத்திலுள்ள கோட்டைகளை 1915-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 19-ந்தேதி வெள்ளிக்கிழமை ஆங்கில-பிரெஞ்ச் உபபலச் சேனைகளின் கப்பற் கூட்டங்கள் சென்று தாக்கத்தொடங்கின. "எலிஜபெத்" என்னுங்கப்பலிலிருந்து 12 அங்குல ஷெல் குண்டொன்று கோட்டையின் மீது பறந்தது. பிறகு குண்டுகள் ஒன்றன் பின் ஒன்ருய் கோட்டைகளின் நாற்புறத்திலும் விழத்தொடங்கின. உடனே, பெரிய மேகம் ஒன்று பூமியிலிருந்து ஆகாய மார்க்கமாய்க்கிளம்பி மறுபடியும் பூமியின்மீது திடீரென விழுவதுபோல, குண்டு ஒன்ருல் தாக்கப்பட்ட கோட்டையின் சுவர்களும் கற்களும் குவில் குவியலாய் உயரே கிளம்புவதும் கீழேவிழுவதுமாயிருந்தன. ஆங்கில-பிரெஞ்ச் உபபலச்சேனையாருடைய யுத்தகப்பல்களோ கடல்மீதினின்றும் குண்டுகளை யெறிந்தன. இக்குண்டுகளுக்குக் குறியாய் நின்று, தூள் தூளாய் உடைபட்ட கோட்டையோ, ஜலசந்தியின் கரையிலுள்ள குன்றின்மேலிருந்தது. ஆகவே, கோட்டை உடைபட்டதைக் கப்பல்களிலிருந்தவர்கள் கண்ணுற் காணுவிடினும், உடைபட்ட கற்கள் முதலியவை ஆகாயம் சென்று மீண்டும் பூமிக்கு வந்ததைக்கண்டு, "புகையுள்ள விடத்தில் நெருப்பிருக்கும்" என்னும் அனுமானத்தின்

படி, கோட்டைதான் உடைபட்டிருக்க வேண்டுமென்னும் திருப்தியுடன் ஆங்கில-பிரெஞ்ச் உபபலச் சேனைகளின் மரக் கலங்கள் திரும்பின.

இவ்வொரு கோட்டை உடைபட்டதினாலேயே டார்டனல்ஸ் ஜலசந்தியின் இருகரைகளிலுமுள்ள கோட்டைகள் பலவும் அழியுற்றனவென்பது பொருந்தாது. இக்கோட்டைகள் அனைத்தையும் ஒருங்கே தகர்க்கவேண்டுமென்று வெஞ்சியன்ஸ், காரன்வாலிஸ், டிரயம்ப், ஸப்ரன் சூலாய்ஸ், போவெத் முதலிய கப்பல்கள் கடல்மீது கோட்டை வேட்டையாடுவது போல் ஒருங்கே புறப்பட்டன. இச்சமயத்தில் பனிக்காலம் வந்துவிட்டது, மூடுபனி மிகுதியாய்ப் பெய்ததினால் எதிரிலுள்ள பொருள்களொன்றுந் தோன்றவில்லை. ஆயினும் எடுத்த காரியத்தைமுடிக்குந்திறமையுள்ள இக்கப்பல்களில்மேலிருந்த தலைவர்கள், டார்டனல்ஸ் ஜலசந்தியின் முதற்பாகத்திலுள்ள ஹெல்லஸ் முனையைச் சுற்றியிருக்கும் கோட்டைகளை யிங்குமங்கும் உடைத்தார்கள். இதற்கு மேற்பட்ட காரியங்களைச் செய்வதற்குப் பனி இடங்கொடுக்கவில்லை. ஆகையினால் ஒருவாரத்திற்கு மேற்பட்ட காலம் வரையிலும் யுத்த கப்பல்களெல்லாம் கடல்மீது சும்மாவே நின்றுகொண்டிருந்தன.

பிப்ரவரியும் சென்றுவிட்டது. மார்ச்சுமாதம் வந்துவிட்டது. "ஆல்பியன்" என்னும் கப்பலானது ஜலசந்தியின் உள்ளே பிரவேசித்து, ஒயிட் கிளிவ்ப் போர்ட் (வெண்குன்று கோட்டை) என்னும் கோட்டையைத்தகர்த்தது. பிறகு அதாவது மார்ச்சுமாதம் 2-ந்தேதி இச்சலசந்தியின் ஆசியாபக்கத்துக் கரையிலுள்ள டார்டனல்ஸ் கோட்டையும் ஐரோப்பிய கரையிலுள்ள ஸ-வாண்டர் கோட்டையும் தகர்க்கப்பட்டன.

இனிச்சும்மாஇருத்தல் தகாதெனக் கிளம்பினார்கள் துருக்கியர்கள். அவர்களுக்குமேல் ஆரவாரித்தார்கள் ஜெர்மனியர்கள், திருப்பினார்கள் தங்கள் பீரங்கிகளை யெல்லாம் ஆங்கிலேயர் முகமாய். ஆச்சிபாபா, பாட்சாடாக், முதலிய கோட்டைகளிலிருந்த பீரங்கிகளை யெல்லாம் ஆங்கில-பிரெஞ்ச் உபபலச் சேனைகளின் போர்க்கப்பல்களின்மீது திருப்பினதின் முடிவாக, 'கெனோபஸ்' 'கார்ன்வாலிஸ்' 'ஸ்விப்ட்ஷியூர்' ஆகியமூன்று கப்பல்களின்மீதும் மூன்று குண்டுகள் வந்தன. இக்கப்பல்களோ இருப்புக்கவசம்போன்றவைகள். எதிரிகளுடைய குண்டுகளைச் சிறிதேனும் லக்ஷியம்செய்யாதவைகள். இதைத்துருக்கியரும் ஜெர்மனியரும் அறியவில்லை போலும்! பகைவர்களுடைய பலத்தைக் கவனியாது யுத்தத்திற்கு வருபவர்கள் எங்

னம் ஜெயமடைவர்? சுமார் முக்கால் மணி நேரம் சென்ற பிறகு, ஆச்சிபாபா முதலியகோட்டைகளி லிருந்து வரும் துருக்கியர்களுடைய குண்டுகளும் நின்றுவிட்டன. கெனோபஸ்" முதலிய மூன்று மரக்கலங்களும் திரும்பின.

மார்ச்சுமாதம் 3-ந்தேதி பிரெஞ்சுக்காரருடைய யுத்தக் கப்பல்கள் புலேர் என்னுங் கோட்டை முகமாய்ச் சென்று குண்டுகளை யெறிந்து ஆங்குள்ள மருந்துக் கிடங்குகளை யெல்லாம் தீக்கிரையாக்கிவிட்டன. டார்டனல்ஸ் ஜலசந்தி சுமார் ஆறுமைல் நீளத்திற்குமேற்பட்டதென்பது முன்னரே கூறப்பட்ட விஷயம் இதற்கு இடையில், அதாவது ஜலசந்தியின் ஆரம்பத்திலிருந்து 3-மைல் தூரத்திற்கப்பால் இருகரையிலும் நெருங்கி ஜலபாகம் மிகவும் குறுகினதாய் நேரோஸ் (குறுகின இடம்) என்னும் பெயரைக் கொண்ட இடமொன்றுண்டு. இதுவரையிலும் ஆங்கில-பிரெஞ்ச் உபபலச் சேனையாருடைய மரக்கலங்களால் தகர்க்கப்பட்ட கோட்டைகளெல்லாம் இந்த நேரோஸ் என்னும் ஜலக்குறுக்கத்திற்கு முன்பாகத்திலுள்ளவைகள். இக்குறுக்கத்தைக் கடந்தே மார்மோராக் கடலுக்குச் செல்லவேண்டும். இந்த நேரோஸ் என்னுமிடத்தில் துருக்கியர், ஜெர்மனியருடைய ஆலோசனையின்படியே வேண்டிய பாதுகாப்பைச் செய்திருந்தார்கள். ஜலத்தின் கிழ்ப்புறத்தில் வலைகளைக் கட்டியிருந்தார்கள். செம்படவர்கள் மீன்பிடிப்பதற்கு வலையிடுவதுபோல், கப்பல்களாகிய மீன்களைப் பிடிப்பதற்குப் பலம்பொருந்திய இருப்புக் கம்பிகளால் வலைவீசப்பட்டிருந்தால் கப்பல்கள் செல்வது கஷ்டந்தானே.

ஜனவரி, பிப்ரவரி, மார்ச்சு மாதங்களில் ஐரோப்பிய ருஷியாவிலுள்ள நதிகளெல்லாம் பெருக்கெடுத்து, கருங்கடலிற் சங்கமமாகி, அங்கிருந்து பெரிய நீரோட்டம் ஒன்று மார்மோராக்கடல் வழியாய் டார்டனல்ஸ் ஜலசந்தியிற் பிரவேசித்தும், நதிகள் குறுகின விடத்தில் நீரின்வேகம் அதிகப் படுவதுபோல, இந்நீரோட்டம் இந்த நேரோஸ் என்னு மிடத்தில் அதிவேகமாய் மத்தியதரைக் கடல் வழியாய்ச் சென்றுகொண்டிருக்கும். ஏற்கனவே வலையிடப்பட்ட இந்த நேரோஸ் என்னுமிடத்தில் நீரோட்டமும், ஆங்கில பிரெஞ்ச் உபபலச் சேனையாருடைய போர்க்கப்பல்கள் மார்மோராக் கடலுக்குச் செல்லாவண்ணம் தாக்குவதுபோல் எதிர்முகமாய் வந்தால் மேலும் மேலும் செல்வது, வெள்ளத்தில் எதிர்முகமாய் நீந்துவது போலுமன்றோ விருக்கும்? இந்த நேரோஸ் என்னுமிடத்திற்குத் தென்கரையில் அதாவது ஆசியாகண்டத்துக் கரையில் ஸேனக் என்னும் நகரம் ஒன்றுண்டு. இந்நகரில், முதலாவது

ஹமிடி மூன்றாவது ஹமிடி என்னும் கோட்டைகள் உண்டு இக்கோட்டைகளில் பீரங்கிகளும் அனேகம். கருங்கடலிலிருந்து மத்திய தரைக்கடலுக்கு அதிவேகமாய்வரும் நீரோட்டத்தையும் லக்ஷியம் செய்யாமல், ஜலத்தின்கீழ் பாய்ச்சப்பட்டிருக்கும் இருப்புவலையையும் கிழித்தெறிந்து, 'எலிஸபெத்'என்னுங் கப்பலானது ஸெனுக் என்னும் நகரைச் சுற்றிலுமுள்ள கோட்டைகளின்மீது குண்டுகளைப் பொழிய ஆரம்பித்தது.

மார்ச்சு மாதம் முதல் வாரம் சென்றுவிட்டது. ஆங்கில-பிரெஞ்ச் உபபலச்சேனையாருடைய கப்பல்களினால் கோட்டைகள் பலதகர்க்கப்பட்டனவென்ற செய்தி, கான்ஸ்டாண்டிநோபிளிலுள்ள துருக்கியருக்கு எட்டியது. உடனே அவர்கள் மிகவுந்திகிற்கொண்டு, ஜெர்மனியர்கள் ஆங்கிலேயக்கப்பல்களை வராமற்படி செய்யும் முயற்சிகளெல்லாம் வியர்த்தமே என்பதை உணர்ந்தவர்களாய், ஜெர்மனியர்களைப் பரிகாசம் செய்ய ஆரம்பித்தார்கள். மேற்கூறியநேரோஸ்என்னுமிடத்தில் "அமேதிஸ்ட்" என்னுங்கப்பல் வந்துகொண்டிருக்கையில் ஜெர்மனியரும் துருக்கியரும் மறைவாய் வைத்திருந்த பீரங்கி ஒன்றைக்கொண்டுஎதிர்த்தார்கள். சுமார் 12 குண்டுகள் இக்கப்பலின்மீது வந்ததின்முடிவாக கப்பலின்மீதிருந்தஜனங்களில் ஐந்திலொருபங்கு மரணமடைந்தார்களென்று சொல்லப்படுகிறது.

மார்ச்சு மாதம் செல்லச் செல்ல ஜலசந்தியின் இருகரைகளிலுமுள்ள கோட்டைகளை ஒன்றின் பின் ஒன்றாய்த் தகர்த்துக்கொண்டே ஆங்கிலேயர்களுடைய யுத்தகப்பல்கள் சென்றுகொண்டிருந்தன.

மார்ச்சு மாதம் 19-ந்தேதி "டிரயம்ப்" "பிரின்ஸ் ஜார்ஜ்" என்ற இரண்டு கப்பல்களும் இரண்டு கோட்டைகளை எதிர்த்தன. "எலிஸபெத்" "இன்ப்ளெக்ஸிபிள்" "அகமின்னன்" "லார்ட் நெல்ஸன்" ஆகிய இக்கப்பல்கள் ஒருங்கு கூடி கிலிட்பாஹர், செனுக், முதலிய நகர்களை எதிர்த்தன. கிலிட்பாஹரிலுள்ள 'ஜே' என்னும் கோட்டையும், செனுக்கிலுள்ள 'யூ' என்னுங்கோட்டையும் தரையோடு தரையாக்கப்பட்டன. உலகமுள்ள வரையிலும் இக்கோட்டைகளும் நீடித்திருக்கவேண்டுமென்னும் எண்ணத்துடன் மிகுந்த பலமாய்க் கட்டப்பட்ட இக்கோட்டைகளின் மதில்கள், கற்குவியல்களாகச் சிறிது நேரத்தில் வீழ்த்தப்பட்டதைக்கண்ட பலரும், மனிதரால் செய்யப்படும் காரியங்களெல்லாம் சிறிது காலம் சென்று, பிறகு அழிந்துபோவனவாகும் என்பதை அறிந்தார்கள்.

பகைவர்களாகிய துருக்கியரும் ஜெர்மனியர்களும் ஆங்கில-பிரெஞ்ச் யுத்த கப்பல்களின்மீது எறிந்த குண்டுகளினால் "இன்ப்ளெக்ஸிபிள்" "குலாய்ஸ்" இந்த இரண்டுகப்பல்களும் சேதத்தை யடைந்தன. "போவெட்" என்னுங்கப்பலானது மற்ற கப்பல்களுக்குத் துணையாய்ச் சென்று திரும்பி வருகையில் பகைவர்களால் ஆழ்ந்தப்பட்டிருந்த கடல் வெடிச் சுரங்கம் ஒன்றில் தாக்குண்டு தீப்பற்றிக்கொண்டது. சிறிது நேரத்திற்கெல்லாம் ஐயோ பாபம்! இக்கப்பல் சுமார் 600 ஜனங்களுடன் அடிப்புறம் சென்று விட்டது.

இவ்விதம் இரண்டு கப்பல்களுக்கு நேர்ந்த சிறு சேதத்தாலும், கப்பல் ஒன்று ஜலத்தில் ஆழ்ந்ததினாலும் துருக்கியர்களுக்கும் ஜெர்மனியர்களுக்கும் உற்சாகம் பிறந்து விட்டது. ஜெர்மனியிலிருந்து ஷெல் குண்டுகள் பல்கேரியா மூலமாய்த் துருக்கிக்கு வரத் தொடங்கின. இதைக்கண்ட ஆங்கிலேயர்கள் எகிப்து தேசக் கடற்கரையிலிருந்து கப்பல்களைக்கொண்டு வர ஆரம்பித்தார்கள். தவிரவும் கரைப்படையையும் துருக்கியில் இறக்குவதற்குத் தயார் செய்தார்கள்.

மார்ச்சு மாதம் சென்று ஏப்ரல் மாதம் 20 தேதியாய் விட்டது. 21-ந்தேதி யன்று ஆங்கிலேயர்கள் சார்பாய் எகிப்து தேசக்கரையில் தங்கியிருந்த நியூஸீலண்டு காலாட்படையும், ஆஸ்ட்ரேலியக் காலாட்படையும் கப்பல்கள் மூலமாய்த் துருக்கிக்கு வர ஆரம்பித்தன. வந்தவர்கள் நேரில் துருக்கியில் இறங்கவில்லை. துருக்கியின் கடற்கரையில் "மட்ரூஸ் குடாக்கடல்" என்னும் ஒரு கடலுண்டு. அங்கே, எகிப்து தேசத்திலிருந்து வந்த சேனாவீரர்கள் கப்பல்களில் தங்கியிருந்தார்கள். அப்பொழுது கடலின் காற்று அதிக மும்முரமாய் வீசிக்கொண் டிருந்தது. ஆகையினால் சேனைகளைக் கரையில் இறக்குவது கஷ்டமாயிருந்தது. இரண்டு நாள் சென்றவுடன் கடற் காற்றும் அமைதியாயிற்று. சேனைகளை இறக்குமதி செய்வதற்குக் கஷ்டமில்லாமலேயே போயிற்று. ஆஸ்ட்ரேலிய வீரர்களும் நியூஸீலண்ட் வீரர்களும் கப்பல்களிலிருந்து படகுகளில் இறங்கிக் கரைக்குச் செல்வதையும், அவர்களைக் கரையில் இறங்காத வண்ணம் தடுக்குமாறு துருக்கியர்கள் குண்டுகளைப் பிரயோகித்துக்கொண் டிருந்ததையும், அக்குண்டுகளைச் சிறிதேனும் லட்சியம் செய்யாமல் இவர்கள் மேலும்மேலும் சென்றுகொண்டிருந்ததையும் பார்க்க, ஆஸ்ட்ரேலியா, நியூஸீலண்ட் வீரர்களுடைய வீரத்தன்மை வெளிப்பட்டது. துருக்கியர்களை ஏமாற்றுவதற்குக் கையாளப்பட்

டது. துருக்கியின் முடிவிலும் பல்கேரியாவின் ஆரம்பத்திலும் ஈனஸ் என்னும் ஓர் இடமுண்டு, எகிப்து தேசக்கரையிலிருந்து வந்த நியூஸீலண்டு, ஆஸ்ட்ரேலிய யுத்தவீரர்கள் துருக்கியின் தென்பாகமாகிய கெலிப்போலி தீபகற்பத்தில் இறங்குகையில் துருக்கியர்கள் குண்டுகளைப் பிரயோகித்து இடையூறு செய்து கொண்டிருந்ததினால் நியூஸீலண்ட் ஆஸ்ட்ரேலியவீரர்கள் மேற் கூறிய ஈனஸ் என்னும் நகரத்திற்குச் செல்வதுபோல் போக்குக் காட்ட அங்கே இறங்கினார்கள். இவர்கள் இறங்கும் காட்சியைக் காண்பதற்கு கிரீஸ் தேசத் தரசரும் வந்திருந்தார். இதை யறிந்த துருக்கியர்கள் கேலிபோலி தீபகற்பத்தின் தென் பாகத்திலிருந்து திரும்பினார்கள். இதனால் நியூஸீலண்ட் ஆஸ்ட்ரேலிய வீரர்களுக்கு கேலிபோலி தீபகற்பத்தின் தென்பாகத்திலிறங்குவது எளிதாயிற்று. இவர்கள் எதிரிகளை எதிர்த்து மேன்மேலும் சென்றது மிகவும் வியக்கத்தக்கது. இவர்கள் இறங்கினவுடனே சரீபேர் என்னுமிடத்தைப் பிடித்து விட்டார்கள். இச்சமயத்தில் சூரியனும் அஸ்தமனமாய் விட்டது. சேனவீரர்கள் அன்று அங்கே தங்கியிருந்தார்கள். பொழுது விடிந்தவுடனே இவர்கள் மேலும் மேலும் செல்ல ஆரம்பித்த பொழுது இவர்களைத் தடுக்குமாறு ஜெர்மனியரும் துருக்கியரும் செய்திருந்த தந்திரங்களும் வியக்கத்தக்கவைகளே.

நியூஸீலண்ட், ஆஸ்ட்ரேலிய வீரர்கள் ஸரீபேர் என்னுமிடத்திலிருந்து சென்ற வழியானது பள்ளத்தாக்கு. பசும்புல்லானது மிகவும் வளப்பமாய் வளர்ந்து மனிதர்களையும் மூடிக் கொள்ளும்படியான அவ்வளவு உயரமுள்ளது. இவ்விதம் செழிப்பான புற்களால் நிறைந்துள்ள பள்ளத்தாக்கில், பச்சை வர்ணம் கொடுத்த பீரங்கிகளைக் கொண்டு வந்து புல்லின் கீழ் மறைத்துவைத்திருந்தார்கள். இவ்விதம் மறைத்துவைக்கப்பட்டிருந்த பீரங்கிகளை உபயோகிப்பதற்கு வந்திருந்த ஜெர்மனியர்களும் துருக்கியர்களும் மேலெல்லாம் பச்சை வர்ணம் பூசிக்கொண்டும் கொடிகளையும் மரக்கிளைகளையும் தங்கள்மேல் கட்டிக்கொண்டும்,புல்லோடுபுல்லாகவும் மரத்தோடு மரமாகவுந் தோன்றினார்கள். சமீபத்திற் சென்ற ஆஸ்ட்ரேலிய நியூஸீலண்ட் வீரர்களைச் சுட்டார்கள். வேறு சில ஜெர்மனியர்கள் ஆங்கிலேயர்களைப் போலவும், நியூஸீலண்டினரைப் போலவும் ஆஸ்ட்ரேலியரைப்போலவும் கபடவேடந்தரித்துக்கொண்டு இவர்களைச் சமீபித்தவுடன் சுட ஆரம்பித்தார்கள். இவற்றை யெல்லாம் கண்ட ஆஸ்ட்ரேலிய-நியூஸீலெண்ட் வீரர்கள் அனேக ஜெர்மனியர்களையும் துருக்கியர்களையும் சுட்டு வீழ்த்தினார்கள். துருக்கியருடைய கபடங்களும்,ஜெர்மனியருடைய தந்திரங்களும் இவர்கள்முன் பயனிலவாயின. சரீபேர் குன்றை

இவர்கள் பிடித்த பிறகு, மற்ற குன்றுகளை ஒன்றன்பின் ஒன்ருய்ப் பிடித்துக்கொண்டே போனார்கள். இவ்விதம் ஏப்ரல் மாதமும் சென்றுவிட்டது. கெலிபோலி தீபகற்பத்தின் தென் பாகத்திலுள்ள டபிள்யூபீச், எக்ஸ்பீச், ஒய்பீச், முதலிய கடலோரங்களில் நடந்த யுத்தங்களைப் பற்றிப் பின்னர் எடுத்துரைப்போம். இதனிடையே யுத்தகப்பல்களும் வடகடல் முதலிய சமுத்திரங்களில் செய்த யுத்தங்களைப் பற்றிப் பின்வரும் அத்தியாயங்களிற் கூறுவோம்.

பத்தொன்பதாவது அத்தியாயம்

கடற்போர் யுத்தக்கிளர்ச்சி.

நீர்மூழ்கிக் கப்பலென்றால் கடல் ஜலத்துள் ஆழ்ந்து செல்வதென்றும் இத்தகைய மரக்கலங்கள் பல ஆங்கிலேயருக்கும் ஜெர்மனியருக்கும் உள்ளனவென்றும் முதற் புத்தகத்திலேயே கூறியிருக்கிறோம். யுத்தம் ஆரம்பித்து மாதங்கள் ஒன்றன் பின் ஒன்ருய்ச் சென்றுகொண்டிருக்க, நீர் மூழ்கிக் கப்பல்களும், இருகட்சிக்காரருக்கும் அதிகப்பட்டுக்கொண்டே வந்தன. இதனால் இருதிறத்தாருடைய யுத்தகப்பல்களுக்கும் வியாபாரக் கப்பல்களுக்கும் உண்டான சேதம் எடுத்துரைக்கத்தக்கது.

1915-ம் வருஷம் ஜனவரி மாதம் 26-ந்தேதி "விக்னர்" என்னும் கப்பலொன்று காணமற்போய்விட்டதென்று இங்கிலாந்து தேசத்துக் கப்பற்படை உத்தியோக சாலையாரால் அறிக்கையிடப்பட்டது. இக்கப்பல் ஜெர்மனியருடைய நீர்மூழ்கிக்கப்பலினால் அழிக்கப்பட்டதோ அல்லது எங்கேயாவது கடல் வெடிச் சுரங்கத்தில் தாக்குண்டதோ என்னும் விஷயம் இதுகாறும் அறியப்படவில்லை.

பிப்ரவரி மாதம் 3-ந்தேதி கடலில் பிரயாணம் செய்துகொண்டிருந்ததாக ஏற்பட்ட "க்ளான் மெக்னர் பட்டன்" என்னும் வியாபாரக்கப்பலும் சென்ற இடம் தெரியவில்லை. "விக்னர்" க்கு நேரிட்டிருக்கும் கதியே இதற்கும் நேரிட்டிருக்கும் என பிப்ரவரி மாதம் 25-ந்தேதி கப்பல்படை ஆபீஸாரால் விளம்பரப்படுத்தப்பட்டது. மார்ச்சு மாதம் 11-ந்தேதி க்ரூஸர் வகுப்பைச் சேர்ந்த 'பயானோ' என்னுங்கப்பல், பகைவர்களுடைய நீர்மூழ்கிக் கப்பலினால் தாக்குண்டது. இக்கப்பல் ஸ்காட்லண்டு தேசத்தில், தென்மேற்குக் கரையில்,

காலை 5-மணிக்குப் பகைவர்களாகிய ஜெர்மனியர்களுடைய நீர்மூழ்கிக் கப்பல்கள் வராத வண்ணம் காவல் பூண்டு கொண் டிருக்கையில், டார்ப்பிடோ ஒன்று இதன் மேல் பாய்ந்தது. சிறிது நேரத்திற்கெல்லாம் மற்றொரு டார்ப்பிடோ பாய்ந்தது. 'பயானே' என்னும் இக்கப்பல் நாலுநிமிஷத்திற்குள் கடலின் அடிப்புறத்திற்குச் சென்று விட்டது. இதன்மீதிருந்த 240 உத்தியோகஸ்தர்களுள் 26-பேர் தவிர, மற்றவர்களெல்லாம் மாண்டு விட்டார்கள். இக்கப்பலின் தலைவராகிய கமாண்டர் ஹென்றி ஸிகார் என்பவரும் இறந்தவர்களுள் ஒருவரானார். மேற்கூறிய சம்பவங்களெல்லாம் நடந்தது வடகடலிலே. மத்தியதரைக்கடலில் பகைவர்களுடைய மரக்கலங்கள் வராமற்படி பிரெஞ்சுக்காரருடைய நீர்மூழ்கிக் கப்பல்கள் காவல் புரிந்துகொண் டிருந்தன. பிரெஞ்சுக்காரடைய "க்யூரி" என்னும் பெயருடைய நீர்மூழ்கிக்கப்ப லொன்று போலா என்னும் நகரிலுள்ள ஹார்பரை நாடிச் செல்கையில், அங்கு நீரில் கட்டப்பட்டிருந்த இருப்பு வலையில் சிக்கிக்கொண்டது. அவ்வலையினின்றும் தப்பித்துக்கொள்ளும்படி இந்த "க்யூரி" என்னும் நீர்மூழ்கிக் கப்பல் கடலின் மேற்புறத்திற்கு வரும் பொழுது, போலா நகரிலிருந்த ஆஸ்டிரியர்கள் குண்டுகளைப் பிரயோகித்ததினால்முழுகிவிட்டது. இதற்குள் மார்ச்சுமீ சென்றது. எப்ரல் வந்தது. எப்ரல் மாதம் 20-ந்தேதி இருப்புக் கவசம் பூண்ட "லியான் காம்பெட்டா" என்னுங் கப்பல் மால்ட்டாவுக்குப் போகும் வழியில் அட்ரியாடிக் சமுத்திரத்தின் முகத்துவாரத்தண்டை சென்றுகொண் டிருக்கையில் திடீரென வெடிச் சத்தம் ஒன்று கேட்டது. உடனே இக்கப்பல் சிறிது சிறிதாய் ஜலத்தில் ஆழ்ந்து போக ஆரம்பித்தது. கடலின்மீது செல்லும் ஒவ்வொரு கப்பலிலும், அபாயம் வருங்கால் தகுதியானவர்களைத் தப்புவிக்கும் பொருட்டுச் சிறு படகுகள் வைக்கப்பட் டிருக்கும். இத்தகைய படகுகள் இந்த "லியான் காம் பெட்டா" என்ற கப்பலின்மீது மிருந்தன. இந்தப் படகுகள் அனைத்தையும் உபயோகிக்க அவகாசமில்லாமையாலும், அபாயத்தின் திகிலினால் மனோ தைரியம் போய் விட்டமையாலும், இரண்டுபடகுகளே உபயோகிக்கப்பட்டன. இவ்விரண்டு படகுகள் நிறையப் புருஷர்களும் ஸ்திரீகளும் ஏறித்தப்பித்துக்கொண்டார்கள். இந்த "லியான் காம்பெட்டா" என்னுங் கப்பல் சிறிது சிறிதாய் முழுகிக்கொண்டிருக்கையில் இதன்மீ திருந்த உத்தியோகஸ்தர்கள் அனைவரும் இதன் மேற்றட்டில் நின்று கொண்டு இரண்டு படகுகளிலும் உயிர்தப்பிக்கொள்ளும் ஜனங்களைப் பார்த்துக்கொண்டே யிருந்தார்கள். இந்த இரண்டு படகுகளிலிருந்தவர்களும் அக் கப்ப

லின் மாலுமியைப்பார்த்து,—“ஜலத்தில் குதித்து விடுங்கள்! நாங்கள் உங்களைத் தூக்கிக்கொள்கிறோம்” என்றார்கள். அதற்கு அவர்,—“அவசியமில்லை. நீங்கள் உங்கள்உயிர்களைத் தப்புவித்துக்கொள்ளுங்கள். என் முடிவு இங்கேயே தான். நான் என் கப்பலுடன் செல்கிறேன்” என்று பதில் கூறினார். இவ்விதம் ஜலத்தில் ஆழ்ந்து போன “லியான் காம்பெட்டா” என்பது பிரெஞ்சுக்காரருடைய கப்பல். இது 1905 வது வருஷத்தில் கட்டப்பட்டது. 12 ஆயிரம் டன் சுமை ஏற்றப்படக்கூடியது. $7\frac{1}{2}$-அங்குலக்குழாய்களையுடைய 4 பீரங்கிகளையும் 6-அங்குலக் குழாய்களையுடைய 10 பீரங்கிகளையும் கொண்டது. இத்தகைய கப்பலை எதிர்த்து நீரில் வீழ்த்தினது ஜெர்மனியர்களுடைய யூ-5 என்னும் நீர்மூழ்கிக்கப்பல். கடலின் மேற்புறத்தில் செல்லுங் கப்பல்களைக்கடல்மார்க்கமாய் எதிர்க்கும் பொருட்டு நீர்மூழ்கிக்கப்பல்களை ஜலத்தின் அடிப்புறத்திற்கொண்டு வருவதும் கடல் வெடிச்சுரங்கங்களை ஜலத்திற் பாய்ச்சியிருப்பதும் இன்னும் இத்தகைய மார்க்கங்களை உபயோகிப்பதும் முற்றிலும் ஒவ்வாதென்பதே ஆங்கிலேயருடைய கொள்கை.

யுத்த ஆரம்ப காலமுதற்கொண்டு நியாயத்தைக் கடந்த பல பார்க்கங்களையும் ஜெர்மனியர்கள் கையாண்டும் ஆங்கிலேயருடைய அந்நியதேச வியாபாரத்தை அணுவேனும் அசைக்கமுடியாததைக்கண்டு நீர்மூழ்கிக்கப்பல்களைப் பலஇடங்களுக்கும் செலுத்தி,யுத்தக்கப்பல்களுடன் வியாபாரக்கப்பல்களையும் எதிர்க்க ஆரம்பித்தார்கள். இதைக்கண்டார்கள் ஆங்கிலேயர்கள். சமயத்திற் கேற்றவாறு சாதனங்களைக் கையாண்டு, பகைவர்களைக் புறங்காட்டச் செய்வது யுத்த தந்திரங்களுள் ஒன்றாகும் என்பதை யுணர்ந்தார்கள். பற்பல இடங்களுக்கு ஜெர்மனியரால் அனுப்பப்பட்டிருக்கும் நீர்மூழ்கிக்கப்பல்களைத் துரத்துமாறு தங்களுடைய நீர்மூழ்கிகளை ஏவினார்கள். இதனால் ஜெர்மனியருடைய க்ரூஸர் வகுப்பைச் சேர்ந்த “ட்ரெஸ்டென்” என்னுங்கப்பலானது, மார்ச்சு மாதம் 14-ந்தேதி, ஜோவான்பர்னண்டஸ் என்னுந் தீவுக்கருகில் பாதாளஉலகத்திற்கு அனுப்பப்பட்டது.

ஆங்கிலேயருடைய வியாபாரக்கப்பல்களை அழிக்குமாறு அனுப்பப்பட்ட “க்ரோபிரின்ஸ் வில்ஹெல்ம்” என்னும் கப்பலொன்று ஆங்கிலேயர்களுடைய மரக்கலங்களுக்குப் பயந்து, அமெரிக்கா தேசத்துறை நகர்கள் ஒன்றில் அடைக்கலம் புக, அங்கே யுத்தம் முடியும் வரையிலும் நிறுத்தப்பட்டது. யுத்தம் ஆரம்பித்த 1914-வது வருஷம் ஜூலை மாதம் முதற்

கொண்டு 1912-வது வருஷம் எப்ரல் மாதம் வரையிலும் ஜெர்மனியர்களால் பிடிக்கப்பட்டதும் அழிக்கப்பட்டதுமானவை 54 வியாபாரக் கப்பல்களாகும். ஆங்கிலேயர்களுக்கு உள்ள வியாபாரக்கப்பல்களின் தொகை 20-ஆயிரத்திற்கு மேற்பட்டது. இவ்விதம் ஏராளமான மரக்கலங்களுக்கு அதிபர்களாகிய ஆங்கிலேயர்களுக்கு இங்கு மங்கும் சிறிது மரக்கலங்கள் நீரில் முழுகினதினால் குறைவு ஒன்றும் நேராது. ஜெர்மனியர்களுக்கோ இவ்விதமில்லை. க்ரூய்ஸர் வகுப்பைச் சேர்ந்த அனேகங் கப்பல்கள் ஜலத்தில் ஆழ்ந்து விட்டன. அனேகம் பிடிபட்டன. அனேகம் நடு நிலைமையை வகிந்த துறை நகர்த் தேசங்களில் நிறுத்தப்பட்டன. இதனாலும், ஆங்கிலேயருடைய அந்நியதேச வியாபாரத்தை முற்றிலும் நிறுத்தத் தங்களால் முடியாததாலும் ஜெர்மனியர்களுக்குக் கோபம் வந்து விட்டது. பொது நிலைமையை வகித்த தேசக்கப்பல்கள் வட கடல்மீது செல்லா வண்ணம் ஆங்கிலேயர்கள் தடை செய்திருக்கிறார்களென்று ஜெர்மனி தேசத்திலிருந்து பொய்க்கடிதம் ஒன்று அமெரிக்காவுக்குச் சென்றது. இவ்வித கடிதத்தை அனுப்பிவிட்டு, அடியில்வரும் விளம்பரத்தை ஜெர்மனியர்கள் பிரசுரித்தார்கள்.

> ஸ்காட்லண்டுக்கும், நார்வே தேசத்திற்கும் இடையிலுள்ள கடலை ஆங்கிலேயர் யுத்த பாகக் கடலாகத் தீர்மானித் திருக்கிறபடியால், ஜெர்மனியும் அவ்விதமே கிரேட் பிரிட்டனையும் அயர்லண்டையும் சுற்றியிருக்கும் கடலை யுத்த விஸ்தீரணக் கடலாகத் தீர்மானித்திருக்கிறது. ஆகையினால் 1915ம்-வருஷம் பிப்ரவரி மீ 18-ந்தேதி முதற் கொண்டு கிரேட் பிரிட்டனையும் அயர்லண்டையும் சுற்றியிருக்கும் கடலில் பகைவர்களுடைய வியாபாரக்கப்பல்கள் ஏதேனும் தென்பட்டால் அவற்றை அழிக்க ஜெர்மனி முயற்சி செய்யும். ஆகையினால் பகைவர்களுடைய மரக்கலங்களில் பொருள்களையாவது மனிதர்களையாவது அனுப்பாமற்படி நடு நிலைமையை வகித்தவர்கள் எச்சரிக்கப்படுகிறார்கள். அன்றியும், ஆங்கிலேயர்கள் நடுநிலைமை வகித்த தேசக்கொடிகளை உபயோகிக்கிறபடியினால் நடுநிலைமைக் கப்பல்களுக்கும் பகைவர்களாகிய ஆங்கிலேயர்களுடைய கப்பல்களுக்கும் வித்தியாசம் அறியப்படும் விஷயத்தில் ஜெர்மனியர்கள் நடுநிலைமைக்கப்பல்களுக்குத் தீங்கு புரியாரேனும், நடுநிலைமைக்கப்

பல்கள் யுத்தத்திற்காகக் குறிப்பிடப்பட்ட கடலில் தங்களுடைய மரக்கலங்களைக் கொண்டுவராதிருக்கும்படி அறிவிக்கப்போகிறார்கள்.

ஆங்கிலேயர்கள் நடுநிலைமை வகித்த தேசக்கொடிகளை ஒருக்காலும் உபயோகப்படுத்தவே யில்லை. ஜெர்மனியர்கள் இவ்விஷயத்திற் கூறுவதெல்லாம் முற்றிலும் பிசகென்பது சொல்லாமலே விளங்குகிறது. ஒருவேளை அமெரிக்கா தேசத்திலிருந்து புறப்பட்ட "லிஸிட்டானியா" என்னுங்கப்பலானது லிவர்ப்பூலை நாடி வருகையில், ஜெர்மனியருடைய நீர்மூழ்கிக் கப்பல்கள் சுற்றிலும் பதுங்கித் திரிந்துகொண்டிருக்கின்றன வென்பதை யறிந்து, அமெரிக்கா தேசக் கொடியை உயர்த்தின ஆதாரத்தின்மேல், ஆங்கிலேயர்கள் நடுநிலைமை வகித்த தேசக்கொடிகளை உபயோகிக்கிறார்கள் என்று கூறப்பட்டது போலும்! பிப்ரவரிமாதம் 18-ந்தேதி முதற்கொண்டு கிரேட்பிரிட்டனைச் சுற்றியிருக்கும் கடலில் யுத்தம் நடத்தப்படுமென்று ஜெர்மனியர்கள் விளம்பரம் செய்தது பெயருக்கே தான். பிப்ரவரிக்கு முன் மாதமாகிய ஜனவரி மாத ஆரம்பத்திலேயே இவர்கள் மும்முறத்தைககாட்ட ஆரம்பித்தார்கள். "டோக்கோ மாரு" என்னுங்கப்பல் நியூஸீலண்டிலிருந்து வந்துகொண்டிருந்தது. இதில் 97-ஆயிரம் ஆடுகள் முழுவற்றல் போடப்பட்டுக் கொண்டுவரப்பட்டன. பெல்ஜியத்தில் ஜெர்மனியர்களால் துன்புற்றவர்களுக்கு ஆகாரமாக இவ்வாடுகளெல்லாம் கொண்டுவரப்பட்டன. இந்த "டோக்கோமாரு" என்னுங்கப்பலின்மீது ஜெர்மனியர்களுடைய நீர்மூழ்கிக் கப்பல்களிலிருந்து புறப்பட்ட டார்ப்பிடோக்கள் பாய்ந்தன. "டோக்கோ மாரு" கடலின் அடிப்புறத்திற்சென்றுவிட பெல்ஜியர்களுக்கு வந்த ஆகாரம் பயன்படாதாயிற்று. ஜெர்மனியர்களாகிய பகைவர்களின் கொடுமையால் கைக்கெட்டியதும் வாய்க் கெட்டவில்லை. பிப்ரவரி மாதம் முதல் தேதி யன்று "அஸ்டூரியஸ்" என்னும் ஆஸ்பத்திரிக் கப்பலொன்று, காயம் பட்ட ஆங்கில யுத்தவீரர்களை ஏற்றிக்கொண்டு இங்கிலீஷ் சானலில் வந்துகொண்டிருக்கையில், ஜெர்மனிய நீர்மூழ்கிக்கப்பலொன்று இதைஎதிர்க்க ஆரம்பித்தது. மற்ற கப்பல்களிலிருந்தும் பகுத்தறியப்படும் பொருட்டு இக்கப்பல் வெள்ளை வர்ணம் பூசப்பட்டிருந்தது. இவ்வெள்ளை வர்ணத்தின்மேல் கப்பலைச் சுற்றிலும் பச்சைக் கோடு போடப்பட்டிருந்தது. இஃதனைத்தும் "ஹேக்" என்னுமிடத்தில் நடந்த உடன்படிக்கையின் படியே செய்யப்பட்டது. இதை ஜெர்மனியர்கள் சிறிதேனும் கவனியாமல் ஆஸ்பத்திரிக் கப்பல் என்பதை அலட்சியம் செய்து டார்ப்பிடோ ஒன்றை இதன்

மீது ஏவினார்கள். இந்த ஆஸ்பத்திரிக் கப்பலை நடத்திவந்தவர் மிகவும் சாமர்த்திய சாலி. டார்ப்பிடோ வருவதையறிந்து தனது கப்பலை வேறு வழியில் திருப்பினார். வந்த டார்ப்பிடோ குறிதப்பிப் போய்விட்டது. இதெல்லாம் பிப்ரவரிமாதம் 18-ந்தேதிக்கு முந்தியே நடந்தது.

மார்ச்சுமாதம் 25-ந்தேதி "யூ32" என்னும் ஜெர்மனிய நீர்மூழ்கிக் கப்பலொன்றால் "டெல்மைரா" என்னும் பிரெஞ்சுக் கப்பல் ஒன்று ஆழ்த்தப்பட்டது. மார்ச்சு மாதம் 27-ந்தேதி ஐரிஷ் கடலில் "அகைலா" என்னுங் கப்பலொன்று "யூ 28" என்னும் நீர்மூழ்கியால் மிகக் கொடூரமாய்ச் சுடப்பட்டு ஆழ்த்தப்பட்டது அன்றயதினமே லிவர்ப்பூலிலிருந்து புறப்பட்ட "பெலாபா" என்னுங் கப்பலானது "யூ 36" என்னும் நீர்மூழ்கியால் அழிவைப் பெற்றது.

ஏப்ரல்மீ 18-ந்தேதி "வெனீலா" என்னும் சிறிய கப்பலொன்று ஜெர்மனியக் கப்பல்களால் அழிவைப் பெற்றது. இன்னு மிங்குமங்கும் சிற்சில கப்பல்கள் அழிவைப் பெற்றன இனி, ஜெர்மனியர்களுடைய மரக்கலங்கள் பெற்ற அழிவைப் பற்றிச் சிறிது கவனிப்போம். ஒரு குற்றமு மறியாத ஸ்திரீகளையும், யுத்தப் பிரயத்தனம் சிறிதுமில்லாத மனிதர்களையும் வியாபாரத்தையே தொழிலாய்க் கொண்ட கப்பல்களையும் அனியாயமாய் அழிக்கும் கொடுமை நமது ஆங்கிலேயர்களிடம் கிடையாது.

'யூ-8' என்னும் ஜெர்மனிய நீர்மூழ்கிக் கப்பலொன்று டோவர்ஜல சந்தியில் மார்ச்சுமீ 5-ந்தேதி சில ஆங்கிலக் கப்பல்களால் காணப்பட்டது, "குர்க்கா" "மோரி" என்னும் இரண்டு கப்பல்களும் ஒருங்கு சேர்ந்து இந்த 'யூ-8' என்னும் நீர் மூழ்கியைப் பாதாளத்திற் கனுப்பிவிட்டன. இந்த "யூ-8" லிருந்த ஜனங்களெல்லாம் கைதிகளாகப்பட்டார்கள். உடனே இங்கிலாந்து தேசத்திலுள்ள கடற்படை உத்தியோக சாலையாரால் அடியில் வரும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.


> 'யூ-8' என்னும் ஜெர்மனிய நீர் மூழ்கிக் கப்பலிலிருந்து தப்புவிக்கப்பட்ட 29-ஜெர்மனிய உத்தியோகஸ்தர்களுக்குங்கவரவமான உபசரணை காட்டப்படுதல் நியாயமென ஏற்படவில்லை இக்கப்பலானது டோவர் ஜலசந்தியிலும் இங்கிலீஷ் சானலிலும் சென்ற சில வாரங்களாக வேலை செய்துகொண்டிருந்தது. பொது நிலைமையை வகித்தவர்களையும் ஸ்திரீகளையும், யுத்தப் பிரயத்தனமில்லாதவர்களையும் இக்

கப்பல் எதிர்த்தது என்று நம்புவதற்கு வேண்டிய ஆதாரமிருக்கிறது. குறித்த குற்றத்தை இக்கப்பல் மேற்கொண்டு வருவது யுத்தம் முடிந்து சமாதானம் நிலைபெறும் வரையிலும் அசாத்தியமான காரியமாகும். இதனிடையில் மேற்கூறிய குற்றங்களுக்குட்பட்ட ஜனங்கள் பிரத்தியேகமான கட்டுப்பாடுகளுக்கு உட்படுத்தப்பட வேண்டும். உத்தியோகத்திற்கேற்ற உபசரணை கொடுக்கப்படக் கூடாது.

இத்தகைய உத்தரவு பிறப்பிக்கப்பட்டது மிகவும் கிரமமே. ஸர் எட்வர்ட் கிரேக்கும், ஸர் எட்வர்ட் கோஷனுக்கும் நெருங்கிய பந்துக்களாகிய ஆங்கில உத்தியோகஸ்தர்கள 29-பேர் ஜெர்மனியர்களால் கைதிகளாக்கப்பட்டுச் சிறையில் வைக்கப்பட்டது மன்றி, கேவலம் பூர்வீகர்கள் போலவே நடத்தப்பட்டார்கள். ஆகையினால் ஆங்கிலேயரிடம் கிடைத்த 29-ஜெர்மனிய உத்தியோகஸ்தர்களுக்கும் வேறு என்ன உபசரணை கிடைக்கும்?


மார்ச்சுமாதம் 10-ந்தேதி 'யூ-12, என்னும் ஜெர்மனியநீர் மூழ்கிக் கப்பல் ஒன்று பர்த் ஆப் போர்த் என்னும் கடலுக்கு நேரே காணப்பட்டதாகக் கேள்வியுற்ற "அட்டாக்,, என்னும் ஆங்கிலக் கப்பல் அதைஎதிர்க்குமாறு சென்றது. இதைக் கண்டவுடன் 'யூ 12' பயந்து ஜலத்தில் ஆழ்ந்துவிட ஆரம்பித்தது. இதுஎவ்விதத்திலாழ்ந்ததோ,அவ்விடத்திற்கு 'அட்டாக்' சென்றதும், 'யூ-12 னுடைய பார்வைக் கண்ணாடிக்குழாய் ஒடிந்துபோய் விட்டது. பெரிஸ்கோப் (பார்வைக் கண்ணாடிக் குழாய்) என்பது நீர்மூழ்கிக் கப்பல்களுக்கு மிக அவசியமென்றும், அதுஇல்லாவிட்டால் கடலின்அடிப்புறத்தில் மூழ்கியிருக்கும் நீர் மூழ்கிக் கப்பல்களுக்கு, கடலின் மேற்புறத்தில் நடக்கும் விஷயங்கள் ஒன்றும் தெரியாதென்றும் முதற்புத்தகத்திற் கூறியுள்ளோம். "அட்டாக்" என்னும் ஆங்கிலக் கப்பலினால் 'பெரிஸ் கோப்,என்னும் பார்வைக் கண்ணாடிக் குழாயையிழந்த 'யூ-12' திருதராட்டிரன் நிலைமையை அடைந்தது. குருட்டுத்தனமாய் மீண்டும் கடலின் மேற்புறத்தே வருகையில் 'அட்டாக்' என்னுங் கப்பலினால் அழிவைப் பெற்றது.

மார்ச்சுமீ 26-ந்தேதி 'யூ 29' என்னும் நீர்மூழ்கிக் கப்பல் அழிந்துபோனதாகக் கப்பற்படை உத்தியோக சாலையாரால் விளம்பரம் செய்யப்பட்டது.






ஜெர்மன் கெய்ஸரின் மகளும், மருமகளும் போருக்[illegible] போகும் உருவ[illegible]



இத்தாலியருடைய யுத்தக்கப்பலின் பெரும்பீரங்கிகள்.



ஜெர்மனியரின் சப்மரின்.

சில இடாலிக்கப்பல்களும் நார்வேக் கப்பல்களுமாகிய நடு நிலைமை வகித்த தேசக்கப்பல்கள் ஜெர்மனிய நீர்மூழ்கிக் கப்பல்களால் அழிவைப் பெற்றன.

சிசுஹத்தி தோஷத்திற்குள்ளான ஒருவன் திருப்தியடையாது மேலும் மேலும் பாவத்தைச் சம்பாதிக்க முயல்வது போல, ஏற்கனவே அனேக அநியாயங்கட்குக் காரணர்களாய் நின்ற ஜெர்மனியர்கள், "லூஸிட்டானியா" என்னுங் கப்பலை நீரில்மூழ்த்தினது மிகவும் பயங்கரமானது. மேமாதம் முதல் தேதி இக்கப்பலானது நியூயார்க்கிலிருந்து இங்கிலாந்துக்குப் புறப்படுமாறு காலங் குறிப்பிடப்பட் டிருந்தது. அன்று காலையில் அமெரிக்கா தேசத்திலுள்ள சமாசாரப் பத்திரிகைகளெல்லாம் அடியில் வரும் விளம்பரத்தால் நிரம்பப் பெற்றிருந்தன.

> ஜெர்மனிக்கும் ஜெர்மனியைச் சார்ந்தவர்களுக்கும் கிரேட் பிரிட்டனுக்கும் கிரேட் பிரிட்டனைச் சார்ந்தவர்களுக்கும் யுத்தம் நடக்கிறதென்றும் இங்கிலாந்து தேசத் தீவுகளைச் சுற்றிலுமுள்ள கடல் யுத்த எல்லைக்கே உட்பட்டதென்றும் ஜெர்மனிதேசத்தாரால் முன்னரே அறிவிக்கப்பட்ட விளம்பரத்தின்படி இங்கிலாந்து தேசக் கொடியையாவது அல்லது அவர்களைச் சார்ந்தவர்களுடைய கொடியையாவது உயர்த்திக்கொண்டு இக்கடலில் வரும் கப்பல்கள் அழிக்கப்படுமென்றும், இக்கடலில் ஆங்கிலேயர்களுடைய கப்பல்களில் வரும் பிரயாணிகள் அபாயத்திற்குள்ளாவார்களென்றும் அட்லாண்டிக் மகாசமுத்திரத்திற்குச் செல்லும் பிரயாணிகள் இதனல் அறிவிக்கப்படுகிறார்கள்.

இதன்றியும் "லூஸிட்டானியா" என்னுங் கப்பலில் புறப்படுவதாக விருந்த அனேகம் பிரயாணிகளுக்கு "விசாரித்துச் செய்! லூஸிட்டானியா டார்ப்பிடோ குண்டால் சுடப்படும் உடனே பிரயாணத்தை நிறுத்து", என்னும் தந்திச்செய்திகள் வந்துகொண்டேயிருந்தன.

இவ்விதம், வந்த தந்திகளையெல்லாம் "லூஸிடானியா"வின் மாலுமியாகிய காப்டன் W. T. டர்னர் கேள்விப்பட்டபொழுது தன்னுடைய கப்பல் மிகுவேகமாய்ச் செல்லக்கூடியதென்றும் ஜெர்மனியர்களுடைய நீர்மூழ்கிக் கப்பல்கள் தனது கப்பலைப்பிடிக்கச் சக்தியற்றவையென்றும் பிரயாணிகளுக்குத்

தைரியம் கூறி தனதுகப்பலை நடத்த ஆரம்பித்தார். இக்கப்பல்
அமெரிக்காவை விட்டுப் புறப்பட்டபிறகு, ஜெர்மனியர்களு
டைய நீர்மூழ்கிக் கப்பல்களால், கப்பல்களுக் குண்டாகும
தொந்தரவுகள் அதிகரித்துக்கொண்டே யிருந்தன. வெலென்
ஷியா தீவுக்கருகில் "காலியர்புல் ஜெண்ட்" என்னுங் கப்பலா
னது கடலில் ஆழ்த்தப்பட்டது. பிறகு மாஸ்ட்ரெட் என்னு
மிடத்தில் "எர்ல் ஆப் லெத்தோம்" என்னுங் கப்பல் அமிழ்
ந்தது. ஷானன் நதி முகத்துவாரத் தண்டை சில ஜெர்மனிய
நீர்மூழ்கிக் கப்பல்கள் காணப்பட்டன வென்றும் சொல்லப்
படுகிறது. கிரேட் பிரிட்டனைச் சுற்றிலுமுள்ள கடலில் ஜெர்ம
னிய நீர்மூழ்கிகள் இவ்விதம் மறைந்து திரிந்துகொண்டிருந்
தன. இச்சமயத்தில் "லூஸிடானியா" அமெரிக்காவிலிருந்து
புறப்பட்டுஅட்லாண்டிக் மகாசமுத்திரத்தைக் கடந்து மார்ஸே
நதியின் முகத்துவாரத்தை நாடி வந்துகொண்டிருந்தது. பிறகு
ஐர்லண்டு தேசத்தின் தென்முகமாய்ச் சென்றது.

மேமாதம் 7-ந்தேதி வந்தது. அன்று கடற்காற்று மிக
வும் குளிர்ச்சியாய் வீசி இக்கப்பலிலிருந்தவர்களுக் கெல்லாம்
உற்சாகத்தைக் கொடுத்தது. கடலில் கப்பல்மீது யாத்திரை
செய்கையில் கண்ணுக்கெட்டியதூரம் நீலப்படாம் விரித்தது
போல் பரந்து தோன்றிய கடலின் அழகும் அக்கடலின்மீது
கப்பல்செல்லு மழகும் பிரயாணிகளுக்குமிகவும் மனோரம்மியத்
தைக் கொடுத்தது கடற்பிரயாணத்தாலுண்டாகும் களிப்பை
யெல்லாம் இந்த'லூஸிடானியா' கப்பலிலிருந்தவர்கள் அனுப
வித்தார்கள். இக்கப்பல் மிகவும் அழகானது; நான்கு புகைப்
போக்கிகளை யுடையது. ஜெர்மனிய நீர்மூழ்கிக் கப்பல்களால்
உண்டாகும் அபாயம் முற்றிலும் நீங்கிப்போயிற்றென்று காப்
டன் டர்னர் நினைத்துச் சந்தோஷங்கொண்டிருக்கையில்டார்ப்
பிடோ வருகிறது! டார்ப்பிடோ வருகிறது!! என்ற இரைச்
சல் இக்கப்பலில் உண்டாயிற்று.

காப்டன் டர்னர் ஒன்றுஞ்செய்யத் தோன்றாவராய் இங்கு
மங்கும் ஓடினார். என்செய்வார் பாபம்! யாதொரு முன் ஜாக்
கிரதையும் செய்யவில்லை. மூன்றாவது நான்காவது புகைப்
போக்கிகளுக்கிடையில் வந்தடார்ப்பிடோ பாய்ந்தது. உடனே
வெடிச்சத்தமொன்று கேட்டது. எத்தனை டார்ப்பிடோக்கள்
பாய்ந்தாலும் "லூஸிடானியா" ஜலத்தில் அமிழாது என்று
பிரயாணிகள் கொண்டிருந்த நம்பிக்கையானது வெடிச் சத்
தத்தைக் கேட்ட மாத்திரத்தில் பறந்து போய்விட்டது. கப்
பலில் ஓர் முனை சிறிது சிறிதாய்க் கடலுக்குட் செல்ல ஆரம்
பித்தது. பகல் 2-15-மணிக்கெல்லாம் "லூஸிடானியா"

கடலுக்கு ஆகாரமாய் விட்டது. இக்கப்பலின்மீது இருந்த பிரயாணிகள் 2016-பேர். இவர்கள் தப்பித்துக்கொள்ளுமாறு சமீபத்தில் வேறு எந்தக் கப்பலுங்கிடையாது. இக்கப்பல் கடலிலாழ்ந்தது க்வீன்ஸ் டவுன் என்னும் நகருக்குச் சிறிது தூரத்திலாகையினால் அச்சமயத்தில் கடற்கரையிலிருந்த பலர் இக்கப்பல் மூழ்குவதைக்கண்டு அனேகம் படகுகள் முதலியவற்றை அனுப்பினார்கள். இவ்விதம் அனுப்பியதெல்லாம் கண்கெட்ட பின் சூரிய நமஸ்காரம் செய்வது போலாயிற்று. 2016-பிரயாணிகளில் 1200 பேர் அப்பொழுதே மரணமடைந்தார்கள். மீதிநின்றவர்கள் சிலர் வந்த படகுகளின் உதவியினால் காப்பாற்றப்பட்டார்கள்.

ஜெர்மனிய நீர் மூழ்கிகளினாலுண்டாகும் அபாயத்தை நீக்குவதற்கு இக்கப்பல் அமெரிக்கா தேசக்கொடியை நாட்டி வந்ததென்று முன்னமே கூறப்பட்டது. இவ்விதம் "லூஸிடானியா" கடலிலாழ்ந்து அனேகருடைய மரணத்திற்குக் காரணமாய் நின்றதினால் யுத்தத்தில் ஈடுபடாமல் நடுநிலைமையை வகித்த மன்னர்கள் பலருக்கும் பெருங் கோபம் உண்டாயிற்று. ஜெர்மனியர் "லூஸிடானியா"வைக்கடலில் வீழ்த்தினது தகுதியற்றதென அமெரிக்கா தேசத்துப் பிரஸிடெண்டினிடமிருந்து ஜெர்மனிக்குக் கடிதமொன்றுவந்தது. ஜெர்மனியர் அதற்குப்பதிலாக, "லூஸிடானியா" பிரயாணிகளையேற்றும் கப்பலல்லவென்றும், க்ரூஸர் வகுப்பைச்சேர்ந்ததென்றும் துப்பாக்கிகளாலும் மருந்துகளாலும் நிரம்பப்பட்டிருந்ததுடன் கானடாவிலிருந்து வரும் சேனைகளைக் கொண்டுவந்ததென்றும், மருந்து முதலியவற்றை ஏற்றிச் செல்லும் கப்பல்களின்மீது பிரயாணிகள் செல்லக்கூடாதெனும் அமெரிக்காகண்டத்துச் சட்டத்திற்கு விரோதமாய் நடந்ததென்றும், கப்பல் திடீரென்று ஆழ்ந்துவிட்டதினால் பிரயாணிகளைக் காப்பாற்றுவது கூடாமையாயிற்றே ஒழிய வேறில்லையென்றும், பற்பலவிதமாய்த் தாங்கள் செய்த அதிக்கிரமத்தைக் கிரமப்படுத்திக் கடிதமெழுதினார்கள்.

இவ்வுலகத்திலுள்ள செல்வமெல்லாம் ஒருங்கே குவிந்து சென்றாலன்ன, குபேரனையும் பழிக்கும் மிஸ்டர் வாண்டர் பெல்ட், எத்தனையோ லட்சம் பவுன்களுக்கு அதிகாரி, இந்த லூஸிடானியா கப்பலில் பிரயாணியாய் வந்து இக்கப்பலுடனே கடலுக்குட் சென்றுவிட்டார். பொருள் படைத்தவர்களுள் இவரைப்போல்வார் ஒருவருமில்லை. இவர் ஜெர்மன் சக்ரவர்த்தி கெய்ஸருக்கு மிகவும் வேண்டியவர். இவர் ஒரு

காலத்தில் ஜெர்மனிச்சக்ரவர்த்தியைக் காணச் சென்றதும், அப்போது காவலாளனால் தடுக்கப்பட்டதும், முன்னமே எழுதப்பட்டுள்ள விஷயம்

இருபதாவது அத்தியாயம்

யுத்தத்தில் இதர விஷயங்கள்.

ஆஸ்டிரியச் சக்ரவர்த்தியின் இளவரசாகிய பெர்டினண்டும் அவருடைய மனைவியும் மரணமடைந்த நேரம் எங்கோமோ ஒருவரை மற்றொருவர் கொலை செய்தால் தற்காலத்திய ராஜாங்க நீதிகள் கொலை செய்தவன் உயிர்மாய்ப்பிப்பது பொருத்தமெனக் கூறுகின்றன. இரண்டு உயிர்களுக்கு எத்தனையோ லட்சக்கணக்காய் உயிர்கள் மாண்டது, ஜெர்மனி கொண்ட பேரவாவினாலும் அதனுடைய ஆதாரமில்லாப்படைச் செருக்கினாலுமல்லவோ? இவ்விஷயங்களை யெல்லாம் மனங்கசியும்படி எடுத்துரைப்பதற்கும் வில்லிபுத்தூராரும் நம்நாட்டிலில்லையே யென்பது ஒரு பரிதாபம்.

ஆங்கில அரசாட்சியார் யுத்த ஆரம்பத்தில் தங்கள் தேசத்திலகப்பட்ட ஜெர்மனியர்களுக்கு யாதேனும் இடுக்கண்கள் புரிந்தார்களா? குறித்த காலத்திற்குள் அவர்கள் தேசத்தை விட்டுப்போகவேண்டுமென்று ஆக்கினை புரிந்தார்கள். இதல்லவோ பெருந்தன்மை! வம்சபரம்பரையாய் இங்கிலாந்திலேயே தங்கி ஆங்கிலேயரைப்போலவே நீண்ட காலமாய் வாழ்ந்து வரும் ஜெர்மனியர்களுக்கு இவ்வாக்கினை அவசியமில்லை யென்றும் இஷ்டமிருந்தால் அவர்கள் தங்கள் தேசம் செல்லலா மென்றும் ஆங்கிலேயர் காட்டின கருணை என்ன வியப்புடையதாயிருக்கிறது! மனம்போன போக்கெல்லாம் போகாமல் விதிவழியே அறிவைச் செலுத்தி தயை தாட்சண்யம், ஈவு, இரக்கம் முதலியவைகளுக்கு இடந்தரும் மனத்தினர்களே ஆங்கிலேயர்கள் என்பதற்கு, இவ்வுதாரணம் ஒன்றே போதும்.

வாண்டர் பெல்ட் என்பவர் அமெரிக்காதேசத்துப்பிரபு. இவரைப்போலுந் தனவான் இவ்வுலகில் எவருமில்லை. இவர் கெய்ஸருக்கு அத்தியந்த நண்பர். ஐரோப்பாகண்டத்திற்கு இவர் வரும்போதெல்லாம் கெய்ஸரைக்காணாது திரும்பார். ஒரு நாள் மாலை 6-மணிக்குமேலாய்விட்டது. கெய்ஸர் தமது